# இலங்கைப் புவியியல்

## [illegible]ிய புவியியல்

ஆக்கியோன்:

க. குணராசா, B. A. Hons, (Cey.) C. A. S.

ஸ்ரீ லங்கா வெளியீடு
யாழ்ப்பாணம், இலங்கை.

AL.3
...YAGAR
ALAI WEST
CHUNNAKAM
LIBRARY

E-JA

# இலங்கைப் புவியியல்—
## (புதிய புவியியல்)

அன்பளிப்பு
மாணவர் பிரதிநிதிகள்
குழு

கல்விப் பொதுத்தராதரப் பத்திர
(சாதாரண)ப் பரீட்சைப் பாடத்திட்டம்
இலங்கை

---

1. நிலையமும், பருப்பமும்
2. தரைத்தோற்றம்
3. காலநிலை (அ) மழைவீழ்ச்சி (ஆ) வெப்பநிலை
4. காலநிலைப் பிரதேசங்கள்
5. இயற்கைத் தாவரம்
5. பொருளாதார நடவடிக்கைகள்:
   (அ) பயிர்ச் செய்கை
   (ஆ) கைத்தொழில்
   (இ) மீன்பிடித்தல்
7. போக்குவரத்து வசதிகள்
8. குடிப்பரம்பல்
9. வர்த்தகம்
10. பிரதேச அடிப்படையில் இலங்கைப் புவியியலைப்பற்றி விபரமாகப் படித்தல்:
    (அ) தென்மேற் பிரதேசம்
    (ஆ) மலைநாடு (i) ஈரவலய மலைநாடு (ii) உலர்வலய மலைநாடு
    (இ) உலர் பிரதேச (வரண்ட பிரதேசம்)
    (ஈ) யாழ்ப்பாணக் குடாநாடு
11. இலங்கையின் நதிவடிநிலங்கள்
12. இலங்கையின் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள்
13. இலங்கையின் துறைமுகங்கள்
14. இலங்கையின் நகரங்கள்

# இலங்கைப் புவியியல்

(கல்விப் பொதுத் தராதர வகுப்புகளுக்குரியது)

J/MANIPAY LADIES COLLEGE

★

ஆக்கியோன்;

க. துரைராசா, B. A. Hons. (Cey.), C. A. S.

★

ஸ்ரீ லங்கா வெளியீடு

○ திருத்திய பதிப்பு மார்ச் 1973

○ (C) V. Mahalingam, 2/1 First Lane, Brown Road,
Neeraviady, JAFFNA.

○ *K. Kunaresah*, B. A. Hons (Cey.) C. A. S.

6/=

விலை ~~ஐந்து~~ ரூபாய்

விற்பனையாளர்:
**ஸ்ரீ லங்கா புத்தகசாலை,**
**234, காங்கேசன்துறை வீதி,**
**யாழ்ப்பாணம்.**

இலங்கைப் பல்கலைக் கழகப் புவியியற் பேராசிரியர்

**உயர் திரு. கா. குலரெத்தினம்** M. A., Ph. D., D. Sc., D. Lit., F. R. G. S., Dip. in Gemmology, Dip. in Geography, M. A. Inst Min. Matology.

அவர்கள் அளித்த

# அணிந்துரை

'இலங்கைப் புவியியல்' என்ற இந்த நூலைப் படிக்கும் பொழுது எனக்கு மிக்க மகிழ்ச்சி ஏற்படுகின்றது. என் மாணவர் ஒருவர் தன் மாணவ நிலையிலேயே இந்நூலை எழுதியிருப்பது பாராட்டத்தக்கது.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண) வகுப்பிற்கு ஏற்ற முறையில் புதிய கலைச் சொற்களைக் கையாண்டு இந்நூல் எழுதப்பட்டிருக்கின்றது. புவியியல் பற்றிய விபரங்களை விளக்குவதற்கு ஆங்காங்கு விளக்கப் படங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. போதிய புவியியல் நூல்கள் தமிழ் மொழியில் இல்லாத காலத்தில் இந்நூல் மாணவர்க்குப் பெருந்துணையாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

புவியியற் பகுதி,
இலங்கைப் பல்கலைக் கழகம்,
பேராதனை.
29-8-1963.

கா. குலரெத்தினம்

# முன்னுரை

கல்விப் பொதுத் தராதரப் பத்திர வகுப்புகளுக்கு உகந்ததாக, இலங்கைப் புவியியல் நூல் ஒன்றை வெளியிட புவியியற் கலைக்கழகம் விரும்பியது. வெளிவரும் நூல் புதிய புள்ளி விபரங்களைக் கொண்டதாயும், மிக நுண்ணிய விளக்கங்களையுடையதாயும் இருத்தல் வேண்டும் என விரும்பினேம். அத்துடன் அந்நூலில் வரையப்படும் விளக்கப்படங்கள் நவீன அச்சுத் தொழில் முன்னேற்றத்துக்கு இணங்க வர்ணப்படங்களாயும் இருத்தல் சிறப்புடையது என்ற எண்ணமும் எழுந்தது. இந்நோக்கங்கள் யாவற்றையும் "இலங்கைப் புவியியல்" என்ற இந்நூல் பூர்த்தியாக்கும் என நம்புகின்றேன்.

இந்நூலில் பதினெட்டு அத்தியாயங்களுள்ளன. இந்த அத்தியாயங்கள் யாவும் இலங்கையின் புவியியல் விபரங்கள் யாவற்றையும் அளவோடு கொண்டிருக்கின்றன. இலங்கையின் பாற்பண்ணைத்தொழில், மட்பாண்டத்தொழில், இரும்புருக்குத்தொழில், உல்லாசப் பிரயாணக் கைத்தொழில், வனபரிபாலனம் போன்ற பல புதிய விபரங்கள் யாவும் இந்நூலில் உள்ளன. தாய்மொழி மூலம் கல்விகற்று வரும் மாணவர்களின் புவியியலறிவை இவ்விலங்கைப் புவியியல் நூல் விருத்தியுறவைக்கும் என எண்ணுகின்றேன். இந்நூலின் இறுதியில் பயிற்சிகளை இணைத்துள்ளேன்.

இந்நூலினை மிகச்சிறப்பாக அச்சிட்டுதவிய ஸ்ரீ லங்கா அச்சகத்தினருக்கு என்றும் என் நன்றிகள்.

இந்நூலினைத் தமிழுலகம் உவந்தேற்கும் என நம்புகின்றேன். இந்நூலிலுள்ள குறைகளைச் சுட்டிக்காட்டில் அடுத்தபதிப்பில் நன்றியுடன் திருத்திக்கொள்வேன்.

கிண்ணியா.

25-2-73

க. குணராசா

# பொருளடக்கம்


| அத்தியாயம் | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | இலங்கை : அறிமுகம் | ... | 9 |
| 2. | இலங்கையின் தரைத்தோற்றம் | ... | 14 |
| 2. (அ) | இலங்கையின் தரைத்தோற்றம் | ... | 24 A |
| 3. | இலங்கையின் அமைப்பு | ... | 25 |
| 4. | இலங்கையின் காலநிலை | ... | 30 |
| 5. | காலநிலைப் பிரதேசங்களும், இயற்கைத் தாவரமும் | ... | 41 |
| 6. | இலங்கையின் சுயதேவைக்குரிய பயிர்கள் | ... | 51 |
| 7. | இலங்கையின் வர்த்தகத்திற்குரிய பயிர்கள் | | 61 |
| 8. | இலங்கையின் கனிப்பொருட்கள் | ... | 72 |
| 9. | இலங்கையின் கைத்தொழில்கள் | ... | 78 |
| 10. | விலங்கு வேளாண்மை | ... | 89 |
| 11. | இலங்கையின் மீன்பிடித்தொழில் | ... | 92 |
| 12. | இலங்கையின் குடிப்பரம்பல் | ... | 98 |
| 13. | இலங்கையின் வர்த்தகமும், போக்குவரத்து வசதிகளும் | ... | 103 |
| 14. | தென்மேல் தாழ்நிலம் | ... | 119 |
| 15. | மலைநாடு | ... | 131 |
| 16. | உலர்பிரதேசத் தாழ் நிலங்கள் | ... | 142 |
| 17. | பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் | | 154 |
| 18. | யாழ்ப்பாணக் குடாநாடு | ... | 166 |
| | பயிற்சிகள் | | |

அத்தியாயம்: 1

# இலங்கை : அறிமுகம்

## நிலையம்

இந்து சமுத்திரத்தின் மத்தியில் இந்தியாவிற்குத் தென்கிழக்கே காணப்படும் ஒரு தீவாக இலங்கை விளங்குகின்றது. இலங்கையை இந்தியாவிலிருந்து ஒடுங்கிய ஒரு தொடுகடல் பிரிக்கின்றது; இது பாக்குத் தொடுகடல் எனப்படும். மிகப் பழைய காலத்தில் இலங்கையும் இந்தியாவும் ஒன்ருக இணைந்து ஒரே நிலத்திணிவாகக் காணப்பட்டன என்று கருதப்படுகின்றது. மயோசீன் எனும் காலத்தில் (25 கோடி ஆண்டுகளுக்கு முன்) நிகழ்ந்த கடற்கோளினுல் இந்தியாவும் இலங்கையும் துண்டிக்கப்பட்டன. அதனுலேயே, இந்தியத் துணைக் கண்டத்தினின்றும் பிரிவுற்ற நிலப்பகுதியே இலங்கையென்று கூறப்படுகின்றது.

இலங்கை மத்திய கோட்டிற்கு வடக்கே அமைந்துள்ளது. இத்தீவு 5° 54′ (5 பாகை 54 நிமிஷங்கள்) வட அகலக்கோட்டிற்கும், 9° 52′ வட அகலக்கோட்டிற்கும், 79° 39′ கிழக்கு நெடுங்கோட்டிற்கும் 81° 53′ கிழக்கு நெடுங்கோட்டிற்கும் இடையே அமைந்துள்ளது. ஏறத்தாழ 4° அகலக்கோட்டுப் பரப்பையும் 2° நெடுங்கோட்டுப் பரப்பையும் இலங்கை கொண்டிருக்கின்றது.


## பருப்பம்

இலங்கையின் மொத்தப் பரப்பு 25,332 சதுரமைல்களாகும். இதில் நீர்த்தொகுதியின் பரப்பினைத் தவிர்ந்த நிலப்பகுதியின் மொத்தப் பரப்பு ஏறக்குறைய 24, 996 சதுரமைல்களாகும். இலங்கையின் மிகக்கூடிய நீளம் 270 மைல்களாகும். வடக்கே பனைமுனையிலிருந்து தெற்கே தொந்திராமுனைவரை (தேவேந்திராமுனை)யுள்ள தூரமே, இந்த நீளமாகும். இத்தீவின் ஆகக்கூடிய அகலம் பொத்துவிலுக்கு 9 மைல்கள் வடக்கேயுள்ள சங்கமான் கந்தைமுனையிலிருந்து கொழும்பு வரையுள்ள தூரமாகும். இத்தூரம் 140 மைல்கள் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

## கண்டமேடை

இலங்கையும் இந்தியாவும் ஒரே கண்டமேடையில் அமைந்திருக்கின்றன. கரையோரங்களிலிருந்து கடலினுள் பரந்து சாய்ந்திருக்கும் கண்டச்சாய்வே கண்டமேடை எனப்படும்; இக்கண்டமேடைகள் ஆழம்

குறைந்த சமுத்திரப் பிரதேசங்களாகும். இலங்கையைச் சூழ்ந்திருக்கும் கண்டமேடை 10 மைல்கள் தொடக்கம் 20 மைல்கள் வரை அகலமானதாக இருக்கின்றது. இக்கண்டமேடை வடக்கே அகன்றதாயும் தெற்கே ஒடுங்கியதாகவும் அமைந்துள்ளது. இக்கண்டமேடை சராசரியாக 36 பாகம் ஆழமுடையது. (ஒரு பாகம் 6 அடிக்குச் சமன்)




படம்: 1 இலங்கையின் நிலையம்

## கடலடித்தள மேடைகள்

இலங்கையைச் சூழ்ந்து **பீற்று** கடலடித்தளமேடை, **வோர்ஜ்** கடலடித்தளமேடை, **மன்னார்** கடலடித்தளமேடை எனும் மூன்று பிரதான கடலடித்தளமேடைகள் காணப்படுகின்றன. கண்டமேடையில் உயர்ந்த பகுதிகளையே கடலடித்தள மேடைகள் என்பர்.

யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு வடகிழக்கே இந்தியாவின் கோடிக்கரை முனைவரை பீற்று கடலடித்தள மேடை பரந்துள்ளது. இதன் பரப்பு ஏறக்குறைய 1000 சதுரமைல்களாகும். வோர்ஜ் கடலடித்தளமேடை கொழும்பிற்குச் சற்று வடமேற்கே இருக்கின்றது. இது கன்னியாகுமரிக்குத் தெற்கே இந்தியாவின் தொடராகக் கடலின் கீழ் அமைந்துள்ளது. மன்னார்க் குடாவில் மன்னார் கடலடித்தளமேடையுள்ளது. பொதுவாகக் கடலடித்தளமேடைகள் சிறந்த மீன்பிடித்

தளங்களாக விளங்குகின்றன. பீற்று, வோர்ஜ் கடலடித்தளமேடைகள் சிறந்த மீன்பிடித் தளங்களாகவும், மன்னார் கடலடித்தளமேடை முக்கிய முத்துக்குளிக்கும் பகுதியாகவும் விளங்குகின்றன.

### பாறைத்தொடர்கள்

இந்தியாவினின்றும் இலங்கை பிரிக்கப்பட்டதும் இடையே சில பாறைத்தொடர்கள் அமைந்தன. தலைமன்னாருக்கும் தனுஸ்கோடிக்கும் இடையில் நீண்டதொரு பாறைத்தொடர் கடலினுள் அமைந்து காணப்படுகின்றது. இது இராமர் அணை (ஆதாமின் அணை) என்று அழைக்கப்படுகின்றது. இலங்கையின் தெற்கே கொழும்பிலிருந்து மட்டக்களப்பு வரை கரையோரமாக முருகைக்கற்பார் வெளியரும்புகள் காணப்படுகின்றன. இலங்கையின் தென்கிழக்குக் கரையோரமாக, மாணிக்ககங்கையின் கழிமுகத்திற்கு அப்பால் **பெரியபாக, சின்னப்பாக** என்னும் இரு முருகைக்கற்பார்த் தீவுகள் காணப்படுகின்றன: இக் கற்பார்த்தீவுகள் இரண்டும் **இராவணன் பாறைகள்** என்றும் வழங்கப்படுகின்றன.

### கடல் நீரேரிகளும் மணற்றடைகளும்

இலங்கையின் கரையோரங்களில் பல கடல் நீரேரிகளும் மணற்றடைகளும் காணப்படுகின்றன. யாழ்ப்பாணக் கடல்நீரேரி, கற்பிட்டிக் கடல்நீரேரி, மட்டக்களப்புக் கடல்நீரேரி, முல்லைத்தீவுக் கடனீரேரி என்பன குறிப்பிடத்தக்க கடல்நீரேரிகளாகும். இக் கடல் நீரேரிகளில் நதிகள் பல கிளைகளாகப் பிரிந்து, கலந்து படிதல்களைச் செய்கின்றன. இக் கடல்நீரேரிகளை அடுத்துப் பெரிதும் மணற்றடைகள் காணப்படுகின்றன. கற்பிட்டிக் கடனீரேரி வடபுறமாக நீண்டமைந்த மணற்றடையினால் உருவாக்கப்பட்டிருக்கின்றது.

## நிலைய முக்கியத்துவம்


மிகப் பழைய காலத்தில் இருந்தே, இந்துசமுத்திரத்தில் காணப்படும் தீவுகளில் இலங்கை முக்கியம் வாய்ந்த தீவாக விளங்கி வருகின்றது; இலங்கைத்தீவின் நிலையமே அதனது முக்கியத்துவத்திற்கு அடிப்படைக் காரணமாகும்.

வட அமெரிக்கா, தென் அமெரிக்கா என்ற புதிய கண்டங்கள் கண்டு பிடிக்கப்படுமுன்பே இலங்கை என்ற நம்தீவு இருப்பதை மேலைத் தேசத்தவர்கள் அறிந்திருந்துள்ளார்கள். கிரேக்க, ரோமப் புவியியலறிஞர்களினால் வரையப்பட்ட பழைய உலகப்படங்களில் இலங்கை **'தாபிரபரன்'** (தம்பபண்ணை) என்று குறிக்கப்பட்டிருக்கின்றது. வடமொழியினர் **'சிங்ஹளத்துவீபம்'** என்றும், **இலங்காபுரம்** என்றும் இலங்கையை அழைத்தனர். போர்த்துக்கேயர் **'சைலோன்'** என்று வழங்கி

னர். பிரித்தானியர் 'சிலோன்' என்றனர். இன்று இலங்கைக்கு ஈழ நாடு, ஸ்ரீலங்கா, சிலோன் என்ற பெயர்களே வழங்கி வருகின்றன. இவ்வாறு நூற்றுக்கணக்கான பெயர்களால் உலகின் பல்வேறு நாட்டவர்களால் அழைக்கப்பட்ட இலங்கையின் வரலாற்று முக்கியத்துவம், அதனது நிலையத்தினால் ஏற்பட்டது.

இலங்கை, இந்தியாவிற்கு அருகாமையில் இருப்பதனால், இந்தியப் பண்பாட்டியல்புகளை இங்கும் காணமுடிகின்றது. சிங்களவர், தமிழர் என்பார் இந்தியாவிலிருந்து இங்கு வந்தவர்களே. பௌத்தமதம், இந்துமதம் என்பன இந்திய மதங்களாகும். தமிழ்மொழி இந்தியாவிற்குரியதாகும். இலங்கையின் கலை, கட்டிடங்களில் இந்தியச் செல்வாக்கினைக் காணலாம். இந்திய மன்னர்கள் காலத்திற்குக் காலம் இலங்கைமீது படையெடுத்துத் தமது ஆட்சியின் கீழ் இலங்கையை வைத்திருந்திருக்கிறார்கள்.

கடற்போக்குவரத்தைப் பொறுத்தமட்டில் இந்துசமுத்திரத்தின் மத்தியில் ஒரு குவிமைய நிலையமாக இலங்கை காணப்படுகிறது. நன்னம்பிக்கை முனையைச் சுற்றிவரும் கப்பல்களுக்கும், சுயெஸ் ஊடாகச்




படம்: 2 இலங்கையின் நிலைய முக்கியத்துவம்

செங்கடல் வழியாக வரும் கப்பல்களுக்கும், மலாக்காத் தொடுகடல் ஊடாக வரும் கப்பல்களுக்கும், அவுஸ்திரேலியாவிலிருந்து வரும் கப்பல்களுக்கும் தங்குமிடமாக இலங்கை காணப்படுகின்றது. இக்கப்பல்கள் இலங்கையில் தமக்குத் தேவையான எரிபொருளேயும் நீரையும் பெற்றுக் கொள்கின்றன. இத்தகைய குவிமையத்தன்மையின் காரணமாகவே கீழைத்தேச நாடுகளைத் தமது ஆதிக்கத்தின் கீழ் வைத்திருக்க விரும்பிய, மேலேத்தேச நாடுகள் இலங்கையைத் தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டிருக்க விரும்பின. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என்போர் இலங்கையை, ஒருவர்பின் ஒருவராகத் தொடர்ந்து தம்மாதிக்கத்தில் வைத்திருந்தது இதனுலேயே, இலங்கைத் தீவில் இருந்துகொண்டு, கீழைத்தேச நாடுகளை ஆட்சி செலுத்திக் கட்டுப்படுத்துவது இலகுவாக இருந்தது.

ஐரோப்பியர் இலங்கையில் ஆட்சி செலுத்த நேர்ந்ததால், இலங்கையின் பண்பாட்டியல்புகளிலும் பெருமாற்றங்கள் நிகழ்ந்துள்ளன; அவை:

(அ) வாழ்க்கைப் பயிர்ச்செய்கை மூலம் தமது சுயதேவையைப் பூர்த்தி செய்து வந்த இலங்கை மக்களின் பொருளாதார வாழ்க்கை, வர்த்தகப் பயிர்ச்செய்கையாக மாற்றமடைந்தது. தேயிலே, றப்பர்ப் பெருந்தோட்டங்கள் இங்கு ஆரம்பிக்கப்பட்டன.

(ஆ) ஐரோப்பிய அரசியல் நிர்வாக முறைகள் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டன.

(இ) ஐரோப்பிய நாகரிகம் இலங்கை மக்களால் கைக்கொள்ளப்பட்டது. கலே, உடை, கட்டிடம், பாவனேகளில் ஐரோப்பிய பண்புகள் கலந்தன. ஆங்கிலமொழி இலங்கையில் பிரதான இடத்தை வகித்தது. இத்தகைய மாற்றங்கள் யாவும் இலங்கையின் நிலேய முக்கியத்துவத்தால் ஏற்பட்டனவாம்.

# இலங்கையின் தரைத்தோற்றம்

ஒரு பிரதேசத்தின் தரையுயர்ச்சி வேற்றுமைகளை ஆராய்வதே, தரைத்தோற்ற ஆராய்வாகும். இலங்கையில் இருவேறுபட்ட தரைத் தோற்றங்களைக் காணலாம். இலங்கையின் மத்தியில் மலைகள், மேட்டுநிலங்கள், குன்றுகள் என்பன அடங்கிய உயர்நிலத் தோற்றத்தினையும் அதனைச் சூழ்ந்து கடற்கரைச் சமவெளிகளைக் கொண்ட தாழ் நிலத் தோற்றத்தினையும் காணக்கூடியதாக இருக்கின்றது. எனவே, இலங்கையின் தரைத்தோற்றத்தினை இரு பெரும் பிரிவுகளாக வகுத்து விளக்குவர். அவை:


1. மத்தியிலுள்ள மலைநாடு
2. அதனைச் சூழ்ந்தமைந்திருக்கும் தாழ்நிலங்கள்.

## மத்திய மலைநாடு

1000 அடி சமவுயரக்கோட்டிற்கு மேற்பட்ட பகுதியைப் பொதுவாக மத்திய மலைநாடு எனக் கொள்ளலாம். மத்திய மலைநாடு எனும் போது, தென்மேற்கே பிரிந்தமைந்துள்ள இறக்குவானைத் திணிவையும் சேர்த்தே கருதவேண்டும். இம்மத்திய மலைநாட்டின் மிகக்கூடிய உயரத்தை 8281 அடி உயர் சிகரமான பேதுருதாலகாலமலை பிரதிபலிக்கின்றது. மத்திய மலைநாடு பல தரைத்தோற்றத் தன்மைகளையுடையது. மத்திய மலைநாட்டின் மத்தியில் 5000 அடி உயரமான, நங்கூரவடிவமான ஒரு உயர்நிலப் பகுதியுண்டு. இந்நங்கூர வடிவ்மான பகுதியிலேயே இலங்கையின் பிரதான மலைச்சிகரங்கள் உள்ளன. இந்நங்கூர வடிவமான பகுதிக்குக் கிழக்கே ஊவா வடிநிலம் (வெலிமடை மேட்டுநிலம்), கிழக்கு மேடை என்பனவும், மேற்கே கற்றன் மேட்டுநிலம், தொலஸ்பாகேத் தொகுதி என்பனவும் வடக்கே கண்டி மேட்டுநிலம், நக்கிள்ஸ் மலைத்தொகுதி என்பனவும், தெற்கே தென் மேட்டுநிலமும் காணப்படுகின்றன. (படம்: 6) அவற்றை ஒவ்வொன்றாக நோக்குவோம்:

### (அ) நங்கூரவடிவமான உயர்நிலம்

மத்திய மலைநாட்டின் சமவுயரக் கோட்டுப் படத்தினை அவதானித்தால், 5000 அடி உயரத்திற்கு மேற்பட்ட மலைப்பகுதி தெளிவானதோர் தரைத் தோற்ற வுறுப்பாக அமைத்திருப்பதைக் கா...





படம்: 4 இலங்கையின் தரைத்தோற்றப் பிரிவுகள்


லாம். 5000 அடிகளுக்கு மேற்பட்ட பகுதி நங்கூர வடிவமானதாக (பப்டிஸ்ற்), அல்லது தலை கீழான T வடிவமானதாகக் (சில்வா) காணப்படுகின்றது. இந்த நங்கூர வடிவமான உயர்நிலத்திலேயே பேதுருதாலகாலை, கிரிகாலப்பொத்தை, தோட்டப்பாலை, சிவனொளி பாதம், நமுனகுல முதலிய மலைகள் அமைந்திருக்கின்றன. நங்கூர வடிவ உயர்நிலத்தின் நடு மையமாக கிரிகாலப்பொத்தைமலை (7857′) அமைந்துள்ளது. நங்கூர வடிவத்தின் மேற்குப்புற நீட்சி சிவனொளி பாதமலை (7360′) வரை காணப்படுகின்றது; கிழக்குப்புற நீட்சி நமுன குல (6679′) வரை அமைந்துள்ளது. நங்கூர வடிவ உயர்நிலத்தின் வடபுற நீட்சியில் தோட்டப்பாலை (7741′), பேதுருதாலகாலை எனும் மலைகளும், நுவரெலியாச் சமவெளி, எல்க் சமவெளி, கோட்டன் சம வெளி முதலிய உயர்சமவெளிகளும் காணப்படுகின்றன. பேதுருதால

காலைக்கு வடக்கேயும் ஓர் உயர்மலைத்தொடர் அமைந்துள்ளது. இம் மலைத்தொடர் மகாவலிகங்கைப் பள்ளத்தாக்கினை நோக்கிப் படிப் படியாகச் சாய்கின்றது. கிரிகாலப்பொத்தையிலிருந்து நமுனகுல வரை காணப்படும் நங்கூர வடிவ உயர்நிலத்தின் கிழக்குப்புற நீட்சியில் பலமலையிடை வெளிகள் காணப்படுகின்றன. **அப்புத்தளைக் கணவாய், எல்லகணவாய்** என்பன இத்தகைய மலையிடை வெளிகளே.

நங்கூர வடிவமான இந்த உயர்நிலம் மேற்கு, கிழக்கு, வடக்கு எனும் திசைகளில் படிப்படியாகச் சாய்வுறுகின்றது. ஆனல். தென் பாகத்தில் மட்டும் இது திடீரெனச் சாய்வுறுகின்றது. இத் தென் பாகம் 5000 அடி உயரத்திலிருந்து 3000 அடி உயரத்திற்குத் திடீரெனச் சரிகின்றது; இக்குத்தான சரிவினைத் '**தென்மலைச் சுவர்**' என வழங்குவர். தென்மலைச்சுவர் சிவனொளிபாதமலையிலிருந்து எல்ல கந்தை வரை, ஏறத்தாழ 60 மைல்கள் நீளத்திற்கு அமைந்திருக்கின்றது. (படம்: 6)




படம்: 5 மலைநாடு (சமவுயரக் கோடுகளால்)





படம்: 3 இலங்கையின் தரைத்தோற்றம்

எண்களுக்குரிய விளக்கத்தை மறுபக்கத்தில் பார்க்க

## எண்களுக்குரிய விளக்கம்

1. பேதுருதாலகாலைமலை
2. தோட்டப்பாலைமலை
3. சிவனொளிபாதமலை
4. கிரிகாலப்பொத்தைமலை
5. நமுனகுலமலை
6. கற்றன் மேட்டுநிலம்
7. ஊவாவடிநிலம்
8. கண்டி மேட்டுநிலம்
9. நக்கிள்ஸ் மலைத்தொகுதி
10. றக்குவானைத்திணிவு
11. தென்மேட்டுநிலம்
12. கிழக்குமேடை
13. தொலஸ்பாகே மேனிலம்
14. மாத்தளை மலைகள்
15. தும்பறைப் பள்ளத்தாக்கு




படம்: 6 மத்திய மலைநாட்டின் தரைத்தோற்ற உறுப்புக்கள்.

### (ஆ) கற்றன் மேட்டுநிலம்

மத்திய மலைநாட்டின் நங்கூரவடிவமான உயர்பகுதிக்கு மேற்கே கற்றன் மேட்டுநிலம் அமைந்திருக்கின்றது. இம்மேட்டுநிலம் 3000 அடிகளுக்கும் 5000 அடிகளுக்கும் உட்பட்டதாகக் காணப்படுகின்றது. இம்மேட்டுநிலம் பலசமாந்திரமான பாறைத் தொடர்களைக் கொண்டிருக்கின்றது. இப்பாறைத் தொடர்களுக்கு இடையே நதிகள் உற்பத்தியாகிப் பாய்கின்றன. மகாவலிகங்கை, களனிகங்கை எனுமிரு பிரதான நதிகள் கற்றன் மேட்டுநிலத்திலேயே உற்பத்தியாகின்றன. இம்மேட்டுநிலத்தின் தென்மேல் பாகத்தில் களனிகங்கையின் கிளை நதி

களாகிய மஸ்கெலிய ஓயா, கெகல்கமுஓயா ஆகியவற்றில் வடிநிலங்களுள்ளன. நங்கூரவடிவமான உயர்நிலத்தின் மேற்குச் சாய்விலுற்பத்தியாகின்ற மகாவலிகங்கையின் தலையருவிகள் கற்றன் மேட்டுநிலத்தினூடாகப் பாய்கின்றன. மகாவலிகங்கைப் பள்ளத்தாக்கையும் களனிகங்கைப் பள்ளத்தாக்கையும் கற்றன் மேட்டுநிலத்தில் பிரிக்கின்ற தெளிவான எல்லையாக, வடமேற்கு—தென்கிழக்குப் போக்கிலான பாறைத் தொடர் ஒன்றுள்ளது. அதனாலேயே களனிகங்கை, கினிகத்தேனைக் கணவாயூடாக மேற்குநோக்கிப் பாய, மகாவலி கங்கை வடக்கு நோக்கிப் பாய்கின்றது.

கற்றன் மேட்டுநிலத்தில் 5000 அடி சமவுயரக்கோட்டை அடுத்து டேவன், றம்பொடை எனும் நீர்வீழ்ச்சிகளும், 3000 அடி சமவுயரக்கோட்டையடுத்து லக்சபானா, அபடீன் எனும் நீர்வீழ்ச்சிகளும் காணப்படுகின்றன.

### (இ) தொலஸ்பாகே மேனிலம்

கற்றன் மேட்டு நிலத்திற்கு வடமேற்கே தொலஸ்பாகே மேனிலம் அமைந்து காணப்படுகின்றது. இம்மேனிலம் (upland) 2000 அடிகளுக்கு மேற்பட்டது. கற்றன் மேட்டுநிலத்தில் இருந்து இம்மேனிலத்தை மகாவலிகங்கைப் பள்ளத்தாக்குப் பிரிக்கின்றது; மேற்குப் புறமாகப் பாயவேண்டிய மகாவலிகங்கை, கற்றன் மேட்டுநிலத்தில் வடக்குப்புறமாகப் பாய்வதற்கு, மேற்கே தொலஸ்பாகே மேனிலம் ஒரு தடைச்சுவராக அமைந்ததும் காரணமாகும்.

### (ஈ) ஊவாவடிநிலம்

நங்கூரவடிவமான உயர்நிலத்திற்குக் கிழக்குப் புறத்தில் ஊவாவடிநிலம் அமைந்திருக்கின்றது. இவ்வடிநிலத்தை வெலிமடை மேட்டுநிலம் எனவும் வழங்குவர்; ஊவாவடிநிலம் சராசரி 3000 அடி உயரமானது. இவ்வடிநிலம் கிழக்கே மதுள்சீமா மலைத்தொடரினாலும், தென்கிழக்கே நமுனகுலத் தொடரினாலும், தெற்கே அப்புத்தளைத் தொடரினாலும், மேற்கே நங்கூரவடிவமான உயர்நிலத்தினாலும் எல்லையிடப்பட்டிருக்கின்றது. ஆனால், வடபகுதி தும்பறைப்பள்ளத்தாக்கை நோக்கிச் சாய்ந்து அமைந்திருக்கின்றது. அதனாலேயே உமா ஓயா, வதுளைஓயா, லொக்கல்ஓயா எனும் மகாவலிகங்கையின் கிளைநதிகள் ஊவாவடிநிலத்தில் உற்பத்தியாகி வடபுறமாக ஓடி தும்பறைப் பள்ளத்தாக்கில் மகாவலிகங்கையுடன் இணைகின்றன. நமுனகுல மலைத்தொடருக்கும் மதுள்சீமா மலைத்தொடருக்கும் இடையில் பசறைக்கணவாய் உளது. வதுளைஓயாவில் துன்கிந்தை நீர்வீழ்ச்சியுளது.

### (உ) கிழக்குமேடை

ஊவாவடிநிலத்திற்குக் கிழக்கே கிழக்குமேடை (platform) அமைந்துள்ளது. இம்மேடை கிழக்குப்புறமாயும் தென்புறமாயும் சாய்ந்த

மைந்துள்ளது. இம்மேட்டுநிலத்தில் லுணுகலைத் தொடரே (மதுள் சீமா) உயர்ந்த பகுதியாகும். இது 4000 அடிகளுக்கு மேற்பட்டது. கிழக்கு மேடையில் மகாஓயா, கல்லோயா எனும் நதிகள் உற்பத்தியாகிப் பாய்கின்றன. தென்பாகத்தில் மாணிக்ககங்கை, கும்புக்கன் ஓயா, கிரிண்டிஓயா எனும் நதிகள் உற்பத்தியாகின்றன. எல்லக்கணவாயூடாகக் கிரிண்டிஓயா பாயும்போது, ராவணஎல நீர்வீழ்ச்சி உருவாகின்றது.

## (ஊ) தென் மேட்டுநிலம்

சிவனொளிபாதமலையிலிருந்து எல்ல கணவாய்வரை அறுபதுமைல் தூரம் நீண்டு காணப்படும் தென்மலைச் சுவருக்குத் தெற்கே ஒடுங்கிய ஒரு மேட்டுநிலமாகத் தென் மேட்டுநிலம் காணப்படுகின்றது. இம்மேட்டுநிலம் 1000 அடிகளுக்கும் 3000 அடிகளுக்கும் உட்பட்டது. இத்தென்மேட்டுநிலத்தைக் கொஸ்லாந்தை மேட்டுநிலம் அல்லது மாவலத்தன்ன மேட்டுநிலம் என்றும் வழங்குவர். கொஸ்லாந்தையை அடுத்து வடபுறமாக, இரு மைல்களுக்குள் நிலம் 3000 அடிக்குக் குத்தாக உயர்கின்றது. இவ்விடத்திலேயே கிரிண்டிஓயாவில், தியாலுமா நீர்வீழ்ச்சி அமைந்திருக்கின்றது.

## (எ) கண்டி மேட்டுநிலம்

கற்றன் மேட்டுநிலம் வடபுறமாக ஒரு தாழ் மேட்டுநிலத்தை நோக்கிச் சாய்கின்றது. இத் தாழ் மேட்டுநிலமே கண்டி மேட்டுநிலமாகும். இக்கண்டி மேட்டுநிலம் 2000 அடிகளுக்கு மேற்பட்டது; 3000 அடிகளுக்கு உட்பட்டது. இக்கண்டி மேட்டுநிலம் பெரிதும் மட்டமானது. இக்கண்டி மேட்டுநிலத்திலேயே மகாவலிகங்கை முழங்கை வளைவுடன் தும்பறைப் பள்ளத்தாக்கினுள் பிரவேசிக்கின்றது. இம்மேட்டுநிலத்தின் மேற்குப்பகுதியில் அளகல்லைக் குன்றும், கடுகண்ணாவைக் கணவாயும், கலகெதர, பலனை மலையிடைவெளிகளும் அமைந்துள்ளன. இக்கண்டி மேட்டுநிலத்தில் மகாஓயா, தெதுறு ஓயா எனும் நதிகள் உற்பத்தியாகின்றன.

## (ஏ) நக்கிள்ஸ் மலைத்தொகுதி

கண்டி மேட்டுநிலத்திற்கு வடகிழக்கே நக்கிள்ஸ் மலைத்தொகுதி காணப்படுகின்றது. நக்கிள்ஸ் மலைத்தொகுதி 3000 அடிகளுக்கு மேற்பட்டதாகக் காணப்படுகின்றது. இதன் அதி உயரம் 6112 அடி உயரமான நக்கிள்ஸ் சிகரத்தினுல் பிரதிபலிக்கப்படுகின்றது. நக்கிள்ஸ் மலைத்தொகுதி வடமேற்கு—தென்கிழக்குப் போக்கினைக் கொண்டிருக்கின்றது. ஊவாவடிநிலத்தோடு இணைய வேண்டிய நக்கிள்ஸ் மலைத்தொகுதியைத் தும்பறைப் பள்ளத்தாக்குத் துண்டித்துள்ளது.

### (ஐ) மாத்தளை மலைகள்

கண்டி மேட்டுநிலத்திற்கு வடக்கே மாத்தளை மலைகளும், மாத்தளைப் பள்ளத்தாக்குகளுமுள்ளன. இவை 2000 அடிக்கு உட்பட்டன. மாத்தளை மலைகள் அம்பன் கங்கையின் நீர்ப்பிரிமேடாகவுள்ளன. இவை வடக்கு—தெற்கான போக்கினைக் கொண்டிருக்கின்றன. மாத்தளை மலைகளின் தாழ்தொடர்களை வடதாழ் நிலத்தில் அவதானிக்கலாம்; இவை விசிறிவடிவில் விரிந்து செல்கின்றன.

### (ஒ) றக்குவானைத் திணிவு

மத்திய மலைநாட்டின் தென்மேல் பாகத்தில், தனித்ததோர் தரைத்தோற்றவுறுப்பாக றக்குவானை மலைத்திணிவு அமைந்துள்ளது. மலைநாட்டிலிருந்து இதனைப்பிரிப்பது களுகங்கைப் பள்ளத்தாக்காகும். றக்குவானை மலைத்திணிவு 1000 அடிகளுக்கு மேற்பட்டது. இதன் அதி உயரம் 4545 அடி உயரமுடைய பெரகலச் சிகரமாகவுள்ளது. றக்குவானை மலைத்திணிவின் கிழக்குப்பாகத்தில் புளுத்தோட்டை மேட்டு நிலமுளது. றக்குவானை மலைத்திணிவிற்கு மேற்கே, வடமேற்கு—தென்கிழக்குப் போக்கில் சப்பிரகமுவாப் பாறைத்தொடர்கள் அமைந்துள்ளன. களுகங்கைப் பள்ளத்தாக்கு இத்தகைய பாறைத்தொடர்களுக்கு இடையிலேயே காணப்படுகின்றது. சப்பிரகமுவாப் பாறைத் தொடர்களிலேயே கினித்துமை எனும் சிகரமுளது.

## தாழ்நிலங்கள்

இலங்கையின் மத்திய மலைநாட்டைச் சூழ்ந்து தாழ்நிலங்கள் அமைந்துள்ளன. எஸ். எஃப். டி சில்வா என்பார் இத் தாழ்நிலங்களை மூன்று வகைகளாகப் பிரித்துள்ளார். அவையாவன:


1. தென்மேல் தாழ்நிலம்
2. தென்கீழ்த் தாழ்நிலம்
3. வட தாழ்நிலம்

### தென்மேல் தாழ்நிலம்

தென்மேல் தாழ்நிலத்தின் எல்லைகள் மிகத் தெளிவானவை. இத் தாழ்நிலத்தின் வடக்கு எல்லையாகத் தெதுறுஓயாவும், தென்கிழக்கு எல்லையாக வளவை கங்கையும், கிழக்கு எல்லையாக 1000 அடி சமவுயரக்கோடும், மேற்கெல்லையாகக் கடலும் அமைந்திருக்கின்றன.

இத்தாழ்நிலம் வடக்கே அகன்றதாயும் தெற்கே ஒடுங்கியதாயும் காணப்படுகின்றது. இத்தாழ்நிலத்தின் மிகவுயர்ந்த பகுதிகள் றக்குவானை மலைகளைச் சூழ்ந்து காணப்படுகின்றன. றக்குவானை மலைத்

திணிவிலிருந்து பாறைத்தொடர்கள் வடமேற்காயும் தென்கிழக்காயும் பிரிந்து செல்கின்றன. இப்பாறைத்தொடர்கள் தெதுறுஓயாவரை அமைந்துள்ளன. தென்மேல் தாழ்நிலத்தில் காணப்படும் இப்பாறைத் தொடர்கள் கரையோரத்திற்குச் சமாந்திரமாக அமைந்திருக்கின்றன. இச்சமாந்தரமான பாறைத் தொடர்களுக்கு இடையே வடக்குத் தெற்காக நீள்பள்ளத்தாக்குகள் காணப்படுகின்றன. சமாந்திரமான இப்பாறைத் தொடர்கள் இத்தாழ்நிலத்தில் பாய்கின்ற நதிகளினுல் துண்டிக்கப்பட்டிருக்கின்றன. மகாஓயாவிற்குத் தெற்கே காணப்படும் பாறைத் தொடர்கள் வடக்கே காணப்படும் பாறைத் தொடர்களிலும் உயரமானவை. இப்பாறைத் தொடர்கள் மலைநாட்டினை அடுத்து உயரமானவையாயும், 500′ சமவுயரக்கோட்டிற்கு மேற்கே தாழ்வானவையாயும் உள்ளன.




படம்: 7 தென்மேல் தாழ்நிலம்

தென்மேல் தாழ்நிலத்தினூடாகப் பல நதிகள் பாய்கின்றன. மத்திய மலைநாட்டில் உற்பத்தியாகின்ற தெதுறுஓயா, மகாஓயா, களனிகங்கை என்பன முறையே சிலாபம், நீர்கொழும்பு, கொழும்பு எனும் நகர்களை அடுத்துக் கடலுடன் சேர்கின்றன. புளுத்தோட்டை மலைத்திணிவில் உற்பத்தியாகின்ற களுகங்கை, பெந்தோட்டை கங்கை, ஜின்கங்கை, நில்வளகங்கை என்பன முறையே களுத்துறை, அளுத்கம, ஜின்தோட்டை, மாத்தறை எனும் நகர்களை அடுத்துக் கடலுடன் சங்கமமாகின்றன.

தென்மேல் தாழ்நிலத்தின் கரையோரங்களை அடுத்தும், வடக்கே கொழும்பு குருநாகல், சிலாபம் ஆகிய பட்டினங்களை இணைக்கும் முக்கோணப் பிரதேசத்திலும் கரையோரமணல் பரந்துள்ளது. நதி வடிநிலங்களில் செழிப்பான வண்டல் மண் படிந்துள்ளது. இவை தவிர்ந்த ஏனைய பகுதிகளில் செம்பூரான் ஈரக்களிமண் (கபூக் மண்) பரந்துள்ளது.

## தென்கீழ்த் தாழ்நிலம்

இத்தாழ்நிலத்தின் எல்லைகள் தெளிவாக வரையறுக்கக்கூடியனவே. வடக்கு எல்லையாக மகாவலிகங்கையும், தென்மேற்கு எல்லையாக வளவைகங்கையும். மேற்கு எல்லையாக 1000 அடி சம வுயரக்கோடும், கிழக்கு எல்லையாகக் கடலும் அமைந்திருக்கின்றன.

இத்தாழ்நிலத்தின் உயர்ந்த பகுதி மலைநாட்டை அடுத்துள்ளது. 500 அடி சமவுயரக் கோட்டிற்கும் 1000 அடி சமவுயரக் கோட்டிற்கும் இடைப்பட்டபகுதி ஒரு தாழ்மேடையாகக் காணப்படுகின்றது.

இத்தாழ்நிலத்தின் வடபகுதி மகாவலிகங்கை வடிநிலமாகக் காணப்படுகின்றது. தென்மேல் தாழ்நிலத்தில் நீள்குன்றுகள் காணப்படுவதுபோல, தென்கீழ்த் தாழ்நிலத்தில் பல குன்றுகள் காணப்படுகின்றன. இக்குன்றுகள் அரிப்பிற்குட்பட்ட எஞ்சிய குன்றுகளாக விளங்குகின்றன. மாணிக்ககங்கையை அடுத்துக் காணப்படும் கதிர்காமக்குன்று இத்தாழ்நிலத்தில் காணப்படும் எஞ்சிய ஒருகுன்றே. இதனைவிட நுவரகல்கந்தை, பிறயஸ்கூட், வெஸ்மினிஸ்ரர் அபே முதலிய குன்றுகளும் காணப்படுகின்றன.

தென்கிழ் தாழ்நிலத்தில் பாய்கின்ற நதிகள் மத்திய மலைநாட்டில் உற்பத்தியாகி வடக்காயும், கிழக்காயும், தெற்காயும் பாய்ந்து கடலை யடைகின்றன. வடக்காக மகாவலிகங்கையும் மதுருஓயாவும் பாய்கின்றன. கல்லோயா, கெடஓயா, வில்ஓயா என்பன கிழக்காயும், கும்புக்கன்ஓயா, மாணிக்ககங்கை, கிரிண்டிஓயா, வளவகங்கை என்பன பெரிதும் தெற்காயும் பாய்கின்றன.




படம் 8: தென்கீழ்த் தாழ்நிலம்

தென்கீழ் தாழ்நிலத்தின் கரையோரங்களில் கடல்நீர் ஏரிகள் காணப்படுகின்றன. இவற்றுள் முக்கியமானது மட்டக்களப்புக் கடல் நீரேரியாகும். இச்சமவெளியின் கரையோரங்கள் வண்டல் மண்ணை யும், கரையோர மணலையும் மணற்குன்றுகளையும் கொண்டிருக்கின் றன. தென்பகுதியும் மலைநாட்டை அடுத்துள்ள மேற்குப் பகுதியும் செம்பூரானல்லாத ஈரக்களி மண்ணைக் கொண்டுள்ளன.

## வட தாழ்நிலம்

தெதுறுஓயாவிற்கும் மாத்தளை மலைகளுக்கும் மகாவலிகங்கைக் கும் வடக்கே, வடதாழ்நிலம் பரந்துள்ளது. வடதாழ்நிலமே இலங்

கையின் மிகப் பெரிய தாழ்நிலமாகும். இதன் பெரும்பாகம் 500 அடி உயரத்திற்கும் குறைவானதாக இருக்கின்றது. உயரமான பகுதிகள் மாத்தளை மலைகளைச்சூழ்ந்து அமைந்திருக்கின்றன. மீஓயா, காலஓயா, அருவியாறு, யான்ஓயா, அம்பன்கங்கை என்பன மாத்தளை மலைகளிலுற்பத்தியாகின்றன.

இச்சமவெளி வடமேற்கு நோக்கியும், வடக்கு நோக்கியும் வடகிழக்கு நோக்கியும் சாய்வாக அமைந்திருக்கிறது; இது நதிகளின் போக்கை அவதானிக்கும்போது புலனாகின்றது. இச்சமவெளியின் தென்மேற்குக் கரையில் உயரம் குறைந்த பாறைத் தொடர்கள் காணப்படுகின்றன.

வட தாழ்நிலத்திலுள்ள பாறைத் தொடர்களின் அமைப்பு ஏனைய இரு தாழ்நிலங்களிலும் வேறுபாடானது. மாத்தளை மலைகளிலிருந்து விசிறிபோலப் பாறைத்தொடர்கள் வடமேற்கு நோக்கியும், வடகிழக்கு நோக்கியும் அமைந்துள்ளன. இப்பாறைத் தொடர்களின் சில பகுதிகள் மண்ணுள் புதையுண்டு கிடக்க, வெளித்தெரியும் பகுதிகள் தாழ்பாறைத் தொடர்களாகக் காட்சி தருகின்றன. இப்பாறைத் தொடர்களுக்கு இடையிலே நதிகள் பாய்கின்றன. இந்நதிகள் கடலை யடையத் திரும்பும்போது, இப்பாறைத் தொடர்களைத் துண்டித்துத் திரும்பிப் பாய்கின்றன; மகாவலிகங்கை, அருவியாறு என்பன இவ்வாறே பாய்கின்றன.

வடதாழ்நிலத்தில் செம்மண்ணும் சாம்பல்நிற ஈரக்களிமண்ணும், செம்பூரானல்லாத ஈரக்களிமண்ணும், நதிகளை அடுத்து வண்டல் மண்ணும் காணப்படுகின்றன.

க. பொ. த. (சாதாரணதர) வகுப்பு மாணவர்களுக்காக இந்த அத்தியாயம் இணைக்கப்படுகின்றது.

# அத்தியாயம்: 2 (அ)

# இலங்கையின் தரைத்தோற்றம்

இலங்கையில் இரு வேறுபட்ட தரைத் தோற்றங்களைக் காண லாம். இலங்கையின் மத்தியில் மலைகள், குன்றுகள், மேட்டு நிலங் கள் (பீடபூமி) என்பன அடங்கிய உயர்நிலத் தோற்றத்தினையும், அதனைச் சூழ்ந்து கடற்கரைச் சமவெளிகளைக் கொண்ட தாழ்நிலத் தோற்றத்தினையும் காணக்கூடியதாக இருக்கின்றது. அதனால்தான் இலங்கையின் தரைத் தோற்றத்தை விவரிக்க முயன்ற புவியியலறி ஞர்கள் இலங்கையின் தரைத் தோற்றத்தினை இரு பெரும் பிரிவு களாக வகுத்து ஆராய்ந்துள்ளனர். அவையாவன:-

1. இலங்கையின் மத்தியிலுள்ள மலைநாடு.
2. அதனைச் சூழ்ந்துள்ள கடற்கரைச் சமவெளிகள்.

## மலைநாடு

மத்தியிலுள்ள மலைநாடு 1000 அடி சமவுயரக் கோட்டிற்கு மேற்பட்ட பகுதியெனப் பொதுவாகக் கருதப்படுகின்றது. மத்தியி லுள்ள மலைநாட்டின் தரைத் தோற்றத்தை ஏ. டி. பப்டிஸ்ற் என் பார் மூன்று உபபிரிவுகளாக வகுத்துள்ளார்.

(அ) மத்திய மேட்டு நிலம்


(ஆ) வடகிழக்கேயுள்ள நக்கிள்ஸ் மலைகள்

(இ) தென்மேற்கேயுள்ள றக்குவானை மலைகள்

**மத்திய மேட்டுநிலம்:** மலைத்தொடர்களையும் உயர் சிகரங்களையும் கொண்டிருக்கும் மத்திய மேட்டுநிலம், கரையோரச் சமவெளியி லிருந்து இருபடிகள் மூலம் உயர்ந்திருப்பதை அவதானிக்க முடியும். கண்டி, பலாங்கொடை மேட்டு நிலங்கள் காணப்படும் முதற்படி 1000 அடி தொடக்கம் 1700 அடிவரை உட்பட்டது. இரண்டாம் படி 1700 அடி தொடக்கம் 4000 அடிவரை அமைந்திருக்கின்றது. (படம்: 3ஐயும், 4ஐயும் அவதானிக்கவு)

பேதுருதாலகாலை மலைத்தொடர்களும், நுவரேலியாச் சமவெளி, மூன் சமவெளி, ஹோட்டன் சமவெளி, எல்க் சமவெளி, வில்சன் சமவெளி முதலிய உயர் சமவெளிகளும், இம்மேட்டு நிலத்தில் அடங்கியுள்ளன. இலங்கையின் அதி உயர்ந்த சிகரமான பேதுரு தாலகாலை மலைச் சிகரம் (8281 அடி) மத்திய மேட்டு நிலத்தில் காணப்படுகின்றது. தோட்டப்பாலை (7741 அடி), கிரிகாலப்பொத்தை (7857 அடி) எனும் மலைச் சிகரங்களும் காணப்படுகின்றன. குத்துச் சரிவுகள், உயர் சமவெளிகளின் எல்லைகளாக அமைந்திருப்பதனால், றம்பொட நீர்வீழ்ச்சி, எல்ஜின் நீர்வீழ்ச்சி, குருந்து ஓயா நீர்வீழ்ச்சி, பரவெல்லை நீர்வீழ்ச்சி முதலிய நீர்வீழ்ச்சிகளையும் இங்கு காணக்கூடியதாகவுள்ளது.

மத்திய மேட்டு நிலத்தின் தென் பகுதியிலுள்ள மலைச்சுவர் என அழைக்கப்படும் குத்தான சரிவு, மலை நாட்டின் வெளிப்படையான தரைத் தோற்ற உறுப்பாகும். இது இலங்கையின் நான்காவது உயரமான சிவனொளிபாதமலைச் சிகரத்திலிருந்து (7360′) கிழக்கே எல்லாக்கந்தை வரை பரந்துள்ளது.




படம்: 8 (அ) இலங்கையின் குறுக்குப் பக்கப் பார்வை. இரு சமவெளிகளும், மத்திய மலைகளும் அமைந்துள்ள நிலையை விளக்குகிறது. கரையோரச் சமவெளிகளைப் பற்றிப் படிக்கும்போது நினைவிற் கொள்க.

**வடகிழக்கேயுள்ள நக்கிள்ஸ் மலைகள்:** நக்கிள்ஸ் மலைகள் மத்திய மேட்டு நிலத்திற்கு வடகிழக்கே அமைந்துள்ளன. இது மத்திய மேட்டு நிலத்தில் இருந்து, மகாவலிகங்கைப் பள்ளத்தாக்கினல் (தும்பறைப் பள்ளத்தாக்கு) பிரிக்கப்பட்டிருக்கின்றது. இம் மலைகளின் போக்கு வடமேற்கு தென்கிழக்காகும். இம் மலைகளின் சிகரங்கள் கையிலுள்ள மொளிகளைப் போல அடுக்கடுக்காக அமைந்திருப்பதால் நக்கிள்ஸ் என்ற பெயர் வழங்கப்பட்டது என்பர். தென் கிழக்கே காணப்படும் கோம்பானியாச் சிகரமே (6248′) இம்மலைகளின் உயர்ந்த சிகரமாகும்.

**தெற்கேயுள்ள றக்குவானை மலைகள்:** மத்திய மலைநாட்டின் தென் மேற்பாகத்தில், களுகங்கைப் பள்ளத்தாக்கினால், மத்திய மேட்டு நிலத்தினின்றும் பிரிக்கப்பட்டு றக்குவானை மலைகள் அமைந்துள்ளன. இதன் கிழக்குப் பக்கத்தில் புளுத்தோட்டை மேட்டுநிலம் அமைந் துள்ளது. இம்மேட்டு நிலத்திலேயே 4545 அடி உயரமான பெரகல சிகரம் இருக்கின்றது, இணையான பாறைத் தொடர்களை மேற்குப் பாகத்திலும் வடமேற்குப் பாகத்திலும் காணலாம். (படம். 6ஐ, அவதானிக்கவும்.)

## தாழ்நிலங்கள்

மத்தியிலுள்ள மலைநாட்டை ஏ. டீ. பப்டிஸ்ற் என்பார் மூன்று பிரிவுகளாக வகுத்ததைப்போலவே, அதனைச் சூழ்ந்துள்ள கடற் கரைச் சமவெளிகளை எஸ். எவ். டீ. சில்வா என்பார் மூன்று தரைத் தோற்றப் பிரிவுகளாகப் பிரித்துள்ளார். அவையாவன:

(அ) தென்மேல் சமவெளி

(ஆ) தென்கீழ்ச் சமவெளி

(இ) வட சமவெளி

(அ) **தென்மேற் சமவெளி:** தென்மேற் சமவெளியின் எல்லைகள் மிகத் தெளிவானவை; இச் சமவெளியின் வடக்கு எல்லையாகத் தெதுறு ஓயாவும், தென்கிழக்கு எல்லையாக வளவகங்கையும், கிழக்கு எல்லையாக 1000 அடி சமவுயரக்கோடும், மேற்கெல்லையாகக் கட லும் இருக்கின்றன. இதனுயர்ந்த பகுதிகள் றக்குவானை மலைகளைச் சூழ்ந்துள்ளன. கரையோரத்திற்குச் சமாந்தரமாகப் பல பாறைத் தொடர்கள் அடுக்கடுக்காக இருப்பதைக் காணலாம். இப் பாறைத் தொடர்களைப் பாயும் நதிகள் துண்டித்துள்ளன.

இப்பிரதேசத்தின் வழியாகப் பாயும் நதிகள் தெதுறு ஓயா, மகா ஓயா, களனி கங்கை, களு கங்கை, பெந்தோட்டை கங்கை, ஜின் கங்கை, நில்வள கங்கை, வளவ கங்கை ஆதியனவாம். வெள்ளச் சமவெளிகளை நில்வள கங்கை, ஜின் கங்கை, களனி கங்கை, மகா ஓயா, தெதுறு ஓயா ஆகிய நதிகளின் கீழ்ப் பள்ளத்தாக்குகளில் காணலாம்.

இச்சமவெளியின் கரையோரங்களை அடுத்து வடக்கே கொழும்பு, குருநாகல், சிலாபம் ஆகிய பட்டினங்களை இணைக்கும் முக்கோணப் பிரதேசத்தில் கரையோர மண்ணையும் (மணல்), நதி வடிநிலங்களில் வண்டல் மண்ணையும், இவை தவிர்ந்த ஏனைய பகுதிகளில் செம் பூரான் ஈரக் களிமண்ணையும் காணலாம். (படம்: 7 ஐ அவதானிக் கவும்.)

(ஆ) **தென்கீழ்ச் சமவெளி:** இச்சமவெளியின் எல்லைகளும் தெளி வாக வரையறுக்கக் கூடியனவே. வடக்கு எல்லையாக மகாவலி கங் கையும், தென்மேற்கு எல்லையாக வளவ கங்கையும், மேற்கெல்லை யாக 1000 அடி சமவுயரக் கோடும், கிழக்கெல்லையாகக் கடலும் அமைந்திருக்கின்றன.

இச் சமவெளியினுயர்ந்த பாகம் மத்திய மலைநாட்டை அடுத்து அமைந்திருக்கின்றது. இவ்வுயர்ந்த பாகத்திலேயே கல்லோயா, மதுறு ஓயா, கெட ஓயா ஆகிய நதிகள் உற்பத்தியாகின்றன. இவ்வுயர்ந்த பகுதி 500 அடிக்கும் 1000 அடிக்குமுட்பட்டது. ஏனைய பகுதிகள் 500 அடிக்குட்பட்டன. இச் சமவெளியில் பாய்கின்ற மகாவலிகங்கை, வளவகங்கை, கிரிண்டி ஓயா ஆகிய நதிகளின் வடி நிலங்கள் அகல மானவையாக இருக்கின்றன. (படம். 8ஐ அவதானிக்கவும்)

இச்சமவெளியில் துவெகல்கந்தை, 'பிறேயஸ்கூட், வெஸ்மினிஸ்ரர் அபே, கதிர்காமம், இங்கினியக்கல எனும் தனிப்பட்ட குன்றுகள் வரிசை வரிசையாக அமைந்திருப்பதோடு மலைநாட்டை நோக்கிச் சாய்வாகவும் அமைந்திருக்கின்றன.

இச் சமவெளியின் கரையோரங்களில் கடல் நீர் ஏரிகள் காணப் படுகின்றன. இவற்றுள் முக்கியமானது மட்டக்களப்புக் கடல் நீரேரி யாகும். நதிகள் பல கிளைகளைப் பரப்பிக் கடல் நீரேரிகளுள் பாய்வதால், வண்டல் மண், பரந்த பிரதேசத்தில் பரப்பப்படுகின்றது. இச்சமவெளியின் கரையோரங்கள் வண்டல் மண்ணையும், கரையோர மண்ணையும், மணற் குன்றுகளையும் கொண்டிருக்கின்றன. தென்பகுதியும் மலைநாட்டை அடுத்துள்ள மேற்குப் பகுதியும் செம்பூரானல்லாத ஈரக் களிமண்ணைக் கொண்டுள்ளன.

(இ) **வடசமவெளி:** வடசமவெளி, தெதுறு ஓயாவிற்கும், மாத்தளை மலைகளுக்கும், மகாவலிகங்கைக்கும் வடக்கே அமைந்துள்ளது. இதன் பெரும்பாகம் 500 அடி உயரத்திற்குக் குறைவானதாக இருக்கின்றது. உயரமான பகுதிகள் மாத்தளை மலைகளைச் சூழ்ந்தமைந்திருக்கின்றன. ஜான் ஓயா, கால ஓயா, மல்வத்து ஓயா (அருவியாறு), அம்பன் கங்கை (மகாவலிகங்கையின் கிளை நதி) என்பன மாத்தளை மலைகளிலுற்பத்தியாகின்றன.

இச் சமவெளி வடமேற்கு நோக்கியும், வடக்கு நோக்கியும், வடகிழக்கு நோக்கியும் சாய்வாக அமைந்திருக்கிற தென்பது நதிகளின் போக்கை அவதானிக்கும்போது புலனாகின்றது. இச் சமவெளியின் தென்மேற்குக் கரையில் உயரங் குறைந்த சிறிய பாறைத் தொடர்கள் காணப்படுகின்றன. பாயும் நதிகள் இப்பாறைத் தொடர்களைத் துண்டித்துப் பாய்கின்றன.

வட சமவெளியிலுள்ள பாறைத் தொடர்களின் அமைப்பு ஏனைய இரு சமவெளிகளிலும் வித்தியாசமானதாக இருக்கின்றது. மாத்தளை மலைகளிலிருந்து விசிறி போலப் பாறைத் தொடர்கள் வடமேற்கு நோக்கியும் வடகிழக்கு நோக்கியும் அமைந்துள்ளன.

இச் சமவெளியின் கடற்கரையை அடுத்து கரையோர மணல் பரந்துள்ளது; ஏனைய விடங்களில் செம்மண்ணும் சாம்பல் நிற ஈரக் களிமண்ணும், செம்பூரானல்லாத ஈரக் களிமண்ணும், நதிகளை அடுத்து வண்டல் மண்ணும் காணப்படுகின்றன. யாழ்ப்பாணக் குடாநாட்டில், சுண்ணும்புக்கல் காணப்படுவதால், ரெருரோசா எனும் செந்நிற மண் காணப்படுகின்றது.

அத்தியாயம்: 3

# இலங்கையின் அமைப்பு


## கல்லியல்

இலங்கையின் நிலப்பரப்பில் பத்தில் ஒன்பது பகுதிக்குமேல் தொல்காலப் பாறைகள் அமைந்துள்ளன. இத்தொல்காலப் பாறைகள் கேம்பிரியாவிற்கு முற்பட்ட காலத்தைச் சேர்ந்தனவாகும். இத்தொல்காலப் பாறைகள் இன்று வானிலையழிதலினல் உருமாற்றத்திற்குட்பட்டு உருமாறிய பாறைகளாகக் காணப்படுகின்றன. உருமாறிய இத்தொல்காலப் பாறைகளில் பளிங்குப்பட்டைப் பாறைகளும், கொண்டலேயிற் பாறைகளும் தாம் இலங்கையின் பெரும்பகுதியை அடக்கியுள்ளன. கொண்டலேயிற் பாறைத் தொகுதியில் சாஞேக்கைற்றலேயீடுகளைக் (கருங்கல்) காணக்கூடியதாகவுள்ளது. கேம்பிரியாவிற்கு முந்திய காலப் பாறைகளைவிட, யூருசிக்காலப்படிவுப் பாறைகளும் இலங்கையில் காணப்படுகின்றன. தப்போவை, ஆண்டிகமம் எனும் இரு இடங்களில் யூருசிக்காலத்தைச் சேர்ந்த மாக்கல்லும் மட்கல்லும் அமைந்துள்ளன. யாழ்ப்பாணக்குடாநாடு உட்பட, இலங்கையின் வடமேற்குப்பாகத்தில் மயோசீன்காலச் சுண்ணும்புக் கற்பாறைகள் அமைந்திருக்கின்றன. அண்மைக்கால அடையற்பாறைகளை இலங்கையின் கடற்கரையோரங்களில் காணலாம்.

## புவிச்சரிதவியல்

500 கோடி ஆண்டுகளுக்குமுன், இலங்கை கொண்டுவாஞலாந்து எனும் நிலத்திணிவின் ஒரு பகுதியாக விளங்கியது. இந்நிலத்திணிவில் தென்னமெரிக்கா, ஆபிரிக்கா, மடகாஸ்கார், அராபியா, தக்கணம், இலங்கை, அவுஸ்திரேலியா, அந்தாட்டிக்கா என்று இன்று அழைக்கப்படுகின்ற நிலப்பரப்புக்கள் யாவும் இணைந்திருந்தன. ரேசறிக் காலத்தில் கொண்டுவாஞலாந்து புவியோட்டினுள் நிகழ்ந்த அகவிசைத் தாக்கங்களினுல் பிளவுற்று, இன்று கண்டங்கள் உள்ள நிலைகளுக்கு நகர்ந்தது. பிளவுற்ற அவ்வேளையில் தக்கணத்தின் ஒரு பகுதியாகவே இலங்கை விளங்கியது. மயோசீன் காலத்தில் இலங்கை தக்கணத்தினின்றும் பிரிவுற்று, தனித்தீவாக அமைந்தது. எனவே பொதுவாகக் கூறில் இலங்கை கொண்டுவாஞலாந்தின் எஞ்சிய நிலத்திணிவு என்றும், சிறப்பாகக் கூறின் தக்கணத்தின் பிரிவுற்ற பகுதி என்றும் கூறலாம்.

இலங்கை, இந்தியாவினின்றும் பிரிவுற்ற ஒரு பகுதியே என்பதற்குப் பல ஆதாரங்களை இன்று காட்டமுடியும். இந்தியத் துணைக்கண்டமும் இலங்கையும் ஒரே கண்டமேடையில் அமைந்திருக்கின்றன. (படம்: 1) மேலும், இந்த இரு நிலத்திணிவுகளும் தொல்காலப் பழையபாறையையே அடித்தளப்பாறையாகக் கொண்டு அமைந்திருக்கின்றன. அத்துடன் இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே மாதிரியான கல்லியல் தன்மைகளைக் காணமுடிகின்றது. இலங்கையிலுள்ள பளிங்குப்பட்டைப்பாறை, யூரசிக் படிவுகள், மயோசீன்பாறைகள் முதலியனவற்றை இந்தியத் துணைக்கண்டத்திலும் அவதானிக்க முடிகின்றது. இவற்றைவிட இந்தியாவில் காணப்படுகின்ற மலைத் தொடர்களின் போக்குகள், இலங்கையின் மலைப்போக்குகளோடு ஒத்துள்ளன. இவையாவும் இலங்கை இந்தியாவினின்றும் பிரிவுற்ற பகுதியே என்பதைச் சுட்டுகின்றன.





படம்: 9 இலங்கையும் இந்தியாவும் ஒரே அடித்தளப்பாறையில் அமைந்துள்ளன.

## அமைப்பு

இலங்கையின் இன்றைய அமைப்பை நோக்கும்போது, மத்திய பகுதியில் உயர்ந்த மலைத் திணிவுகளும் அதனைச் சூழ்ந்து தாழ்நிலங்களும் அமைந்திருப்பதைக் காணலாம். இந்த அமைப்பு உருவாகிய விதம் குறித்து அடம்ஸ், வாடியா, குலரத்தினம் முதலிய அறிஞர்கள் பல கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்கள்.

இலங்கையின் தரையமைப்பு ஒன்றின்மேலொன்றாக அமைந்த மூன்று ஆறரித்த சமவெளிகளின் இயல்பைக்கொண்டு விளங்குகின்றது. மிகத்தாழ்ந்த ஆறரித்த சமவெளி, மத்தியமலைநாட்டைச் சூழ்ந்து, கடற்கரைவரை தட்டையாகவுள்ளது. இத்தாழ் ஆறரித்த

சமவெளியின் சராசரி உயரம் 100 அடிகளாகும்; இத்தாழ் ஆறரித்த சமவெளியின் எல்லையிலிருந்து ஏறத்தாழ 1000 அடி உயரமான ஒரு குத்தான சரிவின்மூலம் உயர்ந்து 2500 அடிகள்வரை மத்திய ஆற ரித்தசமவெளி பரந்துள்ளது. இதனுள் பிறிதொரு குத்துச்சரிவின் மூலம் உயர்ந்து, சராசரி 5000 தொட்டு 6000 அடிவரை உயர் ஆற ரித்த சமவெளி அமைந்துள்ளது.




படம்: 10 மூன்று ஆறரித்த சமவெளிகள்


1. தாழ் ஆறரித்த சமவெளி (100′—மேல்)
2. மத்திய ஆறரித்த சமவெளி (1600′—மேல்)
3. உயர் ஆறரித்த சமவெளி (6000′—மேல்)

கனேடிய நாட்டைச் சேர்ந்த அடம்ஸ் என்பார், இலங்கையின் அமைப்பு மூன்று ஆறரித்த சமவெளிகளால் உருவானது என்ற கருத்தைத் தெரிவித்தார். ''மூன்று மேலுயர்ச்சிகள்மூலம் (கண்டவாக்க விசைகள்) இலங்கையின் வடிவம் அமைந்தது. முதல் மேலுயர்ச்சி கடல்மட்டத்தில் இருந்து உயர் ஆறரித்த சமவெளி மேலுயர்த்தப் பட்டதாகும். மேலுயர்ந்த நிலம் ஆறரித்த சமவெளியாகுமட்டும் அரிப்பிற்குட்பட்டது. அடுத்து, மத்திய ஆறரித்த சமவெளி உயர் ஆறரித்த சமவெளியையும் தூக்கிக்கொண்டு மேலுயர்ந்து அரிப்பிற் குள்ளாக்கியது. அதன் பின்பே தாழ் ஆறரித்த சமவெளி மேலுயர்த் தப்பட்டது'' என்றுர்.

அடம்ஸின்படி உயர் ஆறரித்த சமவெளியே முதுமையானது ஆகும். இதற்கு உயர் ஆறரித்த சமவெளியில் காணப்படுகின்ற பேதுரு தாலகாலே, சிவஞெளிபாதமலே முதலிய எஞ்சிய குன்றுகளே ஆதார மாகக் காட்டினுர்.

வாடியா எனும் அறிஞர், அடம்ஸ் கூறிய மூன்று ஆறரித்த சம வெளிகளே ஏற்றுக்கொண்டார். ஆனுல், அவற்றின் மேலுயர்ச்சி ஒழுங் கினே ஏற்றுக்கொள்ளவில்லே; வாடியாவின் கருத்துப்படி, முதன்முதல் மேலுயர்ச்சிக்குட்பட்டது தாழ் ஆறரித்த சமவெளியாகும். தாழ் ஆற

ரித்த சமவெளி உருவாகியதும், இன்று 1000 அடிச் சரிவு காணப்படு கின்ற விளிம்பில் வட்டித்த திணிவுப் பிளவாக்கம் (Circumscribed block-faulting) ஏற்பட்டது. (ஒரு நிலப்பரப்பின் மத்தியில் வட்டமாக ஏற்படும் பிளவுக்குகையே வட்டித்த திணிவுப் பிளவாக்கமாகும்.) இப்பிளவாக்கத்தினுள் அமைந்த நிலம் இரண்டாவதாக மேலுயர்ச்சிக்கு உட்பட்டது. இதுவே மத்திய ஆறரித்த சமவெளி. மத்திய ஆறரித்த சமவெளி உருவாகியதும், இதனில் உருவாகிய வட்டித்ததிணிவுப் பிளவாக்கத்தால், உயர் ஆறரித்த சமவெளி மேலுயர்ந்தது, என வாடியா கூறினர். இவற்றிற்கு ஆதாரமாக குத்துச் சாய்வுகளையும், நீர்வீழ்ச்சிகளையும், வேறும் பல முதிர்ந்த முதிரா நிலவுருவங்களையும் காட்டினர். வாடியாவின்படி உயர் ஆறரித்த சமவெளி இளமையானதாகும். அடம்ஸ் கருதிய எஞ்சியமலைகளான பேதுருதாலகாலை, சிவனொளிபாதமலை என்பன வாடியாவின்படி, குறைமலைகளாகும்.



படம்: 11 வாடியாவின் ஆறரித்த சமவெளிகள்

இவ்விருவரது கருத்துக்களையும் பேராசிரியர் குலரத்தினம் என்பார் ஏற்றுக்கொள்ளவில்லை. மூன்று தடவைகள் மேலுயர்த்தப்பட்ட

தால் இலங்கையின் அமைப்பு உருவாகியது என்ற கருத்தை அவர் கண்டித்தார். இலங்கையின் குறுக்குப்பக்கப் பார்வையில் மூன்று ஆற ரித்த சமவெளிகளுக்குரிய தோற்றம் காணப்பட்டபோதிலும், அவற்றை நிலைநாட்ட அடம்ஸ், வாடியா என்போர் காட்டிய குத்துச்சாய்வுகள் உண்மையில் தொடர்ச்சியானவை இல்லை என்கிறார். இலங்கையின் மத்திய பகுதியில் பல்வேறு உயரங்களில், பல்வேறு மட்டங்களில் பல குத்துச்சாய்வுகளும் சமவெளிகளும் காணப்படுகின்றன. அத்தோடு அரிப்புற்ற எஞ்சிய குன்றுகளும், இளமையான நீர் வீழ்ச்சிகளும், திசைமாறிய நதிகளும் பல்வேறு மட்டங்களில் காணப்படுகின்றன. எனவே, முன்னவர்களின் கருத்துப்படி இலங்கையின் நிலத்தோற்றம் அமைந்திருக்கமுடியாது என்று கூறிய பேராசிரியர், இலங்கையின் அமைப்பு உருவானமைக்கு விளக்கந் தருகிறார்.

'இலங்கையின் மேற்பரப்பு உருவங்கள் வேற்றுமைப்பட்ட பிறப்புக்களைக்கொண்ட சிக்கலான தன்மையானவை. வேறுபட்ட ஆக்கங்களால் தோன்றிய பலமுகப்புக்கூறுகளை இலங்கை கொண்டுள்ளது' என்கிறார். அவரின்படி இலங்கையின் மேற்பகுதிகள் பல தடவைகள் மேல் உயர்த்தப்பட்டுள்ளன; இவ்வாறு பல்வேறு உயரங்களில், பல்வேறு மட்டங்களில் மேலுயர்த்தப்பட்ட பகுதிகள் அரிப்புக்குள்ளாகிக் கொண்டே வருகின்றன என்பதாகும். இவரின்படி புவியசைவுச் சக்திகளும் தின்னற் சக்திகளும் தொடர்ந்து தொழிற்படுகின்றன. இவை இரண்டிற்கும் இடையே நடைபெறும் ஓயாதமோதலின் விளைவாகவே இன்றைய இலங்கையின் வடிவம் காணப்படுகின்றது. என்பதாகும். நுணுகி ஆராயும்போது இவரது கருத்தே ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

அத்தியாயம்: 4

# இலங்கையின் காலநிலை

காலநிலை என்பது ஒரு பிரதேசத்தில் நீண்ட காலவேளையில் நிகழும் வளிமண்டலத் தன்மைகளின் தொகுப்பாகும். வெப்பநிலை, மழைவீழ்ச்சி, அமுக்கம், காற்று, ஈரப்பதன் என்பனவே காலநிலையைத் தோற்றுவிக்கும் மூலகங்களாம். இவற்றை அளவிட்டு விபரிப்பதே ஓரிடத்தின் காலநிலை விபரமாகும்.

இலங்கையின் காலநிலையை நோக்கும்போது, அது மத்தியகோட்டுக் காலநிலைக்குரியதாகவுள்ளது புலனாகும். அதனால் பொது நோக்கில் அதிக வெப்பநிலையையும், மழைவீழ்ச்சியையும் பெறும் பிரதேசமாகவுள்ளது. அத்தோடு பருவக்காற்றுக்கள், சூறாவளிகள், தரைத்தோற்றம் என்பனவும் காலநிலையைச் சேர்ந்து நிர்ணயிக்கின்றன.

## 1. வெப்பநிலை

இலங்கையின் ஆண்டிற்குரிய சராசரி வெப்பநிலை 80° ப. ஆக இருக்கின்றது. இலங்கையின் வெப்பநிலை ஒருபோதும் உறைநிலைக்குக்கீழ் (32° ப.) சென்றதில்லை. இலங்கையின் தென்மேற் சமவெளியிலும் தென்கீழ் சமவெளியிலும் வருடச் சராசரி வெப்பநிலை 80°—81° ப. ஆக இருக்கின்றது. வடசமவெளியின் வருடச் சராசரி வெப்பநிலை 81°—83° ப. வரை வேறுபடுகின்றது. மத்திய மலைநாட்டில் உயரத்திற்கு ஏற்றவாறு வெப்பநிலை வேறுபடுகின்றது. 1000 அடி உயரமான இடங்களில் வருடச் சராசரி வெப்பநிலை 77° ப. ஆகவும், 3000 அடி உயரமான இடங்களில் வருடச் சராசரி வெப்பநிலை 70° ப. ஆகவும், 6000 அடி உயரமான இடங்களில் வருடச் சராசரி வெப்பநிலை 60° ப. ஆகவும் இருக்கின்றன. வெப்பநிலையிற் காணப்படும் இத்தகைய சமனற்ற பரம்பலிற்குச் சில காரணங்களுள்ளன. அவையாவன:

(அ) இலங்கை அமைந்திருக்கும் நிலையம்.
(ஆ) தரைத்தோற்ற வேறுபாடுகள்.
(இ) இலங்கையின் சிறிய பரப்பு.

### இலங்கை அமைந்திருக்கும் நிலையமும் வெப்பநிலையும்

மத்திய கோட்டிலிருந்து ஏறக்குறைய 5° தொடக்கம் 10° வட அகலக்கோடுகளுள் இலங்கை அமைந்திருப்பதால், வருடத்திற்குரிய

## இலங்கையின் வெப்பநிலைத்தரவுகள். (பரனேற் பாகையில்)

| | யனவரி | பெப்ருவரி | மார்ச் | ஏப்ரல் | மே | யூன் | யூலை | ஒகஸ்ட் | செப்டெம்பர் | ஒக்ரோபர் | நவம்பர் | டிசம்பர் | வருடச் சராசரி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. கொழும்பு | 79·2 | 79·6 | 81·0 | 81·8 | 82·3 | 81·3 | 80·8 | 81·0 | 81·0 | 79·9 | 79·2 | 79·0 | 80·5 |
| 2. இரத்தினபுரி | 80·4 | 81·4 | 82·4 | 82·5 | 82·0 | 80·8 | 80·4 | 80 5 | 80·4 | 80·0 | 80·0 | 79·9 | 80·9 |
| 3. காலி | 78·9 | 79·4 | 80·0 | 81·6 | 81·2 | 80·6 | 79·6 | 79·2 | 79·4 | 78·5 | 78·7 | 78·7 | 78·8 |
| 4. கண்டி | 73·6 | 74·8 | 77·4 | 78·8 | 78·2 | 76·3 | 75·5 | 76·0 | 74·8 | 76·6 | 75·1 | 75·8 | 75·9 |
| 5. நுவரெலியா | 57·7 | 57·8 | 58·8 | 60·7 | 62·0 | 60·8 | 60·2 | 60·4 | 60·2 | 60·0 | 59·6 | 58·6 | 59·7 |
| 6. யாழ்ப்பாணம் | 77·6 | 79·0 | 82·3 | 85·0 | 85·0 | 83·8 | 83·0 | 82·8 | 82·8 | 81·7 | 79·5 | 77·9 | 81·7 |
| 7. அநுராதபுரம் | 76·4 | 78·2 | 81·6 | 83·2 | 83·6 | 83·2 | 83·4 | 83·4 | 83·7 | 81·4 | 78·6 | 76·8 | 81·1 |
| 8. திருகோணமலை | 78·0 | 79·2 | 81·2 | 83·7 | 85·7 | 85·9 | 85·4 | 84·9 | 84·8 | 82·0 | 79·3 | 78·2 | 82·4 |
| 9. மட்டக்களப்பு | 77·5 | 78·5 | 80·0 | 82·1 | 83·9 | 85 0 | 84·5 | 83·6 | 83·0 | 81·2 | 79·0 | 78·2 | 83·0 |
| 10. வதுளை | 70·2 | 71·0 | 73·0 | 75·0 | 75·6 | 75·0 | 75·0 | 75·5 | 74·8 | 74·0 | 72·5 | 70·6 | 73·5 |
| 11. தியத்தலாவை | 64·7 | 66·1 | 68·0 | 69·4 | 70·6 | 70·4 | 70·2 | 69·8 | 69·4 | 68·6 | 67·2 | 65·4 | 68·3 |
| 12. மன்னர் | 79·0 | 80·2 | 82·5 | 84·6 | 85·1 | 84·5 | 83·5 | 83·0 | 83·2 | 82·6 | 80·2 | 79·0 | 82·2 |
| 13. அம்பாந்தோட்டை | 78·9 | 79·4 | 80·6 | 82·0 | 82·4 | 81·6 | 81·8 | 81·6 | 81·3 | 80·8 | 79·8 | 79 0 | 80·8 |

(ஆதாரம்: Statistical Abstract of Ceylon--1964) அட்டவணை: 1

சராசரி வெப்பநிலை அதிகமாகவுள்ளது. இலங்கையின் வெப்பநிலை வீச்சு தெற்கேயிருந்து வடக்கு நோக்கி அதிகரிக்காமல், தென்மேற்கில் இருந்து வடகிழக்கு நோக்கி அதிகரிப்பதற்குக் காரணங்களுள்ளன. தென்மேற் பாகத்தில் நிகழும் அதிக மழைவீழ்ச்சியினால் வெப்பநிலை தணிக்கப்படுகிறது; மேலும், இப்பாகத்தில் வரண்டபருவம் குறுகியதாயுமிருக்கிறது. இலங்கையின் வடகிழக்குப் பாகத்தில் வரண்ட பருவம் நீண்டதாக இருப்பதோடு, வெப்பநிலையைத் தணிப்பதற்குப் போதிய மழையுமில்லை. அதனால்தான் வெப்பநிலை வீச்சு தென்மேற்கிலிருந்து வடகிழக்கு நோக்கி அதிகரித்துச் செல்கின்றது. உதாரணமாக காலியில் வருடத்திற்குரிய வெப்பநிலை வீச்சு 3·2°ப ஆகவும், திருகோணமலையில் 7·7° ப. ஆகவும் வேறுபடுகின்றது. அட்டவணை 1-ஐ ஆராயில் இதனைத் தெளிவாக உணரலாம்.


## குத்துயரமும் வெப்பநிலையும்

இலங்கையின் வெப்பநிலையைக் கட்டுப்படுத்தும் காரணிகளுள் தரைத்தோற்ற வேறுபாடுகள் மிக முக்கியமானவை. இலங்கையின் மத்திய மலைநாடு 1000 அடியிலிருந்து 8300 அடிவரை உயர்ந்து விளங்குகின்றது. உயரத்துக்கேற்ப வெப்பநிலை குறைவடைவதியற்கையே. ஒவ்வொரு 300 அடி உயரத்திற்கும் 1°ப. வீதம் வெப்பநிலை வீழ்ச்சியடைகின்றது; ஒவ்வொரு 1000 அடிக்கும் 3·5°ப. வீதம் வெப்பநிலை வீழ்ச்சியடைகின்றது. 2200 அடி உயரத்திலுள்ள வதுளையில் சராசரி வெப்பநிலை கொழும்பிலுள்ள சராசரி வெப்பநிலையிலும் பார்க்க 7°ப. குறைவாகவுள்ளது. 4500 அடி உயரத்திலுள்ள தலவாக்கொல்லையில் 65°ப. வெப்பநிலையும், 6150 அடி உயரத்திலுள்ள நுவரெலியாவில் 60°ப. வெப்பநிலையும் காணப்படுவதற்குக் குத்துயரமே காரணமாகும்.


## இலங்கையின் சிறிய பரப்பும் வெப்பநிலையும்

இலங்கை சிறிய ஒரு தீவாகும்; அதனது ஆகக்கூடிய அகலம் 140 மைல்களாகும். இலங்கையின் எப்பாகமும் கடலிலிருந்து 70 மைல்களுக்கு அப்பாலில்லை. அதனால் குளிர்ந்த கடற்காற்றுகள் எங்கும் வீசி ஈரலிப்பைத் தருகின்றன. தீவின் எப்பகுதியும் கடலின் மட்டுப்படுத்தும் தன்மைக்கு அதிக தூரத்திலில்லை. வெப்பத்தின் தாக்கத்தைத் தணிப்பதற்குக் கடலின் மட்டுப்படுத்துந் தன்மை உதவுகின்றது.

மேலும், இலங்கையின் வெப்பநிலையை, நிகழும் காலம், முகில்களற்ற வானம், நீர்த்தொகுதிகள் என்பனவும் சிறிதளவு பாதிக்கவே செய்கின்றன.




இலங்கையின் வெப்பநிலைப் பரம்பல்




இலங்கையின் மழைவீழ்ச்சிப் பரம்பல்

## 2. அமுக்கமும் காற்றுக்களும்

இலங்கை சிறிய ஒரு தீவாக விளங்குவதால், இலங்கையின் அதிக வெப்பநிலை குறிப்பிடத்தக்க அமுக்க வேறுபாடுகளைத் தோற்றுவிப்பது கிடையாது. எனினும், இலங்கையை அடுத்து உருவாகும் மத்தியகோட்டுத் தாழமுக்க நிலைமைகளும் அமைதி வலயமும் (Doldrum) இலங்கையின் வானிலையில் சிறிதளவு தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

இலங்கை மத்திய கோட்டிற்கு வடக்கே அமைந்திருப்பதனால், ஆண்டின் சில காலங்களில் வியாபாரக் காற்றுத் தொகுதிகளின் ஆதிக்கத்தினை அனுபவிக்கின்றது. இவ்வியாபாரக் காற்றுக்கள் குறித்த பருவங்களில் இங்கு வீசுவதால் 'பருவக்காற்றுக்கள்' என்ற பெயரினைப் பெற்றுவிடுகின்றன.

### பருவக்காற்றுக்கள்

இலங்கை இரு பருவக்காற்றுக்களின் செல்வாக்கினுள் அமைந்துவிடுகின்றது. அவை:

1. தென்மேல் பருவக்காற்று.
2. வடகீழ்ப்பருவக்காற்று.

தென்மேல் பருவக்காற்று மே மாதக் கடைசியில் அல்லது யூன் மாதத் தொடக்கத்தில் வீசத்தொடங்கி, செப்டம்பர் வரை வீசுகின்றது. தென்கீழ் வியாபாரக்காற்று, மத்தியகோட்டைக் கடப்பதால் ஏற்படும் திசைத்திருப்பத்தினாலேயே தென்மேல் பருவக்காற்று உருவாகின்றது. 'புவியின் மேற்பரப்பில் அசைந்து செல்லும் எப்பொருளும், புவிச்சுழற்சி விசை காரணமாக வடவரைக் கோளத்தில் அதன் வலது பக்கத்திற்கும், தென்னரைக் கோளத்தில் அதன் இடது பக்கத்திற்கும் திசைதிருப்பப்படும்' என்பது பெரலின் விதியாகும். (Ferrel's Low) இவ்விதிப்படி, மத்தியகோட்டைக் கடக்கும் தென்கீழ் வியாபாரக்காற்று, அதன் வலது பக்கத்திற்குத் திசை திருப்பப்பட்டு தென்மேல் பருவக்காற்றாக வீசுகின்றது. அதே வேளையில், தென்மேற்கு இந்தியாவில் காணப்படும் தார் தாழமுக்கமும் இக்காற்றைக் கவர்ந்திழுத்துத் தென்மேலாக வீசச் செய்கின்றது.

தென்மேல் பருவக்காற்று இலங்கையின் மழைதரு காற்றாகக் கருதப்படுகின்றது; தென்மேல் பருவக்காற்று மிக ஈரலிப்பான காற்றாகும். இலங்கையின் வடபகுதியிலும், கிழக்குப் பகுதியிலும் தென்மேல் பருவக்காற்று வரண்ட காற்றாகவே வீசுகின்றது. மட்டக்களப்புப் பகுதியில் இத் தென்மேல் பருவக்காற்றை 'கச்சான்' எனவும், யாழ்ப்பாணப்பகுதியில் இக் காற்றைச் 'சோளகம்' எனவும் வழங்குவர்.

**வடகீழ்ப்பருவக்காற்று:** டிசம்பர் மாதம் தொடக்கம் பெப்ரவரி மாதம் வரைக்கும் வீசுகின்றது. வடகீழ்ப்பருவக்காற்று உண்மையில், வடகீழ் வியாபாரக் காற்றேயாகும். இக்காற்று ஆசியாவின் மத்தியிலிருந்து தோற்றம் பெறுவதால் கண்டக்காற்ருகவும், அதிக ஈரலிப்பு அற்ற காற்ருகவும் விளங்குகின்றது.

**சூருவளிகள்**

இலங்கை மத்தியகோட்டிற்கு அருகே அமைந்திருப்பதால், அயனமண்டலச் சூருவளிகளின் தாக்கம் இங்கு காணப்படுகின்றது. இலங்கையின் காலநிலையில் பருவக்காற்றுக்களோடு சூருவளிகளும் முக்கியத்துவம் வகிக்கின்றன. வடகீழ்ப்பருவக்காற்று வீசுகின்ற டிசம்பர், யணவரி, பெப்ரவரி எனும் மாதங்களில், சூருவளிகளின் தாக்கம் இலங்கையில் காணப்படுகின்றது; மேலும், ஒக்டோபர், நவம்பர் மாதங்களில் சூருவளிகள் இலங்கையின் காலநிலையில் அதிக செல்வாக்கைச் செலுத்துகின்றன. இச் சூருவளிகளினுல் இலங்கையில் வெள்ளப் பெருக்கு, அழிவு என்பன ஏற்படுகின்றன.

## 3. மழைவீழ்ச்சி

இலங்கையின் மழைவீழ்ச்சிப் பரம்பல் படத்தைப் பார்க்க, தீவின் எப்பகுதியாவது மழைபெருத பிரதேசமாகக் காணப்படவில்லை. இலங்கையின் தென்மேற் பகுதியில் அதிக மழை வீழ்ச்சியும், வட வடகீழ்ப்பகுதிகளில் குறைந்த மழைவீழ்ச்சியும் காணப்படுகின்றன. மழைவீழ்ச்சியைப் பெறும் அளவில் வேறுபாடு உள்ளதே தவிர முற்ருக மழை வீழ்ச்சியைப் பெருத பகுதிகள் இலங்கையில் எதுவுமில்லை.

இலங்கையின் மழைவீழ்ச்சிக்குக் காரணங்கள் சிலவுள்ளன. அவை: (அ) பருவக்காற்றுக்கள் (ஆ) மலைத்தடை (இ) மேற்காவுகை (ஈ) சூருவளிகள் என்பனவாம்.

தென்மேல் பருவக்காற்று வீசும் மாதங்களில் தென்மேற் தாழ்நிலத்திலும் மத்திய மலைநாட்டின் மேற்குப்பாகத்திலும் அதிக மழை பெய்கின்றது. இங்கு மழைவீழ்ச்சியின் அளவு கடற்கரையிலிருந்து மத்திய உயர் நிலத்தை நோக்கி அதிகரிக்கும். அதிக ஈரலிப்பைக் கொண்ட தென்மேல் பருவக்காற்று உள்நாட்டை நோக்கி வீசும் போது மத்திய மலைநாட்டின் தென்மேல் பகுதி அதனைத் தடுத்து ஒடுங்கச் செய்வதால் (குளிரச்செய்வதால்) இப்பகுதிகள் அதிக மழை வீழ்ச்சியைப் பெறுகின்றன. இலங்கையின் கிழக்கு, வடக்குப்பாகங்களில் இப்பருவக்காற்றுக் காலம் வறட்சியான காலமாகும்.

வடகீழ்ப்பருவக்காற்று வீசும் மாதங்களில் இலங்கையின் வடபாகம், கிழக்குப்பாகம், மலைநாட்டின் கிழக்குப்பாகம் என்பன மழையைப் பெறுகின்றன. தென்மேற்பருவக்காற்றினல் கிடைக்கும் மழைவீழ்ச்சியளவுடன், வடகீழ் பருவக்காற்றினல் கிடைக்கும் மழைவீழ்ச்சியளவை ஒப்பிடில் மிகக்குறைவாகும்.

மத்தியகோட்டிற்குரிய அதிக வெப்பநிலை காரணமாக எப்போதும் நீர் ஆவியாகமாறி மேலெழுந்துகொண்டிருக்கின்றது. மேலெழுந்து ஒடுங்கி இடி மின்னலோடு மழையாகப் பொழிகின்றது. இம் மேற்காவுகை மழைவீழ்ச்சி இலங்கை முழுவதும் நிகழ்கின்றது. மார்ச், ஏப்பிரல், செப்டம்பர், ஒக்டோபர் மாதங்களில் இலங்கையின் மழைவீழ்ச்சியில் மேற்காவுகை மழையினளவு அதிகமாகும்.

சூருவளிகளினல் இலங்கை கணிசமானவளவு மழையைப்பெற்றுவருகின்றது. சூருவளிகள் பருவக்காற்று இடைக்காலங்களில், குறிப்பாக ஒக்டோபர், நவம்பர் மாதங்களில் இலங்கைக்கு அதிக மழையைத் தருகின்றன. இலங்கையின் கிழக்கு, வடக்குப் பாகங்களில் ஒக்டோபர், நவம்பர் மாதங்களில் அதிக மழை பெய்வதற்குச் சூருவளிகளே காரணமாகும்.

## மழைவீழ்ச்சிப் பரம்பல்

இலங்கையின் மழைவீழ்ச்சிப் பரம்பலை மூன்று வகைகளாக வகுத்து விளக்கலாம். அவையாவன:

(அ) 75 அங்குலங்களுக்கு மேல் மழைபெறும் பிரதேசங்கள்.

(ஆ) 50 அங்குலம் தொடக்கம் 75 அங்குலம் வரை மழைபெறும் பிரதேசங்கள்.

(இ) 25 அங்குலம் தொடக்கம் 50 அங்குலம் வரை மழை பெறும் பிரதேசங்கள்.

### 75 அங்குலங்களுக்குமேல் மழைபெறும் பிரதேசங்கள்

இலங்கையின் தென்மேல் பாகமும் மலைநாட்டின் மேற்குப் பாகமும் வருடச்சராசரியாக 75 அங்குலங்களுக்குமேல் மழையைப் பெறுகின்றன. இப்பகுதிகள் பொதுவாக வருடம் முழுவதும் மழையை அனுபவிக்கின்றன. இலங்கையின் ஈரலிப்பான பிரதேசங்கள் என்று 75 அங்குலங்களுக்கு மேல் மழைபெறும் இப்பிரதேசங்களையே கூறுவர். இப்பிரதேசங்களில் அடங்கும் வட்டவளை, கினிகத்தேனை, சிவனொளிபாதம், இரத்தினபுரி, ருவான்வெல, அவிசாவளை, லபுகமை என்பன 150 அங்குலங்களுக்கு அதிகமான மழையைப் பெறுகின்றன. மேலும், இப்பாகத்தினுள் இருக்கும் சிவனொளிபாதம், வட்டவளை எனும் பகுதிகள் 200 அங்குலங்களுக்கு அதிகமாயும் மழையைப் பெறுகின்றன.

## இலங்கையின் மழைவீழ்ச்சித்தரவுகள். (அங்குலத்தில்)


| | ஜனவரி | பெப்ருவரி | மார்ச் | ஏப்ரல் | மே | யூன் | யூலை | ஓகஸ்ட் | செப்டெம்பர் | ஒக்ரோபர் | நவம்பர் | டிசம்பர் | வருடமழை வீழ்ச்சி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. கொழும்பு | 3·9 | 2·6 | 4·6 | 9·0 | 15·5 | 8·6 | 5·5 | 4·0 | 6·8 | 13·7 | 13·0 | 5·6 | 92·2 |
| 2. இரத்தினபுரி | 6·2 | 5·3 | 10·3 | 11·5 | 20·9 | 18·5 | 12·7 | 11·3 | 14·5 | 18·0 | 14·7 | 9·1 | 152·5 |
| 3. காலி | 3·9 | 3·2 | 5·2 | 8·7 | 12·6 | 8·4 | 6·3 | 6·2 | 8·8 | 12·0 | 12·0 | 7·8 | 95·1 |
| 4. கண்டி | 6·3 | 2·5 | 5·8 | 6·5 | 7·6 | 8·8 | 7·4 | 5·7 | 6·4 | 10·5 | 11·0 | 8·4 | 86·9 |
| 5. நுவரெலியா | 6·9 | 1·9 | 4·0 | 4·9 | 8·4 | 8·4 | 11·0 | 7·5 | 8·2 | 9·7 | 9·1 | 7·8 | 81·8 |
| 6. யாழ்ப்பாணம் | 4·1 | 1·5 | 1·6 | 2·2 | 2·0 | 0·4 | 0·5 | 1·1 | 2·5 | 9·2 | 17·3 | 10·4 | 53·1 |
| 7. அநுராதபுரம் | 5·8 | 1·7 | 4·2 | 6·4 | 3·5 | 0·8 | 1·3 | 1·6 | 3·8 | 9·7 | 10·7 | 7·5 | 57·0 |
| 8. திருகோணமலை | 8·3 | 2·6 | 2·3 | 2·2 | 3·2 | 0·9 | 1·7 | 3·6 | 3·4 | 9·6 | 11·9 | 13·0 | 62·7 |
| 9. மட்டக்களப்பு | 12·9 | 4·2 | 3·2 | 2·3 | 1·8 | 0·9 | 1·0 | 2·0 | 2·4 | 7·2 | 13·9 | 17·0 | 68·8 |
| 10. வதுளை | 10·3 | 3·2 | 5·0 | 7·0 | 4·7 | 1·5 | 2·2 | 3·2 | 4·5 | 8·9 | 10·2 | 11·2 | 69·9 |
| 11. தியத்தலாவை | 6·6 | 2·3 | 4·8 | 6·5 | 6·0 | 1·9 | 1·9 | 3·1 | 4·4 | 9·1 | 10·4 | 8·0 | 65·0 |
| 12. மன்னார் | 3·8 | 1·7 | 1·8 | 3·4 | 1·8 | 0·4 | 0·4 | 0·6 | 1·2 | 6·6 | 10·2 | 7·8 | 39·7 |
| 13. அம்பாந்தோட்டை | 4·0 | 1·4 | 3·3 | 3·8 | 4·2 | 2·1 | 2·0 | 1·4 | 2·7 | 4·7 | 7·5 | 5·6 | 42·7 |

(ஆதாரம்: Statistical Abstract of Ceylon--1964) அட்டவணை: 2

வருடம் முழுவதும் மழை பொழிகின்ற போதிலும், இப்பிரதேசங்களில் மழைவீழ்ச்சியினளவு பெப்ரவரி, ஓகஸ்ட் மாதங்களில் குறைவானதாக இருக்கின்றது. தென்மேல் சமவெளியில் மே, ஒக்டோபர் மாதங்களிலும்; மலைநாட்டில் யூன், நவம்பர் மாதங்களிலும் அதிக மழைவீழ்ச்சி நிகழ்கின்றது. இவற்றை அட்டவணை 2இல் இருந்து அறியலாம்.

75 அங்குலங்களுக்குமேல் மழைபெறும் பிரதேசங்கள், இலங்கையில் ஈரலிப்பான பாகங்களாக விளங்குகின்றன. இப்பாகங்கள் அதிக மழையைப் பெறுதற்கு மேல்வருவன காரணங்களாகும்.

1. இந்து சமுத்திரத்தில் தோற்றம் பெறுகின்ற தென்மேல் பருவக்காற்று அதிக ஈரலிப்போடு, இலங்கையின் தென்மேல் பிரதேசத்தில் வீசுகின்றது. அவ்வாறு வீசும்போது மலைநாட்டின் மேற்குப் பகுதியால் தடுக்கப்பட்டு, ஒடுங்குகின்றது. அதனால், இப்பிரதேசங்களில் அதிக மழை கிடைக்கின்றது.




படம்: 14 தென்மேல் பருவக்காற்று மழை தரும் தன்மை

2. இப்பிரதேசங்கள் மேற்காவுகை நிகழ்ச்சியினாலும் அதிக மழையைப் பெறுகின்றன. தென்மேல் பிரதேசத்தில் பகல்வேளைகளில் நிலவும் உயர் வெப்பநிலை காரணமாக, ஆவியாகுதல் நிகழ்கின்றது. மாலை வேளைகளில் இடிமின்னலோடு மேற்காவுகை மழை பொழிகின்றது. கொழும்பில் இந்நிகழ்ச்சியை நன்கு அவதானிக்கலாம்.

3. சூறாவளித் தாக்கங்களினாலும் இப்பிரதேசங்கள் மழையைப் பெறுகின்றன. ஒக்டோபர், நவம்பர் மாதங்களில் சூறாவளிகளினால் மழை கிடைக்கின்றது.

### 50 அங்குலம் தொடக்கம் 75 அங்குலம்வரை மழை பெறும் பிரதேசங்கள்

இலங்கையின் ஈரலிப்பான பிரதேசங்களும், மன்னார், அம்பாந்தோட்டைப் பகுதிகளும் தவிர்ந்த இலங்கையின் ஏனைய பகுதிகள் 50

அங்குலம் தொடக்கம் 75 அங்குலம் வரை மழையைப் பெறுகின்றன. இலங்கையின் வடசமவெளி, தென்கிழ்ச்சமவெளி, மலைநாட்டின் கிழக்குப்பாகம் என்பன இப்பிரதேசங்களாம். மழைவீழ்ச்சிக்காலம் செப்டம்பர் மாதம் தொடக்கம் யனவரிமாதம் வரை நிலவும். இப்பிரதேசங்கள் வடகீழ்ப் பருவக்காற்றினலும், சூறுவளிகளினலும், மேற்காவுகையினலும் மழையைப் பெறுகின்றன. வடகீழ்ப்பருவக்காற்று கண்டக்காற்றாக இருப்பதனல், அதிக ஈரலிப்பானதன்று; அதனல், தென்மேல் பருவக்காற்றைப் போன்று அதிக மழையை இக்காற்றுத் தருவது கிடையாது.

மலைநாட்டின் கிழக்குப்பகுதி தென்மேல் பருவக்காற்றின் காற்றெதுக்கில் இருப்பதனல், தென்மேல் பருவக்காற்றால் மழையைப் பெறுவது கிடையாது; வடகீழ்ப்பருவக்காற்றுக் காலத்திலேயே கிழக்குமலைநாடு மழையைப் பெறுகின்றது.

யாழ்ப்பாணம், திருகோணமலை என்பன நவம்பர் மாதத்திலும், மட்டக்களப்பு டிசம்பர் அல்லது யனவரி மாதத்திலும், தியத்தலாவை ஒக்டோபர், நவம்பர் மாதங்களிலும் அதிக மழையைப் பெறுகின்றன.

## 25 அங்குலம் தொடக்கம் 50 அங்குலம்வரை மழைபெறும் பிரதேசங்கள்

இலங்கையின் வடமேற்குக் கரையும் (மன்னர்ப்பகுதி), தென்கிழக்குக்கரையும் (அம்பாந்தோட்டைப் பகுதி) 50 அங்குலங்களுக்குக் குறைவாகவே மழையைப் பெறுகின்றன. அதனல், இப்பகுதிகள் இலங்கையின் வறள் பிரதேசங்களாக (அதிவரண்ட) விளங்கி வருகின்றன. சூறுவளிகளே இப்பிரதேசங்களுக்கு மழை வீழ்ச்சியைத் தருகின்றன.


மன்னர்ப்பகுதியில் மழைவீழ்ச்சி மிகக்குறைவாக இருப்பதற்குக் காரணங்கள் வருமாறு:

1. தென்மேல் பருவக்காற்றுக் காலத்தில் மன்னர்ப்பகுதி, இந்தியாவின் ஒதுக்கில் அமைந்துவிடுகின்றது. இந்தியாவின் மேற்குக் கரையோரத்தில் ஈரலிப்பை இழந்த தென்மேல் பருவக்காற்று, மன்னர்ப் பகுதியில் வீசும்போது வரண்ட காற்றாக வீசுகின்றது.
2. வடகீழ்ப்பருவக்காற்றுக் காலத்தில் இக்கரை ஒதுக்குப்பக்கமான மேற்குக் கரையில் இருப்பதால் மழையைப் பெறுவதில்லை.

அம்பாந்தோட்டைப் பகுதியில் மழைவீழ்ச்சி மிகக்குறைவாக இருப்பதற்குக் காரணங்கள் மேல்வருவன:

1. தென்மேல் பருவக்காற்று வீசும்போது, அதனைத் தடுத்து, மழை பொழிய வைக்க அம்பாந்தோட்டைப் பகுதியில் மலைகள் இல்லை.

2. வடகீழ்பருவக்காற்று வீசும்போது, தெற்கே ஒதுங்கி இருப்பதனால், வடகீழ்பருவக்காற்றினாலும் அதிக மழை கிடைப்பதில்லை.




படம்: 15 தென்மேல் பருவக்காற்றுக்கால மழைவீழ்ச்சிப் பரம்பல்

# 4. இலங்கையின் பருவகாலங்கள்

இதுவரை கற்றவற்றைக் கொண்டு இலங்கையின் காலநிலையை நான்கு பருவகாலங்களாக வகுக்கலாம். அவை:

1. தென்மேல் பருவக்காற்றுப் பருவகாலம்.
2. தென்மேல் — வடகீழ்ப்பருவக்காற்றுக்களின் இடைக்காலம்.
3. வடகீழ்ப்பருவக்காற்றுப் பருவகாலம்.
4. வடகீழ்—தென்மேல் பருவக்காற்றுக்களின் இடைக்காலம்.

1. **யூன்** மாதம் தொடக்கம் **செப்டம்பர்** மாதம் வரையில் உள்ள காலத்தைத் **தென்மேல் பருவக்காற்றுப் பருவகாலம்** என வகுக்கலாம். இலங்கையின் தென்மேல் பகுதியிலும், மலைநாட்டின் கிழக்குப்பகுதியிலும் இப்பருவகாலத்திலேயே அதிக மழைவீழ்ச்சி நிகழ்கின்றது.

2. **ஒக்டோபர், நவம்பர்** ஆகிய இரு மாதங்களையும் **தென்மேல்—வடகீழ் பருவக்காற்றுக்களின் இடைக்காலம்** எனலாம். இப்பருவ இடைக்காலத்திலேயே சூறுவளிகளின் தாக்கம் இங்கு மிக அதிகம் நிலவுகின்றது.

3. **டிசம்பர்** மாதம் தொடக்கம் **பெப்ரவரி** மாதம் வரையிலான காலத்தினை **வடகீழ்ப்பருவக்காற்றுப் பருவகாலம்** எனக்கூறலாம். இக்காலத்தில் வடக்கு, கிழக்குப் பகுதிகள் மழையைப் பெறுகின்றன; இப்பருவகாலத்தில் நிகழும் சூறுவளிகள் அதிக மழைவீழ்ச்சிக்குக் காரணமாக அமைகின்றன.

4. **மார்ச், ஏப்பிரல்** ஆகிய இருமாதங்களையும் **வடகீழ்—தென்மேல் பருவக்காற்றுக்களின் இடைக்காலம்** என்பர். இக்காலத்தில் மேற்காவுகை நிகழ்ச்சிகள் முக்கியம் பெறுகின்றன.

அத்தியாயம்: 5

# காலநிலைப்பிரதேசங்களும், இயற்கைத்தாவரமும்

## காலநிலைப் பிரதேசங்கள்

ஒத்த காலநிலைத் தன்மைகளை அனுபவிக்கின்ற பிரதேசங்களை, வேறுபாடான காலநிலைத் தன்மைகளை அனுபவிக்கும் பிரதேசங்களிலிருந்து பிரதேச அடிப்படையில் பிரிப்பதே காலநிலைப் பிரதேசங்களாகும். ஒரு நாட்டினைக் காலநிலைப் பிரதேசங்களாக வகுக்கும்போது பெரும்பாலும் மழை வீழ்ச்சியை அல்லது வெப்பநிலையை அல்லது இரண்டையும் ஆதாரமாகக் கொண்டு பிரிக்கின்றார்கள். இந்த அடிப்படையில் இலங்கையை இரு பிரதான காலநிலைப் பிரதேசங்களாகப் பிரிக்கலாம்: அவையாவன:

1. ஈரவலயம் அல்லது ஈரலிப்பான பிரதேசம்
2. உலர்வலயம் அல்லது வரண்டபிரதேசம்

மழைவீழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டே, இலங்கை இவ்வாறு இரு காலநிலைப் பிரதேசங்களாகப் பிரிக்கப்படுகின்றது. இலங்கையில் ஆண்டிற்கு 75 அங்குலங்களுக்குமேல் மழையைப் பெறுகின்ற பகுதிகள் ஈரவலயம் என்றும், அதற்குக் குறைவாக மழையைப் பெறுகின்ற பகுதிகள் உலர்வலயம் என்றும் கொள்ளப்படுகின்றன. இலங்கையின் தென்மேல் தாழ்நிலமும், மத்திய மலைநாட்டின் மேற்குப்பகுதியும் அதிக மழைவீழ்ச்சியைப் பெறுவதால், இவை ஈரவலயத்தினுள் அடங்குகின்றன; ஏனைய பகுதிகள் 75 அங்குலங்களுக்குக் குறைவாகவே மழையைப் பெறுவதால், அவற்றை உலர்வலயம் என்பர். இலங்கையின் ஈரலிப்பான பிரதேசத்தையும் வரண்டபிரதேசத்தையும் பிரிக்கின்ற எல்லைக்கோடு, தென்மேற்பருவக் காற்றுக்கால மழைவீழ்ச்சிப்பரம்பலில், 20 அங்குல சமமழைவீழ்ச்சிக்கோடாகும்; இச் சமமழைவீழ்ச்சிக்கோடு சிலாபம், மாத்தளை, கண்டி, நுவரெலியா, தங்காலை எனுமிடங்களை இணைத்து அமைந்துள்ளது. (படம்: 15-ஐ பார்க்க)

## ஈரவலயம்

இலங்கையின் ஈரவலயத்தை இரு உபகாலநிலைப் பிரதேசங்களாகப் பிரிக்கலாம். அவையாவன:

1. ஈரவலயத் தாழ்நிலம்
2. ஈரவலய உயர்நிலம்

ஈரவலயத்தை இவ்வாறு இரு காலநிலைப் பிரிவுகளாகப் பிரிப்பதற்கு மழைவீழ்ச்சியோடு வெப்பநிலையும் கருத்திற் கொள்ளப்பட்டுள்ளது. தாழ் நிலத்தில் நிலவுகின்ற வெப்பநிலை, உயர்நிலத்தில் நிலவுவது கிடையாது. ஒவ்வொரு 300 அடி உயரத்திற்கும் 1°ப. வீதம் வெப்பநிலை குறைவடையும் என்பதை ஏற்கனவே படித்துள்ளோம்.

### ஈரவலயத்தாழ்நிலம்

ஈரவலயத் தாழ்நிலத்தில் இலங்கையின் தென்மேற் சமவெளி அடங்கும். அதிக மழைவீழ்ச்சி, உயர்வெப்பநிலை, பிரகாசமான சூரியஒளி என்பன ஈரவலயத் தாழ்நிலத்தின் பண்புகளாகும். இப்பிரதேசத்தில் மழைவீழ்ச்சி ஏறக்குறைய ஆண்டு முழுவதும் நிகழ்கின்றது. தென்மேற் பருவக்காற்றின் செல்வாக்கினை இத்தாழ்நிலம் பெறுவதனுல், அதிக மழைவீழ்ச்சியைப் பெறுகின்றது. ஈரம் தங்கிய தென்மேல் பருவக்காற்று இத்தாழ்நிலத்தினூடாக வீசும்போது மத்திய மலைநாட்டினுல் தடுக்கப்படுவதனுல், ஒடுங்கி ஈரவலயத் தாழ் நிலத்திற்கும், ஈரவலய உயர் நிலத்திற்கும் அதிக மழைவீழ்ச்சியைக் கொடுக்கின்றது. ஈரவலயத் தாழ்நிலம் குறைவான மழைவீழ்ச்சியை பெப்ரவரி மாதத்திலும் ஆகஸ்ட் மாதத்திலும் பெறுகின்றது. இத் தாழ்நிலத்தில் வரண்ட பருவமில்லை.

தென்மேற் சமவெளியில் சூரிய உச்சத்தை அடுத்து மழைவீழ்ச்சி அதிகமாக நிகழ்கின்றது. ஏப்பிரல் மாதத்திலும், செப்டம்பர் மாதத்திலும் இப்பகுதியில் சூரிய உச்சம் நிகழ்வதால், அதிக மழைவீழ்ச்சி மேமாதத்திலும் அக்டோபர் மாதத்திலும் நிகழ்கின்றது. ஈரவலயத் தாழ்நிலத்தின் வெப்பநிலை சராசரி 80° ப. ஆகவுள்ளது. பொதுவாக இத்தாழ்நிலத்தில் மழைவீழ்ச்சி கூடுதலாக இருப்பதால், வெப்பநிலை ஓரளவு மட்டுப்படுத்தப்படுகின்றது. கொழும்பு இரத்தினபுரி, காலி ஆகிய நகர்களின் வெப்பநிலை, மழைவீழ்ச்சியளவுகளை நோக்குக.

### ஈரவலய உயர்நிலம்

மலைநாட்டின் மேற்குப்பாகம் ஈரவலய உயர்நிலத்தினுள் அடங்குகின்றது. அப்புத்தளை, பட்டிப்பொலை, நுவரெலியா, கண்டி, மாத்தளை ஆகிய பட்டினங்களை இணைக்கும் கோட்டிற்கு மேற்கேயுள்ள உயர் பகுதியே ஈரவலய உயர் நிலமாகும்.

ஈரவலயத் தாழ்நிலத்தைப்போன்று இங்கும் வருடம் முழுவதும் மழையுண்டு. அம்மழை வீழ்ச்சி வருடம்முழுவதும் நன்கு பரவிப் பெய்கின்றது. ஈரவலய உயர்நிலத்திலும் வரண்ட பருவத்தைக் காண முடியாது. இலங்கையிலதிகம் மழைவீழ்ச்சிபெறும் பகுதிகளிங்குள் ளன. மழை வீழ்ச்சியினளவு பலவிடங்களில் 100 அங்குலங்களுக்கு மேலும் சிவனொளிபாதமலைப் பிரதேசத்தில் 200 அங்குலங்களுக்கு மேலுமிருக்கிறது; அதிக மழை வீழ்ச்சியுள்ள மாதங்கள் ஜூனும் நவம்பருமாகும், ஈரலிப்பான தென்மேற் சமவெளியில் அதிக மழை வீழ்ச்சி மேமாதத்திலேற்பட இங்கு ஒருமாத தாமதம் ஏற்பட்டு ஜூன் மாதத்தில் நிகழ்வதற்குக் காரணம், கரையோர நிலைமைகள் உள் நாட்டை அடைவதில் ஏற்படும் தாமதமேயாகும். கண்டியின் வருடாந்த மொத்த மழைவீழ்ச்சி 80 அங்குலங்களாகும், நுவரெலியா வருடமழை வீழ்ச்சியாக 85 அங்குலங்களைப் பெறுகின்றது.

ஈரலிப்பான தென்மேல் தாழ்நிலத்தில் காணப்படுவது போன்று, இங்கு ஒரேயளவாக வெப்பநிலையை எங்கும் காணமுடியாது. உயர வேறுபாடுகளுக்கு ஏற்ப வெப்பநிலை வேறுபடுவதைக் காணலாம். நுவரெலியாவிலும் பார்க்க கற்றன் சிறிதளவு வெப்பமானது; கற் றனிலும் பார்க்கக் கண்டி வெப்பமானது. கண்டியில் வெப்பநிலை 76° ப. ஆகவும், கற்றனில் 66° ப. ஆகவும், நுவரெலியாவில் 60° ப. ஆகவும் காணப்படுகின்றது,

## உலர்வலயம்

இலங்கையின் உலர்வலயத்தை மூன்று உபகாலநிலைப் பிரதேசங் களாக வகுக்கலாம். அவையாவன:

(1) உலர் வலயத்தாழ்நிலம்

(2) உலர்வலய உயர்நிலம்

(3) வறள் வலயத் தாழ்நிலம்

உலர்வலயத்தை உபகாலநிலைப் பிரதேசங்களாகப் பிரிப்பதற்கு மழைவீழ்ச்சியும் வெப்பநிலையும் அடிப்படையாகக் கொள்ளப்பட்டுள் ளன.

### உலர்வலயத் தாழ்நிலம்

உலர்வலயத் தாழ்நிலத்தில் மன்னார் அம்பாந்தோட்டைப் பகுதி கள் தவிர்ந்த தென்கீழ்ச் சமவெளியும் வடசமவெளியுமடங்கும். இப் பிரதேசத்தில் வருடச் சராசரி மழைவீழ்ச்சி, 75 அங்குலங்களுக்குக் குறைவாக இருக்கின்றது. மழை வீழ்ச்சிக்காலம் செப்டம்பர் மாதம் தொடக்கம் ஜனவரி மாதம்வரை காணப்படும். தென்மேற் பருவக் காற்றின் செல்வாக்கு உலர் பிரதேசத்தில் இல்லை. வடகீழ்ப் பருவக்

காற்றினாலும், சூறாவளிகளினாலும், மேற்காவுகைகளினாலும் இப்பிர தேசத்திலதிக மழைவீழ்ச்சி ஏற்படுகின்றது. அதிக மழைவீழ்ச்சி யாழ்ப்பாணம், திருகோணமலை போன்ற இடங்களில் நவம்பர் மாதத்திலும், மட்டக்களப்பில் டிசம்பர் அல்லது ஜனவரி மாதத் திலும் நிகழும்.

யாழ்ப்பாணத்தில் வருடமொத்த மழைவீழ்ச்சி 53 அங்குலங்களா கும்; திருகோணமலையில் 68 அங்குல மழைவீழ்ச்சியும், அனுராத புரத்தில் 57 அங்குல மழைவீழ்ச்சியும் நிலவுகின்றன.

ஈரவலயத் தாழ்நிலத்திலும் பார்க்க உலர் வலயத் தாழ்நிலத் தில் வெப்பநிலை சற்று அதிகமாகும். யாழ்ப்பாணத்தில் ஆண்டுக்குரிய சராசரி வெப்பநிலை 82°ப. ஆகவும், திருகோணமலையில் சராசரி வெப்பநிலை 82·6°ப. ஆகவும், அனுராதபுரத்தில் சராசரி வெப்பநிலை 81°ப. ஆகவும் விளங்குகின்றது.


## உலர்வலய உயர்நிலம்

மலைநாட்டின் கிழக்குப்பாகம் உலர்வலய உயர்நிலமாகக் காணப் படுகின்றது; இங்கு மழை வீழ்ச்சி 75 அங்குலங்களுக்குக் குறைவா கும். இப்பகுதி தென்மேற் பருவக்காற்றொதுக்குப் பிரதேசமாக இருப் பதால், தென்மேற்பருவக்காற்றால் இப்பகுதி அதிக மழையைப்பெறு வது கிடையாது. உலர்வலய உயர்நிலம் வடகீழ்ப் பருவக்காற்றுக் காலத்திலேயே அதிக மழையைப் பெறுகின்றது. உலர்வலய உயர் நிலத்திலுள்ள தியத்தலாவையின் ஆண்டுக்குரிய மொத்த மழை வீழ்ச்சி 69 அங்குலங்களாகும்.


மழைவீழ்ச்சியைப் பொறுத்தளவில் உலர்வலயத் தாழ்நிலத்தை உலர்வலய உயர்நிலம் ஒத்துள்ளபோதிலும், வெப்பநிலையைப் பொறுத் தளவில் உயரம் காரணமாக வேறுபாடு காணப்படுகின்றது. தியத் தலாவையின் ஆண்டுக்குரிய சராசரி வெப்பநிலை 68°ப. ஆகும்.

## வறள்வலயத் தாழ்நிலம்

இலங்கையின் வடமேற்குக் கரையோரத்திலும் (மன்னார்க்கரை) தென்கிழக்குக் கரையோரத்திலும் (அம்பாந்தோட்டைக்கரை) வருட மழை வீழ்ச்சியின் அளவு 25 அங்குலம் தொடக்கம் 50 அங்குலம் வரை இருக்கின்றது. அதனால் இவ்விரு பிரதேசங்களும் அதி வரண்ட பிரதேசங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இவையே இலங்கையின் வறள்வலயத் தாழ்நிலங்களாம். வடமேற் கரையோரத்தில் மழை வீழ்ச்சி குறைவாக இருப்பதற்கு, வடகீழ்ப் பருவக்காற்றுக் காலத் தில் இக்கரை ஒதுக்குப் பக்கமான மேற்குக் கரையிலிருப்பதும், தென் மேல் பருவக்காற்றுக் காலத்தில் இப்பிரதேசம் அண்மையிலுள்ள




இலங்கையின் இயற்கைத் தாவரம்




இலங்கையின் காலநிலைப் பிரதேசங்கள்

தென்னிந்தியாவின் ஒதுக்கில் இருப்பதும் காரணங்களாகும். தென் கீழ்க் கரையோரத்தில் மழைவீழ்ச்சி குறைவாக இருக்கக் காரணம் பருவக் காற்றுக்களைத் தடுத்து மழைபொழியவைக்க மலைகளில்லாமையேயாகும்.

வறள்வலயத் தாழ்நிலத்திலுள்ள அம்பாந்தோட்டையின் வருட மொத்த மழைவீழ்ச்சி 42 அங்குலங்களாகவும், ஆண்டுக்குரிய சராசரி வெப்பநிலை 81° ப. ஆகவும் இருக்கின்றது; மன்னார்ப்பகுதியில் வெப்பநிலை சற்றுக் கூடுதலாகும்.

## இயற்கைத்தாவரம்

இலங்கையின் இயற்கைத் தாவரம் காலநிலையாற் பெரிதும் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது. மழைவீழ்ச்சி, வெப்பநிலை என்பனவற்றிற்கும், மண்வகைக்கும் இணங்க இயற்கைத் தாவரப் பரம்பல் அமைந்துள்ளது. இலங்கையில் தொடக்கத்திலிருந்த தாவரங்களை இன்று காணமுடியாது. ஏனெனில், பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்காக அவை பெரிதும் அழிக்கப்பட்டுள்ளன. இன்றும் குடியேற்றத்திட்டங்களுக்காக உலர் பிரதேசக்காடுகள் அழிக்கப்பட்டு வருகின்றன.

இலங்கையின் இயற்கைத்தாவரத்தைக் காடுகள் என்றும், புல் வெளிகள் என்றும் வகுக்கலாம். காடுகளை நான்கு வகைகளாகப் பிரித்து ஆராயலாம். அவையாவன:

(அ) ஈரப்பருவக்காற்றுக் காடுகள்

(ஆ) மலைக்காடுகள்

(இ) உலர்பருவக் காற்றுக் காடுகள்

(ஈ) முட்காடுகள் (வறள்நிலவளரி)

இலங்கையிற் காணப்படுகின்ற புல் வெளிகளையும் இருபிரிவுகளாகப் பிரிக்கலாம். அவையாவன:

(உ) பத்தனைப் புல்வெளிகள்

(ஊ) தலாவாப் புல்வெளிகள்

### ஈரப்பருவக்காற்றுக் காடுகள்

ஈரப்பருவக் காற்றுக் காடுகளை ஈரலிப்பான மத்திய கோட்டுக் காடுகள் என்றும் கூறலாம். இக்காடுகள் இலங்கையின் தென்மேல் பாகத்திலும், மலைநாட்டின் மேற்குப் பாகத்திலும் காணப்படுகின்றன. ஏறக்குறைய கடல்மட்டத்திலிருந்து 3500 அடி உயரம் வரை இக்காடுகள் வளர்ந்துள்ளன. தென்மேற்பருவக் காற்றால் இக்காடுகள் அதிக மழையைப் பெறுவதால் (சராசரி 80 அங்குலம்), மரங்கள் நன்கு செழித்து வளர்கின்றன; 200 அங்குலம் வரை மழைபெறுகின்ற பகுதிகள் இப்பாகத்தில் இருப்பதால் தாவர வளர்ச்சி விரைவாக நடைபெறுகின்றது.

ஈரப்பருவக் காற்றுக்காடுகள் என்றும் பசுமையானவை; இக்காட்டு மரங்கள் அதிகம் உயரமானவையாக இருக்கின்றன. மிகவுயர்ந்த மரங்கள் 150 அடி தொடக்கம் 200 அடிவரை வளர்கின்றன. இக்காடுகளில் நிலத்தாவரங்கள் அடர்த்தியாயும், ஏறுகொடிகள் அதிகமாயும் வளர்ந்துள்ளன. பொதுவாக இக்காடுகள் அடர்த்தியானவையாதலால், மரங்கள் சூரிய ஒளியை நாடி உயர்ந்து வளர்கின்றன.

மென்மையான மரங்கள் அதிகமாக விளங்குகின்ற போதிலும், இடையிடையே நடுத்தரமான வைரமரங்களும் காணப்படுகின்றன. இக்காடுகளிற் காணப்படும் மரங்கள் பாலை, தளப்பத்து, கித்துள், பலா, மலைவேம்பு, நா, டூன், லுனுமில, கோரா என்பனவாம்.

## மலைப்பிரதேசக் காடுகள்

இக்காடுகள் 3500 அடிக்கு மேற்பட்ட பிரதேசங்களிற் காணப்படுகின்றன. இங்கு காணப்படும் மரங்கள் உயரம் குறைந்தனவாயும், அதிக கிளைகள் உள்ளனவாயும், தடித்த பட்டைகள் உடையனவாயும் இருக்கின்றன. மரங்களின் கீழே இலைச் செடிகள் வளர்கின்றன. சில வகை மரங்களே வெட்டிப் பயன்படுத்தக்கூடியனவாக இருக்கின்றன. இவற்றுள் முக்கியமானவை கினு, தம்ரோ, மாகிறியா, சப்பு என்பனவாம்.

உயரம் காரணமாக வெப்பநிலை குறைவாகவும், ஒப்பளவில் மழைவீழ்ச்சி கூடுதலாகவும் இருப்பதனல் இடைவெப்ப வலயத்தினை ஒத்த காடுகளாக இவையுள.

இக் காடுகள் பாறைத் தொடர்களிலும் உயர்ந்த சரிவுகளிலும் அதிகமாகக் காணப்படுகின்றன. மலைப்பிரதேசக் காடுகளிற் பெரும் பகுதி சிவனொளிபாதமலை, பேதுருதாலகாலை முதலிய தொடர்களிற் காணப்படுகின்றன.

## உலர்பருவக்காற்றுக் காடுகள்

அதிவரண்ட பிரதேசங்கள் நீங்கலாக வடசமவெளியிலும் தென் கிழ்ச் சமவெளியிலும் உலர்பருவக் காற்றுக் காடுகள் காணப்படுகின்றன. இக்காடுகளை வரண்டபிரதேசக் காடுகள் என்றும் வழங்குவர். வடகீழ்ப் பருவக்காற்றுக்காலத்தில் சிறிதளவு மழையையும், தென்மேற் பருவக்காற்றுக்காலத்தில் வறட்சியையும் இக்காட்டுப்பகுதிகள் அனுபவிக்கின்றன. தென்மேற் பருவக்காற்றுக் காலத்தில் மழையின்மையால் மரங்கள் இலைகளை உதிர்த்து விடுகின்றன.

இக்காட்டு மரங்கள், ஈரலிப்பான காட்டுமரங்களிலும் பார்க்க உயரம் குறைவானவை. இம்மரங்களின் சராசரி உயரம் 40 அடிகளாகும். உயர்ந்த மரங்கள் ஏறக்குறைய 60 அடிவரை வளர்கின்றன.

இக்காட்டு மரங்களின் இடையே அடர்த்தியான முட்புதர்களும் செடிகொடிகளும் வளர்ந்திருக்கின்றன.

உலர் பருவக்காற்றுக் காட்டு மரங்கள் என்றும் பசுமையான, வைர மரங்களாகும். இக் காடுகளில் இருந்தே முதிரை, கருங்காலி, யாவறணை, கல்மிலா முதலிய மரங்கள் பெறப்படுகின்றன. முதிரை, கல்மிலா முதலிய மரங்கள் இலைகளை உதிர்ப்பன. இக் காட்டுமரங்கள் பொதுவாக 1500 அடி உயரத்திற்குமேல் காணப்படுவதில்லை.

## முட்காடுகள்

மழைவீழ்ச்சி மிகக்குறைவாயும், ஆவியாகல் மிக அதிகமாயும் நிகழும் வறள் வலயத் தாழ்நிலங்களில் முட்காடுகள் காணப்படுகின்றன. வருட மழைவீழ்ச்சி 50 அங்குலங்களுக்குக் குறைவாக இருக்கும் மன்னார், அம்பாந்தோட்டைப் பாகங்களில் இக்காடுகள் உள்ளன. இப் பாகங்களில் வளமற்ற வரண்டமண் காணப்படுகின்றது; முட்காடுகள் தவிர்ந்த செழிப்பான தாவரம் வளர இம்மண் ஏற்றதல்ல.

இக் காடுகளில் உயரம் குறைந்த மரங்களும், முட்செடிகளும், புதர்களும் காணப்படுகின்றன. மரங்கள் உயரம் குறைந்தனவாக இருந்தாலும், கிளைகள் நிறைந்தனவாயும், அடிமரம் முறுக்கப்பட்டதாயும், சிலமரங்கள் முட்களையுடையனவாயும் இருக்கின்றன. இத் தாவரங்கள் வறட்சியைத் தாங்கக் கூடியன. இத் தாவரங்களின் இலைகள் நீரைச் சேகரித்து வைக்கக்கூடியன. ஆனைமுள்ளி, வீரை, காம்பை, குறுக்கினன், நாகதாளி, கள்ளி என்பன இங்கு வளர்கின்றன. இத் தாவரங்களை வறள்நிலவளரிகள் என்றும் கூறுவர்.

## பத்தனைப் புல்வெளிகள்

பத்தனைப் புல்வெளிகள் உவர்வலய உயர்நிலத்தில் (வரண்ட மலைநாட்டில்) காணப்படுகின்றன. இப் புல்வெளிகள் ஏறக்குறைய 250 சதுரமைல் பிரதேசத்தில் காணப்படுகின்றன. இப் புல்வெளிகளை ஈரப்பத்தனை என்றும் வரண்டபத்தனை என்றும் இரு வகைகளாகப் பிரிக்கலாம். தென்மேற் பருவக்காற்றுக் காலத்தில் 20 அங்குலத்திற்குமேல் மழைபெறும் பாகங்களில் ஈரப்பத்தனையும், 20 அங்குலத்திற்குக் குறைவாக மழைபெறும் பாகங்களில் வரண்ட பத்தனையும் காணப்படுகின்றன.

ஈரப் பத்தனைக்கள் பேதுருதாலகாலை, தோட்டப்பாலைத் தொடரின் உயர்ந்த பாகங்களிலும், மேற்குச் சரிவுகளிலும் காணப்படுகின்றன். இப்பிரதேசத்தில் ஹோட்டன் சமவெளிகள், எலக் சமவெளிகள், சிற்றஎலிய-மூன் சமவெளிகள், போப்-பத்தலாவை, அக்கிறப்

பத்தனை ஆகிய பிரதேசங்களடங்கும். இப்பிரதேசங்கள் 8000 அடி உயரத்திற்கு மேற்பட்டன.

வரண்ட பத்தனுப் புல்வெளிகள் அதிகமாக ஊவா மாகாணத்திற் காணப்படுகின்றன. இங்கு மே மாதம் தொடக்கம் செப்டம்பர் மாதம் வரை மழைவீழ்ச்சியின் அளவு 20 அங்குலத்துக்குக் குறைவானதாக இருக்கின்றது. 2500 அடி தொடக்கம் 5000 அடி வரை உயரமுள்ள இடங்களில் இப்புல்வெளிகள் அமைந்துள்ளன.

தடித்த புற்களாயும் 3 அடி உயரமானவையாயும் இங்கு வளரும் புற்கள் இருக்கும். தடிப்பற்ற மேல் மண்ணும், மழை நீர் விரைவாக வழிந்தோடுவதும், காற்று வேகமாக வீசுவதும், நீர் போதாமையும் பத்தனுப் புல்வெளிகளில் மரங்கள் வளரத் தடைவிதிக்கின்றன.

## தலாவாப் புல்வெளிகள்

தலாவாப் புல்வெளிகள் சவன்னுவை ஒத்த புல்வெளிகளாகும். பத்தனுவைப் போலில்லாமல் இடையிடையே மரங்கள் வளர்ந்துள்ளன. இப்புல்வெளிகள் மத்திய மலைநாட்டிற்குக் கிழக்கேயும் தென் கிழக்கேயும் உள்ள மலையடிவாரப் பிரதேசங்களிற் காணப்படுகின்றன. 2000 அடிக்குட்பட்ட பிரதேசங்களிலேயே தலாவாப் புல்வெளிகளமைந்துள்ளன. தலாவாப் புற்கள் 5 அடி உயரம் வரை வளரும். பத்தனுப் புல்வெளிகளில் மரங்கள் வளராமைக்குரிய காரணங்களே, இங்கும் மரங்கள் அதிகமாக வளராமைக்குரிய காரணங்களாகவுள்ளன.

## பயிற்சி

(1) மேல்வரும் வெப்பநிலை, மழை வீழ்ச்சிப் புள்ளி விபரங்கள் ஒவ்வொன்றையும் கவனமாக வாசித்து, பின் இறுதியிலுள்ள வினுக்களுக்கு விடையெழுதுதல் நன்று.

1.

| | ஜ | பெ | மா | ஏ | மே | ஜூ | ஜூ | ஓ | செ | ஒ | ந | டி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வெப்பநிலை ப° | 80 | 81 | 82 | 83 | 82 | 80 | 81 | 80 | 80 | 80 | 80 | 80 |
| மழைவீழ்ச்சி அங். | 6·2 | 5·3 | 10·4 | 11·5 | 21·0 | 18·5 | 12·7 | 11·4 | 14·5 | 18·0 | 14·8 | 9·1 |

2.

| | ஜ | பெ | மா | ஏ | மே | ஜு | ஜு | ஓ | செ | ஒ | ந | டி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வெப்பநிலை ப° | 77 | 79 | 82 | 85 | 85 | 84 | 83 | 82 | 83 | 81 | 79 | 78 |
| மழைவீழ்ச்சி அங். | 4·4 | 1·5 | 1·6 | 2·2 | 2·0 | 0·4 | 0·5 | 1·1 | 2·5 | 9·2 | 17·3 | 10·4 |

3.

| | ஜ | பெ | மா | ஏ | மே | ஜு | ஜு | ஓ | செ | ஒ | ந | டி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வெப்பநிலை ப° | 73 | 75 | 77 | 79 | 77 | 76 | 75 | 76 | 75 | 76 | 75 | 74 |
| மழைவீழ்ச்சி அங். | 6·3 | 2·3 | 5·8 | 6·5 | 7·5 | 8·8 | 7·3 | 5·7 | 6·4 | 10·5 | 11·0 | 8·4 |

4.

| | ஜ | பெ | மா | ஏ | மே | ஜு | ஜு | ஓ | செ | ஒ | ந | டி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வெப்பநிலை ப° | 64 | 66 | 68 | 69 | 70 | 70 | 70 | 70 | 69 | 68 | 67 | 65 |
| மழைவீழ்ச்சி அங். | 6·6 | 2·3 | 4·8 | 6·5 | 6·0 | 1·9 | 1·9 | 3·1 | 4·4 | 9·1 | 10·4 | 8·0 |

5

| | ஜ | பெ | யா | ஏ | மே | ஜு | ஜு | ஓ | செ | ஒ | ந | டி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வெப்பநிலை ப° | 79 | 79 | 80 | 82 | 82 | 81 | 82 | 81 | 81 | 81 | 80 | 79 |
| மழைவீழ்ச்சி அங். | 4·0 | 1·4 | 3·3 | 3·8 | 4·2 | 2·1 | 2·0 | 1·4 | 2·7 | 4·7 | 7·5 | 5·6 |

(அ) சராசரி வருட வெப்பநிலை யாது?

(ஆ) வருட மழைவீழ்ச்சி யாது?

(இ) வெப்பநிலை வீச்சு யாது?

(ஈ) எப்பருவக் காற்றின்போது அதிகூடிய மழைவீழ்ச்சி உண்டாகின்றது.

(உ) இப்பட்டினம் எந்த இயற்கைப் பிரதேசத்தைச் சேர்ந்தது?

(ஊ) இப்பிரதேசத்தின் இயற்கைத் தாவரம் யாதாயிருக்கலாம்?

அத்தியாயம்: **6**

# இலங்கையின் சுயதேவைக்குரிய பயிர்கள்

இலங்கை ஒரு பயிர்ச்செய்கை நாடாகும். இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் ஏறத்தாழ 67½ இலட்சம் ஏக்கர் பிரதேசமே பயிர்ச் செய்கைக்கு உகந்ததாகவுள்ளது. இதில் ஏறக்குறைய 42 இலட்சம் ஏக்கரில் பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளன. பயிர்ச் செய்கைக்குகந்த மிகுதிப்பரப்பு காடடர்ந்தும், மண்ணரிப்பிற்குட்பட்டும், நீர்ப்பாய்ச்சல் வசதியின்றியும் காணப்படுகின்றது.

இலங்கையின் சுயதேவைக்குரிய பயிர்கள் என நெல், குரக்கன், சோளம், எள், வெங்காயம், மிளகாய், மரவள்ளி, வாழை, தக்காளி, வத்தாளை, உருளைக்கிழங்கு, கரும்பு, கோப்பி, புகையிலை, பருத்தி, நிலக்கடலை என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

## நெற்செய்கை

மிகப்பழைய காலத்தில் இலங்கை நெற்செய்கையில் விருத்தி பெற்றுத் தன்னிறைவு கொண்டிருந்தது; மேலும், இந்தியா போன்ற நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்திருக்கின்றது. வரண்ட பிரதேசத்தில் பாழடைந்துபோய்க் கிடக்கும் ஆயிரக்கணக்கான குளங்கள், ஒரு கால கட்டத்தில் இலங்கை நெற்செய்கையில் அடைந்திருந்த முன்னேற்றத்தைக் குறிக்கின்றன. தென்னிந்தியப் படையெடுப்புகளும், மலேரியா போன்ற நோய்களின் பரவலும் மக்களை ஈரவலயம் நோக்கி இடம்பெயர வைத்தன. மேலும், ஐரோப்பியரின் வருகையால் ஏற்பட்ட பெருந்தோட்டங்களின் விருத்தி, இலங்கை மக்களின் கவனத்தைத் தன்பால் இழுத்தது. இவற்றினால் நெல் வயல்கள் கவனிப்பாரின்றிக் காடடர்ந்து போயின. அதனால், இலங்கை இன்று அரிசிக்காக வெளிநாடுகளை எதிர்பார்க்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கின்றது.

இலங்கையின் நெற்செய்கையில் சில தனித்த பண்புகளைக் காணலாம். இலங்கையில் காணப்படும் விளைநிலங்கள் சிறியனவாக உள்ளன. இலங்கையின் மரபுரிமைச் சட்டத்தினால் விளைநிலங்கள் சிறு சிறு துண்டுகளாக மாறியுள்ளன. ஒரு விவசாயியின் பிள்ளைகள் அதிகரிப்பதுபோல அவனது விளைநிலம் அதிகரிப்பது கிடையாது. அத

ணுல், அவனது விளைநிலம் பிள்ளைகளுக்குப் பங்கிடும்போது துண்டா டப்பட்டு விடுகின்றது. பயிர்ச்செய்கையில் கையாளப்பட்டு வரும் முறைகள் பிற்போக்கானவையாக உள்ளன. அண்மைக் காலத்தி லேயே றக்டர், பசளை என்பன உபயோகிக்கப்படுகின்றன. றக்டரின் உபயோகம் இன்று அதிகரித்து வருகின்றது; உழுதல், சூடுமிதித்தல், தூற்றுதல் என்பனவற்றிற்கு இன்று றக்டர் பெரிதும் பயன்படுத்தப் படுகின்றது. பல நீர்ப்பாய்ச்சல் முறைகள் அமைக்கப்பட்டு வருகிற போதிலும் இலங்கையின் பயிர்ச்செய்கைக்குப் போதிய நீர்ப்பாய்ச் சல் வசதிகள் இல்லை என்றே கூறவேண்டும். வறட்சி, வெள்ளம், விலங்கு என்பனவற்ருல் வருடாவருடம் பயிர்ச்செய்கையில் அழிவு ஏற்படுகின்றது.

**நெற்செய்கைக்குத் தேவையான புவியியற் காரணிகள்:** நெல் ஒரு பருவ வறட்சியும் ஒரு பருவ மழையும் உள்ள பகுதிகளில் பயிராகும். சராசரி 80 அங்குல மழைவீழ்ச்சியும் 75°ப. வெப்ப நிலையுமுள்ள கால நிலை நிலவும் பகுதிகள் நெற் செய்கைக்கு மிகவுமேற்றன. மழைவீழ்ச்சி குறைந்த பகுதிகளில் நீர்ப்பாய்ச்சல் வசதி அவசியம். இலங்கையின் ஈரலிப்பான தென்மேல் தாழ்நிலத்தில் நெற்செய்கைக்கு நீர்ப்பாய்ச் சல் வசதி தேவையில்லை. வரண்டபிரதேசத்தில் நெற்செய்கைக்கு நீர்ப்பாய்ச்சல் வசதிகள் மிக அவசியமானவையாகவுள்ளன. இலங் கையின் வண்டல்மண் செறிந்த வெள்ளச் சமவெளிகள் நெற்செய்கைக் குப் பெரிதுமுகந்தனவாயுள்ளன.


இலங்கையின் நெற்செய்கையில் இரு பருவங்கள் உள்ளன. மகா போகம் அல்லது முன்மாரி என்று வழங்கப்படும் பெரும்போகம் நெல் வளரும் பிரதான பருவமாகும். ஆகஸ்ட் மாதத்திற்கும் ஒக்டோபர் மாதத்திற்கும் இடையில் விதைத்து, வடகீழ்ப் பருவக்காற்றின் முடி வில் பெப்ரவரி, மார்ச் மாதங்களில் அறுவடை செய்வர். ஜாலபோகம் அல்லது பின்மாரி எனும் சிறுபோகம் குறுகிய பருவமாகும். மார்ச், ஏப் பிரல், மே மாதங்களில் விதைத்து தென்மேல் பருவக்காற்றின் முடி வில் ஜூலை, ஓகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் அறுவடை செய்வர்.

இலங்கையின் வரண்ட பிரதேசத்தில் சிறுபோக காலத்தில் அதிக நெல்விளைவு பெறப்படுகின்றது. ஈரலிப்பான பிரதேசங்களின் தாழ்ந்த இடங்களில் வண்டல்மண் செறிந்த ஆற்றுப் பள்ளத்தாக்குகளிலும் நீர் கிடைக்கும் தட்டையான நிலங்களிலும் நெற்செய்கை நடைபெறுகின் றது. வரண்டபிரதேசத்தில் மழையின்மை நெற்செய்கைக்குத் தடை, ஈரலிப்பான பிரதேசத்தில் அதிக மழை நெற்செய்கைக்குத் தடையா கும்.

இலங்கையில் நெற்செய்கை இரு வேறுபட்ட தரைத்தோற்றங் களில் நடைபெறுகின்றது; ஒன்று, சமவெளிகளில் நடைபெறும் நெற்

செய்கை; மற்றது மலைச் சாய்வுகளில் நடைபெறும் நெற்செய்கை; சமவெளிகளில் குளங்களையும் நதிகளையும் அண்மி அமைந்துள்ள வயல் களிலும் மழையை மட்டும் நம்பியுள்ள வயல்களிலும் பயிரிடப்படும் நெல் **ஈரநெல்** எனப்படும். ஈர நெல்லிற்கு நீரதிகம் தேவை. மலைச் சாய்வுகளில் ஒடுக்கமான பள்ளத்தாக்குத் தளங்களில் படிக்கட்டுக ளமைக்கப்பட்டும் நெற்செய்கை நடைபெறுகின்றது. இத்தகைய படிக் கட்டுகளில் பயிரிடப்படும் நெல் **மலைநெல்** எனப்படும். இதற்கு ஈர நெல்லைப் போன்று நீரதிகம் தேவையில்லை.

**பரப்பளவும், உற்பத்தியும்:** இலங்கையிின்று ஏறத்தாழ 17 இலட் சம் ஏக்கர்ப் பரப்பில் நெல் பயிரிடப்படுகின்றது. வருடாவருடம் நெல் பயிரிடப்படும் பரப்பளவு அதிகரித்து வருகின்றது என்பதனை மேல்வரும் அட்டவணையிலிருந்து தெரிந்து கொள்ளலாம்:




படம்: 18 நெல்விளையும் பிரதான பகுதிகள்.

| ஆண்டு | பெரும்போகம் (ஏக்கர்) | சிறுபோகம் (ஏக்கர்) | மொத்தம் (ஏக்கர்) |
|---|---|---|---|
| 1960 | 9,20,700 | 5,47,600 | 14,68,300 |
| 1961 | 9,34,400 | 5,57,500 | 14,71,900 |
| 1962 | 9,58,300 | 5,77,600 | 15,35,900 |
| 1963 | 10,00,400 | 5,61,500 | 15,61,900 |
| 1964/65 | 9,85,576 | 4,70,773 | 14,55,349 |
| 1965/66 | 10,50,066 | 5,66,817 | 16,16,883 |
| 1966/67 | 10,53,803 | 5,85,129 | 16,38,931 |
| 1967/68 | 11,46,958 | 5,95,511 | 17,42,469 |

அட்டவணை 3

ஒரு குறிப்பிட்ட ஆண்டில் பயிரிடப்பட்ட நெல் வயல்களின் பரப்பளவு, அப்பிரதேசங்களில் கிடைக்கும் மழைவீழ்ச்சியினளவிலும், நீர்ப்பாய்ச்சல் முறைமூலம் பெற்றுக் கொள்ளும் நீரினளவிலும் தங்கியுள்ளது. ஓராண்டில் நீர்த்தட்டுப்பாடு ஏற்பட்டால் விவசாயிகள் விதையாது விட்டுவிடுவர். அதனல் நெல் பயிரிடப்படும் பரப்பளவு ஆண்டுக்காண்டு வேறுபட்டுள்ளது. 1953—இல் 10 இலட்சம் ஏக்கருக்குச் சற்று மேற்பட்ட பரப்பில் நெல் விளைவிக்கப்பட்டது. 1967—இன்பின் 17 இலட்சம் ஏக்கருக்கு மேற்பட்ட பரப்பில் நெல் விளைவிக்கப்படுகிறது.

வருடா வருடம் இலங்கையில் நெல் உற்பத்தி அதிகரித்து வருகின்றது என மதிப்பிடப்பட்டுள்ளது. 1957ஆம் ஆண்டு 3 கோடியே 13 இலட்சம் புசல் நெல் இலங்கையில் அறுவடை செய்யப்பட்டது. ஆனல், 1962ஆம் ஆண்டு 4 கோடியே 80 இலட்சம் புசல் நெல் அறுவடை செய்யப்பட்டுள்ளது. எனினும் இலங்கை, தன் சுய தேவையைப் பூர்த்தி செய்துகொள்ளவில்லை. 55 வீதம் நெல்லை பர்மா, சீன, எகிப்து, தாய்லாந்து முதலிய தேசங்களிலிருந்து இறக்குமதி செய்தது. 1969ஆம் ஆண்டு இலங்கையின் நெல் உற்பத்தி 7 கோடியே 10 இலட்சம் புசல்களாகும்; இதன்படி இன்று இலங்கை தனக்குத் தேவையான அரிசியில் 74 சதவீதத்தை உற்பத்தி செய்து கொள்கின்றது. ஆக, 26 சதவீதமே வெளிநாடுகளிலிருந்து இன்று இறக்குமதி செய்யப்படுகின்றது.

நெற்செய்கையை விருத்தி செய்வதற்கு அரசாங்கம் பல திட்டங்களைத் தீட்டியுள்ளது; நெல்விளை பரப்பை அதிகரிப்பதற்கும்; ஏக்கருக்குரிய விளைவை அதிகரிப்பதற்கும் இத்திட்டங்கள் வழிவகுத்துள்

ன. பல நீர்ப்பாய்ச்சல் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன; அரசாங்கப் பசளை விநியோகத் திட்டத்தின் கீழ் அரசாங்கம் பசளை அளித்து வருகின்றது. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும் மக்கள் வங்கி மூலமாகவும் விவசாயிகளுக்குக் கடன் வசதிகள் அளித்து வருகின்றது. நல்ல விதை நெல்லை அளிப்பதோடு, விவசாயிகளிடமிருந்து நெல்லை உத்தரவாத விலைக்கு வாங்கிக்கொள்கிறது. இவ்வாறு பல வழிகளிலும் நெற்செய்கையை ஊக்கப்படுத்தி விளைவை அதிகரிக்கச் செய்ய அரசாங்கம் முயன்று வருகின்றது.

## ஏனைய பயிர்கள்

**குரக்கன்** 60,000 ஏக்கருக்கு அதிகமான பரப்பில் பயிரிடப் படுகின்றது; இது உலர் பிரதேசத்தில் நன்கு செழித்து வளர்கின்றது. சேனைப் பயிர்ச் செய்கைக்காகக் காடுகள் அழிக்கப்பட்டதும், முதல் வருடமும் இரண்டாம் வருடமும் குரக்கன் பயிரிடப்படுகின்றது; யாழ்ப்பாணக் குடாநாட்டில் நீர்ப்பாய்ச்சல் உதவியுடன் நாற்று நட்டு, ஏக்கர் ஒன்றிற்கு ஏறக்குறைய 40 புசல் பெறுகின்றார்கள். இலங்கையில் ஒரு வருடத்தில் ஏறத்தாழ 7 இலட்சம் புசல் குரக்கன் விளைவிக்கப்படுகின்றது.

**சோளம்** ஏறக்குறைய 3500 ஏக்கர் பரப்பில் பயிரிடப்படுகின்றது. சேனைப் பயிராகவும், கிராமத் தோட்டப் பயிராகவும் இது விளங்குகின்றது. சோளம் உணவுத் தானியமாகவும், மிருக உணவாகவும் பயன் படுகிறது. இலங்கையில் ஏறத்தாழ வருடமொன்றிற்கு 47000 புசல் சோளம் விளைவிக்கப்படுகின்றது.

28,000 ஏக்கர் பரப்பில் பெரும்பாலும் வடமத்திய மாகாணம் யாழ்ப்பாணம், குருநாகல், அம்பாந்தோட்டை மாவட்டங்களில் **எள்** பயிரிடப்பட்டு வருகின்றது. வருடத்தில் சராசரி 2½ இலட்சம் புசல் விளைவிக்கப்படுகின்றது. சேனைப் பயிர்ச் செய்கையில் இது ஒரு சிறு போகப் பயிராகவுள்ளது.

உலர் பிரதேசத்திலும், மத்திய மாகாணத்திலும், பெருமளவில் யாழ்ப்பாணத்திலும் 10,000 ஏக்கர்களுக்கு மேல **வெங்காயம்** பயிரிடப்படுகின்றது. இறக்குமதியைக் குறைப்பதற்காக அரசாங்கம் வெங்காயச் செய்கைக்கு ஊக்கம் அளித்து வருகின்றது. இன்று வருடத்தில் ஏறக்குறைய 8 இலட்சம் அந்தர் வெங்காயம் விளைவிக்கப்படுகின்றது. சின்ன வெங்காயம் உலர்பிரதேசத்துக்குரிய ஒரு பயிராகும்; யாழ்ப்பாணக்குடாநாட்டில் யனவரி, மே, யூலை ஆகிய மாதங்களில் வெங்காயம் செய்கை பண்ணப்படுகின்றது.

ஏறத்தாழ 40,000 ஏக்கர் பரப்பில், பெரும்பாலும் வரண்ட பிரதேசத்தில் **மிளகாய்** பயிரிடப்பட்டு, வருடத்தில் 60000 அந்தர் பெறப்

படுகின்றது. அண்மைக்காலத்தில் மிளகாய்ச் செய்கையில் கூடியளவு கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது.

36 ஆயிரம் அந்தர் **தக்காளி** இன்று விளைவிக்கப்படுகின்றது; தக்காளி உலர் பிரதேசத்திலேயே நன்கு செழித்து வளர்கின்றது. அம்பாந்தோட்டை மாவட்டத்தில் இது ஏராளமாகப் பயிரிடப்படுகின்றது.

**வாழை** ஏராளமாகப் பொல்காவலையிலும் றம்புக்கணையிலும் யாழ்ப்பாணத்திலும் பயிரிடப்படுகின்றது. நீர்ப்பாய்ச்சல் வசதிகளுள்ள இலங்கையின் பலபாகங்களிலும் வாழை வளர்க்கப்படுகின்றது.

**வத்தாளை** ஏறக்குறைய 36,000 ஏக்கர் பரப்பில் இலங்கையின் ஈரவலயத்தில் பயிரிடப்படுகின்றது. நீர் வழிந்தோடக்கூடிய வெண்மையான ஈரக்களிமண் பிரதேசம் இதற்குச் சிறந்தது. பயிரிடப்படும் பரப்பில் பெரும்பகுதி தென்மாகாணத்திலுள்ளது. 11½ இலட்சம் அந்தர் வத்தாளை வருடாவருடம் பெறப்படுகின்றது.

வருடத்தில் ஏறக்குறைய 77,000 அந்தர் **உருளைக்கிழங்கு** நுவரெலியாவிற்கு அண்மையிலும், உடப்புசல்லாவையிலும், ஊவா மாகாணத்தின் உயர்ந்த பகுதிகளிலும் விளைவிக்கப்படுகின்றது. யாழ்ப்பாணப் பகுதியில் அண்மை ஆண்டில் இச்செய்கையில் அதிக ஊக்கம் எடுக்கப்பட்டுள்ளது.

ஏறக்குறைய 1½ இலட்சம் ஏக்கர் பரப்பில், பெரும்பாலும் ஈரவலயத்தில் **மரவள்ளி** பயிரிடப்படுகின்றது. மண்ணிலுள்ள பசளையை முற்றுக இது உறிஞ்சி விடுவதால், சுழல்முறைப் பயிர்ச்செய்கை மூலம் பயிரிடுகின்றனர்.

**கரும்பு** பலகாலமாக ஜின்கங்கைப் பள்ளத்தாக்கில், வத்தேகமையையும் நாகொடையையும் சூழ்ந்துள்ள பகுதிகளிலும் இன்று கல்லோயா (1718 ஏக்கர்), கந்தளாய் (1367 ஏக்கர்) பகுதிகளிலும் பயிரிடப்பட்டு வருகின்றது. இப்பயிருக்கு வரண்ட பிரதேச காலநிலை ஏற்றது. விவசாயிகள் கருப்பஞ் செய்கையிலும் நெற் செய்கைக்கே அதிக முக்கியத்துவமளிக்கின்றனர். எதிர்காலத்தில் கருப்பஞ் செய்கை விருத்தியடையும் என்று எதிர்பார்க்கக் கூடியதாகவுள்ளது.

கண்டி, மாத்தளை மாவட்டங்களில் **கோப்பி** சிறிதளவு பயிரிடப்படுகின்றது. தேயிலை, றப்பர் எனும் பயிர்கள் பெருந்தோட்டங்களில் பயிரிடப்படுவதற்கு முன் கோப்பியே பிரதான பெருந்தோட்டப் பயிராக இருந்திருக்கின்றது. இலங்கையின் பல பாகங்களிலும் இதனை நட இப்போது முயற்சிகள் நடைபெறுகின்றன.




படம்: 54 இலங்கையின் பயிர்ச்செய்கை

இலங்கையில் புகையிலை தின்பதற்காகவும், புகைப்பதற்காகவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. யாழ்ப்பாணக் குடாநாட்டிலேயே புகையிலைச் செய்கையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இக் குடாநாட்டில் ஏறக்குறைய 5000 ஏக்கர் பிரதேசத்தில் காரம் கூடிய புகையிலை பயிரிடப்படுகின்றது. காரம் குறைவான புகையிலை தும்பறைப் பள்ளத்தாக்கு, குருநாகல் மாவட்டம், மட்டக்களப்பு, ஏறாவூர், தம்பன்கடவை, அங்குரான் கட்டை, நில்தாண்டகின்ன, மாத்தளை ஆகிய விடங்களில் பயிரிடப்படுகின்றது. இப்பகுதிகளில் பயிரிடப்படும் புகையிலையில் பெரும்பகுதி யாழ்ப்பாணக் குடாநாட்டின் சுருட்டுக் கைத்தொழிலிற்குப் பயன்படுத்தப்படுகின்றது. இப்போது தும்பறைப் பள்ளத்தாக்கிலும், மேல்மாகாணத்தின் சில பகுதிகளிலும் சிகரெட் புகையிலை பயிரிடப்படுகின்றது. வரண்ட பிரதேசத்திலுள்ள நெல்வயல்களில் சிகரெட் புகையிலையைத் திருப்திகரமாகப் பயிரிடலாம் என்பது புகையிலை ஆராய்ச்சிகளிலிருந்து தெளிவாகியுள்ளது.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஏறக்குறைய 3000 ஏக்கர் பிரதேசத்தில் பருத்தி பயிரிடப்படுகின்றது. ஏனைய உலர் பகுதிகளிலும் இதனைப் பயிரிடலாம். வருடத்தில் ஏறக்குறைய 8000 அந்தர் பருத்தி இலங்கையில் கிடைக்கின்றது. இப்பருத்தி முழுவதையும் வெள்ளவத்தை நெசவு ஆலை வாங்கிக்கொள்கின்றது.

## உணவுப் பயிர்ச்செய்கையில் ஏற்பட்ட அண்மைக்கால விருத்தி

''அதிக உணவு பயிரிடல்'', ''தன்னிறைவு கொள்ளல்'' எனுமிரு கருத்துக்கள், இலங்கையின் உணவுப் பயிர்ச்செய்கையில் அண்மைக் காலத்தில் முக்கியத்துவம் பெற்றிருந்தது. 1966 ஆம் ஆண்டிற்குப்பின் இலங்கையின் உணவுப் பயிர்ச்செய்கையில் குறிப்பிடத்தக்களவு விருத்தி காணப்படுகின்றது. விரைவான விருத்திக்குப் பல காரணிகள் தூண்டுதலாக இருந்துள்ளன. அவை:

1. குடித்தொகை அதிகரிப்பால் அதிக உணவுப்பொருட்கள் தேவைப்பட்டமை.
2. இலங்கைக்கு வருமானத்தைத் தரும் வர்த்தகப் பொருட்கள் (றப்பர், தேயிலை, தெங்குப் பொருட்கள்) தொடர்ந்தும் வருவாயைத் தருமா என்பதில் ஏற்பட்ட சந்தேகம்.
3. இலங்கைக்கு நெல்லை இறக்குமதிசெய்த பர்மா, தாய்லாந்து முதலிய நாடுகளில் ஏற்பட்ட நெற்செய்கை வீழ்ச்சியால்,

இலங்கைக்குப் போதிய அரிசியை இறக்குமதி செய்ய முடியாதுபோனமை.

4. நாட்டை விருத்தி செய்வதற்கு உணவில் தன்னிறைவு கொள்ளல் அவசியம் என்று உணரப்பட்டமை.

இவையாவும் இலங்கையின் உணவுப் பயிர்ச்செய்கையின் விருத்திக்குத் தூண்டுதலாக அமைந்தன.

## நெற்செய்கை விருத்தி

1964ஆம் ஆண்டு இலங்கையில் 3 கோடியே 60 இலட்சம் புசல் நெல் அறுவடை செய்யப்பட்டது; இந்தளவு 1966இல் 5½ கோடி புசலாக உயர்ந்து, 1969இல் 7 கோடியே 10 இலட்சமாக விருத்தியடைந்துள்ளது. நெல் உற்பத்தி மட்டும் அதிகரிக்கவில்லை; சராசரி ஏக்கருக்குரிய விளைவும் வருடாவருடம் அதிகரித்து வந்துள்ளது 1965 ஆம் ஆண்டு ஏக்கருக்குரிய நெல் விளைச்சல் 34 புசலாகும்; ஆனல், 1969 இல் ஏக்கருக்குரிய விளைச்சல் சராசரி 47 புசலாகும். இவ்வாறு இலங்கையின் நெற்செய்கை விருத்தியடைந்தமைக்கு, உயர்ந்த உத்தரவாத விலைகள், வளமாக்கிகளைக் கூடிய அளவில் பயன்படுத்தல், உயர்தரமான விதை நெல்லைக் கூடுதலாக உபயோகித்தல், திருந்திய பயிர்ச் செய்கை முறைகள், பண்டசாலை வசதிகளை அதிகரித்தல், கடன்வசதி, தீவிர பிரச்சாரம் என்பனவே காரணங்களாகும். உற்பத்தியை அதிகரிப்பதற்காக நெற்செய்கையில் அண்மையில் கையாளப்பட்ட நடவடிக்கைகள் வருமாறு:

1. **விளை நிலப்பரப்பை அதிகரித்தமை:** 1964ஆம் ஆண்டு 14,55,349 ஏக்கர்களில் நெற்செய்கை நடைபெற்றது; இந்த ஏக்கரளவு 1969 இல் 17,42,469 ஏக்கர்களாகக் கூடியுள்ளது; குடியேற்றத்திட்டங்களை அமைத்து மக்களை குடியேற்றியதன் மூலமே இது சாத்தியமாயிற்று. 1965—69 ஆண்டுக்காலத்தில் ஏறத்தாழ 17000 மக்கள் புதிய இடங்களில் குடியேற்றப்பட்டனர்; இதனுல் ஏறத்தாழ 58000 ஏக்கர் புதிய விளைநிலம் நெற்செய்கைக்கு உட்படுத்தப்பட்டது. படித்த இளைஞர்கள் இக்குடியேற்றத்திட்டத்தில் குடியேறி, உற்பத்தியிலீடுபட்டனர்; படித்த இளைஞர்களுக்கு 40 இளைஞர் குடியேற்றத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன.

2. **நீர்ப்பாய்ச்சல் வசதிகள்:** பழைய நீர்ப்பாய்ச்சல் குளங்களும் கால்வாய்களும் திருத்தியமைக்கப்பட்டதோடு, புதிதாகவும் அமைக்கப்பட்டன. 1969-இல் மட்டும் 50,000 ஏக்கர்களுக்குப் புதிதாக நீர்ப்பாசன வசதி வழங்கப்பட்டது.

3. **பசளை விநியோகம்:** ஏக்கருக்குரிய விளைச்சலை அதிகரிக்கும் நோக்கத்தோடு, கூடியளவு பசளை உபயோகத்திற்கு பிரச்சாரமும், வழிவகைகளும் செய்யப்பட்டன. ஒவ்வொரு கிராமங்களிலும் பசளை இலகுவில் கிடைக்கக்கூடியதாகப் பசளைச் சடைகள் திறக்கப்பட்டன.

4. **கடன்வசதி:** மக்கள்வங்கி, கூட்டுறவுவங்கி என்பன அண்மைக் காலத்தில் என்றுமில்லாத அளவு, விவசாயிகளுக்குக் கடன்வசதி அளித்து வருகின்றன. யந்திர உபயோகம், பசளை உபயோகம் என்பனவற்றிற்காகக் கடன் வழங்கப்பட்டது; கடந்த ஆண்டு விவசாயக் கடனாக 6 கோடி ரூபா வழங்கப்பட்டிருக்கின்றது.

5. **தொழில்நுட்ப விருத்தி:** அண்மைக்காலத்தில் றக்ரரின் (உழு யந்திரம்) உபயோகம் கூடியுள்ளது. அரசாங்கத்திற்குச் சொந்தமான றக்ரர் நிலையங்கள் (Tractor units) நாடெங்கிலுமுள்ளன. றக்ரர்கள் ஏராளமாக இறக்குமதி செய்யப்பட்டும் வருகின்றன. மேலும், விவசாயிகளுக்கு விதைநெல் தெரிவுசெய்யப்பட்டு வழங்கப்படுகின்றது. ஐ ஆர் 8—எனும் விதைநெல் உலர்வலயத்தில் நல்ல பலனைத் தந்துள்ளது.

6. **உத்தரவாதவிலை:** உத்தரவாத விலை நெற்செய்கையில் நன்கு கடைப்பிடிக்கப்பட்டது. 1952 தொட்டு 1962 வரை ஒரு புசல் நெல்லின் உத்தரவாத விலை 12 ரூபாவாக இருந்தது; 1969இல் இவ் விலை 14 ரூபாவாக உயர்த்தப்பட்டது. மேலும், தனிப்பட்ட வியாபாரிகள் விவசாயிகளை ஏமாற்றுது தடுப்பதற்காக, கூட்டுறவுச் சங்கங்களே விவசாயிகளிடமிருந்து நெல்லை வாங்கின.

7. **ஏனைய நடவடிக்கைகள்:** கல்லூரிகளில் மாணவர்களுக்கு விவசாயம் ஒரு பாடமாகப் போதிக்கப்பட்டு வருகின்றது; நாட்டில் அதிகளவில் விளைச்சலைப் பெறும் விவசாயிகள் ''விவசாய மன்னர்'' என்று பட்டம் வழங்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டனர். விவசாயிகளுக்குத் தொழில்நுட்ப ஆலோசனைகள் நேரடியாக வழங்கப்பட்டு வருகின்றன.

இத்தகைய நடவடிக்கைகளினாலேயே, நெல்லுற்பத்தி அண்மைக் காலத்தில் விருத்தியுற்றது. 1965இல் இலங்கை 5,14,200 தொன்கள் நெல்லையே உற்பத்தி செய்தது; அவ்வாண்டு 6,42,200 தொன் நெல் இறக்குமதி செய்யப்பட்டது. ஆனால், கடந்த ஆண்டு 9,00,000 தொன்கள் நெல் இங்கு உற்பத்தியாகியுள்ளது; ஆக 3,44,000 தொன் நெல்லே இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. 1970-ல் நாம் எமக்குத் தேவையான அரிசியில் 74 சதவீதத்தை உள்ளூரிலேயே உற்பத்தி செய்து கொண்டோம். 1965இல் 44 சதவீதத்தை மட்டுமே உற்பத்தி செய்தோம்.

## உப உணவுப் பயிர்களின் விருத்தி

உபஉணவுப் பயிர்களின் உற்பத்தியை அதிகரிப்பதிலும், அண்மைக் காலத்தில் கூடியளவு கவனம் செலுத்தப்பட்டது. உருளைக் கிழங்கு, மிளகாய், வெங்காயம், சோளம், நிலக்கடலை முதலிய பயிர்

களின் விருத்தியிலேயே அதிக கவனம் செலுத்தப்படுகின்றது. உள்ளூரில் உற்பத்தியைப் பெருக்கும் பொருட்டு, உருளைக்கிழங்கு இறக்குமதி முற்றாகத் தடைசெய்யப்பட்டது; மிளகாய், வெங்காயம் என்பனவற்றின் இறக்குமதி சிறிதளவு குறைக்கப்பட்டது.

இப்பயிர்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்காக உத்தரவாத விலைக்கு வாங்கப்படுகின்றது. மக்கள்வங்கி, கூட்டுறவுவங்கி என்பன இப்பயிர்களின் உற்பத்திக்காக விசேஷ கடன்களை வழங்கிவருகின்றன. இப்பயிர்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்காக ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவை காரணமாக இப்பயிர்களின் உற்பத்தியளவு அதிகரித்துள்ளது.

1966இல் 23000 ஏக்கரில் 12600 அந்தர் மிளகாய் உற்பத்தியானது; ஆனல், கடந்த ஆண்டு 44000 ஏக்கரில் 61300 அந்தர் மிளகாய் உற்பத்தியாகி இருக்கின்றது. 1966 இல் 1,44,900 அந்தர் உருளைக்கிழங்கு இங்கு உற்பத்தியானது; ஆனல், கடந்த ஆண்டு 2,88,900 அந்தர் உற்பத்தியாகியது. இவ்வாறு உபஉணவுப் பயிர்களின் செய்கை அண்மைக்காலத்தில் விருத்தியுற்று வருகின்றன.

அத்தியாயம்: 7

# இலங்கையின் வர்த்தகத்திற்குரிய பயிர்கள்

தேயிலை, றப்பர், தென்னை ஆகிய மூன்று பயிர்களுமே வர்த்தகத்திற்குரிய பயிர்களில் மிகவும் முக்கியமானவை. இலங்கையின் பொருளாதாரம் இந்த மூன்று பயிர்களினதும் ஏற்றுமதியிலேயே தங்கியிருக்கின்றது.

இலங்கையில் ஐரோப்பியரின் வருகையின் பின்பே தேயிலை, றப்பர், தென்னைப் பெருந்தோட்டங்கள் ஒழுங்கான முறையில் ஆரம்பிக்கப்பட்டன. ஐரோப்பியரின் வருகைக்கு முன் இலங்கையில் கறுவா, ஏலம், மிளகு எனும் பெருந்தோட்டப் பயிர்களின் வர்த்தகம் நடைபெற்றுள்ள போதிலும், ஓர் ஒழுங்கான வர்த்தக அமைப்பு ஐரோப்பியரின் வருகைக்குப் பின்பே ஏற்பட்டது. ஆரம்பத்தில் பெருந்தோட்டங்களில் கோப்பிச்செய்கையே நடைபெற்றது. ஆனால், கோப்பியில் எதிர்பார்த்தளவு இலாபம் கிடைக்காது அழிவுற்றுப்போகவே சிங்கோனச்செய்கை மேற்கொள்ளப்பட்டது. அதிலும் இலாபம் கிடைக்காதுபோக, தேயிலை. றப்பர் பயிர்களின் செய்கை பெருந்தோட்டங்களில் மேற்கொள்ளப்பட்டது.

இப்பெருந்தோட்டங்களில் தென்னிந்தியத் தொழிலாளர்களே அதிகளவில் வேலை செய்கிறார்கள்; அண்மைக் காலங்களில் இந்தியர் தாய்நாடு திரும்புவதால், இலங்கையர்களும் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். இத்தோட்டங்களில் ஒரு பயிரே விசேஷமாகப் பயிரிடப்படுகின்றது. அண்மையில் இம்முறையில் மாற்றமேற்பட்டிருக்கின்றது. இப்போது றப்பர் மரங்களிடையே கொக்கோ பயிரிடப்படுகின்றது.


## தேயிலை

தேயிலை இலங்கையின் மிகவும் வருமானமுள்ள வர்த்தகப் பயிராக விளங்குகின்றது. உலகில் தேயிலை உற்பத்திசெய்யும் நாடுகளில் உற்பத்தியளவுப்படியும் பயிரிடப்படும் பிரதேசங்களின் பரப்பளவுப்படியும் இலங்கை இரண்டாவது இடத்தை வகிக்கின்றது. இலங்கையில் முதன்முதல் தேயிலை 1867 ஆம் ஆண்டு செய்கை பண்ணப்பட்டது. சரியாக நூறு ஆண்டுகளாக இப்பயிர் இலங்கையின் பொருளாதாரத்தில் முக்கிய இடத்தைப் பெற்றுவருகின்றது.

தேயிலைச்செடி ஓர் அயனப்பிரதேசப் பயிராகும். பகல் நேரத்தில் வெப்பநிலை ஏறக்குறைய 75°ப. ஆக இருக்கவேண்டும்; 80—120 அங்குல மழைவீழ்ச்சி இன்றியமையாததாகும். சிறிதளவு உறைபனியைப் பயிர் தாங்கும். ஆனல் பயிரின் வேர்களைச் சுற்றி நீர் நிற்கக்கூடாது: இதனல் தேயிலை மலைநாட்டின் மத்திய பாகத்திலும் தென்கீழ் பாகத்திலுமுள்ள மலைச் சரிவுகளில் பயிரிடப்படுகின்றது.

தேயிலைச் செடியை வளரவிட்டால் 20 அல்லது 30 அடிவரை மரமாக வளரும். தேயிலைக் கொழுந்துகளை இலேசாகக் கொய்வதற்கும் இலைகளைத் துளிர்க்கச் செய்வதற்கும் காலத்திற்குக் காலம் அவை 3 அல்லது 4 அடி உயரத்தில் வெட்டப்படுகின்றன. தேயிலைக் கொழுந்துகளைப் பெரும்பாலும் பெண் தொழிலாளரே கொய்வார்கள். கொழுந்துகளை உரிய பருவத்தில் கொய்யாவிடில் தேயிலையின் தரம் குறைந்துவிடும்; தேயிலைக்கொழுந்தினளவு பயிர்ச்செய்கை முறைக்கும் தரையின் உயரத்திற்குமேற்ப வேறுபடும். கொய்யப்பட்ட கொழுந்தினைத் தேயிலையாக்கும் வேலை தொழிற்சாலைகளில் நடைபெறும்.

கொய்யப்பட்ட தேயிலைக் கொழுந்துகள் யாவும் தொழிற்சாலைக்குக் கொண்டுவரப்படும். தொழிற்சாலையின் மேல்மாடியில் சாக்கிடப்பட்ட தட்டுகளில் அவை பரவிக் காயவிடப்படும். யந்திரங்கள் மூலம் வெப்பமான காற்றை மேல் மாடிக்கு அனுப்புவதன் மூலமே காயச் செய்வர். கொழுந்துகள் ஒரு நாள் வாடியதும் 'ரோலர்' எனும் யந்திரத்தில் இட்டு அரைக்கப்படும். அரைபட்ட தேயிலைக் கொழுந்து அிக்கப்பட்டு, பெரிய துண்டுகள் மீண்டும் அரைக்கப்படும். பின், அரைபட்ட தூளை ஒரு யந்திரத்திலிட்டு வறுப்பர். அதனல் தேயிலை மணமும் கருமையும் பெறுகின்றது. பின் அவை தரம் பிரிக்கப்பட்டு பெட்டிகளில் காற்றுப் புகாவண்ணம் அடைக்கப்படுகின்றன.




படம்: 19 இலங்கையில் தேயிலை பயிரிடப்படும் பிரதான பகுதிகள்

இலங்கையில் இன்று ஏறக்குறைய 5 இலட்சத்து 97 ஆயிரம் ஏக்கர் பரப்பு தேயிலைச் செய்கைக்காகப் பயன் படுத்தப்பட்டு வருகின்றது. இதில் பெரும்பகுதி மத்திய மாகாணத்திலும் (3,22,000 ஏக்கர்), ஊவா மாகாணத்திலும் (94,000 ஏக்கர்), சப்பிரகமுவா மாகாணத்திலும் (93,000 ஏக்கர்) காணப்படுகின்றது. தேயிலை பயிரிடப்பட்டுள்ள நிலப்பரப்பின் உயரத்திற்கிணங்க தேயிலையின் தரம் மூன்று வகைப்படுகின்றது:

1. 2000 அடிக்குட்பட்ட நிலப்பரப்பில் பயிரிடப்படும் தேயிலையைத் 'தாழ்நிலத் தேயிலை' என்பர்.

2. 2000—4000 அடிக்கு இடைப்பட்ட நிலப்பரப்பில் பயிரிடப்படும் தேயிலையை 'நடுநிலத் தேயிலை' என்பர்.

3. 4000 அடிக்குக் கூடிய நிலப்பரப்பில் பயிரிடப்படும் தேயிலையை 'உயர்நிலத் தேயிலை' என்பர்.

இலங்கையில் இன்று ஏறத்தாழ 49 கோடி இருத்தலிற்கு அதிகமான தேயிலை உற்பத்தி செய்யப்படுகின்றது. ஓர் ஏக்கருக்குரிய வருடச் சராசரி விளைவாக 700 இருத்தல் தேயிலை பெறப்படுகின்றது. 1968-ம் ஆண்டு 49 கோடி இருத்தல் தேயிலை உற்பத்தியாகியது; கடந்த ஆண்டும் ஏறத்தாழ அதேயளவே உற்பத்தியாகியது.

இலங்கையின் தேயிலைத் தோட்டங்களின் பரப்பளவு 10 ஏக்கரிலிருந்து 1000 ஏக்கர் வரை வேறுபடுகின்றது. இலங்கையில் ஏறத்தாழ 1400 தேயிலைத் தோட்டங்கள் உள்ளன. இவற்றில் 200 ஏக்கர் பரப்பிற்குட்பட்ட தோட்டங்கள் 700க்கு மேல் உள்ளன. 1000 ஏக்கர் பரப்பிற்குட்பட்ட தோட்டங்கள் 600 வரையுள்ளன. 1000 ஏக்கர் பரப்பிற்கு மேற்பட்ட தோட்டங்கள் 85 மட்டிலுள்ளன.

அந்நியருக்குச் சொந்தமாகவிருந்த தேயிலைத் தோட்டங்கள் இன்று இலங்கையரின் நிர்வாகத்தில் அவர்களுக்குச் சொந்தமானவையாக மாறி வருகின்றன.

தேயிலைப் பெருந்தோட்டங்களில் இன்று கிட்டத்தட்ட 5 இலட்சம் தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர். இவர்களில் 80 வீதமானோர் இந்தியத் தொழிலாளராவர். ஏனைய 20 வீதமானோர் இலங்கைத் தொழிலாளராவர்.


ஒரு வருடத்தில் சராசரியாக 40 கோடி இருத்தலிற்கு அதிகமான தேயிலை ஏற்றுமதி செய்யப்படுகின்றது; 1968ஆம் ஆண்டு 44 கோடி இருத்தலுக்குச் சற்று அதிகமான தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டது; உள் நாட்டில் விற்பனையாகும் தேயிலை ஏறக்குறைய இரண்டு கோடி இருத்தல்களாம். இலங்கைத் தேயிலையை ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா, அவுஸ்திரேலியா, ஈராக், தென்னாபிரிக்கா, கனடா, எகிப்து, ருஷியா, நெதர்லாந்து முதலிய நாடுகள் வாங்கிக் கொள்கின்றன.

தேயிலைத் தோட்டங்களின் பரப்பையும் ஏக்கருக்குரிய விளைவையும் அதிகரிப்பதற்கு அரசாங்கம் பல வழிகளில் முயற்சித்து வருகின்றது. பழைய தோட்டங்களில் உள்ள தேயிலைச் செடிகளை அழித்துவிட்டு, புதிய செடிகளைத் திருப்பி நடுவதற்கும், புதிய தோட்டங்களில் தேயிலைச் செய்கையை ஆரம்பிப்பதற்கும், மண்ணரிப்பைத் தடுப்பதற்கும், போதிய பசளை இடுவதற்குமாக அரசாங்கம் கடன்வசதி அளித்து வருகின்றது.

## றப்பர்

றப்பர் பயிரிடப்படும் பிரதேசத்தின் பரப்பளவு தேயிலை பயிரிடப்படும் பிரதேசத்தின் பரப்பளவிலும் கூடுதலாக இருக்கின்ற போதிலும் வருமானம் தேயிலையிலும் குறைவானதாகவே இருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது. உலகில் உற்பத்தி செய்யப்படும் றப்பரில் ஏறக்குறைய 5 வீதம் இலங்கையிலிருந்து கிடைக்கின்றது.

தேயிலையைப் போன்று றப்பரும் அயனப் பிரதேசப் பயிராக இருக்கின்றது. வெப்பநிலை 80°ப. அளவில் அதிக வேறுபாடின்றி இருக்க வேண்டும். மழைவீழ்ச்சி ஏறக்குறைய 80 அங்குலங்கள் ஆகவோ அதற்குச் சற்றதிகமாகவோ இருக்க வேண்டும். நீர் வழிந்தோடக் கூடிய நிலமாக இருக்கவேண்டியது அவசியமாகையினால் மலைச் சரிவுகளின் கீழ்ப் பாகங்களில் இது பயிரிடப்படுகின்றது. இலங்கையின் ஈரலிப்பான பிரதேசத்தில் நீரைத் தேக்கி வைக்காத செம்பூரான் ஈரக்களிமண் பகுதிகளில் றப்பர் செய்கை பண்ணப்படுகின்றது.



படம்: 20 இலங்கையில் றப்பர் பயிராகும் பகுதிகள்

றப்பர்த் தோட்டங்கள் 2000 அடி உயரப் பிரதேசத்துள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. றப்பர் மரம் 1200 அடிக்கு அதிகமான

உயரமுள்ள பகுதிகளிலும் நன்கு வளருமெனினும் 1200 அடிக்குட்பட்ட பகுதியில் கிடைக்கின்ற விளைவை அளியா. 1200 அடிக்கு மேற்பட்ட பகுதிகளில் பயிரிடப்படுகின்ற றப்பர் தரும் பயன், குறைவாகவே உள்ளது.

இலங்கையில் இன்று 6 இலட்சத்து 75 ஆயிரம் ஏக்கர் பரப்பு றப்பர் பெருந்தோட்டங்களாகக் காணப்படுகின்றன. இதில் பெரும் பகுதி சப்பிரகமுவா மாகாணத்திலும் (2,57,000 ஏக்கர்), மேல் மாகாணத்திலும் (1,95,000 ஏக்கர்), தென் மாகாணத்திலும் (105,000 ஏக்கர்), மத்திய மாகாணத்திலும் (79,000 ஏக்கர்) காணப்படுகின்றன. ஊவா மாகாணத்திலும் வடமேல் மாகாணத்திலும் றப்பர் தோட்டங்களுள்ளன. களுத்துறை, கேகாலை, இரத்தினபுரி எனும் மாவட்டங்களில் றப்பர்ச்செய்கை அதிகம் நடைபெற்று வருகின்றது. இலங்கையில் இன்று 1,00,000 தொன் றப்பர் பால் உற்பத்தி செய்யப்படுகின்றது.

தேயிலைச் செய்கையைப் போன்றே றப்பர் மரமும் பெருந்தோட்ட முறையில் வளர்க்கப்படுகின்றது. நிர்வாக நடவடிக்கைகளும் தேயிலைச் செய்கையை ஒத்ததே. இந்தியாவிலிருந்து இலங்கைக்குக் குடியேறியவர்களின் வழிவந்த தமிழ்த் தொழிலாளர் றப்பர்த் தோட்டங்களில் அதிக அளவில் வேலை செய்கின்றனர். இன்று இத் தோட்டங்களில் சிங்களத் தொழிலாளர் தொகையும் கூடிவிட்டது. தேயிலைக்குத் தேவையானது போன்று றப்பருக்குத் தொழிலாளர் அதிகந் தேவையில்லை. ஆனால், பாலை மரத்திலிருந்து பக்குவமாய் வெட்டுவாய் அமைத்து எடுப்பதற்குப் பயிற்றப்பட்ட தொழிலாளர் தேவை.

ஒவ்வொரு றப்பர் மரமும் ஆறுவயது ஆனதும் பால் தரக்கூடியது. ஒன்றைவிட் டொருநாள் றப்பர்ப்பால் சேகரிக்கப்படும். பால் வெட்டி எடுத்தல் அதிகாலையில் நிகழும். இரண்டு மணித்தியாலங்கள் வரை பால் சேகரிக்கப்பட்டதும் அது தொழிற்சாலைக்குக் கொண்டு செல்லப்படுகின்றது. மே, யூன், மாதங்களில் நிகழும் அதிக மழைவீழ்ச்சி றப்பர்ப்பால் எடுப்பதற்குத் தடையாக உள்ளது.

ஈரலிப்பான பிரதேசங்களில் பெப்ரவரி மாதங்களில் மழை குறைவு; வறட்சி நிலவும். அதனால், இம்மாதத்தில் றப்பர் மரங்கள் இலைகளை உதிர்த்து ஒய்வு பெறுகின்றன. இக்காலத்தில் றப்பர்ப் பால் சேகரிக்கப்படுவது கிடையாது. இக்காலத்தில் றப்பர்ப் பால் பெற வெட்டப்பட்ட காயங்களுக்கு ஒருவகைப் பசை பூசப்படும். அத்துடன் அதிக மழைகாலத்தில் ஏற்படும் மண்ணரிப்பைத் தடுக்க வடிகால் வெட்டவும்படும்.

தொழிற்சாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட றப்பர்ப்பால், அசெட்டிக் அமிலமும் நீரும் கலக்கப்பட்டு உறையவிடப்படும். உறைந்த றப்

பர்ப்பாலே உருள்பொறி ஒன்றினுள் செலுத்தி அதிலுள்ள நீரை வேருக் குவர். நீரை வேருக்கியதும் உறைந்த றப்பர், றப்பர்த்தகடுகளாக மாறிவிடுகின்றது; கிறேப் றப்பர் எனும் ஒருவகை றப்பர் உற்பத்தி யாகிறது. றப்பர்ப்பாலேப் பெரிய தொட்டிகளில் உறையவிடுவர். உறைந்தபின் துண்டு துண்டாக வெட்டி அதிக வெப்பமுடைய அறை யில் உலர்த்துவர். இது தகட்டு றப்பர் எனப்படும். தகட்டு றப்பர் பழுப்பு நிறமானது. கிறேப்றப்பர் மஞ்சள் நிறமானது. தகட்டு றப் பராகவும், கிறேப் றப்பராகவும் இவை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி யாகின்றன. ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், சீன முதலிய நாடுகள் எம்நாட்டு றப்பரை வாங்கிக் கொள்கின்றன.

இலங்கையில் ஏறத்தாழ 1,35,200 றப்பர்த் தோட்டங்கள் உள் ளன. இவற்றில் 1,28,700 றப்பர்த் தோட்டங்கள் மட்டில் ஒவ் வொன்றும் 10 ஏக்கருக்குக் குறைந்த பரப்புடையவை. 5,670 தோட் டங்கள் வரை 100 ஏக்கருக்கும் 500 ஏக்கருக்கு மிடைப்பட்ட பரப் பினைக் கொண்டவை. 200 தோட்டங்கள் வரையில்தான் ஒவ்வொன் றும் 500 ஏக்கருக்கு அதிகமான பரப்புடையனவாகவுள்ளன.

வருடத்தில் இலங்கையில் உற்பத்தியாகும். 1,00,000 தொன் றப்பரில் 3½ இலட்சம் இருத்தலே உள் நாட்டில் உபயோகிக்கப்படு கின்றது. மிகுதி ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

றப்பர்த் தோட்டங்களிலுள்ள வயது சென்ற மரங்களை அழித்து விட்டுப் புதிய மரங்களைத் திருப்பி நடுவதற்கும், புதிய தோட்டங்க ளில் றப்பர்ச் செய்கையை ஆரம்பிப்பதற்கும் அரசாங்கமின்று கடன் வசதி அளித்து வருகின்றது; றப்பர்த் தோட்டங்களின் பரப்பையும் ஏக்கருக்குரிய விளைவையும் அதிகரிக்கச் செய்வதற்கு அரசாங்கம் கூடிய கவனம் எடுத்து வருகின்றது.

சர்வதேசச் சந்தையில் அண்மைக் காலத்தில் இலங்கையின் றப்ப ரின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. பல நாடுகள் றப்பரை உற்பத்தி செய்து போட்டியிடுவதும், செயற்கை றப்பர் உபயோகம் கூடியுள் ளமையும் றப்பரின் வீழ்ச்சிக்குக் காரணங்களாகவுள. சர்வதேசச் சந் தையில் றப்பரின் விலை திடமாக இல்லாமையினுல் மலேசியா நாடும் பெரிதும் பாதிப்புற்றது. அதனுல் மலேசியா றப்பர்த் தோட்டங்களை அழித்துவிட்டு, செம்பனை எனும் எண்ணெய் தரும் பயிரைச் செய்கை பண்ணுவதில் கூடிய கவனம் செலுத்தி வருகின்றது. றப்பர்த் தோட் டங்களிலும் பார்க்க இச்செம்பனைத் தோட்டங்கள் அதிக இலாபம் தருவனவாகவுள. இலங்கையும் இச்செய்கையில் ஈடுபடுவது, றப்ப ரின் வீழ்ச்சியால் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியை நீக்குவதாக


அமையும். அத்துடன் நமது நாட்டிற்குத் தேவையான றப்பர்ப் பொருட்களை (டயர், ரியூப் முதலியன) நாமே உற்பத்தி செய்து கொள் வதன் மூலம் உள்ளூர் றப்பர் நுகர்ச்சியை அதிகரிக்கச் செய்வதும் அவசியமாகும்.

## தென்னை

தென்னந் தோட்டங்களை மிகவும் குறைவான தொழிலாளருடன் சுலபமாக மேற்பார்வையிட முடிவதால், இலங்கையர் தென்னைப் பெருந்தோட்டச் செய்கையையே பெரிதும் விரும்புகின்றனர். இலங்கையிலுள்ள தென்னந் தோட்டங்கள் முற்றுக இலங்கையருக்கே சொந்தமாகவுள்ளன. பல நூற்றுண்டு காலமாக இலங்கையில் தென்னை பயிரிடப்பட்டு வந்த போதிலும் ஐரோப்பியரினது வருகைக்குப் பின்பே வர்த்தக ரீதியாகப் பயிரிடப்பட்டது.

தென்னை பயிரிடுவதற்கு வருடச் சராசரி வெப்பநிலை 75°—80°ப. வரையோ அதற்கு மேலதிகமாகவோ இருக்க வேண்டும். சிறந்த பயனைப் பெறுவதற்குச் சராசரியாக 80 அங்குல மழைவீழ்ச்சி தேவை. கடற்கரையை அடுத்துள்ள மணற் பாங்கான பகுதிகளில் இது நன்கு வளர்கின்றது. 2000 அடிக்கு அதிக உயரமுடைய பகுதிகளிலிது நல்ல பயனைக் கொடுப்பதில்லை.

இலங்கையில் தென்னை வளரும் பிரதேசங்கள் இலங்கையின் தென்மேல் பகுதியில் பரந்துள்ளன. சிறப்பாக சிலாபம் தொட்டு தங்காலை வரை தென்னை வளர்கின்றது. கொழும்பு, சிலாபம், குருநாகல் எனும் இடங்களை இணைக்கும் முக்கோணப் பகுதி தென்னைச் செய்கைக்கு முதன்மையானது. இம் முக்கோணப் பகுதியில் பெரும்பாலும் பெரிய தென்னந் தோட்டங்கள் காணப்படுகின்றன. இங்கு ஏற்றுமதிக்




படம்: 21 தென்னை பயிராகும் பிரதான பகுதிகள்

காகவே தென்னை வளர்க்கப்படுகின்றது. தென்னை உற்பத்திப் பொருட்களில் கொப்பறு எனும் உலர்ந்த தேங்காய் முக்கியம் பெறுகின்றது. தேங்காய் எண்ணெய், தேங்காய்த்துருவல் என்பன கொப்பறுவிலிருந்து செய்யப்படுகின்றன. வர்த்தக நோக்குடன் கயிறு திரித்தலும் இப்பகுதியில் காணப்படும் இன்னெரு தொழிலாகும்.

தென்னை வளரும் முக்கோணப் பகுதிக்குத் தெற்கேயுள்ள கரையோரத்தை ஒட்டிய ஒடுங்கிய பகுதியில் தென்னை வளர்க்கப்படுகின்றது. இங்கு வளர்க்கப்படும் தென்னை, குடிசைக் கைத்தொழில்களுக்காகவும், சிறு கைத்தொழில்களுக்காகவும் பயன்படுகின்றது. கொழும்பிற்குத் தெற்கே ஒருசில பெருந் தென்னந்தோட்டங்கள் காணப்படுகின்றன. பெரும்பாலானவை சிறிய தோட்டங்களே. கொஸ்கொடை, வஸ்கடுவ, தொடந்துவ, வாத்துவ, மக்கோனை, வேருவலை என்பன தென்னந்தோட்டங்கள் காணப்படும் முக்கிய நகர்களாகும். இப்பகுதியிலுள்ள மரங்களில் இருந்து பெரும்பாலும் கள்ளே பெறப்படுகின்றது. வின்னாரி, சாராயம், சர்க்கரை என்பன கள்ளிலிருந்து உற்பத்தியாகின்றன. தும்பிலிருந்து முறுக்குக் கயிறு, துடைப்பம் என்பன உற்பத்தி செய்யப்படுகின்றன.

இலங்கையின் தென்னை தென்மேல் பகுதியைவிட, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலும் வளர்க்கப்படுகின்றது. இலங்கையின் ஒவ்வொரு வீட்டுத் தோட்டத்திலும் தென்னை மரங்கள் உள்ளன.

இலங்கையில் 10 இலட்சம் ஏக்கர் பரப்பிற்கு மேல் தென்னந்தோட்டங்களிருக்கின்றன. வடமேல் மாகாணத்தில் 4,20,000 ஏக்கர்களும், மேல்மாகாணத்தில் 2,33,000 ஏக்கர்களும், தென்மாகாணத்தில் 1,03,000 ஏக்கர்களும், சப்பிரகமுவா மாகாணத்தில் 82,000 ஏக்கர்களும், மத்திய மாகாணத்தில் 82,000 ஏக்கர்களும், வடமாகாணத்தில் 24,000 ஏக்கர்களும், கீழ்மாகாணத்தில் 21,000 ஏக்கர்களும், வடமத்திய மாகாணத்தில் 2,750 ஏக்கர்களும் ஊவா மாகாணத்தில் 1500 ஏக்கர்களும் தென்னைச் செய்கைக்குட்பட்டுள்ளன.

ஓர் ஏக்கர் பிரதேசத்தில் சரர்சரி 60 மரங்களை நட்டு வளர்க்கலாம். வருடமொன்றிற்கு சராசரியாக ஒருமரத்தில் இருந்து 50 தேங்காய்கள் வரை கிடைக்கும். இதனால் ஓர் ஏக்கர் தென்னந்தோட்டத்திலிருந்து ஏறக்குறைய 3000 தேங்காய்கள் வருடமொன்றிற்குக் கிடைக்கின்றன. கடந்த ஆண்டு 283,03,58,750 தேங்காய்கள் 10 இலட்சம் ஏக்கரிலிருந்து பெறப்பட்டன. ஓர் ஏக்கரில் கிடைக்கும் தேங்காய்களின் அளவு அப்பகுதியின் காலநிலை, மண்வளம், தென்னை மரங்களின் வயது, அவற்றின் நிலைமை, பராமரிக்கப்படும் முறை என்பனவற்றிற்கிணங்க வேறுபடும்.

சிறந்த தோட்டங்களில் உழவும், பசளை இடுதலும் சிறப்பாக நடைபெறுகின்றது. பச்சைப் பசளை, இரசாயன உரங்கள், உரி மட்டை முதலியன பசளையாகப் பயன் படுத்தப்படுகின்றன. மரங்களை எலிகளில் இருந்தும், வண்டுகளிலிருந்தும் பாதுகாக்கவேண்டியுள்ளது. காலத்திற்குக் காலம் புதிய மரங்களை நடவேண்டியுமுள்ளது.

பழைய தென்னந்தோட்டங்களில் புதிய கன்றுகளை நடுவதற்கும், புதிய தென்னந்தோட்டங்களை உருவாக்குவதற்கும் அரசாங்கம் நிதியுதவி செய்துவருகின்றது. பசளை வினியோகத் திட்டத்தின் கீழ் பசளையை ஏராளமாக அளித்து வருகின்றது. தென்னைச் செய்கை விருத்திக்காக லுணுவில எனுமிடத்தில் தென்னை ஆராய்ச்சி நிலையம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

## கொக்கோ

இலங்கையில் வர்த்தகப்பயிர்களான தேயிலை, றப்பர், தென்னை என்பனவற்றிற்கு அடுத்ததாகக் கொக்கோ ஒரு முக்கிய விடத்தை வகிக்கின்றது. ஆசியாவிலேயே அதிக அளவு கொக்கோ விளைவிக்கும் நாடு இலங்கையாகும்.

கொக்கோ ஒரு மத்தியகோட்டுப் பயிராகும். ஏறக்குறைய 80°ப. வெப்பநிலையும், வருடம் முழுவதும் பரந்திருக்கும் 80 அங்குல மழை வீழ்ச்சியும் தேவை. இளம் கொக்கோச் செடிகள் சூரிய வெப்பத்தினல் பாதிக்கப்படுவதால் நிழல் மரங்கள் நடவேண்டியுள்ளது. இலங்கையில் றப்பர் மரங்களைக் கொக்கோத் தோட்டங்களின் இடையே நடுகின்றனர்.

இலங்கையில் ஏறக்குறைய 34,000 ஏக்கர்ப்பரப்பில் கொக்கோ விளைவிக்கப்படுகின்றது. கொக்கோத் தோட்டங்கள், கண்டி, மாத்தளை மாவட்டங்களிலும், அதனை அடுத்துள்ள குருநாகல் மாவட்டத்தின் சில பகுதிகளிலும் உள்ளன. கண்டி மாவட்டத்தில் 18,350 ஏக்கரிலும்; மாத்தளை மாவட்டத்தில் 11,200 ஏக்கரிலும் கொக்கோ பயிரிடப்படுகின்றது.

ஒரு வருடத்தில் சராசரியாக 50,000 அந்தர் கொக்கோ, பிலிப்பைன் தீவுகள், யப்பான், பிரித்தானியா, ஐரோப்பிய நாடுகள் ஆகியவற்றிற்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

## கறுவா

கறுவா இலங்கைக்கு வருவாயைக் கொடுத்துவரும் பழைய பயிர்களில் ஒன்ருகும். ஏறக்குறைய 30,000 ஏக்கர் பரப்பில் இது பயிரிடப்பட்டு வருகின்றது.

நல்லதரமான கறுவா 80°ப. வெப்பநிலையும், 70 தொட்டு 80 அங்குலங்கள் மழை வீழ்ச்சியுமுள்ள படிகமணல் பகுதிகளில் நன்கு வளரும். இதனுல் இலங்கையின் தென்மேல் கரையோரங்களில் பெருமளவு பயிரிடப்படுகின்றது. கறுவாப் பெருந் தோட்டங்கள் நீர் கொழும்பு, காலி ஆகிய மாவட்டங்களில் இருக்கின்றன.

கறுவாத் தோட்டங்களின் பரப்பளவு பெரும்பாலும் ஒரு ஏக்கரிலிருந்து 25 ஏக்கர்வரை வேறுபடுகின்றது. 100 ஏக்கர்ப் பரப்புள்ள கறுவாத் தோட்டங்களுமிருக்கின்றன.

கறுவாமரம் 30 அடி உயரத்திற்கு மேல் வளரக்கூடியது; ஆனுல், 10 அடி உயரத்திற்குமேல் வளரவிடுவதில்லே. மே மாதத்திற்கும், அக்டோபர் மாதத்திற்கும் இடைப்பட்ட காலங்களில் கறுவாப் பட்டை உரிக்கின்ருர்கள். தற்போதைய ஏக்கருக்குரிய விளேவாகச் சராசரி 125-180 இருத்தல் வரை கிடைக்கின்றது.

ஏறத்தாழ 55,000 அந்தர்க் கறுவா மெச்சிக்கோ, ஐக்கிய அமெரிக்கா, அவுஸ்திரேலியா முதலிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

கறுவாச் செய்கையில் சில இடர்களுள்ளன. தொழிலாளர் கிடைப்பது மிகவரிதாகவுள்ளது. ஏனெனில் வருடத்தில் 5—6 மாதங்களே அவர்களுக்கு வேலே கிடைக்கின்றது, கூலியும் மிகக் குறைவு. மேலும் கறுவாத் தோட்டங்கள் பல இன்று தென்னந் தோட்டங்களாக மாறி வருகின்றன.

## இலவம் பஞ்சு

இது ஈரலிப்பான பிரதேசத்தில் 2500 அடிக்குக் குறைவான இடங்களில் பயிரிடப்படுகின்றது. இது பொதுவாக இலங்கையின் மத்திய பிரதேசங்களிலும், தாழ்நிலப் பிரதேசங்களிலும் வளரக்கூடியது. மாத்தளே, கண்டி மாவட்டங்களில் அதிகமாக வளர்க்கப் படுகின்றது. ஒரு மரத்திலிருந்து சராசரி 20 இருத்தல் பஞ்சுவரை சேகரிக்க முடியும். 1966-ஆம் ஆண்டு 4,800 இருத்தல் இலவம் பஞ்சு ஏற்றுமதி செய்யப்பட்டது. இதில் பெரும் பங்கை அவுஸ்திரேலியா வாங்கிக்கொள்கிறது.

## ஏலம்

வரலாற்றுக் காலத்தில் வாசனேத் திரவியத் தொழில் அதிமுக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தபோது ஏலம் மிகமுக்கியமான விடத்தைப் பெற்றிருந்தது. ஏலம் நுவரெலியா, மாத்தளே, கண்டி, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் 5,300 ஏக்கர் நிலப்பரப்பில் பயிராகின்றது. இலங்கை மொத்தம் 31,000 அந்தர் ஏலம் உற்பத்தி செய்கிறது. உலகின் தேவையில் $\frac{1}{10}$ வீதத்தை இலங்கை பூர்த்திசெய்கிறது.

## மிளகு

மிளகு இலங்கையின் தாழ்ந்த பிரதேசத்திலும் ஈரலிப்பான பிரதேசத்திலும் 1700 அடிக்குக் குறைவான இடங்களில் பயிரிடப்படுகின்றது. மாத்தறையிலும், தும்பறைப் பள்ளத்தாக்கிலும் இது ஏராளமாகப் பயிரிடப்படுகின்றது.

## பைங்கிரி நல்லாப்புல்

பைங்கிரி நல்லாப்புல் மாத்தறை, அம்பாந்தோட்டைப் பாகங்களில் ஏராளமாகப் பயிரிடப்படுகின்றது. வருடம் இருமுறை இப்புற்கள் வெட்டப்பட்டுப் புல்லெண்ணெய் வடிக்கப்படுகின்றது. சவர்க்காரங்கள், கிருமிநாசினிகள், வாசனைத் திரவியங்கள் ஆகியன செய்வதற்கு இது பயன்படுகிறது. சராசரியாக 7,50,000 இருத்தல் புல்லெண்ணெய் ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், ஐரோப்பிய நாடுகள் ஆகியவற்றிற்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

## பாக்கு

கமுகு ஏறக்குறைய 69,000 ஏக்கர்ப்பரப்பில் வளர்க்கப்படுகின்றது. கண்டி, கேகாலை, இரத்தினபுரி மாவட்டங்களில் அதிகமாக வளர்க்கப்படுகின்றது.

அத்தியாயம்: 8

# இலங்கையின் கனிப்பொருட்கள்

இலங்கையில் இதுவரை அளவீடு செய்யப்பட்டிருக்கும் கனிப்பொருட்கள் வெகு சிலவே. அவற்றில் இலங்கையின் கனிப் பொருட்களெனக் காரீயம், விலையுயர்ந்த கற்கள், வெண்களி, படிகமணல், இல்மனையிட், மொனசைற், மைக்கா, இரும்புத்தாது, முற்ரு நிலக்கரி என்பனவற்றைக் கூறலாம். பெயரளவில் இலங்கையின் கனிப்பொருட்கள் பலவாக இருக்கின்ற போதிலும் தொகையளவில் குறைவானவையே.


## காரீயம்

இலங்கையின் கனிப்பொருட்களுள் மிக முக்கியமானதாகக் குறிப்பிடத்தக்கது காரீயமாகும். காரீயம் என்பது கனித்தன்மை வாய்ந்த இறுகிய ஒரு பொருள். பென்சில், வர்ணம் (பெயின்ற்). உலர் மின்கலம், காபன், சப்பாத்து மினுக்கி என்பவை செய்ய, காரீயமே தேவைப்படுகின்றது. இரும்புத்தாதை உருக்குவதற்கும் காரீயம் பயன்படுகின்றது. பாத்திரங்கள் எரிவதைத் தவிர்க்க அவற்றின் உட்பகுதிகளுக்கும் காரீயம் பூசப்படுகின்றது. இலங்கையில் காணப்படும் காரீயம் மிகவும் உயர்ந்த தரமானது. அதனுல், உலகில் இலங்கைக் காரீயத்துக்கு நல்ல மதிப்புண்டு.

இலங்கையின் பல பகுதிகளில் காரீயம் காணப்படுகின்றது. வவுனியா, கொரவுப்பொத்தானை, நிக்கவரட்டியா, தம்புளை எனுமிடங்களை இணைக்கும் நாற்கோணப் பிரதேசத்தில் காரீயப்படிவுகள் அதிகளவில் காணப்படுகின்றன. றுவான்வெல, குருநாகல், களுத்துறை, அக்குரச ஆகிய விடங்களிலும் காரீயம் காணப்படுகின்றது.

இலங்கையில் இன்று மூன்று சிறந்த காரீயச் சுரங்கங்கள் காணப்படுகின்றன. அவையாவன:-

1. றுவான்வெலவிற்கு அண்மையிலுள்ள போகலைச் சுரங்கம்.
2. குருநாகலுக்கு அண்மையிலுள்ள ககத்தக்கா சுரங்கம்.
3. தொடங்கஸ்லந்தைச் சுரங்கம்.




படம்: 22 இலங்கையின் கனிப்பொருட்கள்

இலங்கையிலிருந்து காரீயத்தை ஐக்கிய அமெரிக்கா, இங்கிலாந்து, யப்பான், இந்தியா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் வாங்கிக் கொள்கின்றன. இலங்கையில் காரீயம் மிகச்சிறிதளவே உபயோகிக்கப்பட்டு வருகின்றது.

## வெண்களி

இலங்கையின் தென்மேற்குப் பகுதியின் பலவிடங்களில் வெண்களி கிடைக்கின்றது. கலுபோவில-பொறலஸ்கமுவா எனுமிடத்தில் ஒரு கோடிதொன் வெண்களி இருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கின்றது. கம்பளை, களுத்துறை, இரணைமடு, ராகமை தொடக்கம் கம்பகாவரை, மீற்றியகொடை முதலிய இடங்களிலும் வெண்களி கிடைக்கின்றது.

இக்களிமண் தூய்மையாக்கப்பட்டதும் பீங்கான் பொருட்கள் செய்வதற்கும், காகிதத்தை வழுவழுப்பாக்குவதற்கும் உபயோகிக்கப்படுகின்றது.

## இரத்தினக் கற்கள்

மிகப் பண்டைக்காலத்தில் இலங்கை இரத்தினக் கற்களுக்குப் புகழ்வாய்ந்ததாக இருந்துள்ளது. கிரேக்க, அராபிய, ரோம வர்த்தகர்கள் இலங்கைக்கு வந்து இரத்தினக் கற்களை வாங்கிச் சென்றுள்ளனர். அதனலேயே இலங்கை 'இரத்தினத்தீபம்' என்ற பெயரைப் பெற்றது,

இலங்கையில் இரத்தினபுரியே இரத்தினக் கற்களுக்கு முக்கியமான பகுதியாகும், அதனது பெயரே அந்த உண்மையைப் புலப்படுத்தும், இரத்தினபுரி சப்பிரகமுவா மாகாணத்தில் அமைந்துள்ளது. பத்தலை, ஒக்கம்பிட்டி, அவிசாவளை, பெல்மதுளை, பலாங்கொடை, றக்குவானை என்பன இரத்தினக்கற்கள் காணப்படும் இடங்களாகும். அண்மையில் மொனராகலைப் பகுதியிலும் இரத்தினக்கற்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இரத்தினக்கற்கள் ஆற்றுப் பள்ளத்தாக்குகளிலும் மலையடிவாரங்களிலும் காணப்படுகின்றன. இரத்தினபுரி இத்தகைய ஒரு மலையடிவாரத்தில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இரத்தினக்கற்கள் நரம்புப்படை அல்லது நாளப்படை எனும் மண்படையில்தான் காணப்படுகின்றன; நாளப்படை அழுத்தமான வட்டக்கற்களைக் கொண்டிருக்கும். நிலத்தைத் தோண்டிக்கொண்டு போகும்போது படை படையாக மண்படைகள் அமைந்திருப்பதை நீங்கள் காணலாம்.

இரத்தினக்கற்கள் பெறுவதற்கு பூமியில் சுரங்கங்கள் தோண்டப் படுகின்றன. இதனை 'இரத்தினக்கற் சுரங்கம்' என்பர். நாளப்படை வரை தோண்டப்படும். நாளப்படை வந்ததும் துலாவின் உதவி கொண்டு சிலதொழிலாளர் நீரை வெளியேற்ற, வேறு சிலர் இரத் தினக்கற்கள் உள்ள நாளப்படை மண்ணை வெளியேற்றுவர். இந்த மண் 'இரத்தினக்கற்படலம்' எனப்படும். மேலே கொண்டுவரப்பட்ட இம்மண் அரிதட்டில் இடப்பட்டு கழுவப்படும். கழுவப்பட்டபின் மதிப்புள்ள இரத்தினக்கற்களை, அழுத்தமான வட்டக்கற்களில் இருந்து பிரித்து எடுப்பர். தொழிலாளர்கள் கூலிக்கு வேலைசெய்வது கிடையாது. இரத்தினக்கற்களால் கிடைக்கும் வருமானத்தில் ஒரு பகுதி இவர்களுக்குப் பகிர்ந்து அளிக்கப்படுகின்றது.

இரத்தினக்கற்களுக்கும் ஏனைய விலையுயர்ந்த கற்களுக்கும் இடையே பல வேறுபாடுகளுள்ளன. இரத்தினக்கல் நன்கு வைரித்த கல்லாகும். இது துலக்கமானதும், பிரகாசம் பொருந்தியதுமாக விளங் கும். இரத்தினக் கற்களைச் செதுக்கி அழுத்தம் செய்யப்படுமுன் அவை சாதாரண கற்களைப் போலவே இருக்கும். இரத்தினக்கற்கள் மழையினலும் வெய்யிலினலும் பாதிக்கப்படுவனவல்ல. அதனுற்றான் இவை பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக ஆற்றுப்படுக்கைகளில் சேதமுருது கிடக்கின்றன.

நிலத்தில் இருந்து வெட்டி எடுக்கப்பட்ட இரத்தினக்கற்கள் செதுக்கி அழுத்தம் செய்யப்பட்டபின்பே உபயோகிக்க ஏற்றனவா கின்றன. செதுக்கி அழுத்தம் செய்தலைப் 'பட்டை தீட்டுதல்' என்பர். முஸ்லீம்களே பட்டை தீட்டுதலில் திறமையானவர்கள். பட்டை தீட் டுதலில் பழைய முறைகளே இன்றும் கையாளப்பட்டு வருகின்றன. இலங்கையில் இன்று காணப்படும் இரத்தினக்கற்களில் சபைர் என்ற நீலக்கல், ரூபி என்ற சிவப்புக்கல் என்பனவற்றைக் குறிப்பிடலாம். வைடூரியம் என்ற இரத்தினக்கல் றக்குவானைப் பகுதியில் காணப்படு கின்றது. புஷ்பராகம், தொரும்த என்ற வெண்ணீலக்கற்களும் காணப் படுகின்றன.

இரத்தினக்கல் வியாபாரம் இன்று பெரிதும் இஸ்லாமியர் கைக ளிலேயே உள்ளது. இலங்கையின் இரத்தினக் கற்களை ஐரோப்பிய நாடுகளும் ஐக்கிய அமெரிக்காவும் பெருமளவில் விரும்பி வாங்குகின் றன. ஏறத்தாழ 35 இலட்சம் ரூபா வருடாவருடம் இந்த ஏற்றுமதி யினல் இலாபமாகப் பெறப்படுகின்றது. நமது தேசிய வருமானத் தில் இது மிகவும் சிறியதொரு பகுதியே.

### படிகமணல்

மாறவில்லா, கல்பிட்டி, சாவகச்சேரி, பருத்தித்துறைக்குத் தெற்கே முல்லைத்தீவுக் கரையோரங்களிலும் படிகமணல் காணப்படு

கின்றது. காலஓயா, களனிகங்கை, களுகங்கை, போன்ற நதிகளின் முகத்துவாரங்களில் படிகமணல் காணப்படுகின்றது. தென்மேற் பருவக்காற்றினால், இம்மணல் தென்மேற் கரையோரத்தில் குவிக்கப் படுகின்றது. படிகமணல் கண்ணாடி செய்வதற்கு ஏற்றது. படிக மண லோடு இரும்பும் இல்மனைட்டும் சேர்ந்திருக்கின்றன.

## இல்மனையிட்

இல்மனையிட் படிவுகளும், படிகமணல் போன்று இலங்கையின் கரையோரங்களில் காணப்படுகின்றன. திருகோணமலைக்கு வடக்கே யுள்ள புல்மோட்டையிலும் மட்டக்களப்பிற்குத் தெற்கேயுள்ள திருக் கோயிலிலும் இல்மனையிட் படிவுகளுள்ளன. இல்மனையிட் கடற்கரை யில் குவிக்கப்படும் ஒருவகை மணலிலிருந்து பெறப்படுகின்றது. புல் மோட்டையில் இல்மனையிட் தொழிற்சாலை அமைந்துள்ளது. புல் மோட்டையில் சுமார் 75 ஆண்டுகளுக்குப் போதுமான இல்மனையிட் உள்ளதாகக் கணிக்கப்பட்டிருக்கின்றது. ஒரு வருடத்தில் சுமார் 60,000 தொன்கள் வரையில் இல்மனையிட் யப்பானுக்கு ஏற்றுமதி யாகின்றது. இல்மனையிட் உயர்ந்தரகத் தீந்தையின் மூலப் பொரு ளாகவும், உருக்குக் கலப்புப் பொருளாகவும் பயன்படுகின்றது.

## மொனசைற், மைக்கா, முற்றுநிலக்கரி

கைகாவெல, வொருவலைக்கு வடக்கே குதிரைமலைப் பகுதிகளில் மொனசைற் காணப்படுகின்றது. நாவுல, மாத்தளை, பொல்கொல்லை, குருநாகல் மாவட்டம், மைலப்பிட்டி பகுதிகளில் மைக்கா காணப் படுகிறது. களனிகங்கை முகப்பு, முத்துராஜவெல சதுப்பு நிலம் என்பனவற்றில் முற்றுநிலக்கரி காணப்படுகிறது.

## இரும்புத்தாது

இலங்கையின் தென்மேல் பாகத்திலுள்ள பல இடங்களில் இரும் புத் தாது காணப்படுகின்றது. இரத்தினபுரி தொடக்கம் பலாங் கொடைவரை, மாத்தறை தொடக்கம் அக்குறசா வரை இரும்புத் தாதுப் படிவுகள் உள்ளன. சிறியளவில் (ருவென்வெல) கண்டி, மாத் தளை, சிலாபம் ஆகியவிடங்களில் கிடைக்கின்றது. இப்படிவுகளின் அளவு சுமார் 65 இலட்சம் தொன் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் வடபகுதியிலும் வடமேல் பகுதிக் கரைகளிலும் நிலநெய் இருப்பதாக அண்மைக்கால ஆராய்ச்சிகளில் இருந்து தெரிய வருகிறது.

## உப்பு

உப்பு உற்பத்தியைப் பொறுத்தளவில் இலங்கை பூரண விருத்தியடைந்துள்ளது என்று கூறலாம். உப்பு உற்பத்திக்குச் சில புவியியல் நிலைமைகள் சாதகமாக இருக்க வேண்டும். அவையாவன:

(அ) கடல்நீர் தேவை.

(ஆ) மழைகுறைந்த, அதிக வெப்பநிலையுடைய பகுதி தேவை.

(இ) அதிக சூரியஒளியும் ஆவியாகுதலும் தேவை.

கடல்நீரிலிருந்தே உப்புப் பெறப்படுகின்றது. கடல்நீர் உவர்த்தன்மையது. எமது இலங்கையைச்சூழ்ந்து கடல் இருப்பதால் உப்புச் செய்கை இலகுவானதாக இருக்கின்றது. உப்புச் செய்கைக்கு வரண்ட காலநிலைதேவை. ஏனெனில், கடல்நீரை ஆவியாக மாற்றி, உப்பைப் பெறுவதற்காகும். கடல்நீரை உலர்த்துவதாலேயே உப்புப் பெறப்படுகின்றது. வரண்ட காற்றால் நீர் ஆவியாக மாற்றப்படும். அதனால், கடல்நீரில் உள்ள நீர் ஆவியாக மாற, உப்பு கீழே படியும். இலங்கையின் வரண்டபிரதேசம் இதற்கு மிக ஏற்றதாக இருக்கின்றது. அதனாலேயே இலங்கையின் பிரதான உப்பளங்கள் வரண்ட பிரதேசத்தில் அமைந்துள்ளன.

வரண்ட பிரதேசத்தின் கடற்கரைப் பிரதேசங்கள் ஆழமற்ற பள்ளங்களில் கடல்நீர் தேக்கமுறச் செய்யப்படும்; அப்பள்ளங்கள் பாத்திபாத்திகளாக (தட்டுத்தட்டாக)க் கட்டப்பட்டிருக்கும். இவற்றை உப்பளங்கள் என வழங்குவர். உப்பளப் பாத்திகள் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு பாத்திகளிலும் விழும் சூரிய ஒளியாலும் காற்றாலும் நீர் ஆவியாக மாறுகிறது. நீர் ஆவியாக ஒரு பாத்தியிலுள்ள நீரின் உவர்த்தன்மை கூடும். உவர்த்தன்மை அளவிற்கு இணங்க அந்த நீர் ஒவ்வொரு பாத்திகளாக மாற்றப்படும். கடைசிப் பாத்தியில் முழுநீரும் ஆவியாக மாறிவிட, அங்கு உப்புப்பளிங்குகள் படிந்திருக்கும். அவற்றைச் சேகரித்து வைப்பார்கள்.

இலங்கையில் உப்புச்செய்கை அம்பாந்தோட்டை, ஆனையிறவு, புத்தளம் எனும் பகுதிகளில் நன்கு நடைபெற்று வருகின்றது. திருகோணமலைக்கு அண்மையிலுள்ள நிலாவெளியிலும் உப்பு விளைவிக்கப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் கல்லுண்டாய் எனுமிடத்தில் புதிதாக ஒருசிறு உப்பளம் தொடங்கப்பட்டுள்ளது.

உப்புச்செய்கையை அரசாங்கக் கூட்டுத் தாபனம் ஒன்றே நடாத்திவருகின்றது. தனிப்பட்டவர்கள் உப்பை விளைவிக்க முடியாது. இலங்கைக்கு வருடாவருடம் 75,000 தொன் உப்புத் தேவைப்படுகின்றது. அதில் பெரும்பாகத்தை நாமே உற்பத்தி செய்துகொள்கின்றோம்.

உப்பிலிருந்து வேறுபல உபபொருட்கள் பெறப்படுகின்றன. விவசாயத்திற்கு உரம் பெறப்படுகின்றது. சீமேந்து செய்வதற்கு சிலாசத்து உற்பத்தி செய்யப்படுகின்றது. நீரைச் சுத்திகரிப்பதற்குக் குளோரின் பெறப்படுகின்றது. வேறுபல இரசாயனப் பொருட்களும் பெறப்படுகின்றன. ஆனையிறவு உப்பளத்தை அடுத்துப் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை அமைந்திருப்பது அதனாலேயே. இரசாயனத் தொழிலுக்கு உப்பு பிரதான மூலப்பொருளாகும்.

அத்தியாயம்: **9**

# இலங்கையின் கைத்தொழில்கள்

இலங்கை பொருளாதார முன்னேற்றமடையாத 'குறைவிருத்தி நாடாகும்'. அதிகரித்துவரும் மக்கள் தொகைக்கும் அதிகரித்துவிட்ட மக்கள் தொகைக்கும் உணவு அளிக்கப் பயிர்ச்செய்கையை விருத்தி செய்கின்ற அதே வேளையில் அம்மக்களுக்கு வேலைகொடுக்கக் கைத் தொழில்களையும் விருத்தி செய்யவும், புதிதாக நிறுவவும் வேண்டியுள்ளது.

இன்று இலங்கையின் பொருளாதார உயிர்நாடி தேயிலை, றப்பர், தெங்குப் பொருட்களின் ஏற்றுமதியில் தங்கியுள்ளது. இப்பொருட்களுக்கு உலகச் சந்தையில் இருக்கும் இடம் என்றும் நிரந்தரமானதாகக் காணப்படவில்லை. ஏனைய நாடுகளின் போட்டியும், பதிற் பொருட்களின் போட்டியும், இலங்கையின் தேயிலை, றப்பர் என்னும் வர்த்தகப் பொருட்களுக்கு நிரந்தரமானவிடத்தை அளிக்க விடாது தடுக்கின்றன. சர்வதேச வர்த்தகத்தில் இவற்றினது நிரந்தரமற்ற தழம்புநிலை ஒரு காலத்தில் திடீரென இலங்கையின் பொருளாதார வீழ்ச்சியாக அமையலாம். அத்தகைய ஒரு பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டாலும், பாதிப்புறுது, இலங்கையின் பொருளாதார நிலை அமையக் கைத்தொழிலாக்கங்கள் இலங்கைக்கு அவசியமாகும்.


இலங்கையில் இன்று காணப்படுகின்ற கைத்தொழில்களை மூன்று பிரிவுகளாக வகுக்கலாம். அவையாவன:

1. குடிசைக் கைத்தொழில்
2. தொழில் நிலைய அல்லது வேலைத்தளக் கைத்தொழில்
3. தொழிற்சாலைக் கைத்தொழில்

## குடிசைக் கைத்தொழில்

குடிசைக் கைத்தொழில் என்பது, ஒரு குடும்ப அங்கத்தினரால் தம் வீட்டிலிருந்து, சூழலில் பெறக்கூடிய மூலப் பொருட்களைக் கொண்டு பொருட்களை உற்பத்தி செய்வதாகும். குடிசைக் கைத் தொழிலில் யந்திர உபயோகமில்லை; கட்டுப்பாடுமில்லை. களுத்துறையில் 'இண்டி' எனும் ஒருவகை ஈச்சமரத்தின் இலையை உபயோகித்துக் கடகங்கள், பெட்டிகள், தொப்பிகள் இழைக்கின்றனர். பாணந்

துறையிலும், மட்டக்களப்பிலும் புல்லினங்களையும், யாழ்ப்பாணக் குடாநாட்டில் பனை ஓலையையும் உபயோகித்துப் பாய் முதலியன இழைக்கின்றனர். கண்டியில் கித்துள் பனங்கட்டியும், பித்தளைப் பாத்திரங்களும் செய்யப்படுகின்றன. காலியில் ஆமையோட்டை உபயோகித்து அணிகள் செய்கின்றனர். யாழ்ப்பாணத்தில் சீமேந்து வெற்றுப் பைகளைப் பயன்படுத்தி சாமான்கள் போட்டுக் கொடுக்கும் உறைகள் செய்கின்றனர். நெடுந்தீவு, சாவகச்சேரி என்பனவற்றில் வெங்காயக் கூடை பின்னுகின்றனர். இவற்றையெல்லாம் குடிசைக் கைத்தொழில்கள் என்ற பிரிவினுக்குள் அடக்கலாம்.




படம்: 23 இலங்கையின் பிரதான கைத்தொழில் நிலையங்கள்.

## வேலைத்தளக் கைத்தொழில்

தொழிலாளர்கள் பலரினுதவியுடன் சிறிதளவு யந்திரங்களை உபயோகித்து, சிறியளவில் நடைபெறும் கைத்தொழில்களைத் தொழில் நிலைய அல்லது பட்டறைக் கைத்தொழில்கள் எனலாம். பெனியன்

கள், சேட்டுகள், பீயர் குடிவகைகள், தீப்பெட்டிகள், சவர்க்காரங் கள், பிஸ்கோத்துக்கள், இனிப்புக்கள், வீட்டுத் தளபாடங்கள், செங் கல், ஓடு, கயிறு முதலியன உற்பத்தி செய்யப்படும் கைத்தொழில் கள் இதனுளடங்கும். கொழும்பு, யாழ்ப்பாணம், கண்டி, காலி முத லிய நகரமையங்களில் இவ்வகைக் கைத்தொழில்கள் அதிகமாக அமைந்துள்ளன. இன்று யாழ்ப்பாணக் குடாநாட்டில் இயங்கிவரும் சுருட்டுக் கைத்தொழிலைக் குடிசைக் கைத்தொழில் பிரிவிலடக்கிவிட முடியாது; அது தொழில் நிலையக் கைத்தொழிலே.

## தொழிற்சாலைக் கைத்தொழில்

இலங்கையின் தொழிற்சாலைக் கைத்தொழில்கள் என காங் கேசந்துறையிலுள்ள சீமேந்துத் தொழிற்சாலையையும், ஜின்தோட் டையிலுள்ள ஒட்டுப்பலகைத் தொழிற்சாலையையும், வாழைச்சேனை யிலுள்ள காகிதத் தொழிற்சாலையையும், மட்டக்குளியாவிலுள்ள தோல் தொழிற்சாலையையும், கல்லோயாவிலும், கந்தளாயிலுமுள்ள சீனித் தொழிற்சாலைகளையும், பரந்தனிலுள்ள இரசாயனத் தொழிற் சாலையையும் குறிப்பிடலாம்.

எந்த ஒரு நாட்டிலும் கைத்தொழிலை நிறுவுவதற்குச் சில ஏற்ற ஏதுக்கள் அமைந்திருக்கவேண்டும்; ஓரிடத்தில் கைத்தொழிலை நிறுவ மூலப்பொருட்கள், வலு, போக்குவரத்து வசதிகள், தொழிலாளர் வசதி, முதல், சந்தை, ஏற்ற பௌதிகத் தன்மைகள் என்பன சாதக மாகக் காணப்படவேண்டும். இலங்கையைப் பொறுத்தமட்டில் கைத் தொழிலிற்குத் தேவையான அடிப்படை நிலைமைகளுள் சில இல்லை என்பதுண்மையே, இலங்கையில் கனரகத் தொழிலைச் செய்வதற்கு அத்தியாவசியமான நிலக்கரியில்லை; நிலக்கரி இல்லாமையினால் இருக் கும் சிறிதளவு இரும்புத் தாதையும் உபயோகிக்க முடியாதுள்ளது. நிலக்கரி போன்ற வலுப்பொருளோ இலங்கையிலில்லை. நீர்மின் வலு விருத்தியும் குறைவாகவுள்ளது; ஏனைய கைத்தொழில் நாடு களில் இருப்பதுபோல், திறமையுள்ள தொழிலாளர் இலங்கையி லில்லை. போக்குவரத்து வசதிகளும் நாட்டின் பல பாகங்களுக்கும் தேவைப்படுகின்றன. இலங்கையின் மூலதனம் பெருமளவில் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளிலேயே முதலீடு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கம் அண்மைக் காலத்தில் கைத்தொழில் விருத் தியில் கூடியளவு கவனம் செலுத்தி வருகின்றது. தனியார் கைத் தொழில்கள் தவிர்ந்த அரசினர் கைத்தொழில்கள் யாவும் கூட்டுத் தாபனங்களினால் இயக்கப்பட்டு வருகின்றன. இந்த அரசாங்கக் கூட் டுத்தாபனங்கள் கைத்தொழில் விருத்திக்குரிய வழிவகைகளைக் கையாண்டு வருகின்றன. இலங்கைச் சீமேந்துக் கூட்டுத்தாபனம், வனை தற்பொருட் கூட்டுத்தாபனம், தேசிய நெசவுக் கூட்டுத்தாபனம்,

கந்தளாய் சீனிக் கூட்டுத்தாபனம், பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம், தேசிய சிறுதொழிற் கூட்டுத்தாபனம், இரும்புருக்குக் கூட்டுத்தாபனம் என்பன அவற்றுட் சிலவாம்.

## சீமேந்துக் கைத்தொழில்

காங்கேசன்துறையில் இயங்கிவரும் சீமேந்துத் தொழிற்சாலை இலங்கையின் உன்னதமான தொழிற்சாலையாகும். இங்கு முதன்முதல் இது 1950ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இப்போது இத்தொழில் 1959இல் நிறுவப்பட்ட சீமேந்துக் கூட்டுத்தாபனத்தின் கீழ் இயங்கி வருகின்றது.

சீமேந்து செய்வதற்கு நான்கு மூலப்பொருட்கள் தேவை. அவை சுண்ணக்கல், களிமண், கிப்சம் என்ற சிலாசத்து, வலு என்பனவாம். யாழ்ப்பாணக் குடாநாடு சுண்ணும்புக்கற் பிரதேசமாகும். காங்கேசன்துறைப் பகுதியை அடுத்துச் சுண்ணக்கல் நிலத்தின் மேற்படையில் வெளியே அரும்பிக் காணப்படுகிறது. அதனால் எளிதில் சுண்ணக்கல்லைப் பெற முடிகின்றது. காங்கேசன்துறையில் இத் தொழிற்சாலை அமைந்தமைக்கு முதற்காரணம் இங்கு சுண்ணக்கல் காணப்பட்டமையேயாகும். சீமேந்து செய்வதற்குத் தேவையான களிமண் மன்னாரிலுள்ள முருங்கன் எனுமிடத்தில் பெறப்படுகின்றது. இது புகையிரத மூலம் காங்கேசன்துறைக்குக் கொண்டுவரப்படுகின்றது. கிப்சம் என்ற சிலாசத்து ஒருவகை உப்பாகும். இது எகிப்து, சைபிரஸ் எனும் நாடுகளில் இருந்து இறக்குமதியாகின்றது. சிலாசத்தையும் நமது நாட்டு உப்பளங்களில் விரைவில் தயாரித்துப் பெறலாம் என நம்பப்படுகின்றது. சீமேந்துத் தொழிற்சாலைக்குத் தேவையான மின்வலு $1\frac{1}{2}$ மைல் தூரத்திலிருக்கும் மின்வலு நிலையத்தில் இருந்து கிடைக்கின்றது.


சுண்ணக்கல்லும் களிமண்ணும் யந்திரம் ஒன்றினால் முதலில் மாவாக அரைக்கப்படுகின்றன. அதன்பின் இம்மா கட்டியாக்கப்படுகின்றது. இம்மா உலர்ந்த கருநிற மண்போலக் காணப்படும். இதனுடன் சிறு கற்களும் காணப்படும். அடுத்து சிறிது கிப்சம் சேர்க்கப்படும். பின்பு யாவும் மாவாக யந்திரத்தினால் அரைக்கப்படும். இதுவே சீமேந்து ஆகும். இதனை உறைகளுள் இட்டு அடைப்பர். இவை யாவும் யந்திரத்தினாலேயே நிகழுகின்றன.

காங்கேசன்துறைத் தொழிற்சாலை நாளொன்றிற்கு 225 தொன் சீமேந்தை உற்பத்தி செய்கின்றது. இது நமது நாட்டிற்குத் தேவையான சீமேந்தில் $\frac{1}{4}$ பங்காகும். காங்கேசன்துறைத் தொழிற்சாலையைப் பெருப்பித்து உற்பத்தியைக் கூட்டுவதற்கு அரசு முயன்று வருகின்றது. அதன்பேறாகக் காங்கேசன்துறையில் புதிதாக ஒரு சூளை அமைக்கப்பட்டுள்ளது.

நமது நாட்டின் உள்ளூர்ச் சீமேந்துத் தேவை அதிகமாகும். அதனால், காலி, புத்தளம் ஆகிய இரு இடங்களிலும் இரு சீமேந்து ஆலைகள் இன்று அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன. காலியிலுள்ள சீமேந்துத் தொழிற்சாலை 'உறுகுணு சீமேந்து' என்ற பெயரில் சீமேந்தை உற்பத்தி செய்கின்றது. காலியிலுள்ள தொழிற்சாலை, காங்கேசன்துறை ஆலையைப்போன்று பூரணமான ஆலையன்று. காலித் தொழிற்சாலை, காங்கேசன்துறையிலிருந்து பெறப்படும் கிளிங்கர் (Clinker) எனும் சீமேந்து மாக்கட்டிக் களியை அரைத்து, உறைகளுள் அடைத்து வருகின்றது.

புத்தளத்தில் பாலாவி எனுமிடத்தில் புதிய சீமேந்துத் தொழிற்சாலை அமைந்துள்ளது. இத்தொழிற்சாலைக்குத் தேவையான சுண்ணக்கல், களி என்பன இத்தொழிற்சாலைக்கு அண்மையிலேயே காணப்படுகின்றன. இத்தொழிற்சாலைக்குத் தேவையான சுண்ணக்கல் அரவக்காடு எனுமிடத்திலும், களி காலஓயா நதியை அடுத்து இலவங்குளம் எனுமிடத்திலும் காணப்படுகின்றன.

இலங்கையின் இம்மூன்று சீமேந்து ஆலைகளும் நமது நாட்டின் தேவையில் 50 சதவீதத்தையே பூர்த்தி செய்கின்றன.




படம்: 24 சீமேந்துத் தொழிற்சாலைகளின் நிலையமும் புகையிரதப் பாதைகளும்

## ஓட்டுப்பலகைத் தொழிற்சாலை

இலங்கையின் ஓட்டுப்பலகைத் தொழிற்சாலை ஜின்தோட்டையில் அமைந்துள்ளது. இத் தொழிற்சாலை 1949-ஆம் ஆண்டு நிறுவப்பட்

டது. தேயிலை ஏற்றுமதி செய்வதற்குத் தேவையான பெட்டிகளைச் செய்வதே இத்தொழிற்சாலையின் நோக்கமாக இருந்தது. ஆரம்பத்தில் இலங்கைக்குத் தேவையாகவிருந்த தேயிலைப் பெட்டிகளுள் $\frac{1}{10}$ பங்கை இத்தொழிற்சாலை உற்பத்தி செய்தது. ஆனால், வெளிநாட்டுப் போட்டியும், மரங்கள் நன்கு பயன்படுத்தப்படாது வீணக்கப்பட்டதும், திருப்திகரமான பசை கிடைக்காமற் போனதும் நட்டத்தை ஏற்படுத்தின. அதனால் 1953-இல் கைத்தொழில் உற்பத்திப் பொருட்களுக்கான சட்டத்தின்படி 5 தேயிலைப் பெட்டிகளை இறக்குமதி செய்யும்போது, ஒரு பெட்டியை இத்தொழிற்சாலையிலிருந்து வாங்கவேண்டும் என்று சட்டம் விதிக்கப்பட்டது. இத்தொழிற்சாலை உற்பத்தி செய்யுமளவை வருடம் ஒன்றிற்கு 60,000,00 சதுர அடியாக்குவதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.

ஒட்டுப்பலகைத் தொழிற்சாலை அண்மையாண்டுகளில் வேறுபல பொருட்களையும் உற்பத்திசெய்து வருகின்றது. ஒட்டுப்பலகைக் கதவுகள், சட்டங்கள், மேசைகள் என்பன உற்பத்தியாகி வருகின்றன.

## தோல் தொழிற்சாலை

இத் தொழிற்சாலை மட்டக்குளியாவில் இருக்கின்றது. மாதந்தோறும் சராசரியாக 5500 மாடுகளினதும், 5000 ஆடுகளினதும், 100 எருமைகளினதும் தோல்கள் பதனிடப்படுகின்றன. உள்நாட்டிலிருந்து கிடைக்கும் தோல்கள் குறைந்த தரமானவையாகவுள்ளன. தோல் பதனிடும் வேலை 16 தனிப்பட்டவர்களின் பதனிடும் நிலையங்களிலும், ஓர் அரசாங்கத் தொழிற்சாலையிலும் நடைபெறுகின்றது.

அரசாங்கத் தொழிற்சாலையிலிருந்து கிடைக்கும் தோல்கள், சப்பாத்துக்கள், செருப்புகள், உடுப்புப் பெட்டிகள் முதலியன செய்வதற்கு உபயோகிக்கப்படுகின்றன; மேலதிகமாக மிஞ்சும் தோல்கள் பிரித்தானியாவிற்கு ஏற்றுமதியாகின்றன.

இலங்கை மக்களுக்கு 4,50,000 சோடி சப்பாத்துக்கள் வருடா வருடம் தேவைப்படுகின்றன; இத்தொழிற்சாலை 1,00,000 சோடி சப்பாத்துக்களையே இன்று உற்பத்தி செய்கின்றது. அத்தோடு ஏறத்தாழ 2,85,000 இருத்தல் தோலையும் வருடாவருடம் பதனிட்டு வருகின்றது.

## காகிதத் தொழிற்சாலை

காகிதத் தொழிற்சாலை வாழைச்சேனையில் அமைந்திருக்கின்றது. இத்தொழிற்சாலைக்குத் தேவையான வைக்கோலும், இலுக்புல்லும் தேவையானவளவு சுற்றுடலிலேயே கிடைக்கின்றது. இத் தொழிற்

சாலைக்குத் தேவையான இலுக்புல், தொழிற்சாலையிலிருந்து 15 மைல்கள் தூரத்திலுள்ள புஞனை எனுமிடத்தில் பயிரிடப்படுகின்றது. 4000 தொன் காகிதம் உற்பத்திசெய்ய 5000 தொன் இலுக்புல்லும், 5000 தொன் வைக்கோலும் தேவைப்படுகின்றது.

காகித இறக்குமதி கணிசமானவளவு கட்டுப் படுத்தப்பட்டிருப்பதால், வாழைச்சேனைக் காகிதத் தொழிற்சாலையின் உற்பத்தி அதிகரித்திருக்கின்றது. 'நியூஸ்பிரின்ற்' பேப்பர், 'கிளேஸ் பேப்பர்' 'காட்போட்' மட்டைகள் முதலாய பல்வகைப் பேப்பர் வகைகளோடு, பல்வகையான கொப்பிகளும் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

## சீனித் தொழிற்சாலைகள்

கல்லோயாவில் (அம்பாறையில்) முதலாவது சீனித் தொழிற்சாலை அமைந்துள்ளது. 10,000 ஏக்கர்ப் பிரதேசம் இங்கு கரும்புச் செய்கைக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இங்கு வருடமொன்றிற்கு 2500 தொன் சீனியும், 2000 தொன் வெல்லமும் உற்பத்தி செய்யப்படுகின்றன. கந்தளாயில் இரண்டாவது சீனித் தொழிற்சாலை இயங்க ஆரம்பித்துள்ளது. இங்கு 1000 ஏக்கருக்குமேல் கரும்புச் செய்கை நடைபெறுகின்றது. வருடம் 1000 தொன்வரை சீனி உற்பத்தி செய்கிறது. அத்தோடு 800 தொன் வெல்லமும் உற்பத்தி செய்கின்றது. அரசாங்கம் இவ்விரு சீனித் தொழிற்சாலைகளைவிட, இன்னும் 3 தொழிற்சாலைகளை நிறுவத் திட்டமிட்டுள்ளது. அதில் இன்றைன்று கந்தளாயிலும், இரண்டு வளவையிலும் நிறுவ முடிவு செய்துள்ளது.

இலங்கையின் சீனி உற்பத்தி இலாபகரமான தொழிலாக இல்லை. ஏனெனில், போதியளவு கரும்பின்மையும் உற்பத்திச் செலவின் அதிகரிப்புமாகும். இலங்கைக் கமக்காரர் கருப்பஞ் செய்கையில் கூடியளவு நாட்டமுடையவர்களாக இல்லை.


## இரசாயனத் தொழிற்சாலை

இலங்கையின் இரசாயனத் தொழிற்சாலை பரந்தனில் அமைந்திருக்கின்றது. இது 1956 இல் நிறுவப்பட்டது. இத்தொழிற்சாலைக்கு அடிப்படையாக அமைவது உப்பாகும். இது அண்மையிலுள்ள ஆனையிறவிலிருந்து கிடைக்கின்றது. காஸ்ரிக் சோடா, குளோரின், டி. டி. ரி. முதலியன இத் தொழிற்சாலையில் உற்பத்தியாகின்றன.

## இரும்புருக்குத் தொழிற்சாலை

இலங்கையில் இரும்புருக்குத் தொழிலை விருத்தி செய்யும் நோக்கமாக அரசாங்கம் ஒருவெல எனுமிடத்தில், சோவியத் சமவுடைமைக்

குடியரசின் தொழில் நுட்ப உதவியுடன் இரும்புருக்குத் தொழிற்சாலை ஒன்றை நிறுவியுள்ளது. ஏறத்தாழ 12 கோடி மூலதனத்துடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள இத்தொழிற்சாலையில் ஆணிகள், உருக்குக் குழாய்கள், இரும்புத்தகடுகள், வலைகள் முதலியன உற்பத்தியாகின்றன. இத்தொழிற்சாலையின் ஆண்டு உற்பத்தி சராசரி 60,000 தொன்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.




படம்: 25 ஒருவெல உருக்காலை அமைந்துள்ள நிலையம்

ஒருவெல இரும்புருக்காலை 307 ஏக்கர் நிலத்தில் அமைந்துள்ளது. இந்த ஆலைக்குத் தேவையான இரும்புத்தாதுப் படிவுகள் இவ்வாலையின் சுற்றுடலில் காணப்படுகின்றன. தெலா, சுகாவத்தை, காலவானு, றக்வாகனே, எகிலியக்கொடை, அம்பலாங்கொடை, அக்குறச-தெனியாய, தம்பகண்டா முதலிய பகுதிகளில் இரும்புத்தாதுப் படிவுகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது. இரும்புத்தாதை உருக்குவதற்குப் போதிய நிலக்கரி இலங்கையிலில்லை, அதனால், ஒருவெல உருக்காலைக்குத் தேவையான வலு, நோட்டனிலிருந்து பெறப்படும் நீர்மின் வலுவாகும்.

## மட்பாண்டத் தொழிற்சாலைகள்

பீங்கான் கோப்பைகள், மலசலகூடக் கோப்பைகள், மட்பாண்டங்கள் முதலியன இலங்கையிலுள்ள மட்பாண்ட ஆலைகளில் உற்பத்தியாகின்றன. நீர்கொழும்பில் பிரதான மட்பாண்டத் தொழிற்சாலை அமைந்திருக்கின்றது. பிலியன்தல எனுமிடத்தில் ஓர் ஆலையும், பொரலஸ்கமுவ எனுமிடத்தில் வெண்களியை (கயோலின்)

துப்பரவாக்கும் ஆலையும் காணப்படுகின்றன. இந்த ஆலைகளுக்குத் தேவையான மூலப்பொருட்கள் வெண்களி, (Koalin) படிகம் (Quartz). களிக்கல் (Felspar) என்பனவாகும். வெண்களி இலங்கையின் தென்மேல் கரையோரத்தில் போதுமான அளவு இருக்கின்றது. படிகமும், களிக்கல்லும் இரத்தினபுரி, எலகெரா எனும் பகுதிகளில் நல்லதரத்தில் ஏராளமாக உள்ளன.

நீர்கொழும்பு மட்பாண்ட ஆலை வீட்டுத் தேவைகளுக்கான பீங்கான் பொருட்களை உற்பத்தி செய்து வருகின்றது. பிலியந்தல மட்பாண்ட ஆலை மலசலகூடங்களுக்கான குந்து சட்டிகள் (Squatting pans), குழாய்கள், கழுவு சட்டிகள் (Wash basins) முதலியனவற்றை உற்பத்தி செய்து வருகின்றது. இந்த இரு ஆலைகளுக்குந் தேவையான வெண்களியை பொரலஸ்கமுவ வெண்களி துப்பரவாக்கும் ஆலை வழங்கி வருகின்றது.

இலங்கையின் மட்பாண்டத் தொழிலில் ஓடுகள், செங்கட்டிகள் என்பனவும் முக்கியமான உற்பத்திப் பொருட்களாகும். ஓடுகள் தயாரிப்பதற்கென பல ஆலைகள் நாட்டின் சில பகுதிகளில் நிறுவப்பட்டிருக்கின்றன. அநுராதபுரம், முல்லைத்தீவு, வங்கதெனியா, யட்டியானை, அம்பாறை முதலிய இடங்களில் ஓட்டுத் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

## நெசவுத் தொழிற்சாலைகள்

நெசவுத் தொழிலைப் பொறுத்தமட்டில் இலங்கையில் நல்ல விருத்தி காணப்படுகின்றது. கைத்தறிகள், யந்திரத்தறிகள், நெசவு ஆலைகள் என்பன இன்று நெசவுப் பொருட்களை உற்பத்தி செய்து வருகின்றன. இரத்தினபுரி, மாத்தறை, கண்டி, கொழும்பு, யாழ்ப்பாணம், காலி முதலிய மாவட்டங்களில் சிறிய நெசவாலைகள் பல விருத்தியுற்று இயங்கி வருகின்றன. அரசாங்கத்துக்குச் சொந்தமான இரு பெரிய ஆலைகள் வியாங்கொடை, துல்கிரியா எனுமிடங்களில் அமைந்துள்ளன. வெள்ளவத்தையிலும் ஓர் நெசவாலை உள்ளது. இவ்வாலைகள் நெசவுநூல், பப்பிளின், சீத்தை, படுக்கை விரிப்புகள் முதலியனவற்றை உற்பத்தி செய்து வருகின்றன.

ஆடை உற்பத்தியைப் பொறுத்தமட்டில் ஏற்றுமதி செய்யும் தரத்திற்கும் அளவிற்கும் இலங்கை முன்னேறியுள்ளது. சேட்டுகள், பெனியன்கள், பெண்களின் உடைகள் என்பன தயாரிக்கும் ஆலைகள் மகரகம, கோறள, கொழும்பு, யாழ்ப்பாணம் முதலிய இடங்களில் காணப்படுகின்றன.

## ஏனைய தொழிற்சாலைகள்

இலங்கையில் படிகமணல் ஏராளமாக இருந்தும் கண்ணாடி உற்பத்தி விருத்தியுறவில்லை. நாத்தாண்டியா, உப்புவெளி எனுமிரு இடங்களில் இரு சிறிய கண்ணாடித் தொழிற்சாலைகள் அமைந்துள்ளன.

○ களனி எனுமிடத்தில் இலங்கையின் முதலாவது ரயர் உற்பத்தித்தொழிற்சாலை நிறுவப்பட்டு இயங்கி வருகின்றது. நமது நாட்டின் றப்பரை மூலப்பொருளாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள இத்தொழிற்சாலை, இலங்கையின் ரயர் தேவையைப் பூர்த்தி செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. நேபோட எனுமிடத்தில் சைக்கில் ரயர், ரியூப் உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றுளது.

○ இலங்கையில் பல்வகைக் குடிவகைகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. களுத்துறை, பய்யகல, சிடுவா, அம்பாறை எனுமிடங்களில் சாராயம் உற்பத்தி செய்யும் ஆலைகள் உள்ளன. பியர், ஸ்ரவுட், குடிவகைகள் நுவரெலியாவிலும், ஜின், பிரண்டி என்பன கல்லோயாவிலும் உற்பத்தியாகின்றன.

○ கொழும்பு, கண்டி, பண்டாரவளை, களனியா, யாழ்ப்பாணம், மாத்தளை எனுமிடங்களில் சொக்கிலேட் தயாரிக்கும் ஆலைகளும், தெகிவளை, இரத்மலானை எனுமிடங்களில் 'பிஸ்கட்' தயாரிக்கும் ஆலைகளுமுள்ளன.

○ காலி, திவுலுப்பிட்டியா, எனுமிடங்களில் நெருப்புப்பெட்டி தயாரிக்கும் ஆலைகள் இருக்கின்றன.

○ கார் பற்றறிகள், றேடியோ பற்றறிகள், ரோச் பற்றறிகள் என்பன தயாரிக்கும் ஆலைகள் இரத்மலானை, கோமகம எனுமிடங்களில் இயங்கி வருகின்றன. ரேடியோக்கள், விசிறிகள், குளிர்சாதனப் பெட்டிகள், மின்சார உபகரணங்கள் என்பன தயாரிக்கும் ஆலைகள் கொழும்பிலுள்ளன.

○ கொழும்பில் சிகரெட்டுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. பென்சில் உற்பத்தி ஆலை பீலியகொடையில் உள்ளது. யாஎலவில் பசளை உற்பத்தித் தொழிற்சாலை இயங்கி வருகின்றது. புல்மோட்டையில் இல்மனையிட் மணலைத் துப்பரவாக்கும் ஆலை இருக்கின்றது. பிளாஸ்ரிக் பொருட்கள் இரத்மலானை, கொழும்பு எனும் நகர்களில் உற்பத்தியாகின்றன.

○ யாஎல எனும் நகரத்திற்கு அண்மையிலுள்ள எக்கல எனுமிடத்தில் ஒரு கைத்தொழில் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது; இந்நிலையத்தில், 20 தொழிற்பிரிவுகள் உள்ளன. தீந்தை, தோற்பெட்டிகள், பிளாஸ்ரிக் பொருட்கள், சப்பாத்துக்கள் முதலியன இத்தொழில் நிலையத்தில் உற்பத்தியாகின்றன.

இலங்கையின் கைத்தொழில் ஆக்கங்களை எதிர்நோக்கியுள்ள பிரச்சனைகளாக மூலதனக் குறைவு, மூலப் பொருட்களின் குறைவு, செல்வு கூடிய போக்குவரத்தும் வசதியின்மையும் வலுக்குறைவு, தொழிலாளரின் திறமைக்குறைவும் வேலைநிறுத்தங்களும், நிர்வாகத்

திறமையின்மை, தொழில் நுட்பத் திறமையின்மை, போதிய சந்தைகளின்மை என்பன காணப்படுகின்றன. இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவேண்டியது அரசாங்கத்தின் கடமை.

## உல்லாசப்பிரயாணக் கைத்தொழில்

இலங்கை இயற்கை எழில் நிறைந்த நாடாகும். காண்போர் சிந்தையைக் கொள்ளைகொள்ளும் அழகுமிக்க மலைப்பகுதிகளும், கடற்கரையோரங்களும் இலங்கையிலுள்ளன. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கட்டிடங்களும், மலர்கள் நிறைந்த பூங்காக்களும் இங்குள்ளன. அதனாற்றான் இலங்கைக்கு முன்பு வந்த மேல்நாட்டார், இலங்கையை 'இந்துசமுத்திரத்திலுள்ள முத்து' என்று புகழ்ந்து கூறினர். மேல்நாட்டாரைக் கவர்ந்து இழுக்கக்கூடிய எழிற் காட்சிகள் இலங்கையிலுள்ளன. எனினும், உல்லாசப் பிரயாணிகளை நல்லமுறையில் வரவேற்று, வருவாய் பெறுவதில் இலங்கை பின்தங்கியே இருக்கின்றது.

உல்லாசப் பிரயாணிகள் வருடாவருடம் இலங்கைக்கு வருவதால் இலங்கை சிறிதளவு வருவாயைப் பெறுகின்றது. ஆனால் சுவிற்சலாந்து நாடுபோல கூடியளவு வருவாயைப் பெறுவது கிடையாது. உல்லாசப் பிரயாணத்தை வருவாய்தரும் ஒரு கைத்தொழிலாக இன்று அரசாங்கம் முடிவுசெய்து, இக் கைத்தொழிலை விருத்தி செய்வதற்குப் பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அதன்பயனாக உல்லாசப் பிரயாணசபை ஒன்றும் ஹோட்டல் கூட்டுத்தாபனம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளன.

உல்லாசப் பிரயாணசபை இலங்கையின் எழிற் காட்சிகளை வெளிநாடுகளில் விளம்பரங்கள் செய்து, வெளிநாட்டினரை உல்லாசப் பிரயாணத்திற்காக இலங்கை வரும்படி கவர்ந்து இழுக்கும். அத்துடன் இலங்கையில் வெளிநாட்டினரைக் கவரக்கூடியதாக கடற்கரைகளையும் பூங்காக்களையும் அமைக்கும். அத்துடன் உல்லாசப்பிரயாணிகள் இலங்கையில் பார்க்கக்கூடிய காட்சிகளைக் கைந்நூல்களாக வெளியிடும். ஹோட்டல் கூட்டுத்தாபனம் நாடெங்கும் வெளிநாட்டினர் விரும்பித் தங்கக்கூடிய நவீன வசதிகள் அமைந்த ஹோட்டல்களை அமைக்கும்.

இத்தகைய நடவடிக்கைகள் காரணமாக உல்லாசப்பிரயாணக் கைத்தொழில் வருவாய் தரும் ஒரு தொழிலாக மாறவுள்ளது. இதனால் நாட்டிற்குக் கிடைக்கும் 'கட்புலனாகாத வருவாய்' நாட்டின் விருத்திக்கு உதவும் என நம்பலாம்.

அத்தியாயம்: **10**

# விலங்கு வேளாண்மை

நமது உணவில் பால், இறைச்சி, முட்டை எனும் புரதம் நிறைந்த உணவுகள் அத்தியாவசியமானவை. இவ்வுணவுகளை விலங்கு வேளாண்மை மூலமே நாம் பெற்றுக்கொள்ள முடியும். ஆதி காலத்திலிருந்தே நமது நாடு மாடுகள், ஆடுகள், கோழிகள் எனும் விலங்குகளை வளர்த்து வருகின்றது. ஆனல், அவற்றினல் கிடைக்கின்ற பலன் மிகக் குறைவாகும். இவ்விலங்குகள் தனித்தனியே வீடுகளில் வளர்க்கப்படுவனவாயும், சிறந்த தரமற்றனவாயும் விளங்குவதால், விலங்கு வேளாண்மையில் சிறப்புற்றிருக்கும் நாடுகள் அடைகின்ற வருவாயை, இவற்றில் இருந்து பெறமுடியவில்லை. அதனல், ஒவ்வொரு ஆண்டும் ஏறத்தாழ 24 கோடி இருத்தல் பாற்பொருட்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன.

இலங்கையிலேயே விலங்கு வேளாண்மையை விருத்தி செய்வதன் மூலம், பாற்பொருட்களில் தன்னிறைவு அடைய அண்மைக்காலத்தில் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன; அரசாங்கக்கமத்தொழிற்றிணைக்களம் விலங்கு வேளாண்மை விருத்தியில் கூடியளவு கவனம் செலுத்திவருகின்றது. விலங்கு வேளாண்மை விருத்திக்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் வருமாறு:

(அ) இலங்கையில் விலங்கு வேளாண்மைக்கு உகந்த பகுதிகள் தெரிவு செய்யப்பட்டு, கால்நடைப் பண்ணைகள் அமைக்கப்பட்டன;

(ஆ) வெளிநாடுகளிலிருந்து நல்லினக் கால்நடைகள் வருவிக்கப்பட்டன.

(இ) கால்நடை உற்பத்தி, உணவு, பராமரிப்பு முதலிய துறைகளில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன;

(ஈ) பொதுமக்களுக்கு நல்லினக் கால்நடைகள் மலிவாக விற்கப்படுகின்றன,

### கால்நடைப் பண்ணைகள்

இலங்கையின் கால்நடைப் பண்ணைகள் தமன்கடுவை, அம்பவெல, போபத்தலாவை, உந்துக்கொடை, இரிதியக்கம, நிக்கவரட்

டியா, வீரவிலே, கறக்கொடை-உயங்கொடை முதலிய இடங்களில் அமைந்துள்ளன. தமன்கடுவைப் பகுதியில் இயற்கைப் புற்றரைகள் உள்ளன. வடகீழ்ப் பருவக்காற்றுக் காலத்தில் மழை காரணமாக இப் புற்றரைகள் நீருள் மூழ்கிவிடுகின்றன; கோடை காலத்தில் இப்புற்கள் செழித்து வளர்ந்து காட்சி தருகின்றன. தமன்கடுவை யில் ஏறத்தாழ 2 இலட்சம் ஏக்கர் புற்றரைகள் உள்ளன என்று கணக்கிடப்பட்டிருக்கின்றது. இக் கால்நடைப் பண்ணையில் ஜேர்சி இன மாடுகள் அதிகமுள. இங்குள்ள எல்லா இன மாடுகளினதும், எருமைகளினதும் மொத்தம் 8500 ஆகும்.

அம்பவெல-போபத்தலாவை கால்நடைப் பண்ணைகள் மலைநாட்டில் அமைந்துள்ளன. இப் பண்ணைகளில் ஏழத்தாழ 3000 மாடுகளுள்ளன; அபடீன், ஐங்கல், வில்ற்சயர்கோன், ஜேர்சி, பிறீசியன் முதலிய நல் லின மாடுகள் இப் பண்ணைகளிலுள்ளன.

உந்துக்கொடைக் கால்நடைப் பண்ணை கேகாலை மாவட்டத்திலுள் ளது; இப் பண்ணை 100 ஏக்கர் பரப்புடையது. இரிதியக்கமக் கால் நடைப் பண்ணை அம்பாந்தோட்டை மாவட்டத்தில் இருக்கின்றது. இப் பண்ணையில் 1500 முரு எருமைகளுள்ளன. ஏனைய கால்நடைப் பண்ணைகள் சிறியனவாகும். போபத்தலாவை, வீரவிலே, கொட்டுக் கச்சிப் பண்ணைகளில் செம்மறி ஆடுகள், வெள்ளாடுகள் என்பன வளர்க்கப்படுகின்றன. வெலிசறைப் பண்ணையில் பன்றிகள் வளர்க் கப்பட்டு வருகின்றன. நியூசிலாந்து, அவுஸ்திரேலியா, இந்தியா முதலிய நாடுகளிலிருந்து நல்லின மாடுகள் இலங்கைக்கால்நடைப் பண்ணைகளுக்கு வருவிக்கப்பட்டுள்ளன.

## பால் தொழிற்சாலைகள்

இலங்கையின் முதலாவது கட்டிப் பால்தொழிற்சாலை (ரின்பால்) பொலநறுவையில் 1968-ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. தமன்கடு வையில் அமைந்திருக்கும் கால்நடைப் பண்ணையை ஆதாரமாகக் கொண்டே, இக்கட்டிப்பால் தொழிற்சாலை இங்கு அமைந்துள்ளது. இத் தொழிற்சாலைக்கு நாளொன்றிற்கு ஏறத்தாழ 1,20,000 பைந்து பால் தேவை; இதில் பெரும்பகுதியை (60%) விவசாயப் பகுதியும், மிகுதியை தனியாரும் வழங்குகின்றனர்.

இத் தொழிற்சாலை நியூசிலாந்து நாட்டின் உதவியுடன் அமைக் கப்பட்டு இயங்கி வருகின்றது; பெரக்கும், கவ் அன் கேட் என்ற வர்த்தகப் பெயர்களில் இங்கு தகரப்பால் உற்பத்தியாகின்றது. இத் தொழிற்சாலை கட்டிப்பாலோடு வெண்ணெய், வெண்ணெய்க் கட்டி என்பனவற்றையும் உற்பத்தி செய்வதற்குத் திட்டங்களைக் கொண் டிருக்கின்றது.

வெலிசறையில் பால் பவுடரைத் தகரத்தில் அடைத்து விற்பனை செய்யும் தொழிற்சாலை ஒன்று கடந்த ஆண்டு நிறுவப்பட்டு இயங்கி வருகின்றது. இலங்கைக்குத் தேவையான பால் பவுடரை பாற் சபை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்து, உள்ளூரில் தகரத்தில் அடைக்கின்றது. 'லக்ஸ்பிறே' என்று விற்பனையாகும் பால் பவுடர் இதுவாகும்.

அம்பேவெல எனுமிடத்தில் இன்னொரு பால் தொழிற்சாலை அமைக்கப்படவிருக்கின்றது. இத் தொழிற்சாலை பாலை உலர்த்தும் ஆலையாகும். இது ஏறத்தாழ 2,00,000 பைந்து பாலை நாளாந்தப் உலர்த்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்தியாயம்: 11


# இலங்கையின் மீன்பிடித் தொழில்

மீனை ஏராளமாக ஏற்றுமதி செய்யவேண்டிய இலங்கை, இறக்குமதி செய்யும் நிலையில் இருப்பதற்குக் காரணம், மீன்பிடித் தொழிலின் விருத்தியில் கூடிய கவனம் எடுக்காமையேயாகும். இலங்கையில் ஒரு வருடத்தில் இன்று சராசரியாக 15,00,000 அந்தர் மீன் பிடிக்கப்படுகின்றது. இவற்றுள் ஏறக்குறைய 3,00,000 அந்தர் மீனே ஐஸ்கட்டிக்குள் பாதுகாக்கப்பட்டும், பழுதடைவதற்கு முன்பும் உபயோகிக்கப்படுகின்றன. ஒரு வருடத்தில் சராசரியாக 20,00,000 அந்தர் மீன் இறக்குமதி செய்யப்படுகின்றது. இதில் 80 வீதம் இந்தியா, மாலைதீவுகள், பாகிஸ்தான் எனும் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன.

### சாதகமான ஏதுக்கள்

இலங்கையின் மீன்பிடித் தொழில் விருத்திக்குச் சாதகமான ஏதுக்கள் பலவுள்ளன. விதையாமலேயே பயன்பெறும் இக் கைத்தொழிலின் விருத்திக்கு இலங்கையைச் சூழ்ந்து நான்கு புறங்களும் கடல் காணப்படுவது சாதகமானஏதுக்களில் முதன்மையானதாகும். இலங்கை ஒரு பெருந் தீவாகக் காணப்படுவதே இத்தொழிலின் விருத்திக்குப் பேருதவியாக அமைகின்றது. இலங்கையின் கரையோரம் ஏறத்தாழ 800 மைல்கள் நீளமானதாகவுள்ளது. தீவைச் சுற்றி 20 மைல்கள் தூரத்திற்குச் சென்று கரையோர மீன்பிடி நடைபெறுவதால் 16,000 சதுரமைற் பிரதேசத்தில் மீன் பிடிக்கக் கூடியதாகவுள்ளது. இயந்திரப் படகுகளின் உதவியுடன் கரையிலிருந்து 50 மைல்கள் தூரத்திற்குச் சென்று மீன் பிடிக்கக்கூடியதாக இருப்பதால், 40,000 சதுரமைற் கடற்பரப்பில் மீன்பிடிக்க முடியும். இப்பெரிய கடற்பரப்பில் இலங்கைக்குத் தேவையான 30 இலட்சம் அந்தர் மீனையும் பிடிக்கமுடியும்.

இலங்கை ஒரு கண்டமேடையில் அமைந்திருப்பதோடு, இக்கண்டமேடை கரையிலிருந்து 10 மைல்கள் தொடக்கம் 20 மைல்கள் வரை அகலமானதாக அமைந்திருப்பது மீன்பிடித் தொழிலுக்குப் பேருதவியாக விளங்குகின்றது. இக்கண்டமேடை தெற்கே ஒடுங்கியதாகவும், வடக்கே அகன்றதாகவுமுளது. கண்டமேடைகள் ஆழ்கடல் அடித்




இலங்கையின் போக்குவரத்து வசதிகள்

தளங்கள் போலன்றி, சூரிய வெப்பத்தைப் பெறுவதால், மீன்கள் வாழ்வதற்கேற்ற 'பிளாங்ரன்' போன்ற உணவுகளைக் கொண்டன வாகவுள்ளன. மேலும், இனப் பெருக்கத்திற்கேற்ற வெப்பத்தையும், மறைந்து வாழ்வதற்கேற்ற ஒதுக்கிடங்களையும் இவை கொண்டிருக் கின்றன. அத்தோடு இலங்கையின் நதிகள் இக்கண்டமேடையில், உண்ணுட்டிலிருந்து காவிவரும் தாவரத் துணுக்குகளை மிதக்கவிடு கின்றன: அவை மீன்களுக்கேற்ற உணவாக அமைகின்றன. இவை காரணமாக இலங்கையைச் சூழ்ந்துள்ள கண்டமேடை ஏராளமாக மீன்களைக் கொண்டதாக விளங்குகின்றது.

கண்டமேடையின் அடித்தளத்தில் தீவுகள் போன்று, நீருள் அமைந்த கடலடித்தள மேடைகள் சிறந்த மீன்பிடித் தளங்களாம். ஆழங்குறைந்த இவை மீன்கள் வாழ்வதற்கேற்ற தன்மைகளை அளிப் பனவாக விளங்குகின்றன. கடற்றுவரங்கள் இக்கடலடித்தள மேடை களில் வளர்ந்து மீன்களுக்கு உணவையும், உறைவிடத்தையுந் தரு கின்றன. அமைதியான இக்கடலடித்தள மேடைகளில் ஏராளமாக மீன்கள் வசிக்கும். இத்தகைய கடலடித்தள மேடைகள் இலங்கை யில் முக்கியமாக இரண்டு உள்ளன. யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு வடகிழக்கே இந்தியாவின் கோடிக்கரை முனைவரை பரந்துள்ள பிற்று கடலடித்தள மேடை 1000 சதுர மைல்கள் பரந்த சிறந்த மீன்பிடித் தளமாகும். கன்னியாகுமரிக்குத் தெற்கே இந்தியாவின் தொடராக அமைந்துள்ள வோர்ஜ் கடலடித்தளமேடை இன்னென்றாகும்.

இலங்கையின் நீண்ட கரையோரம் பல குடாக்களையும், கடல் நீரேரிகளையுங் கொண்டுள்ளது. காற்றினதும் அலையினதும் தாக்கத் தினின்றும் பாதுகாப்பாக மீன்பிடிக் கலங்கள் தங்க இக்குடாக்கள் மிகவும் ஏற்றனவாகவுள்ளன; நல்ல பல மீன்பிடித் துறைமுகங்கள் இக்குடாக்களை ஆதாரமாகக் கொண்டு உருவாகியுள்ளன. கடல் நீரே ரிகள், இறுல் போன்றன வளர்ந்து பெருகுவதற்கு ஏற்றன. இவை ஆழமற்றனவாதலால் சிறு வள்ளங்களையும் வீசு வலைகளையும் உபயோ கித்தே இவற்றில் மீன் பிடிக்கலாம்.

மேலும் இலங்கையெங்கிலும் மீனுக்கு நல்ல தேவையுளது. உண் ணுட்டுக் கேள்வி இங்கு பிடிக்கப்படும் மீனின் அளவிற்கு அதிகமாக வுளது. இவை யாவும் இலங்கையின் மீன்பிடித் தொழிலின் விருத்திக் குச் சாதகமான ஏதுக்களாகவுள்ளன.

## மீன்பிடிப் பருவம்

இலங்கையின் வடமேற்குப் பகுதிகளும், கிழக்குப் பகுதிகளும் தாம் இலங்கையின் சிறந்த மீன்பிடிப் பகுதிகளாகவுள்ளன. இலங் கையில் அதிகவளவு மீனை இப்பகுதிகளே பிடிக்கின்றன. கற்பிட்டி தொட்டு, மன்னர், யாழ்ப்பாணம், பருத்தித்துறை, முல்லைத்தீவு

என்பனவற்றை உள்ளடக்கி திருகோணமலை வரையுள்ள பகுதிகளில் அதிகமாக மீன் பிடிக்கப்பட்டு வருகின்றது. இவற்றிற்கு அடுத்ததாக தென்மேற் பகுதி முக்கியவிடத்தைப் பெறுகின்றது. சிலாபம், நீர்கொழும்பு, கொழும்பு, அம்பலாங்கொடை, தங்காலை என்பன தென்மேற் பகுதியின் மீன்பிடி இடங்களாகவுள்ளன. இலங்கையின் கரையோரங்களில் ஏறக்குறைய 70,000 மக்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். இவர்களிற் பெரும்பாலானோர் தீவின் வடகரைப் பாகங்களிலேயே உள்ளனர்.

இலங்கையின் மீன்பிடியிடங்கள் பருவத்திற்குப் பருவம் மாறுகின்றன; அதனால் மீனவர்களும் தம் தொழிலிற்காக இடம் பெயருகின்றார்கள். இந்த இடப்பெயர்ச்சியை இலங்கையின் காற்றுக்களே தூண்டுகின்றன. தென்மேல் பருவக் காற்றுக் காலத்தில், தென்மேற் பிரதேசத்தில் மீன்பிடி இடர் தருவதாக இருப்பதால், அவ்விடத்து மீனவர்கள் வடகரைகளுக்கு வந்து, அப்பருவத்தில் மீன் பிடிக்கின்றனர். பின் வடகீழ் பருவக் காற்றுக் காலத்தில் இவர்கள் தென்மேற் பிரதேசத்திற்குத் திரும்பிச் சென்றுவிடுகின்றனர். யாழ்ப்பாணக் கடல் நீரேரிகளுள் மீன்பிடியில் ஈடுபட்டுள்ளவர்கள் இடம் மாறுவது கிடையாது. இங்கு காற்றுக்களின் தாக்கம் அதிகமின்மையே காரணமாகும். யாழ்ப்பாணக் குடாநாட்டினை அடுத்த தீவுகளில் வாழும் மீனவர்கள், அத்தீவுகளிலேயே பருவத்திற்குப் பருவம் இடம் மாற்றிக் கொள்கிறார்கள். உதாரணமாக, நெடுந்தீவில் தென்மேல் பருவக் காற்றுக் காலத்தில் வடக்குக் கரையில் மீன் பிடிப்பவர்கள், வடகீழ்ப் பருவக் காற்றுக் காலத்தில் தென் கரையில் மீன் பிடிக்கின்றார்கள்.

## மீன் வகைகள்

இலங்கையைச் சூழ்ந்துள்ள கடல்களில் அயன மண்டலத்திற்குரிய மீன் வகைகளே பெரிதும் காணப்படுகின்றன. இடை வெப்ப வலயத்திற்கோ, முனைவுப் பிரதேசங்களுக்கோ உரிய சாடின், சமன், திமிங்கிலம் முதலியன போன்ற மீன் வகைகளை இக்கடல்களிற் காண முடியாதுள்ளது. சுறு வகைகளும், பருமனிலும் நீளத்திலும் குறைந்த மீன் வகைகளும், இறால், கணவாய், நண்டு வகைகளும், ஆமை, கடல் பன்றி, கடலட்டை என்பனவும் அயன மண்டலக் கடலிற்குரியன. இவையே இலங்கையைச் சூழ்ந்த கடற் பரப்பில் பிடிக்கப்படுகின்றன.

இலங்கையின் கடல்படு தொழில்களில் மீன் பிடித்தலே முக்கியமானதாகவுள்ளது. மீன் பிடித்தல் பெரிதும், கடற்கரையோரங்களில் நடைபெற்று வருகின்ற போதிலும், ஆழ்கடலிற்குச் சென்று மீன் பிடித்தலும் இன்று விருத்தியுற்று வருகின்றது.

இலங்கையின் கடல்படு தொழில்களில் முக்கியமான ஏனைய வகைகள் பின்வருவன: இறால் பிடித்தல், நன்னீர்ப் பாகங்களில் மீன் பிடித்தல், சிப்பி குளித்தல், முத்துக் குளித்தல் என்பனவாம்.

இறால் பிடித்தல் பெரும்பாலும் கடல் நீரேரிகளிலேயே நடைபெறுகிறது; நீர்கொழும்பு, புத்தளம், மன்னார், பொன்னாலை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய பகுதிகளில் இறால் பிடிக்கப்படுகின்றது.

இலங்கையில் 2,00,000 ஏக்கர் நன்னீர்ப்பரப்பு உண்டு. குளங்களும், ஆறுகளும் இவற்றுளடங்கும். இன்று நாளொன்றிற்கு ஓர் ஏக்கர் நன்னீர்ப்பரப்பில் 38 இறாத்தல் மீன் பிடிக்கப்படுகின்றது. வருடம் 75 இலட்சம் இறாத்தல் மீன் பிடிக்கப்படுகின்றது. நன்னீர்ப் பாகங்களில் பிடிக்கப்படும் மீன் சேற்றுமணம் உடையதாக இருப்பதால், பெரிதும் மக்களால் விரும்பப்படுவதில்லை. குளங்களை ஆழமாக்குவதன் மூலம் நீரைப் பாதுகாத்து வரண்ட பருவத்திலும் மீன்கள் இங்குவாழ வசதி அளிப்பதோடு, சிறந்த தரமான மீன்களை இவற்றில் வளர்ப்பதற்கும் முயற்சிகள் நடைபெறுகின்றன.

பாக்குநீரிணையில் சங்குகள் குளிக்கப்பட்டு அவை பெரும்பாலும் மலிவான காப்புகள் செய்வதற்கு உபயோகிக்கப்படுகின்றன.

முத்துச்சிப்பிகள் மன்னார் வளைகுடாவில் ஏராளமாக இருக்கின்றன. முத்துக்குளித்தலை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. பல வருடங்களுக்கு ஒருமுறை முத்துக்குளித்தல் நடைபெறும். திருகோணமலை, தம்பலகாமம் குளத்தில் குறைந்த ரக முத்துச்சிப்பிகள் கிடைக்கின்றன. 1951ஆம் ஆண்டு முத்துக் குளித்தலால் அரசாங்கத்திற்கு 18,000 ரூபா வருமானம் கிடைத்தது.

## மீன்பிடி முறைகள்

தொடக்க காலத்திலும் பார்க்க, உலகத்தின் முன்னேற்றத்திற்கு இணங்க, இலங்கையின் மீன்பிடி முறைகளும் விருத்தியுற்றுள்ளன என்பது மறுக்கவியலாதது. புராதனகாலச் சிறு படகுகளையும், தோணிகளையும், வள்ளங்களையும், கட்டுமரங்களையும் உபயோகித்து இன்றும் மீன்பிடித்து வருகின்றனர். கரையோர மீன்பிடித்தலிற்கே இவை பெரிதும் பயன்படத்தக்கனவாக விளங்கி வருகின்றன. கரையோர மீன்பிடித்தலிற்குப் பலவகை வலைகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. வள்ளங்களோ கட்டுமரங்களோ இன்று கரையோரக் கடலில் இறங்கி, வலைவீசிப் பிடிப்பதற்கு 'வீசுவலைகள்' பயன்படுத்தப்படுகின்றன. இலங்கை எங்கிலும் பரவலாக இம்முறையுள்ளது. பல

மைல்கள் நீளமான வலையைக் கரையோரத்தில் ஒருமுனை இருக்க மறுமுனை பலமைல்கள் கடலினுள் வளைத்துக்கொண்டு வரப்பட்டு, ஈற்றில் இருமுனைகளையும் கரையினின்றும் கோலி வளைத்து மீன் பிடிக்கின்றனர். இதனை 'கரைவலை' என்பர். இம்முறை தென்மேல் பகுதிகளில் பெரிதும் நடைமுறையிலுள்ளது. கரையோரத்திலோ அன்றி சிறிது ஆழத்திலோ கம்பங்களை நட்டு அவற்றில் வேலிபோன்று வலையைக் கட்டி மறித்தும் மீன் பிடிக்கின்றனர். கலவலை மீன்பிடித்தல் அல்லது இறகுவலை மீன்பிடித்தல் என்று இது வழங்கப்படும். இவற்றைவிட இன்று கரையோர மீன்பிடித்தலிற்கு நைலோன் வலைகளும் பயன்படுத்தப்படுகின்றன. மேலும் தூண்டிலிட்டு மீன் பிடித்தல் பேரளவில் இலங்கை எங்கினும் செயலிலுள்ளது. பொறிகட்டிப் பிடித்தல், சூள்கொண்டு பிடித்தல் என்பன இலங்கையின் கடல் நீரேரிகளில் நடைபெறுகின்றன.

இன்று ஆழ்கடலிற்குச் சென்று மீன்பிடித்தல் நடைபெறுகின்றது. மீனவர்களின் கலங்கள் யந்திரசாதனங்கள் இணைக்கப்பட்டனவாகவுள்ளன. எல்லாக் கலங்களிலும் யந்திர சாதனங்கள் இல்லை எனினும், கணிசமானவளவு யந்திர வள்ளங்கள் இன்று மீன்பிடித்தலில் ஈடுபட்டுள்ளன. இம் மோட்டார் வள்ளங்களை உபயோகித்து அதிக மீன் பிடிப்பதற்கு அரசாங்கம் வழிகாட்டி வருகின்றது. கட்டுமரங்களிலும், படகுகளிலும் இயந்திர மோட்டார்களை இணைத்து மீன் பிடிக்கச்செய்வதற்கு அரசாங்கம் கடன் உதவி அளித்து வருகிறது: நைலோன் வலைகளையும் விநியோகித்து வருகின்றது. இவ்வியந்திரப் படகுகளையும் நைலோன் வலையையும் உபயோகித்து, கன்னியாகுமரிக்குத் தெற்கேயுள்ள வோர்ஜ் மீன்பிடித்தளத்திலும், 'பீற்று' கடலடித்தள மேடையிலும் நிறைய மீன் பிடிக்கலாம். தற்போது பலர் அவ்வாறு பிடித்துவருகின்றனர்.

இலங்கையில் ஆழ்கடலில் சென்று மீன்பிடிக்கக்கூடிய 'ரூேலேஸ்' என்னும் பெரிய மீன்பிடிக் கப்பல்கள் இரண்டே உள்ளன. இன்னும் சில ரூேலேஸ்கப்பல்களை வெளிநாடுகளிலிருந்து வாங்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

மீன்பிடித் தொழிலினை விருத்திசெய்வதற்காக 7 மீன்பிடித் துறைமுகங்களையும், 18 ஒதுக்கிடங்களையும் ஏற்படுத்தத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது; கரையூர், கல்பிட்டி, நீர்கொழும்பு, காலி, முகத்துவாரம், மட்டக்களப்பு, திருகோணமலை என்பன மீன்பிடித் துறைமுகங்களாகவும், பருத்தித்துறை, புத்தளம், மன்னர், கல்முனை, அம்பாந்தோட்டை முதலியன ஒதுக்கிடங்களாகவும் விருத்திசெய்யப்படவுள்ளன. அத்துடன் மீன்கள் பழுதடையாமல் பல நாட்கள் பாதுகாக்கக் குளிர்சாதனங்களையும், விரைவாகச் சந்தைகளுக்குக் கொண்டு

செல்லப் போக்குவரத்து வசதிகளையும் விருத்திசெய்ய வழி வகுக்கப் பட்டுள்ளது.

இலங்கையிலின்று மீன்பிடித் தொழிலிலீடுபட்டவர்கள் வறியவர்களாக உள்ளனர். இவர்களது வாழ்க்கைத்தரம் உயராதபடியினால், ஏனையவர்கள் இத்தொழிலிலீடுபடத் தயங்குகின்றார்கள்.

படித்த இளைஞர்களை மீன்பிடித் தொழிலில் ஈடுபடுத்தப் பயிற்சி அளிக்கப்படுவது அவசியம். ஏனைய நாடுகளுக்கு இளைஞர்களை அனுப்பி மீன்பிடித் தொழிலில் பயிற்சி அளிக்கவேண்டும். நவீன இயந்திரங்களையும் குளிர்முறைச் சாதனங்களையும் அதிகமாக உபயோகிக்கவேண்டும். மீன்பிடி ஆராய்ச்சி நிலையங்கள் நிறுவப்படல் வேண்டும். இத்தகைய பல முயற்சிகளைக் கைக்கொண்டு இலங்கையின் மீன்பிடித் தொழிலை விருத்திசெய்து கொள்வது இலங்கையின் பொருளாதார விருத்திக்கு இன்றியமையாதது. வெகு விரைவாகவும் சுலபமாகவும் இலங்கையில் முன்னேற்றந்தரக்கூடிய ஒரு தொழில் உண்டென்றால் அது மீன்பிடித் தொழிலேயாகும்.

அத்தியாயம்: 12

# இலங்கையின் குடிப்பரம்பல்

இலங்கையில் மொத்த மக்கள் தொகை 1963-ம் ஆண்டுக் குடி மதிப்பின்படி 1,05,82,000 ஆகும்; அதாவது, ஒரு கோடிக்கு மேல் ஆகும். இன்று இக்குடித்தொகை ஏறத்தாழ 1 கோடியே 20 இலட் சமாக இருக்கும். ஆனல் இலங்கையின் பழைய காலத்தில் இதே யளவு மக்கள் வாழ்ந்திருப்பதாக அறிஞர்கள் கணக்கிட்டிருக்கின்ற னர். இலங்கையில் காணப்படும் பெரும் பெரும் குளங்களையும், பாழடைந்துபோய்க்கிடக்கும் நகரங்களையும், காடடர்ந்துபோய்க் கிடக்கும் வயல்களையும் கொண்டு இத்தகைய முடிவிற்கு வந்துள்ள னர். கலாநிதி என். கே. சாகர் என்பவரின் கணக்குப்படி கி. பி. 1300 அளவில் இலங்கையின் மக்கள் தொகை 80,00,000 ஆகும்.

இலங்கையில் மக்கள் தொகை வருடா வருடம் அதிகரித்து வரு கின்றது. 1953-ம் ஆண்டிலும் பார்க்க 1963-ஆம் ஆண்டின் மக்கள் தொகை 31½ வீதம் அதிகரித்துள்ளது. மக்கள் தொகை இங்கு வருடா வருடம் 2,60,000 பேர் வீதம் கூடிக்கொண்டு செல்கிறது. அதாவது நாளொன்றிற்கு 700 பேர் வீதம் மக்களின் தொகை கூடுகிறது. இதற்குக் காரணம் வருமாறு: மக்களின் இறப்பு வீதம் குறைந்து பிறப்பு வீதம் கூடியதே மூலகாரணமாகும்; 1931-ஆம் ஆண்டு 1000 மக்களுக்கு 37·4 பேர் பிறந்தனர்; 22 பேர் இறந்தனர். இன்று 1000 மக்களுக்கு 31·6 பேர் பிறக்க, 8·2 பேரே இறக்கின்றனர். வைத்தியம், சுகாதாரம் என்பன இன்று பெருவிருத்தியுற்றிருப்பதால் இறப்பு வீதம் வீழ்ச்சியுற்றுள்ளது. பழைய காலத்தைப்போல இன்று இலங்கையில் மலேரியா, கொள்ளைநோய் முதலியனவற்றல் இறப் போர் அரிதாகும்.

இலங்கையின் மக்கள் தொகையில் காணப்படுகின்ற இன்னெரு பண்பு யாதெனில், பலவின மக்கள் வாழ்வதாகும். சிங்களவர், தமி ழர், முஸ்லிம்கள், பறங்கியர், பாக்கிஸ்தானியர், ஐரோப்பியர் எனும் பலவின மக்கள் வாழ்கின்றனர். இலங்கையில் பல மொழி பேசும் மக்கள் வாழ்கின்றனர். முக்கியமாக சிங்களம், தமிழ், ஆங் கிலம் பேசுவோர் தொகையே அதிகம். இலங்கையில் பல மத மக் கள் வாழ்கின்றனர். பௌத்தர், இந்துக்கள், இஸ்லாமியர், கிறிஸ் தவர் எனும் மத மக்களின் தொகையே அதிகம். இலங்கை மக்களி டையே அதிகம் கலப்புடைய மக்களைக் காணமுடியாது. இலங்கையின் இனவாரியான குடித்தொகை வருமாறு:

| | 1963 | 1967 |
|---|---|---|
| சிங்களவர் | 75,14,000 | 83,08,000 |
| இலங்கைத் தமிழர் | 11,66,000 | 12,87,000 |
| இந்தியர் | 11,98,000 | 13,22,000 |
| இலங்கை முஸ்லீம் | 6,60,000 | 7,37,000 |
| பறங்கியர் | 44,000 | 47,000 |

இலங்கையின் 25,332 சதுரமைல் பரப்பில் 1 கோடியே 6 இலட்சம் மக்கள் வாழ்கின்றார்கள். ஒரு சதுரமைலில் சராசரியாக 420 மக்கள் வாழ்கின்றபோதிலும், சதுரமைலுக்கு 1000 மக்களுக்குமேல் வாழ்கின்ற பகுதிகளும், சதுரமைலிற்கு 50 மக்களுக்குள் வாழ்கின்ற பகுதிகளும் இலங்கையிலுள்ளன. மன்னார், வவுனியா, அனுராதபுரம், புத்தளம், திருகோணமலே, பொலநறுவை, மட்டக்களப்பு, அம்பாறை, வதுளே, மொனராகல ஆகிய மாவட்டங்களில் மக்கள் தொகை குறைவாகக் காணப்படுகின்றது. ஏனைய மாவட்டங்களில் மக்கள் தொகை அதிகமாகக் காணப்படுகின்றது. மாவட்ட ரீதியாக இன்றைய மக்கள் தொகை மேல் வருமாறு:


| | |
|---|---|
| கொழும்பு | 22,06,633 |
| களுத்துறை | 6,31,997 |
| கண்டி | 10,50,463 |
| மாத்தளே | 2,55,103 |
| நுவரெலியா | 4,05,557 |
| காலி | 6,44,434 |
| மாத்தறை | 5,14,854 |
| அம்பாந்தோட்டை | 2,74,642 |
| யாழ்ப்பாணம் | 6,12,902 |
| மன்னார் | 60,095 |
| வவுனியா | 68.712 |
| மட்டக்களப்பு | 1,96,961 |
| திருகோணமலே | 1,37,820 |
| அம்பாறை | 2,11,295 |
| குருநாகல் | 8,53,646 |
| புத்தளம் | 3.02,722 |
| அனுராதபுரம் | 3,09.111 |
| பொலநறுவை | 1.14,104 |
| வதுளே | 5,27,529 |
| மொனராகல | 1.30,612 |
| இரத்தினபுரி | 5,47,583 |
| கேகாலே | 5,81,034 |

இலங்கையின் மாவட்டரீதியான குடியடர்த்தி விபரம் வருமாறு:

சனத்தொகை அடர்த்தி (சதுரமைலுக்கு)

| | | |
|---|---|---|
| கொழும்பு | — | 2,787 |
| களுத்துறை | — | 1,018 |
| கண்டி | — | 1,142 |
| மாத்தளை | — | 333 |
| நுவரெலியா | — | 839 |
| காலி | — | 993 |
| மாத்தறை | — | 1,070 |
| அம்பாந்தோட்டை | — | 274 |
| யாழ்ப்பாணம் | — | 635 |
| மன்னார் | — | 63 |
| வவுனியா | — | 48 |
| மட்டக்களப்பு | — | 206 |
| அம்பாறை | — | 184 |
| திருகோணமலை | — | 137 |
| குருநாகல் | — | 463 |
| புத்தளம் | — | 263 |
| அனுராதபுரம் | — | 102 |
| பொலநறுவா | — | 87 |
| வதுளை | — | 480 |
| மொனராகலை | — | 48 |
| இரத்தினபுரி | — | 437 |
| கேகாலை | — | 901 |

கொழும்பு, களுத்துறை, மாத்தறை, கண்டி ஆகிய மாவட்டங்களில் மக்கள் சதுரமைலிற்கு 1000க்கு மேல் வாழ்கின்றனர். இப்பிரதேசங்களில் நன்கு விருத்தியடைந்த கைத்தொழில். பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் காணப்படுகின்றன, கண்டி மத்தியமாகாணத்தின் தலைநகராகவும் இருக்கின்றது. கொழும்பு இலங்கையின் தலைநகரமாக விளங்குகிறது, களுத்துறை, மாத்தறை என்பன சிறந்த மீன்பிடித் தளங்களாக உள்ளன, பொதுவாகக் கூறப்போனால் இலங்கையின் ஈரவலயத்தில் மக்கள் செறிவு அதிகமே. இலங்கையின் ஈரவலயத்தில் மக்கள் அதிக செறிவாக வாழ்வதற்குப் பல புவியியற் காரணிகளுள்ளன. அவை வருமாறு:




இலங்கையின் குடிப்பரம்பல்

(1) ஈரவலயத்தின் தரைத்தோற்றமும் காலநிலையும் முதற் காரணிகளாகும். ஈரவலயத் தாழ்நிலம் நெல், தென்னைச் செய்கைகளுக்கும், ஈரவலய உயர்நிலம் தேயிலை, றப்பர், கொக்கோ செய்கைகளுக்கும் பெரிதும் ஏற்றனவாக விளங்குகின்றன. அதிக மழைவீழ்ச்சியை உடைய உவப்பான காலநிலை பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்கு ஏற்றதாக இருக்கின்றது. இவை காரணமாக ஈரவலயத்தில் அதிக குடிச் செறிவு காணப்படுகின்றது.

(2) கைத்தொழில் நடவடிக்கைகள் பலவும் ஈரவலயத்திலேயே காணப்படுகின்றன; கனிப்பொருள் வளமும் இவ் வலயத்தில் சிறப்புற்று விளங்குகின்றது. கொழும்பு, களுத்துறை, காலி, கண்டி, நுவரெலியா முதலிய நகர்கள் இவ்வலயத்திலேயே அமைந்துள்ளன. நாட்டின் நிர்வாக, போக்குவரத்து மையங்கள் தென்மேல் தாழ்நிலத்தில் உள்ளன. இவையாவும் ஈரவலயத்தில் அதிக செறிவாக மக்களை வாழவைத்துள்ளன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் மக்கள் செறிவு 500—750 இடையில் காணப்படுவதற்குப் புவியியல் நிலைமைகளும், வரலாற்று நிலைமைகளும் காரணங்களாகவுள்ளன. பருவ மழையும், தரைகீழ் நீரும், யாழ்ப்பாண மக்களின் சலியாத உழைப்பும் நிலத்தைப் பண்படுத்தி வாழவைத்துள்ளதால் யாழ்ப்பாண மாவட்டத்தில் மக்கள் அடர்த்தியாக உள்ளனர். இலங்கையின் கிழக்குக் கரையில் கடலேரிகளை அடுத்து மக்கள் நெல், தென்னை முதலியவற்றைப் பயிரிடுகின்றனர்; அத்தோடு மீன்பிடித் தொழிலையும் மேற்கொள்வதால், இப்பகுதிகளிலும் மக்கள் தொகை அதிகமாக இருக்கிறது.

மக்கள் தொகை குறைவான மாவட்டங்கள் பெரிதும் உலர் பிரதேசங்களிலேயே இருக்கின்றன. உலர் பிரதேசம் மக்களது தொழில் நடவடிக்கைகளுக்கு ஏற்றதல்ல. பருவமழை பொய்த்தல், உவப்பற்ற மண், நீர்ப்பாசன வசதியின்மை, மலேரியா போன்ற நோய்கள் நிலவுதல், தக்க போக்குவரத்து வசதிகளில்லாமை, கல்வி, வைத்தியம், பாதுகாப்பு முதலிய சமூக தேவைகள் நிறைவேற்றப்படாமை முதலிய இன்னோரன்ன காரணங்களால் உலர்பிரதேசத்தில் மக்கள் குறைவாக வாழ்ந்து வருகின்றனர். மன்னார், வவுனியா, பொலநறுவை, மொனராகலை முதலிய மாவட்டங்கள் உலர்பிரதேசத்திலேயே மிகக் குறைவான குடியடர்த்தியைக் கொண்டிருக்கின்றன. ஆதலால், மக்கள் தம் தொழில் நடவடிக்கைகளுக்கு ஏற்ற பகுதிகளில் விரும்பிக் குடியேறியுள்ளனர். எனினும், இம்மாவட்டங்களின் பிரதான நகரங்களில், (அனுராதபுரம், மட்டக்களப்பு, திருகோணமலை, பொலநறுவை என்பன) மக்கள் தொகை அதிகமாகவே காணப்படுகின்றது.

குடிப்பரம்பல் குறைவான இலங்கையின் உலர் பிரதேசத்தில் 12ஆம் நூற்றாண்டளவில் அதிக மக்கள் செறிவு காணப்பட்டது. உள்நாட்டுக் கலகங்கள், தென்னிந்தியப் படையெடுப்புகள் முதலிய காரணங்களினால் நீர்ப்பாய்ச்சல் முறைகள் கவனிக்கப்படாமல் கிடந்தன. மலேரியாக்காய்ச்சல் வேறு பரவியதனாலும் மக்கள் இப்பிரதேசங்களை விட்டு நீங்கி ஈரலிப்பான பகுதிகளுக்குக் குடியேறினர்.

இலங்கையின் இன்றைய முக்கிய பிரச்சினை அதிக குடிப்பெருக்கமாகும். அதிக குடிப்பெருக்கத்தால் மக்களுக்கு உணவு கொடுப்பதும், வேலை கொடுப்பதும், பெரும் பிரச்சினையாகவுள்ளது. அதனால், குடிப்பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் பலநடவடிக்கைகளை மேற்கொள்கிறது. கருத்தடைப் பிரச்சாரங்கள் இன்று நாடெங்கும் செய்யப்பட்டு வருகின்றன. அதே வேளையில் நாட்டின் பொருளாதாரத்தை விருத்தியாக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## அத்தியாயம்: 13

# வர்த்தகமும் போக்குவரத்து வசதிகளும்

## போக்குவரத்து வசதிகள்

ஒரு நாட்டின் பொருளாதார விருத்திக்குப் பெருந்துணையாக இருப்பவை போக்குவரத்து வசதிகளாம். கைத்தொழில், பயிர்ச் செய்கை, உண்ணாட்டு வர்த்தகம், வெளிநாட்டு வர்த்தகம் ஆகியன போக்குவரத்து வசதிகளையும் சாதனங்களையும் பொறுத்தே அமை கின்றன. இலங்கையின் உண்ணாட்டுப் போக்குவரத்துப் பாதைகள் பிரதான நகர்களையும் சந்தைகளையும் இணைத்து அமைந்துள்ளன.

### வீதிகள்

இலங்கையில் ஏறக்குறைய 14,000 மைல்கள் நீளமுடைய வீதி கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் 5,000 மைல்களுக்குச் சற்று அதிகமானவையே தார்பூசிய வீதிகளாகவுள்ளன. இலங்கையின் முக் கிய வீதிகள் கொழும்பிலிருந்து எல்லாத்திசைகளையும் நோக்கிச் செல் கின்றன. இலங்கையின் பிரதான நகர்கள் யாவும் கொழும்புடன் இணைக்கப்பட்டுள்ளன.

இலங்கையின் தென்மேல் பாகத்திலும் யாழ்ப்பாணக் குடாநாட் டிலும் வீதிகள் நன்கு அமைந்துள்ளன. மத்தியமாகாணம், வடமத் தியமாகாணம், ஊவா மாகாணம் என்பவற்றில் போதியளவு வீதி கள் அமைக்கப்படவில்லை.

### இருப்புப் பாதைகள்

இலங்கையின் இருப்புப் பாதைகளின் மொத்த நீளம் 896 மைல் களாகும். 2½ அடி அகலமுள்ள ஒடுக்கமான இருப்புப் பாதை 87 மைல் கள் வரை இருக்கிறது. கொழும்பிலிருந்து வடகிழக்கு நோக்கிச் செல் லும் பிரதான இருப்புப் பாதையினால், பொல்காவலை, பேராதனை, கண்டி, மாத்தளை, நாவலப்பிட்டி, நனுஓயா, பண்டாரவளை, வதுளை என்னும் இடங்கள் இணைக்கப்பட்டுள்ளன. கொழும்பிலிருந்து பொல் காவலை வரையுள்ள பாதை இரட்டைப் பாதையாகும். கொழும்பி லிருந்து வடக்கு நோக்கிச் செல்லும் உள்நாட்டுப் பாதை பொல்

காவலே, குருநாகல், மகோ, அனுராதபுரம், மதவாச்சி, யாழ்ப்பாணம் எனுமிடங்களுடாகச் சென்று காங்கேசன்துறையில் முடிவடைகின்றது. கொழும்பிலிருந்து தெற்கு நோக்கிச் செல்கின்ற கரையோரப் பாதை மாத்தறைவரை அமைந்துள்ளது. மகோவிலிருந்து கிழக்குநோக்கிப் பிரிகின்ற பாதை திருகோணமலே, மட்டக்களப்புப் பகுதிகளே இணைக்கின்றது. மதவாச்சியிலிருந்து மேற்கு நோக்கிப் பிரிகின்ற பாதை மன்னுரை இணைக்கின்றது.

இருப்புப் பாதைகள் வகித்த முக்கியத்துவம் இன்று வீதிகள் அமைக்கப்பட்டதும் குறைந்துவிட்டது. புகையிரதங்களோடு மோட்டார் வாகனங்கள் இன்று போட்டியிடுகின்றன. புகையிரதங்களில் பொருட்கள் கொண்டு செல்லப்படுகின்றளவு, இன்று லொறிகள் மூலம் பொருட்கள் கொண்டு செல்லப்படுகின்றன.

புகையிரத சேவையை விருத்தி செய்வதற்காகப் பல வழிவகைகள் கையாளப்படுகின்றன. வளேவான இருப்புப் பாதைகளே நேராக்கித் தூரத்தைக் குறுக்கியும், விரைவான யந்திர சாதனங்களேப் பொருத்தியும், புகையிரத நிலேயங்களே மேலும் நவீன முறையில் திருத்தியும், புதிதாக அமைத்தும், தொடுக்கப்படாத இடங்களே இருப்புப் பாதைகளால் தொடுத்தும் புகையிரத சேவையை விருத்தி செய்ய அரசாங்கம் முயல்கின்றது.

### விமானப் போக்குவரத்து

விமானப் போக்குவரத்தைப் பொறுத்தமட்டில் இலங்கையில் அதிக விருத்தி தேவைப்படுகின்றது; உள்நாட்டுப் பாதைகளே விருத்தி செய்வதோடு, சர்வ தேசியப் பாதைகளுடன் வெளிநாட்டு விமானச் சேவையையும் விருத்தி செய்வது அவசியமாக இருக்கின்றது.

இரத்மலானே இலங்கையின் முக்கியமான ஒரு விமானத் தளமாகும். இராணுவ விமானத் தளமாயிருந்த கட்டுநாயக்கா பெரு விமானங்கள் இறங்கு துறையாக இருக்கின்றது. யாழ்ப்பாணத்திலிருந்து ஏறக்குறைய 12 மைல்கள் தூரத்திலிருக்கும் பலாலி, யாழ்ப்பாண விமானத் தளமாகவும், கொழும்பிலிருந்து திருச்சிக்கும், சென்னேக்கும் செல்லும் விமானங்கள் தங்குதுறையாகவுமிருக்கின்றது. திருகோணமலே, மட்டக்களப்பு, அம்பாறை, அனுராதபுரம் ஆகிய இடங்களிலும் விமானத் தளங்கள் இருக்கின்றன.

## துறைமுகங்கள்

வெளிநாட்டு வர்த்தக நடவடிக்கைகளுக்கு துறைமுகங்கள் மிக இன்றியமையாதன. இலங்கை ஏற்றுமதி இறக்குமதிப் பொருளாதார நாடாக விளங்குவதால் துறைமுகங்கள் அத்தியாவசியமானவை.




இலங்கையின் பிரதான மீன்பிடித் தளங்கள்

தேயிலை, றப்பர், தெங்குப் பொருட்கள் என்பனவற்றை இலங்கை ஏற்றுமதி செய்து, ஏராளமாக உணவு, உடை என்பனவற்றையும் மூலப் பொருட்களையும் இறக்குமதி செய்து கொள்கின்றது. வருடா வருடம் ஏறத்தாழ 24 இலட்சம் தொன் பொருட்கள் இறக்குமதியாகின்றன. அதேவேளையில் ஏறத்தாழ 6 இலட்சம் தொன் பொருட்கள் ஏற்றுமதியாகின்றன; எனவே, ஒவ்வோராண்டும் ஏறத்தாழ 30 இலட்சம் தொன் பொருட்களை ஏற்றுமதி இறக்குமதி செய்து கொள்கின்றது.

இலங்கையின் துறைமுகங்களென கொழும்பு, திருகோணமலை, காலி, காங்கேசன்துறை என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

## கொழும்பு

இந்து சமுத்திரத்தின் மத்தியில் கப்பல் போக்குவரத்தின் குவி மையமாகக் கொழும்புத்துறைமுகம் அமைந்திருக்கின்றது. கடந்த முந்நூற்றைம்பது ஆண்டுகளாக, அது உலக வர்த்தகத் துறைமுகமாக விளங்கி வருகின்றது;

போர்த்துக்கேயரின் ஆதிக்கத்தின் கீழ் இலங்கை இருந்தபோது, போர்த்துக்கேயர் கோட்டை இராச்சியத்துக்கு அருகே ஒரு துறைமுகம் தேவையெனக் கண்டு, கொழும்பைத் துறைமுகமாக்கிக் கொண்டனர். பின் பிரித்தானியரின் ஆட்சியின்கீழ் இலங்கை இருந்தபோது கொழும்புத் துறைமுகம் நன்கு விருத்தியடைந்தது. பிரித்தானியர் தமது பெருங்கப்பல்கள் தங்குவதற்கு வசதியாகக் கொழும்புத் துறைமுகத்தை விருத்தியாக்கினர். பிரித்தானியரினால் இலங்கையில் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்டதும், தாய்நாட்டிற்கு ஏற்றுமதி செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டது; அதனால் கொழும்புத் துறைமுகத்தை விரிவாக்கினர். இலங்கை சுதந்திரம் பெற்றதன் பின்னரும் கொழும்புத் துறைமுகத்தின் முக்கியத்துவம் குறையவில்லை; அதற்கு மாறாக அதிகரித்ததெனலாம்.




படம்: 29 கொழும்புத் துறைமுகம்

பு: பு: இ: 14

இயற்கையாகக் கொழும்பில் துறைமுக வசதிகளில்லை; அதனால், மூன்று பெரும் அணைகள் கட்டித் துறைமுகத்தினுள் கப்பல்கள் பாதுகாப்பாகத் தங்குவதற்கு வசதிகள் செய்துள்ளனர். புகைக்கப்பல்கள் தங்கிய காலத்திலிருந்து, எண்ணெய்க்

பல்கள், விளைந்தபடி செல்லுங் கப்பல்கள், முறைக்கப்பல்கள் முதலிய பெருங் கப்பல்கள் தங்கவேண்டிய காலம் ஏற்பட்டதால், அவற்றிற்கு இணங்கக் கொழும்புத் துறைமுகம் விரிவும், விருத்தியும் அடைந்துள்ளது. இத் துறைமுகத்தின் பரப்பளவு 640 ஏக்கர்களாம்; ஒரே நேரத்தில் ஏறக்குறைய 40 கப்பல்கள் தங்கமுடியும். பொருட்களை ஏற்றுவதற்கும், இறக்குவதற்கும் வசதியாக இறங்கு துறைகளும், பொருட்களைச் சேமித்து வைப்பதற்குச் சேமிப்பு நிலையங்களும் இலங்கையின் ஏனைய துறைமுகங்களிலில்லாதவளவு இங்கு அமைக்கப்பட்டுள்ளன.

ஒரு துறைமுகத்தின் விருத்தியும், முக்கியத்துவமும் அத் துறைமுகத்தின் பின்னணி நிலத்தினைப் பொறுத்துமுள்ளன. கொழும்புத் துறைமுகத்தின் பின்னணி நிலம் வளம் பொருந்தியதாக இருக்கிறது. தேயிலை, றப்பர், தெங்குப் பொருட்களின் ஏற்றுமதியிலேயே இலங்கையின் பொருளாதாரம் தங்கியிருப்பதனால், கொழும்புத் துறைமுகம் முக்கியமாக விளங்குகின்றது. பெருந் தோட்டங்களையும் கொழும்பையும் இணைத்து இருப்புப் பாதைகளும், வீதிகளும் நன்கு அமைக்கப்பட்டுள்ளன. அதனால் கொழும்புத் துறைமுகத்திற்கு இலகுவில் ஏற்றுமதிப் பொருட்களைக் கொண்டுவர முடிகின்றது. இலங்கையின் மொத்த ஏற்றுமதி, இறக்குமதியில் ஏறக்குறைய 65% கொழும்புத் துறைமுகத்தினூடாகவே நடைபெற்று வருகின்றது. மேலும் சுயெஸ் கால்வாயூடாக வரும் கப்பல்களும், நன்னம்பிக்கை முனையைச் சுற்றிவரும் கப்பல்களும், மலாக்காத் தொடுகடல் ஊடாகவரும் கப்பல்களும் கொழும்புத் துறைமுகத்தில் ஏற்றவும், இறக்கவும், நீர் பெறவும், எரிபொருள் பெறவும் தங்கிச் செல்கின்றன. இத்தகைய காரணங்களால் கொழும்பு, இலங்கையின் பிரதான துறைமுகமாக மதிப்பிடப்பட்டு வருகின்றது.

கொழும்பே இலங்கையின் தலைநகரமாக விளங்குகின்றது. இந்நகர் 13 சதுரமைல் பரப்பினையுடையது.

15-ம் நூற்றாண்டில் இருந்து இலங்கையின் வர்த்தகமையமாக விளங்கிவரும் கொழும்பு, தனது வர்த்தக முக்கியத்துவத்தை இன்றுவரை இழந்துவிடவில்லை. இலங்கையின் முக்கிய வர்த்தகப் பயிர்களான தேயிலை, றப்பர், தெங்குப் பொருட்கள் என்பனவற்றின் ஏற்றுமதியும், உணவுப் பொருட்கள், நெசவுப்பொருட்கள் இயந்திரப் பொருட்கள் முதலியனவற்றின் இறக்குமதியும் கொழும்பிலேயே நடைபெறுகின்றது. அதனால், இலங்கையின் ஏனைய பாகங்களிலுள்ள வர்த்தகர்கள் தமக்குத் தேவையான பொருட்களைக் கொழும்பிலிருந்தே பெற்றுக் கொள்கின்றனர்.

கொழும்புநகர் வர்த்தகமையம் மட்டுமல்ல; போக்குவரத்து மைய மும்கூட. இலங்கையின் ஒவ்வொரு பகுதியும் கொழும்பிளுேடு இணைக் கப்பட்டிருக்கின்றன. யாழ்ப்பாணம், திருகோணமலை, மலைநாடு என் பன எல்லாம் இருப்புப் பாதைகளினுலும், வீதிகளினுலும் தொடுக் கப்பட்டிருக்கின்றன.

இலங்கையின் போக்குவரத்து மையமாகவும் தலை நகரமாகவும் விளங்குவதனுல் தாம், கொழும்பு இலங்கையின் நிர்வாகமையமாக வும் விளங்கிவருகிறது. இலங்கையின் பாராளுமன்றம் இங்கேயே உள்ளது. இராணுவம், பொலீஸ் என்பனவற்றின் தலைமைத் தளங் களும் இங்கேயே உள்ளன. தபால், கல்வி முதலியனவற்றின் நிர் வாகத் தலைமைப் பீடங்கள் கொழும்பிலேயே உள்ளன.


இலங்கையின் பிரதான கைத்தொழில்கள் பல கொழும்பு நகரி லும், அதனைச் சூழ்ந்துள்ள பிரதேசங்களிலும் காணப்படுகின்றன. புதிதாக ஆரம்பமாகின்ற கைத்தொழில்களில் பெரும்பாலானவை கொழும்பு நகரத்திலேயே ஆரம்பிக்கப்படுகின்றன. கொழும்பு படிப் படியாகக் கைத்தொழில் நகரமாக வளர்ந்து வருகிறது. கொழும்பு நகரில் பலவின, பலமொழி, பலமத மக்கள் வாழ்கின்றனர். அவர் கள் வர்த்தகர்களாகவும், கைத்தொழில் நிலையங்களில் வேலை செய் பவர்களாகவும், அரசாங்க நிர்வாக உத்தியோகத்தர்களாகவும் உள் ளனர். மேலும், நாளுக்குநாள் சுற்றுப்புறங்களிலிருந்து மக்கள் இந் நகரிற்கு வந்து செல்கின்றனர். அத்தோடு யாத்திரீகர்கள் நாளாந் தம் இங்கு பிற நாடுகளிலிருந்து வந்து செல்கின்றனர்.

## காலித் துறைமுகம்

கொழும்புத் துறைமுகம் இலங்கையின் பிரதான துறைமுகமாக முக்கியத்துவம் பெறுவதற்கு முன்னர், காலியே இலங்கையின் முக் கிய துறைமுகமாக விளங்கியது. வரலாற்றுக் காலத்தில் அராபிய வணிகர்களும், சீன வர்த்தகர்களும் இத்துறைமுகத்திற்கூடாக வர்த் தகம் செய்திருக்கின்றனர். இந் நிலைமை ஓரளவு பிரித்தானியர் இலங் கையில் ஆட்சி செலுத்தத் தொடங்குமட்டும் இருந்தது. ஆனுல் பிரித்தானியரது காலத்தில் காலித் துறைமுகம் கவனிப்பாரற்றுக் கைவிடப்பட்டது.

காலித் துறைமுகத்தினூடாகத் தேங்காய்நெய், கயிறு, சித்திர நெல்லாப்புல்நெய், காரீயம், வாசனைத் திரவியங்கள் என்பன ஏற் றுமதி செய்யப்பட்டிருக்கின்றன. எனினும், பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையின் விருத்தி, காலித் துறைமுகத்தின் விருத்தியின்மையாக

அமைந்தது. ஏனெனில், பெருந்தோட்டங்கள்யாவும் கொழும்புடன் தான் இருப்புப்பாதைகளினுலும், வீதிகளினுலும் தொடுக்கப்பட்டிருந்தன. மேலும், பெருந்தோட்டங்களுள்ள மலை நாட்டிற்கும் காலிக்கும் வீதிகள் அமைப்பதிலும், மலைநாட்டிற்கும், கொழும்பிற்கும் வீதிகள் அமைப்பது இடவிளக்க வியலின்படி இலகுவானதாகவும், பொருளியலின்படி மலிவானதாகவும் இருந்தது. அதனுல், காலி தன் முக்கியத்துவத்தை இழந்தது. சுருக்கமாகக் கூறில் கொழும்புத் துறைமுகத்தின் அபிவிருத்தி, காலித் துறைமுகத்தின் விருத்தியைப் பாதித்தது எனலாம்.



படம்: 30 காலித்துறைமுகம்

அண்மைக் காலத்தில் காலித் துறைமுகத்தின் விருத்தியில் அரசாங்கம் கூடிய கவனம் எடுத்து வருகின்றது. கப்பல்துறை மேடைகளும் பாது காப்பு அணைகளும் கட்டப்படுகின்றன. கொழும்பில் இடநெருக்கடி நிலவுவதால், காலித்துறைமுகத்திற்கும் கப்பல்களை அனுப்பமுடியும், மேலும் காலியைத் தக்கதோர் மீன்பிடித் துறைமுகமாக்குவதற்கும் முயற்சிகள் நடைபெறுகின்றன.

## திருகோணமலைத் துறைமுகம்

திருகோணமலை ஓர் இயற்கைத்துறைமுகமாகும். கொட்டியாரக் குடாவினுள் இத்துறைமுகம் அமைந்துள்ளது. இத்துறைமுகம் ஆண்டு முழுவதும் காற்றின் தாக்கத்திலிருந்து, கப்பல்கள் பாதுகாப்பாகத் தங்க வசதியுள்ளதாக அமைந்துள்ளது.



படம்; 31 திருகோணமலைத் துறைமுகம்

இவற்றினுலேயே இலங்கையைத் தமதாதிக்கத்தில்வைத்திருந்தவர்கள். திருகோணமலையைத் தமது படைத் தளக்கேந்திரமாக வைத்திருந்துள்ளார்கள். பிரித்தானியர் இந்துசமுத்திரத்தில் ஆதிக்கம் செலுத்துவதற்குத் திருகோணமலையின் இராணுவ முக்கியத்துவத்தை உணர்ந்துள்ளனர். அதனுல்தான் இலங்கை தனது சுதந்திரத்தைப் பெற்றுக் கொண்டதன் பின்பும், பிரித்தானியர் திருகோணமலையில் தமது படைத் தளத்தை வைத்திருந்திருக்கிறுர்கள்.

திருகோணமலைத் துறைமுகம் நன்கு அபிவிருத்தியடைந்திருக்க வேண்டும். ஆனால், அதன் அபிவிருத்திக்குத் தடையாக சில ஏதுக்களுள்ளன: இத்துறைமுகத்தின் பின்னணி நிலம் செழிப்பு வாய்ந்ததாக இல்லை. பின்னணி நிலத்தில் ஏற்படுகின்ற வெள்ளம், சதுப்புநிலங்கள் என்பன இதன் வளர்ச்சிக்குத் தடையாகவுள்ளன.

## காங்கேசன்துறை

இலங்கையின் வடகரையோரத் துறைமுகமாகக் காங்கேசன்துறை விளங்கிவருகின்றது. காங்கேசன்துறை ஏற்றதோர் குடாவில் அமையவில்லை; வடகீழ்ப் பருவக் காற்றினால் கடல் கொந்தளிப்பு உள்ளது. அதனால், கப்பல்கள் தங்குவதற்குப் பாதுகாப்பான வசதிகளில்லை. மேலும், கப்பல்கள் கரைக்கு வந்து தங்கும் அளவிற்குக் கடல் கரையோரத்தில் ஆழமானதாயில்லை.

இன்று காங்கேசன்துறைத் துறைமுகத்தின் விருத்தியில் இலங்கை அரசாங்கம் கூடிய கவனம் எடுத்து வருகின்றது. கூடிய கவனமெடுப்பது, சில காரணங்களுக்காக அவசியமாகின்றது. அவை:




படம்: 32 காங்கேசன்துறை

(அ) இலங்கையின் உன்னதமான தொழிற்சாலையான சீமேந்துத் தொழிற்சாலை காங்கேசன்துறையிலமைந்திருக்கின்றது. புகையிரத மூலம் சீமேந்தை எடுத்துச் செல்வதிலும் கப்பல்கள் மூலம் இலங்கையின் ஏனைய பாகங்களுக்கு எடுத்துச் செல்வது சுலபம்.

(ஆ) ஒரு காலத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டில், சீமேந்துத் தொழிற்சாலைக்குத் தேவையான சுண்ணாம்புக்கல் குறைந்து போகலாம். அக்காலத்தில் ஏனைய விடங்களிலிருந்து சுண்ணாம்புக்கல்லை இறக்குமதி செய்வதற்குத் துறைமுகவசதி இன்றியமையாதது.

(இ) கொழும்புத் துறைமுகத்தில் ஏற்படும் இட நெருக்கடியைக் குறைக்க வேண்டுமானால், காங்கேசன்துறையைப் போதிய வசதிகளுள்ளதாக அமைக்க வேண்டும்.

பாக்குத் தொடுகடலை இந்திய அரசாங்கம் கப்பல்கள் போகக் கூடியளவிற்கு ஆழமாக்குவதற்குத் திட்டங்களை வகுத்துள்ளது. இத் திட்டம் நிறைவேறும்போது கொழும்புத் துறைமுகத்தின் முக்கியத்துவம் குறைய, இந்தியத் துறைமுகங்கள் மேலும் அதிக முக்கியத்துவத்தைப் பெறும். அவ்வேளையில் இலங்கையில் கொழும்புத் துறைமுகம் பெறும் இடத்தை, காங்கேசன்துறைத் துறைமுகம் நிச்சயமாகப் பெறும்.

# நகரங்கள்

இலங்கையின் உண்ணுட்டுப் போக்குவரத்து மையங்களாகவும், வர்த்தக, நிர்வாக மையங்களாகவும் நகரங்கள் விளங்கி வருகின்றன. கொழும்பு, காலி, திருகோணமலை என்பன குறித்து ஏற்கனவே விபரித்துள்ளோம். அனுராதபுரம், யாழ்ப்பாணம், இரத்தினபுரி, குருநாகல், கண்டி, நுவரெலியா என்பன ஏனைய முக்கிய நகர்களாக விளங்குகின்றன.

## கண்டி

இலங்கையின் வரலாற்றுப் புகழ்பெற்ற நகரம் கண்டியாகும். இது பழைய தலைநகர்களில் ஒன்ருக விளங்கியிருக்கின்றது. மலைகளினுலும், பள்ளத்தாக்குகளினுலும் பாதுகாக்கப்பட்ட நகராகக் கண்டி இருந்ததனுலேயே மலைநாட்டை ஆண்ட மன்னர்கள் கண்டியைத் தலைநகராகக் கொண்டிருந்தார்கள். இயற்கை அரண் கொண்ட நகராகக் கண்டி விளங்கியபடியினுற்ருன், இலங்கை முழுவதையும் தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவர முடிந்த போர்த்துக்கேயராலும் ஒல்லாந்தராலும் இந்நகரைக் கைப்பற்ற முடியவில்லை.

கண்டி நகரம் மகாவலி கங்கையின் வட வளைவினுள் அமைந்துள்ளது. கட்டுகாஸ்தோட்டை தொடக்கம் பேராதனை வரை மகாவலி கங்கை வளைவினுள் கண்டி நகர் அமைந்திருக்கின்றது. 60,000 மக்களுக்கு மேல் இங்கு வாழ்கின்றனர். சிங்கள மக்கள் கண்டி நகரை மகா நுவர என்று அழைக்கின்றனர்.


கண்டி இலங்கையின் புனித நகரமாக விளங்குகின்றது. இது பௌத்த மக்களின் வழிபாட்டிற்குரிய நகரமாகும். தலதா மாளிகை எனும் புத்த தந்ததாது உள்ள பௌத்த கோவில் கண்டி நகரிலுள்ள ஏரியின் கரையில் அமைந்திருக்கின்றது. பெரகரா எனும் திருவிழா வருடா வருடம் கொண்டாடப்பட்டு வருகிறது. இப்புனித நகரை நாடி நாளாந்தம் நூற்றுக்கணக்கான மக்கள் வருகின்ருர்கள்.

பிரித்தானியரது ஆட்சிக் காலத்தில் கண்டி நகர் மலை நாட்டின் ஏனைய பகுதிகளோடும், இலங்கையின் ஏனைய பகுதிகளோடும் முக்கியமாகக் கொழும்பினேடும் போக்குவரத்துப் பாதைகளினுல் இணைக்கப்பட்டது. மலை நாட்டின் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையின் விருத்தியே, கண்டி நகர் மலை நாட்டின் ஏனைய பகுதிகளோடும், கொழும்பினேடும் இணைக்கப்பட முக்கிய காரணமாகும். கண்டி போக்குவரத்துப் பாதைகளினுல் இணைக்கப்பட்டதும் இதன் முக்கியத்துவம் அதிகரித்தது.

கண்டி நகர் யாத்திரிகர்களைக் கவரும் இயற்கை அழகு நிறைந்த நகராகவுள்ளது. இலங்கையிற் பிரதான நகர்களில் அழகு நிறைந்தது கண்டி நகரே என்பதில் சந்தேகமில்லை. மகாவலிகங்கையின் வளை

வினுள், அழகிய ஏரி ஒன்றின் அருகே கண்டி நகர் அமைந்துள்ளது. கண்டி நகரின் இயற்கை அழகே யாத்திரிகர்களைக் கவர்ந்து, கண்டியை நாடிவர வைக்கின்றது.

மலை நாட்டின் மிகப் பெரிய வர்த்தக நகரமாக இது விளங்குகின்றது. பலவகையான பொருட்களை விற்பனை செய்யும் வர்த்தக மையமாக விளங்குவதால், இந்நகரத்திற்குச் சுற்றுப்புறங்களில் வசிக்கும் மக்கள் வந்து போகின்றனர். இலங்கையின் சிறந்த சந்தைக் கட்டிடம் இங்கேயே உள்ளது.




படம்: 33 கண்டி


கண்டி நகரத்தில் கைத்தொழில்கள் சில நடைபெறுகின்றன. பித்தளை, வெள்ளி, சிற்பவேலைகள் என்பன இங்கு சிறப்பாக நடைபெறுகின்றன. மரம் வெட்டிப் பலகையாக்கி விற்கும் தொழில் நன்கு விருத்தியடைந்திருக்கின்றது. சவர்க்காரம், பிஸ்கட் செய்தல், பழைய ரயரைப் புதிதாக்கல் எனும் தொழில்கள் விருத்தியடைந்திருக்கின்றன. செங்கட்டித் தொழில் எங்கும் பரந்து காணப்படுகின்றது.

கண்டி நகரின் முக்கியத்துவத்திற்கு இன்னோர் காரணம் இருக்கிறது. ஆசியாவிலேயே சிறந்த இயற்கைச் சூழலில் நிறுவப்பட்டிருக்கும் பல்கலைக் கழகம் எனப் போற்றப்படும் இலங்கைப் பல்கலைக் கழகம் கண்டி நகரிலிருந்து மூன்று மைல்கள் தூரத்தில் பேராதனையில் அமைக்கப்பட்டிருக்கிறது. இதுவும் கண்டியின் சிறப்புக்குக் காரணமாகும்.

## நுவரெலியா

மத்திய மலைநாட்டில் அமைந்துள்ள நுவரெலியா நகரம், அதனது காலநிலைச் சிறப்புக் காரணமாகவே விருத்தியடைந்தது எனலாம். ஐரோப்பியர் வாழ்வதற்கு விரும்பும் குளிரான காலநிலையை இது கொண்டிருக்கின்றது. சுகவாச நகரமாக வளர்ச்சியுற்றுள்ளது. நானுஓயா கிளை நதிக்கு வடக்கே அமைந்துள்ள இந்நகர் பிரித்தானியரது காலத்திலேயே இன்றைய நகரமாக உருவாகியது. நுவரெலியாவின் காலநிலைச் சிறப்போடு இந்நகரைச் சுற்றித் தேயிலைத் தோட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டதும் இதன் முக்கியத்துவம் கூடியது. சுற்


றுப்புறப்பகுதி மக்களதும், தோட்டத் தொழிலாளரதும் தேவைகளைப் பூர்த்திசெய்யும் நகர் நுவரெலியாவாகும். சுற்றிவர மலைகளைக் கொண்டு இயற்கை எழிலோடு இந்நகர் விளங்குவதும் இங்கு அமைந்துள்ள சிறந்ததோர் ஏரியும், குதிரைப்பந்தயத் திடலும், நல்ல பூங்காவும், உள்நாட்டு வெளிநாட்டு மக்களை நுவரெலியா நோக்கிக் கவர்ந்து இழுக்கின்றன. அம்மாவட்டத்தின் நிர்வாக, நீதிபரிபாலன நகரமாகவும் நுவரெலியா விளங்குகின்றது, கம்பளையிலிருந்தும், நானு ஓயாவிலிருந்தும், வெலிமடையிலிருந்தும், உடப்புசலாவையிலிருந்தும் வருகின்ற பிரதான வீதிகள் நான்கு நுவரெலியாவில் இணைகின்றன. மலை நாடாக விருப்பினும் நுவரெலியா, இலங்கையின் எல்லாப் பகுதிகளோடும் கடினமின்றித் தொடர்புகொள்ள முடிகின்றது.




படம்: 34 நுவரெலியா

## இரத்தினபுரி


தென்மேல் பிரதேசத்தில், உண்ணுட்டில் அமைந்துள்ள நகர்களுள் இரத்தினபுரி மிக முக்கியமானது. இரத்தினபுரியின் பெயரே அதன் சிறப்பினை எடுத்து விளக்குகின்றது. இரத்தினபுரி என்ருல் இரத்தினங்களுள்ள நகர் எனும் பொருள்படும்; இரத்தினபுரி நகர் இரத்தின அகழ்தலோடு விருத்தி பெற்றது. போர்த்துக்கேயர் காலத்திலேயே இரத்தினபுரி ஒரு நகராக விருத்தியடைந்தது. மத்திய மலைநாட்டிற்கும், றக்குவானைத் திரளிற்கும் இடையில் இரத்தினபுரி அமைந்துள்ளமை இதன் விருத்திக்கு வாய்ப்பாகவுள்ளது. கொழும்பு அப்புத்தளைப் பிரதான வீதி இரத்தினபுரியூடாகவே அமைந்துள்ளது. இந்நகர் இருப்புப் பாதையினுல் கொழும்பிஞேடு இணைக்கப்பட்டுள்ளது. றப்பர்த் தோட்டங்கள் இந்நகரைச் சூழ்ந்து விருத்தியுற்றுள்ளன. ஆதலால் இந்நகர் சுஜகரிக்கும் ஒரு நகராகவும் விளங்குகின்றது. இம்மாவட்ட நிர்வாநேராகவும், சந்தை நகராகவும் இரத்தினபுரி விளங்குகின்றது.




படம்: 35 இரத்தினபுரி

## குருநாகல்

வரலாற்றில் புகழ்பெற்ற பிறிதொருநகர் தென்மேல் பிரதேசத்திலுள்ள குருநாகலாகும். இந்நகரின் வளர்ச்சி உண்மையில் இதன் நிலையத்தினுலேயே ஏற்பட்டது. இந்நகரை அடுத்து அமைந்துள்ள குருநாகல், இப்பகல, எத்துகல எனும் பாறைத்தொடர்கள் இந்நகருக்குத் தக்க அரணாக அமைந்தபடியினுல் இது நகராக விருத்தியுற்றது. இந்நகருக்கு வடக்கேயுள்ள குளம் ஒன்று இந்நகருக்குத் தேவையான நீரை வழங்குகின்றது. அரண்கருதி உருவான சிகிரியா, யாப்பகூவை போன்ற பழைய நகர்கள் இன்று தம் நிலை இழந்தது போன்று குருநாகலும் தன் நிலை குன்றியிருக்கும். ஆனுல், இலங்கையின் போக்குவரத்து மையங்களுள் ஒன்ருகக் குருநாகல் அமைந்ததால் தான் இது வளர்ச்சியுற்றது. புத்தளம், நீர்கொழும்பு, கொழும்பு, கண்டி, தம்புளை, அனுராதபுரம் எனுமிடங்களில் இருந்து வரும் பிரதான வீதிகள் இங்கு ஒருங்குகின்றன. கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் இருப்புப் பாதையில் பிரதான ஒரு நிலையமாகவும் குருநாகல் உள்ளது. இம் மாவட்டத்தின் சுற்றுப்புறப் பகுதிகளுக்குக் குருநாகலே பிரதான சந்தை நகராகவுளது, வடமேல் மாகாணத்தின் நிர்வாக மையமாக விளங்கும் குருநாகல் நகரைச் சூழ்ந்து, பயிர்ச்செய்கையும் விருத்தியுற்று விளங்குகின்றது.



படம் 36 குருநாகல்


## யாழ்ப்பாண நகரம்

வடமாகாணத்தின் தலை நகரமாக விளங்கும் யாழ்ப்பாணம், இலங்கையின் இரண்டாவது பெரிய நகரமாகும். யாழ்ப்பாணக் குடாநாட்டின் நிர்வாக மையமாகவும் இது விளங்குகின்றது.

இலங்கையின் எப்பாகத்திலும் இல்லாதளவு போக்குவரத்து வசதிகள் யாழ்ப்பாணக் குடாநாட்டிலே உள்ளன. யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஒவ்வொரு மூலைமுடுக்குகளும் வீதிகளினுல் ஒன்றினேடு ஒன்று இணைக்கப்பட்டிருக்கின்றன. யாழ்ப்பாண நகரத்தை எடுத்துப் பார்க்கில், இங்கு வீதிகள் போதியளவு அகலமானவையாக இல்லாதிருப்பினும், போதியளவு வீதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. உள்நாட்டுப் போக்குவரத்து நன்கு அமைந்திருப்பது மாத்திரமன்றி,

இலங்கையின் ஏனைய பாகங்களோடும் நன்கு இணைக்கப்பட்டிருக்கின்றது. இருப்புப் பாதையினுல் கொழும்பினேடு நேரடியாக யாழ்ப்பாணம் தொடுக்கப்பட்டிருக்கின்றது. வீதிகளினுல் இலங்கையின் ஒவ்வொரு பாகங்களும் யாழ்ப்பாணத்தோடு தொடர்பு கொண்டுள்ளன.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் வர்த்தக மையமாக யாழ்ப்பாண நகரம் விளங்குகின்றது. கொழும்பிலிருந்து கொள்முதல் செய்யப்படும் பொருட்கள் யாழ்ப்பாண நகரில் விற்பனையாகின்றன; குடாநாட்டு மக்கள் இங்கேயே வந்து வாங்கிச் செல்கின்றனர். உள்நாட்டுப் பொருட்களுக்கும் யாழ்ப்பாண நகரம் சிறந்ததோர் சந்தையாக விளங்குகின்றது.



படம்: 37 யாழ்ப்பாணம்

ஆஸ்பத்திரி, தபால் கந்தோர், புகையிரத நிலையம், பாடசாலைகள் என்பன யாழ்ப்பாண நகரில் சிறப்பாக அமைந்திருக்கின்றன. தபால் கந்தோர், புகையிரத நிலையம் என்பன புதிதாக நவீன முறையில் கட்டப்பட்டிருக்கின்றன. இலங்கையிலேயே சிறந்த சில பாடசாலைகள் யாழ்ப்பாண நகரத்திலேயே உள்ளன.


யாழ்ப்பாண நகரில் இப்போது பல கைத்தொழிற்சாலைகள் உருவாகியுள்ளன. பெனியன் தொழிற்சாலை, சவர்க்காரத்தொழிற்சாலை, பிஸ்கட், இனிப்புத் தொழிற்சாலைகள், பழைய ரயரைப் புதுப்பிக்கும் தொழிற்சாலை எனப் பலவுள்ளன.

கொழும்பு நகரைப் போன்று யாழ்ப்பாணத்தில், பலவின. பலமொழி, பலமத மக்கள் வாழவில்லை. தமிழரே 99 வீதம் வாழ்கின்றனர். வர்த்தக நிலையங்களில் அதிகமானவை தமிழ் வியாபாரிகளுக்குச் சொந்தமானவையாகவுள்ளன. இன்று யாழ்ப்பாண நகரத்தில் 63,000 மக்களுக்கு மேல்வாழ்கின்றனர்.

யாழ்ப்பாண நகரம் இன்னும் நன்ருக விரிவடைய முடியும், கொழும்பு நகரம் கிழக்கே விரிவடைய வெள்ளம் தடையாகவும், கண்டி நகரம் விரிவடைய மலைகளும், பள்ளத்தாக்குகளும் தடையாக இருப்பனபோல யாழ்ப்பாண நகரம் விரிவடையத் தடைகள் எவையுமில்லை. யாழ்ப்பாண நகரம் வடக்கேயும் கிழக்கேயும் போதியளவு விரிவடைய இடமுண்டு.

## அநுராதபுரம்

வரலாற்றுக் காலத்தில், சிறப்புமிக்க ஒரு தலைநகரமாக விளங்கியது அனுராதபுரமாகும். அனுராதபுரம் இன்று வடமத்திய மாகாணத்தின் முக்கிய நகரமாக அமைந்து விளங்குகின்றது. வரலாற்றுப் பெருமையும், போக்குவரத்து விருத்தியும் இந்நகரை இன்று நவீன முறையில் விருத்தியடைய வைத்துள்ளன. இந்நகர் சூழவர வாவிகளைக் கொண்டுள்ளது. நுவர வீவா, திசவீவா, வசபக்குளம், புலங்குளம் என்பன இந்நகரைச் சூழவுள்ளன. இந்நகரத்தினூடாக மல்வத்து ஓயா பாய்கின்றது. இத்தகைய நீர் வளமே இந்நகரின் எழுச்சிக்குத் தூண்டுகோலாக இருந்துள்ளன. றுவான் வெலிசய, தூபராம, இசுறுமுனியா, இலங்காராம முதலிய வரலாற்றுப் பெருமை கூறும் கட்டிடங்களும், தபாற் கந்தோர், கச்சேரி, நீதிமன்றம் முதலிய நவீன நிர்வாகக் கட்டிடங்களும் இங்கு அமைந்துள்ளன, இந்நகரைச் சுற்றி நல்ல பயிர்ச்செய்கை நிலமுளது. கொழும்பிலிருந்து, வடக்கே போகும் பிரதான இருப்புப்பாதையின் முக்கியமான ஒரு புகையிரத நிலையமாக அனுராதபுரம் விளங்குகின்றது. மன்னர், புத்தளம், திருகோணமலை, தம்புளை எனும் இடங்களிலிருந்து வரும் பிரதான வீதிகள் யாவும் இங்கு ஒருங்கே இணைகின்றன. இத்தகைய ஒரு நிலையத்தில் அனுராதபுரம் அமைந்து விளங்குகின்றது.



படம்: 38 அனுராதபுரம்

## இலங்கையின் வர்த்தகம்

இலங்கை, தேயிலை, றப்பர், தெங்குப்பொருட்கள் எனும் வர்த்தகப் பொருட்களை ஏற்றுமதி செய்து, அரிசி, மா, பாற்பொருட்கள் எனும் உணவுப் பொருட்களை இறக்குமதி செய்து வருகின்றது. இலங்கையின் வருமானம் தேயிலை, றப்பர், தெங்குப்பொருட்களின் ஏற்றுமதியிலேயே தங்கியிருக்கின்றது.

அண்மை ஆண்டுகளில் இலங்கையின் ஏற்றுமதி அளவிலும் வகையிலும் கூடியிருக்கின்றது. ஆனல், ஏற்றுமதிப் பொருட்களின் விலை வீழ்ச்சியுற்றதால், எதிர்பார்த்தளவு வருமானத்தில் கூடவில்லை,

*1965-ஆம் ஆண்டு 194 கோடி ரூபாவிற்கு நமது பொருட்கள் ஏற்றுமதியாகின; அதேயாண்டு 147 கோடி ரூபாவிற்கு நாம் இறக்குமதி செய்து கொண்டோம். 1966-ல் 170 கோடி ரூபாவிற்கு ஏற்றுமதி செய்து 202 கோடிரூபாவிற்கு இறக்குமதி செய்தோம். 1967-இல் ஏற்றுமதி 169 கோடி ரூபாவாகவும், இறக்குமதி 173 கோடி ரூபாவாகவும், 1968-இல் ஏற்றுமதி 203 கோடியாகவும், இறக்குமதி 217 கோடியாகவும் இருந்தன. கடந்த ஆண்டு நாம் ஏற்றுமதி செய்த பொருட்களின் பெறுமதி 192 கோடி ரூபாவாகும்; இறக்குமதி செய்த பொருட்களின்பெறுமதி 254 கோடி ரூபாவாகும்.*

## ஏற்றுமதி

இலங்கையின் மொத்த ஏற்றுமதியில் தேயிலை, றப்பர், தெங்குப் பொருட்கள் எனும் மூன்றும் 90 சதவீதத்துக்கு அதிகமானவையாக வுள்ளன.

தேயிலையைப் பொறுத்தமட்டில் இலங்கையின் ஏற்றுமதி அளவு அண்மை ஆண்டுகளில் அதிகரித்துள்ளன. சராசரியாக இலங்கை வருடாவருடம் 45 கோடி இருத்தல் தேயிலையை ஏற்றுமதி செய்து வருகின்றது. (1961—43 கோடி இருத்தல்; 1962—45 கோடி இருத்தல்; 1969—44½ கோடி இருத்தல்) தேயிலையை இலங்கையிலிருந்து அதிகளவில் வாங்கும் நாடு ஐக்கிய இராச்சியமாகும். ஐக்கிய அமெரிக்கா, அவுஸ்திரேலியா, ஈராக், தென் ஆபிரிக்கா, கனடா, நியூசிலாந்து, ருஷியா, எகிப்து, அரேபியா, சிரியா, ஈரான் முதலிய நாடுகளும் இலங்கைத் தேயிலையை விரும்பி வாங்கிக்கொள்கின்றன. மத்திய கிழக்கு நாடுகள் இலங்கைத் தேயிலையை அண்மைக் காலத்தில் விரும்பி அதிகம் வாங்கிக்கொள்கின்றன.

இலங்கை ஒவ்வோராண்டும் சராசரியாக 20 கோடி இருத்தல் றப்பரை ஏற்றுமதி செய்து வருகின்றது. (1961—20 கோடி இருத்தல்; 1962—23 கோடி இருத்தல்; 1969—24 கோடி இருத்தல்) இன்று சர்வதேச சந்தையில் றப்பரின் விலை வீழ்ச்சியுற்றுள்ளது. அதனுல் வருமானம் எதிர்பார்த்தளவு கூடவில்லை. தேயிலை, றப்பர் என்பனவற்றின் விலை வீழ்ச்சிக்குக் காரணம் ஏனைய றப்பர் உற்பத்தி நாடுகளின் போட்டியேயாகும். தேவைக்கு அதிகமாக இப் பொருட்கள் சந்தையில் நிரம்பியதால், விலையில் வீழ்ச்சி ஏற்பட்டது.

இன்று இலங்கை றப்பரை வாங்கும் மிகப்பெரிய சந்தையாகச் சீனு விளங்குகின்றது. ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா, மேற்கு ஜேர்மனி, யப்பான், இத்தாலி முதலிய நாடுகளும் இலங்கையின் றப்பரை வாங்கிக்கொள்கின்றன.

தெங்குப்பொருட்களில் தேங்காய்நெய் ஆண்டொன்றுக்குச் சராசரியாக 20 இலட்சம் அந்தர் ஏற்றுமதியாகின்றது. ஐக்கிய இராச்சியம், கனடா, சீனு, ஜேர்மனி, இத்தாலி, அல்பானியா முதலிய நாடுகள் தேங்காய் நெய்யை இறக்குமதி செய்து கொள்கின்றன. கொப்பரு ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ 70 ஆயிரம் தொன் ஏற்றுமதியாகின்றது. பாகிஸ்தான், இந்தியா, பர்மா, சீனு, போலாந்து, முதலிய நாடுகள் கொப்பருவை இலங்கையிலிருந்து இறக்குமதி செய்து கொள்கின்றன.

இலங்கையிலிருந்து கொக்கோ சோவியத் சமவுடைமைக் குடியரசு, யப்பான், பிலிப்பைன், எகிப்து, ரூமேனியா முதலிய நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றது. இலங்கையிலிருந்து காரீயம் ஆண்டொன்றிற்குச் சராசரியாக 170 அந்தர் ஏற்றுமதியாகின்றது. ஐக்கிய இராச்சியம், அவுஸ்திரேலியா, இந்தியா, யப்பான் முதலிய நாடுகள் இறக்குமதி செய்து கொள்கின்றன. இலங்கையிலிருந்து பாக்கை இந்தியா, மாலைதீவு, ஐக்கிய அமெரிக்கா முதலிய நாடுகள் வாங்கிக் கொள்கின்றன.

இவற்றைவிட அண்மை ஆண்டுகளில் இலங்கையிலிருந்து பிஸ்கற்றுகள், சப்பாத்துகள், சேட்டுகள், பழவகைகள் என்பனவும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகி வருகின்றன.

## இறக்குமதி

இலங்கை ஒவ்வோராண்டும் ஏறக்குறைய 200 கோடி ரூபாய்களுக்கு தனக்குத் தேவையான பொருட்களை இறக்குமதி செய்து வருகின்றது.

இலங்கையின் இறக்குமதிப் பொருட்களில் உணவுப் பொருட்களே முக்கியம் பெறுகின்றன. அரிசி, கோதுமைமா, பால் உணவு, சீனி என்பன இறக்குமதியாகும் முக்கிய உணவுப் பொருட்களாகும். இலங்கை தனக்குத் தேவையான அரிசியில் 45 சதவீதத்தை பர்மா, சீனு, தாய்லாந்து முதலிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்து கொள்கின்றது. கடந்த ஆண்டு உள்ளூரில் ஏற்பட்ட நெல்லுற்பத்தியின் அதிகரிப்பால் இந்த இறக்குமதி வீதம் 23 ஆகக் குறைந்து, இவ்வாண்டு கூப்பனுக்கு இரண்டுகொத்து அரிசி கொடுக்கும் திட்டத்தால், மீளவும் 45 சதவீதமாக உயர்ந்துள்ளது.

இலங்கைக்குக் கோதுமைமாவை அதிகளவில் அவுஸ்திரேலியா, கனடா, பிரான்ஸ் முதலிய நாடுகள் ஏற்றுமதி செய்துவருகின்றன. அவுஸ்திரேலியாவே பிரதான ஏற்றுமதி நாடாகும். சீனி, சீனு, செக்கோசிலாவிக்கியா, போலாந்து, ருஷியா முதலிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றது. பாற்பொருட்களை அவுஸ்திரேலியா,

நெதர்லாந்து முதலிய நாடுகளும்; தகரமீன், கருவாடு என்பனவற்றை முறையே யப்பானும், மாலைதீவும் வழங்குகின்றன.

நிலக்கரி இறக்குமதியைப் பொறுத்த மட்டில் இறக்குமதியளவு அதிகரித்துள்ளது. சராசரியாக இலங்கை 80 இலட்சம் ரூபாய்களுக்கு நிலக்கரியை இறக்குமதி செய்து வருகின்றது. இந்தியா, தென்னு பிரிக்கக் குடியரசு ஆதியன அதிக அளவில் நிலக்கரியை இலங்கைக்கு ஏற்றுமதி செய்யும் நாடுகளாம்.

நெசவுப் பொருட்களின் இறக்குமதி பெருமளவில் குறைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. விலையுயர்ந்த நெசவுப் பொருட்களின் இறக்குமதி குறைக்கப்பட்டுள்ளது.

மோட்டார் வாகனங்கள், இயந்திரங்கள், சீமேந்து, பருத்தி—கம்பளி நெசவுப் பொருட்கள் எனும் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களையே ஐக்கிய இராச்சியம் இலங்கையில் இறக்குமதி செய்கின்றது. சீனவும், பர்மாவும் அரிசியையும், இந்தியா நிலக்கரி, வெங்காயம், மிளகாய், நெசவுப் பொருட்கள் ஆகியவற்றையும், ஜப்பான் பருத்தி நெசவுப் பொருட்களையும், ஐக்கிய அமெரிக்கா கோதுமை மா, மோட்டார் வாகனங்கள், றக்டர் முதலிய விவசாய யந்திரங்கள், மருந்து வகைகள் முதலியவற்றையும், ஐ. சோ. ச. கு. மண்ணெய், பெற்றோலியம் என்பனவற்றையும் இலங்கையில் இறக்குமதி செய்கின்றன.

# தென்மேல் தாழ்நிலம்

## இலங்கையின் இயற்கைப் பிரதேசங்கள்

இலங்கையின் புவியியலை முழுமையாகத் தொகுத்து ஆராய்வதிலும், சில இயற்கைப் பிரதேசங்களாக வகுத்து ஆராய்வது நன்றாகும். இலங்கையில் ஒரு பிரதேசத்தின் புவியியல் நிலைமைகள் (தரைத்தோற்றம், காலநிலை, தாவரம், பொருளாதார நடவடிக்கைகள் என்பன), இன்னொரு பிரதேசத்தின் புவியியல் நிலைமைகளோடு வேறுபடுகின்றன. ஒரு பிரதேசத்தின் சூழலுக்கும் மனிதனுக்கும் இடையிலுள்ள தொடர்பை, இன்னொரு பிரதேசத்தினின்றும் வேறுபடுத்திக் காட்டி ஆராயும் முறைதான் இயற்கைப் பிரதேச ஆராய்வாகும். இத் தன்மையில் இலங்கையினை முக்கியமாக நான்கு இயற்கைப் பிரதேசங்களாக வகுக்கலாம். அவையாவன;




படம்: 39 இலங்கையின் இயற்கைப் பிரதேசங்கள்


(அ) தென்மேல் தாழ்நிலம்
(ஆ) மலைநாடு
(இ) உலர்வலயத் தாழ்நிலம்
(ஈ) யாழ்ப்பாணக் குடாநாடு

இப்பிரிவுகள் மிக நுணுக்கமான பிரிவுகளல்ல. பொதுவாகப் பல புவியியலாளர்கள் இப் பிரிவுகளையே பெரிதும் கைக்கொண்டுள்ளனர். இப் பிரிவுகள் ஒவ்வொன்றையும் இனிச் சற்று விரிவாக ஆராய்வோம்.

## தென்மேல் தாழ்நிலம்

### நிலையம்

தென்மேல் தாழ்நிலம், பௌதிக பண்பாட்டியல்புகளைப் பொறுத்தமட்டில் இலங்கையின் ஏனைய பிரதேசங்களிலும் பார்க்கத் தனித்




படம்: 40 தென்மேல் தாழ்நிலம்.

தன்மை வாய்ந்தது. இத்தாழ்நிலம் வடக்கே தெதுறுஓயாவையும் தென்கிழக்கே வளவை கங்கையையும், கிழக்கே 1000 அடிச் சமவுயரக்கோட்டையும், மேற்கே கடலையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது.

## தரைத்தோற்றம்

தென்மேல் தாழ்நிலத்தின் தரைத்தோற்றம் குறித்து இரண்டாம் அத்தியாயத்தில் விரிவாக ஆராய்ந்துள்ளோம். ஆதலால், இவ்விடத்தில் சுருக்கமாக நோக்குவோம்: இத்தாழ்நிலம் வடக்கே அகன்று, தெற்கே ஒடுங்கியதாக அமைந்துள்ளது. இத்தாழ்நிலத்தின் உயர்ந்த பகுதிகள் றக்குவானை மலைகளைச் சூழ்ந்திருக்கின்றன. இத்தாழ்நிலத்தில் கரையோரத்திற்குச் சமாந்திரமாகப் பல பாறைத்தொடர்கள் அடுக்கடுக்காக அமைந்துள்ளன. இப்பாறைத்தொடர்கள் கடற்கரையை அடுத்து உயரம் குறைந்தனவாயும், மலைநாட்டை நோக்கிச் செல்லச் செல்லப் படிப்படியாக உயரம் கூடியனவாயும் உள்ளன. இப்பாறைத் தொடர்களைத் துண்டித்துக்கொண்டு, தெதுறுஓயா, மகாஓயா, களனிகங்கை, களுகங்கை, பெந்தோட்டை கங்கை, ஜின் கங்கை, நில்வளகங்கை, வளவகங்கை முதலிய நதிகள் பாய்கின்றன.


## மண்வகை

தென்மேல் தாழ்நிலத்தில் **மணல், வண்டல்மண், செம்பூரான் ஈரக் களிமண்** எனும் மூன்றுவகை மண்கள் உள்ளன. சிலாபம், குருநாகல், கொழும்பு எனும் நகர்களை இணைக்கும் முக்கோணப் பிரதேசத்தில் கரையோரமணல் காணப்படுகின்றது. மேலும், கொழும்பிலிருந்து மாத்தறைவரை ஏறத்தாழ 2½ மைல் அகலத்திற்குக் கரையோர மணல் அமைந்துள்ளது. இத் தாழ்நிலத்தின் நதி வடிநிலங்களில் வண்டல்மண் செறிந்திருக்கின்றது. தெதுறுஓயா, மகாஓயா, களனிகங்கை, ஜின்கங்கை முதலிய நதிகளின் கீழ்ப் பள்ளத்தாக்குகள் வெள்ளச் சமவெளிகளாகும். இவ் வெள்ளச் சமவெளிகளில் வண்டல் மண் செறிந்து பரந்துள்ளது. இவை தவிர்ந்த ஏனைய பகுதிகளில் செம்பூரான் ஈரக்களிமண் காணப்படுகின்றது. கேகாலை, களுத்துறை, இரத்தினபுரி மாவட்டங்களில் செம்பூரான் ஈரக்களிமண் பரந்துள்ளது. பாறைகளின் சிதைவினலான இம்மண்ணைக் கபூக்மண் என்று வழங்குவர்.

## காலநிலை

தென்மேல் தாழ்நிலத்தை இலங்கையின் ஈரலிப்பான தாழ்நிலம் என்று வழங்குவர். தென்மேல் தாழ்நிலம் 75 அங்குலங்களுக்குமேல் மழையை வருடச் சராசரியாகப் பெறுகின்றது. இப்பகுதிகள் பொது

வாக வருடம் முழுவதும் மழையைப் பெறுகின்றன. எந்த ஒரு மாதத்திலாவது 2 அங்குலங்களுக்குக் குறைவாக ஓரிடத்திலும் மழைவீழ்ச்சியில்லை. இத்தாழ் நிலத்தில் அதிக மழைவீழ்ச்சி மே, ஒக்டோபர், நவம்பர் மாதங்களில் கிடைக்கின்றது. பெப்ரவரி மாதமும் ஓகஸ்ட் மாதமும் தென் மேல் தாழ்நிலத்தில் மழைவீழ்ச்சி குறைந்த மாதங்களாம். இத் தாழ்நிலத்தில் அடங்கும் வட்டவளை, இரத்தினபுரி,




படம்: 41 மண்வகைகள்

அவிசாவளை எனும் பகுதிகள் 150 அங்குலங்களுக்கு அதிகமாக மழையைப் பெறுகின்றன. தென்மேல் தாழ்நிலம் அதிக மழையைப் பெறுவதற்கு மேல்வருவன காரணங்களாகும்:

(அ) இத் தாழ்நிலத்தில் வீசுகின்ற தென்மேல் பருவக்காற்று அதிக ஈரப்பதனையுடையது. இக்காற்றை மலைநாட்டின் மேற்

குப் பாகம் தடுத்து ஒடுங்க வைக்கின்றது. அதனுல், தென் மேல் தாழ்நிலம் அதிக மழைவீழ்ச்சியைப் பெறுகின்றது.

(ஆ) இத் தாழ்நிலத்தின் வருடச் சராசரி வெப்பநிலை 80° ப. தொடக்கம் 81° ப. வரையிருக்கின்றது. இப் பிரதேசத்தின் உச்ச வெப்பநிலை 86° ப. ஆகவும், தாழ் வெப்பநிலை 75° ப. ஆகவும் இருக்கின்றன. பகல் வேளைகளில் நிலவும் உயர் வெப்பநிலை காரணமாக ஆவியாகுதல் நிகழ்கின்றது. மாலை வேளைகளில் இடிமின்னலோடு மேற்காவுகை மழை பொழி கின்றது.

(இ) ஒக்டோபர், நவம்பர் மாதங்களில் இத் தாழ்நிலத்தில் சூரு வளிகளின் தாக்கம் நிகழ்கின்றது. அதனுல், இது அதிக மழையைப் பெறுகின்றது.

### இயற்கைத் தாவரம்

தென்மேல் தாழ்நிலத்தில் ஈரப்பருவக்காற்றுக் காடுகள் வளர்கின் றன. இக்காடுகளைத் தாழ்ந்த பிரதேச ஈரலிப்பான காடுகள் என் றும் வழங்குவர். இப்பிரதேசம் அதிக மழையைப் பெறுவதால் இங் குள்ள மரங்கள் நன்கு செழித்து வளர்கின்றன. சராசரியாக 200 அடி உயரமான மரங்கள் இக்காடுகளில் வளர்கின்றன. செடி, கொடி கள் மரங்களின் கீழ் அடர்த்தியாக வளர்கின்றன. இம்மரங்கள் என் றும் பசுமையானவை. இக் காடுகளில் ஓரளவு வைரமரங்களும், அதி களவில் மென்மரங்களும் காணப்படுகின்றன. கோரா, கிஞ, மிலா, நடுன், பலா, மலைவேம்பு முதலிய மரங்கள் இங்குள்ளன. இன்று பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்காக இக்காடுகளில் பெரும்பகுதி வெட்டி அழிக்கப்பட்டுள்ளன.


## பயிர்ச்செய்கை

அதிக மழை, உவப்பான மண்வகைகள் என்பன தென்மேல் தாழ் நிலத்தின் பயிர்ச்செய்கை விருத்திக்குத் தூண்டுதலாக இருக்கின்றன. தென்னை, நெல், றப்பர் எனும் மூன்று பயிர்கள் இத் தாழ்நிலத்தின் பயிர்ச்செய்கையில் முக்கியம் பெறுகின்றன.

### தென்னை

இலங்கையின் தென்னைத் தோட்டங்கள் பெரும்பாலும், தென் மேல் தாழ்நிலத்திலேயே காணப்படுகின்றன. இத் தாழ்நிலத்தில் கரை யோர மணல் பரந்துள்ள பிரதேசத்தில், தென்னைச் செய்கை முதலி டத்தைப் பெறுகின்றது. மணற் பாங்கான தரையும், சிறந்த பயன்

தரும் 80 அங்குல மழையும் இத் தாழ்நிலத்தில் தென்னைச் செய்கையை விருத்தியுற வைத்துள்ளன.




படம்: 42 பயிர்ச்செய்கை

இத்தாழ்நிலத்தில் சிலாபம் தொட்டு தங்காலைவரை தென்னை நன்கு வளர்கின்றது. சிறப்பாக சிலாபம், குருநாகல், கொழும்பு எனும் இடங்களை இணைக்கும் முக்கோணப் பகுதியில் தென்னைச் செய்கை முதன்மையானதாகவுள்ளது. இம்முக்கோணப் பகுதியில் பெரும்பாலும் பெரிய தென்னந்தோட்டங்கள் காணப்படுகின்றன. இப்பகுதியில் ஏற்றுமதிக்காகவே தென்னை வளர்க்கப்படுகின்றது. தென்னை உற்பத்திப் பொருட்களில் கொப்பரா இங்கு முக்கியம் பெறுகின்றது. தேங்காய் நெய், தேங்காய்த்துருவல் என்பன கொப்பராவிலிருந்து செய்யப்படுகின்றன. வர்த்தக நோக்குடன் கயிறுதிரித்தலும் இம்முக்கோணப் பகுதியில் நடைபெறுகின்றது.

கொழும்பிலிருந்து தங்காலை வரை கரையோரத்தை ஒட்டிய ஒடுங்கிய பகுதியில் வளர்க்கப்படும் தென்னை, குடிசைக் கைத்தொழில்களுக்காகவும், சிறு கைத்தொழில்களுக்காகவும் பயன்படுகின்றது. இங்கு காணப்படும் தோட்டங்களில் பெரும்பாலானவை சிறியனவாகும். இப்பகுதியிலுள்ள மரங்களிலிருந்து பெரும்பாலும் கள்ளே பெறப்படுகின்றது. வின்னாரி, சாராயம், சர்க்கரை என்பன கள்ளிலிருந்து உற்பத்தியாகின்றன.

## நெல்

தென்மேல் தாழ்நிலத்தின் வண்டல் மண் பிரதேசத்தில் நெற்செய்கை நடைபெறுகின்றது; ஏறத்தாழ 5,00,000 ஏக்கர் பரப்பில் இத் தாழ்நிலத்தில் நெற்செய்கை நடைபெற்று வருகின்றது. நில்வளகங்கை, பெந்தோட்டைகங்கை, ஜின்கங்கை ஆகிய நதிகளின் இருமருங்குகளிலும் நெல் வயல்கள் தொடர்ச்சியாக அமைந்துள்ளன. இந்த ஈரவலயத் தாழ்நிலத்தில் பெரும்பாலும் இருபோகம் நெற்செய்கை நடைபெற்று வருகின்றது. தென்மேல் பருவக்காற்றுடனை மழை நன்கு பெய்யத் தொடங்கியபின், ஒகஸ்ட் மாதத்திற்கும் ஒக்டோபர் மாதத்திற்கும் இடையில் விதைத்து, வடகீழ் பருவக்காற்றின் முடிவில் பெப்ரவரி, மார்ச் மாதங்களில் அறுவடைசெய்வர்; இது மகாபோகம் எனும் பெரும்போக நெற்செய்கையாகும். பின், மார்ச், ஏப்பிரல், மே மாதங்களில் விதைத்து தென்மேல் பருவக்காற்றின் முடிவில் ஜூலை, ஒகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் அறுவடைசெய்வர்; இது ஜாலபோகம் எனும் சிறுபோக நெற்செய்கையாகும்.

## பிரச்சனைகள்

ஈரலிப்பான தென்மேல் தாழ்நிலத்தில் நெற்செய்கைக்கு நீர்ப்பாய்ச்சல்வசதி தேவையில்லை. ஆனால் 'அதிக ஈரலிப்பே' இத்தாழ்நிலத்தில் நெற்செய்கையில், பெரும் இடர்பாடுகளைக் கமக்காரர்களுக்கு ஏற்படுத்தி விடுகின்றது. சில காலங்களில் பெருமழை காரணமாக ஏற்படும் வெள்ளப்பெருக்கால், அறுவடைக்குத் தயாராக இருக்கும் நெற்பயிர்கள் அழிவுற்றுப்போகின்றன. மேலும் வெள்ளப்பெருக்கால் நிகழும் கழுவுநீரின் விளைவாக செழிப்பான மண், அரித்துச் செல்லப்பட்டு விடுகின்றது. அதிகமழையின் விளைவாக வயல்களின் வரம்புகள், வாய்க்கால்கள் என்பன அடிக்கடி சேதமுறுகின்றன; களைகள் விரைவாக வளர்ந்து நெற்பயிருக்கு ஊறு தருகின்றன.

## றப்பர்

இத்தாழ்நிலத்தின் செம்பூரான் ஈரக்களிமண் பிரதேசத்தில் றப்பர் பிரதான பயிராக இருக்கின்றது. றப்பர்ப் பெருந்தோட்டங்

களைக் களுத்துறை, கேகாலே, இரத்தினபுரி மாவட்டங்களிலும், களனி கங்கைப் பள்ளத்தாக்கிலும் காணலாம். 2000 அடிக்குக் குறைவான உயரமுடைய பிரதேசங்களில் இது பயிரிடப்பட்டு வருகின்றது. ஏறத்தாழ 5,50,000 ஏக்கர்ப் பரப்பில் றப்பர் பயிரிடப்படுகின்றது.

ஈரலிப்பான இத் தாழ்நிலத்தில் மே, யூன், மாதங்களில் நிகழும் அதிக மழைவீழ்ச்சி றப்பர்ப்பால் எடுப்பதற்குத் தடையாக உள்ளது. பெப்ரவரி மாதத்தில் நிலவும் வறட்சிக் காலத்திலும் பால் சேகரிப்பது கிடையாது. இம்மாதத்தில் றப்பர் மரங்கள் இலைகளை உதிர்த்து ஓய்வு பெறுகின்றன. அத்தியாயம் 7-இல் றப்பர்ச் செய்கை குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

### ஏனைய பயிர்கள்

நீர்கொழும்பு, களுத்துறை, காலி, மாத்தறை ஆகிய பகுதிகளில் கறுவா பயிரிடப்படுகின்றது. கமுகு, சப்பிரகமுவா மாகாணத்தில் ஏராளமாகவும், தென்மேல் தாழ்நிலம் எங்கும் பரவலாகவும் செய்கை பண்ணப்படுகின்றது. சித்திர நெல்லாப்புல் மாத்தறை-அம்பாந்தோட்டைப் பாகங்களில் அதிகளவில் பயிரிடப்பட்டு வருகின்றது. புகையிலை குருநாகல் மாவட்டத்திலும், வாழை பொல்காவலைக்கும், றம்புக்கணைக்கும் இடையேயும் செய்கை பண்ணப்படுகின்றன. வத்தாளை தென்மாகாணத்திலும், அன்ஞுசி கம்பகாவிற்கும் மாவத்தைக்கும் இடையேயும், கரும்பு வத்தேகம, நாகொடப் பகுதிகளிலும் பயிரிடப்படுகின்றன.

## கனிப்பொருட்கள்


தென்மேல் தாழ்நிலத்தில் காரீயம், இரத்தினக்கற்கள், இரும்புத்தாது, படிகமணல், வெண்களி முதலிய கனிப்பொருட்கள் காணப்படுகின்றன.

### காரீயம்

குருநாகல், பொல்காவலை, கேகாலே எனும் பகுதிகளிலும், ராகமைக்குத் தெற்கேயும் அகலவத்தைக்கு வடக்கேயும், காலிதொடக்கம் அக்குறசை வரைக்கும், மொறவாக்கை-தெனியாயப் பகுதிகளிலும் காரீயம் ஏராளமாகக் கிடைக்கின்றது.

தென்மேற்கு இலங்கையில் காணப்படும் மிக முக்கியமான கனிப்பொருள் காரீயமாகும்; காரீயப் படிவுகள் இலங்கையில் அதிக அளவில் அகழ்ந்தெடுக்கப்பட்டு வருகின்றன. 1900—17 ஆண்டுகளில் ஏறத்தாழ 2 கோடி காரீயம் ஏற்றுமதி செய்யப்பட்டது. காரீயத்தை

மிக மலிவாக ஏற்றுமதி செய்ததால் 1921-ம் ஆண்டிற்குப்பின் இத னுற்பத்தியில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டது. ஆனுல், 1943-ம் ஆண் டிற்குப்பின் இது தனது பழையவிடத்தைப் பெற்றுள்ளது. யப்பான்,




படம்: 43 தென்மேல் தாழ்நிலத்தின் கனிப்பொருட்கள்

ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி முதலிய நாடு கள் காரீயத்தை வாங்கி வருகின்றன. இலங்கையில் இக் காரீயத்தை உற்பத்திகளுக்குப் பயன்படுத்துவது குறைவு. காரீயம் தீந்தைகளுக் கும் மின்சாரத் தடுப்பிற்கும், வேறும் பல தேவைகளுக்கும் மிக அத்தியாவசியமானது. இன்று தென்மேல் பகுதியில் தீந்தைக் கைத் தொழில் விருத்தியுற்றபடியினுல் ஓரளவு காரீயம் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

## இரத்தினக்கற்கள்

இரத்தினபுரி, பெல்மதுளை, பலாங்கொடை, அவிசாவலை ஆகிய இடங்களில் இரத்தினக்கற்கள் ஏராளமாகக் கிடைக்கின்றன.

வரலாற்றுக் காலத்திலிருந்தே இலங்கை இரத்தினக் கற்களுக்குப் புகழ்பெற்றதாகும். தென்மேல் பகுதியிலுள்ள இரத்தினபுரிப் பகுதி இக்கற்களுக்கு முதலிடமாக விளங்குகின்றது. வைரம், வைடூரியம் தவிர்ந்த பல்வகை விலையுயர்ந்த கற்கள் இங்கு அகப்படுகின்றன. அவை இப்பகுதியில் வாழும் முஸ்லீம்களால் பட்டை தீட்டப்பட்டு விற்பனையாகின்றன.

## இரும்புத்தாது

தென்மேல் தாழ்நிலத்தில் 50,00,000 தொடக்கம் 65,00,000 தொன்வரை இரும்புத்தாதுப் படிவுகள் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. தெலா, ககாவத்தை, காலவாணு, றக்வானை, எகிலியக்கொடை, அம்பலாங்கொடை, அக்குறச-தெனியாய, தம்பகண்டா முதலிய பகுதிகளில் இரும்புத்தாதுப் படிவுகள் உள்ளன.

இரும்புத்தாதினைப் பொறுத்தமட்டில் முற்றுகப் பயன்படுத்தப்படவில்லை என்றே கொள்ளவேண்டும். இரும்புத்தாதினைப் பயன்படுத்தக் கூடியளவிற்கு நிலக்கரிபோன்ற வலுவோ, பெருங் கைத்தொழில்களோ இலங்கையில் இல்லை. எனினும், நீர்மின் வலுவின் துணையுடன் ஒருவெல எனுமிடத்தில் இரும்புருக்கு ஆலையொன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆலை இங்குள்ள இரும்புத்தாதை பயன்படுத்தும்.

## படிகமணல்

கரையோரப் பகுதிகளில் சிலாபம் தொடக்கம் நீர்கொழும்பு வரை படிகமணல் காணப்படுகின்றது.

காலஓயா, களனிகங்கை, களுகங்கை போன்ற நதிகளின் முகத்தில் படிகமணல் காணப்படுகின்றது. தென்மேல்பருவக் காற்றினுல் இவை தென்மேல் கரையோரத்தில் குவிக்கப்படுகின்றன. ஆனுல் ஆவணியளவில் கடலுள் அள்ளப்பட்டுச் சென்று விடுகின்றன. இவற்றை நன்கு சேகரித்துப் பயன்படுத்துவது அவசியம். ஆனுல் இவை பயன்படாது வீணே ஒழிகின்றன.

## வெண்களி

நீர்கொழும்பிற்கும் காலிக்கும் இடையே வெண்களி உட்படப் பலவகையான களிகள் காணப்படுகின்றன.

ஒரு கோடி தொன்வரை வெண்களியுளது எனக் கணிக்கப்பட்டுள்ளது. போரலஸ்கமுவாவில் வெண்களி சுத்திகரிக்கப்பட்டு நீர் கொழும்புப் பீங்கான் தொழிற்சாலைக்கு அனுப்பப்படுகின்றது. செங்கல், ஓடு முதலியனவும் இதனால் செய்யப்பட்டு வருகின்றன. எனினும் உண்ணாட்டில் இதனை முற்றாகப் பயன்படுத்தவில்லை என்றே கூற வேண்டும்.

நீர்கொழும்புக் கடல்நீரேரியை அடுத்திருக்கும் முத்துராஜவெல சதுப்பு நிலத்தில் முற்றாநிலக்கரிப் படிவுகள் உள்ளன.

## மீன் பிடித்தல்

மீன் பிடித்தல் தென்மேல் தாழ்நிலங்களின் கரையோரங்களில் நடைபெறுகின்றது. அம்பலாங்கொடை, பலப்பிட்டி, மொறட்டுவை, முகத்துவாரம், நீர்கொழும்பு, சிலாபம் என்பன பிரதான மீன்பிடித்தளங்களாம்.

## கைத்தொழில்கள்

இலங்கையின் கைத்தொழில் வலயமெனத் தென்மேல் தாழ்நிலத்தைக் கூறலாம். இப்பிரதேச நகர்கள் சிலவற்றில் நடைபெறும் கைத்தொழில்கள் வருமாறு:

| | | |
|---|---|---|
| (1) கொழும்பு | — | நெசவு, தோல், மின்சார உபகரணங்கள், சவர்க்காரம், சிகரெட், குடை, தீந்தை, பிளாஸ்ரிக் பொருட்கள், பிஸ்கற் என்பன வற்றை உற்பத்தி செய்யும் ஆலைகள். |
| (2) பங்கதெனியா | — | ஓட்டுத்தொழிற்சாலை |
| (3) நாத்தாண்டி | — | கண்ணாடித் தொழிற்சாலை |
| (4) திவுலப்பிட்டி | — | நெருப்புப்பெட்டி |
| (5) நீர்கொழும்பு | — | மட்பாண்டத் தொழிற்சாலை |
| (6) வியாங்கொடை | — | நெசவு ஆலை |
| (7) யாஎல | — | உரத்தொழிற்சாலை, கைத்தொழிற் பேட்டை |
| (8) களனியா | — | ரயர் தொழிற்சாலை |
| (9) கோமகம | — | பற்றறி, சைக்கில், இரும்புருக்காலை (ஒரு வெல) |
| (10) இரத்மலானை | — | ஆடைகள், பிஸ்கட், தோற்பொருட்கள், பற்றறி, பிளாஸ்ரிக் பொருட்கள் |
| (11) மகரகம | — | பெனியன், கம்பளம், ஆடைகள், துவாய். |
| (12) களுத்துறை | — | சாராயம் |
| (13) பெந்தோட்டை | — | தோற்பொருட்கள் |

(14) நேபொட — சைக்கில் ரயர், ரியூப், குளிர்சாதனப் பெட்டிகள்
(15) பலப்பிட்டி — பெனியன், துவாய்
(16) ஜின்தோட்டை— ஓட்டுப்பலகை ஆலை
(17) காலி — சீமேந்துஆலை, நெருப்புப்பெட்டி
(18) மாத்தறை — ஓட்டுத்தொழிற்சாலை

## குடிப்பரம்பல்

தென்மேல் தாழ் நிலத்திலேயே இலங்கையின் குடித் தொகையில் பெரும் பங்கினர் வாழ்கின்றனர். மேல் மாகாணத்தில் 28,00,000க்கு அதிகமான மக்களும், தென் மாகாணத்தில் 14,00,000க்கு அதிக மான மக்களும், சப்பிரகமுவா மாகாணத்தில் ஏறத்தாழ 11,00,000 மக்களும் பரவியுள்ளனர்.

இப்பிரதேசத்தில் குடித்தொகை அதிகமாகக் காணப்படுவதற்குத் தலைநகரம், பிரதான துறைமுகம், பயிர்ச் செய்கைக்கு உகந்த கால நிலை, கைத்தொழில் நிலையங்கள், வர்த்தக நிலையங்கள் ஆகியவை இருப்பது காரணங்களாம்.

தென்மேல் தாழ்நிலத்தின் குடிப்பரம்பலை நோக்கில் சதுர மைல் ஒன்றிற்கு 1000 மக்களுக்கு அதிகமாக வாழுமிடம் நீர்கொழும்பில் இருந்து அம்பலாங்கொடை வரை கரையோரமாக அமைந்துள்ளது. சதுர மைல் ஒன்றிற்கு 250 தொடக்கம் 1000 வரை மக்கள் வாழும் பிரதேசங்கள் தென்னை, நெல், றப்பர் ஆகியன பயிரிடப்படும் விவ சாயப் பிரதேசங்களாகவுள்ளன. சதுர மைல் ஒன்றிற்கு 250-க்குக் குறைவாக மக்கள் வசிக்கும் பிரதேசங்களென சப்பிரகமுவா மாகா ணத்திலும், தென் மாகாணத்திலும் உள்ள காட்டுப் பிரதேசங்களைக் கூறலாம். போக்குவரத்து வசதிகள் பெரும்பாலும் இல்லாமல் இருக் குமிடங்களில் குடியடர்த்தி குறைவாக இருக்கின்றது.

தென்மேல் தாழ்நிலத்தில் பலவினமக்கள், பலமொழிமக்கள், பல மத மக்கள் வாழ்கின்றனர்; [redacted]

## அத்தியாயம்: 15

# மலைநாடு

## தரைத்தோற்றம்

மலைநாட்டின் தரைத்தோற்றம் குறித்து இரண்டாம் அத்தியாயத்தில் விரிவாக ஆராய்ந்துள்ளோம். அதனை மீண்டும் நோக்குக. இவ்வத்தியாயத்தில் சுருக்கமாக நோக்குவோம்.

இலங்கையின் மத்தியிலுள்ள மலைநாடு 1000 அடி சமவுயரக் கோட்டிற்கு மேற்பட்ட பகுதியாகும். இம் மலைநாட்டின் தரைத் தோற்றத்தை ஏ. டி. பப்டிஸ்ற் என்பார் மூன்று உபபிரிவுகளாக வகுத்துள்ளார். அவை:

(அ) மத்திய மேட்டுநிலம்

(ஆ) வடகிழக்கேயுள்ள நக்கிள்ஸ் மலைகள்

(இ) தென்மேற்கேயுள்ள றக்குவானை மலைகள்

### மத்திய மேட்டுநிலம்

மகாவலிகங்கைப் பள்ளத்தாக்கிற்கும் களுகங்கைப் பள்ளத்தாக்கிற்கும் இடைப்பட்ட மலைநாட்டின் பெரும்பகுதியை மத்திய மேட்டு நிலம் எனலாம். இம் மத்திய மேட்டுநிலத்தின் அதி உயரம் 8281 அடி உயரமான பேதுருதாலகாலை மலைச்சிகரமாகவுள்ளது. இம் மேட்டு நிலத்தில் 5000 அடிகளுக்கு மேற்பட்ட பகுதி, நங்கூரவடிவமான உயர் பகுதியாகக் காட்சி தருகின்றது. இந்த உயர் பகுதியிலேயே பேதுரு தாலகாலை, கிரிகாலப்பொத்தை, தோட்டப்பாலை, சிவனொளிபாதம் முதலிய மலைகள் அமைந்துள்ளன. நங்கூர வடிவமான உயர்பகுதியின் தென்பகுதி குத்தான சரிவினை உடையதாக விளங்குகின்றது. இக் குத்தான சரிவினை தென்மலைச்சுவர் என வழங்குவர். இத் தென்மலைச் சுவரில் அப்புத்தளைக் கணவாய், எல்ல கணவாய் என்பன அமைந்துள்ளன.

மத்திய மேட்டுநிலத்தின் மேற்குப் பாகத்தில் கற்றன் மேட்டுநிலமும், கிழக்குப் பாகத்தில் ஊவா வடிநிலமும் அமைந்துள்ளன. இவை இரண்டும் 3000 அடிகளுக்கு மேற்பட்டன. கற்றன் மேட்டுநிலத்தில் மகாவலிகங்கை உற்பத்தியாகின்றது. ஊவாவடிநிலத்தில் மகாவலி கங்கையின் கிளை நதிகளான உமாஓயா, வதுளைஓயா, லொக்கல்ஓயா

என்பன உற்பத்தியாகின்றன. ஊவா வடிநிலத்தை வெலிமடை மேட்டுநிலம் எனவும் கூறுவர். கற்றன் மேட்டுநிலத்திற்கு வடமேற்கே தொலஸ்பாகே மேனிலம் அமைந்துள்ளது. ஊவா வடிநிலத்திற்குக் கிழக்கே மதுள்சீமாத் தொடரும், கிழக்கு மேடையும் காணப்படுகின்றன.

மத்திய மேட்டுநிலத்தின் தென்பாகம் ஒடுங்கிய ஒரு மேட்டுநிலமாகும். இதனைத் தென்மேட்டுநிலம் (கொஸ்லாந்தை மேட்டுநிலம்) என்பர். இம் மேட்டுநிலம் கிழக்கு மேற்காக நீண்டு அமைந்துள்ளது.

### நக்கிள்ஸ் மலைகள்

நக்கிள்ஸ் மலைகள் என்ற பிரிவில், கண்டி மேட்டுநிலம், நக்கிள்ஸ் மலைத்தொகுதி, மாத்தளை மலைகள் எனும் தரைத்தோற்ற உறுப்புக்கள் அடங்குகின்றன. கண்டி மேட்டுநிலம் 2000 அடிகளுக்கு மேற்பட்டது. இம் மேட்டுநிலத்தின் மேற்குப் பகுதியில் அளகல்லைக் குன்றும், கடுகணுவைக் கணவாயும், கலகெதர, பலனை மலையிடை வெளிகளும் அமைந்துள்ளன. நக்கிள்ஸ் மலைத்தொகுதியில் வடமேற்கு-தென்கிழக்காகப் பாறைகள் அமைந்துள்ளன. இம்மலைகளின் சிகரங்கள் கையிலுள்ள மொளிகளைப்போல அடுக்கடுக்காக அமைந்திருப்பதால் நக்கிள்ஸ் என்ற பெயர் வழங்கப்பட்டது என்பர். மாத்தளை மலைகள் விசிறிவடிவில் வடதாழ்நிலத்துள் விரிந்து செல்கின்றன.


### றக்குவானை மலைகள்

மத்திய மலைநாட்டின் தென்மேல் பாகத்தில், தனித்ததோர் தரைத்தோற்ற உறுப்பாக றக்குவானை மலைத்திணிவு அமைந்துள்ளது. றக்குவானை மலைகள் 1000 அடிகளுக்கு மேற்பட்டன. அதன் அதி உயரம் 4545 அடி உயரமுடைய பெரகலச் சிகரமாகவுள்ளது. றக்குவானை மலைத்திணிவின் கிழக்குப் பாகத்தில் புளுத்தோட்டை மேட்டுநிலமுள்ளது. றக்குவானை மலைத்திணிவிலிருந்து இணையான பாறைத் தொடர் வடமேற்காயும் கிழக்காயும் அமைந்திருக்கின்றன.

## காலநிலை

மலைநாட்டின் காலநிலை பெருமளவு தென்மேல் சமவெளியின் காலநிலையை ஒத்திருக்கின்றது. மழைவீழ்ச்சி வருடம் முழுவதுமுண்டு. வருட மழை வீழ்ச்சியளவு 75 அங்குலங்களுக்கு அதிகமாகும். சிவனொளிபாதமலை வட்டவளைப் பகுதியில் மழை வீழ்ச்சியளவு 200 அங்குலங்களுக்கு அதிகமானதாகக் காணப்படுகின்றது. ஜூன் மாதமும் நவம்பர் மாதமும் அதிக மழை வீழ்ச்சியுள்ள மாதங்களாம். ஆகஸ்ட் மாதமும் பெப்ரவரி மாதமும் மழை வீழ்ச்சி குறைவான மாதங்களாம்.

மலைநாட்டின் வெப்பநிலை உயரத்திற்கேற்ப வேறுபடுகின்றது. உதாரணமாக வருடச் சராசரி வெப்பநிலை 1000 அடி உயரமான விடங்களில் 77°ப. ஆகும். 3000 அடி உயரமான விடங்களில் 70°ப.




படம்: 44 மலைநாட்டின் தரைத்தோற்ற உறுப்புகள்

ஆகும். 6000 அடி உயரமான வீடங்களில் 60°ப. ஆகும். கற்றன் மேட்டு நிலத்தின் வருடச் சராசரி வெப்பநிலை 70°ப. ஆகவுள்ளது. கண்டி மேட்டுநிலத்தின் வருடச் சராசரி வெப்பநிலை கற்றன் மேட்டு நிலத்தில் உள்ளதிலும் சற்று அதிகமானதாக இருக்கின்றது. கண்டியின் வருடச் சராசரி வெப்பநிலை 75°ப ஆகவும், நுவரெலியாவின் சராசரி வெப்பநிலை 60°ப. ஆகவும், வதுளையின் சராசரி வெப்பநிலை 72°ப. ஆகவும் உள்ளன.

## காலநிலைப்பிரிவுகள்

காலநிலையை அடிப்படையாகக்கொண்டு மலைநாட்டை இரு பிரிவுகளாகப் பிரிக்கமுடியும். அவையாவன:


(அ) ஈரவலய மலைநாடு

(ஆ) உலர்வலய மலைநாடு

மலைநாட்டின் மேற்குப்பாகம் அதிக மழை வீழ்ச்சியைப் பெறுவதால் ஈரவலய மலைநாடு என்றும், கிழக்குப்பாகம் மிகக் குறைந்த மழை வீழ்ச்சியைப் பெறுவதால் உலர்வலய மலைநாடு என்றும் வகுக்கப்படுகின்றன. அப்புத்தளை, பட்டிப்பொலை, நுவரெலியா, கண்டி, மாத்தளை ஆகிய பட்டினங்களை இணைக்கும் கோடு ஈரவலய மலைநாட்டினதும், உலர்வலய மலைநாட்டினதும் எல்லையாக அமைந்துள்ளது.

மலைநாட்டின் மேற்குப்பாகம் ஈரலிப்பான காலநிலையையும், கிழக்குப் பாகம் வறண்டகால நிலையையும் அனுபவிப்பதற்குப் பல காரணங்களுள்ளன. அவையாவன:

ஈரலிப்பான தென்மேல் பருவக் காற்று மலைநாட்டின் மேற்குப் பாகத்திற்கு அதிக மழையைக் கொடுக்கின்றது. தென்மேல் பருவக் காற்றினைத் தடுத்து, மலைநாட்டின் மேற்குப்புறம் ஒடுங்கச் செய்வதால் இப்பகுதியில் அதிக மழைவீழ்ச்சி நிகழ்கின்றது. மேற்குப் பாகத்தில் ஈரலிப்பை இழந்த தென்மேல் பருவக்காற்று, மலைநாட்டின் கிழக்குப் பக்கத்தில் வறண்ட காற்ருக வீசுவதால், இப்பகுதி மழையை இக்காற்றினல் பெறுவது கிடையாது. அதாவது காற்றுப் பக்கத்தில் இருப்பதால் மலைநாட்டின் மேற்குப் பாகம் அதிக மழையையும், காற்றெதுக்கில் இருப்பதால் கிழக்குப் பாகம் குறைவான மழையையும் பெற்று, மேற்கு ஈரலிப்பானதாயும் கிழக்கு உலர்ந்ததாயும் விளங்குகின்றன.




படம்: 45 மலைநாட்டின் காலநிலைப் பிரிவுகள்

அதனல், ஈரவலய மலைநாடு ஆண்டு முழுவதும் மழையைப் பெறுகின்றபோதிலும், ஜூன்

மாதம் தொட்டு நவம்பர்மாதம் வரை அதிக மழை வீழ்ச்சியைப் பெறுகின்றது. இங்கு வருடமழை வீழ்ச்சியளவு 75 அங்குலங்களுக்கு அதிகமாகும். உலர்வலய மலைநாடு நவம்பர் மாதம் தொட்டு ஜனவரி மாதம் வரை வடகீழ்ப் பருவக்காற்று வீசும்போதுதான் மழையைப் பெறுகின்றது; வருடச் சராசரி மழை வீழ்ச்சி இங்கு ஏறக்குறைய 60 அங்குலங்களாகும். தென்மேல் பருவக்காற்று வீசும்போது உலர்வலய மலைநாடு வறண்டதாக விளங்குகின்றது. வெப்பநிலையைப் பொறுத்த மட்டில் உயரத்திற்கு ஏற்ப மலைநாட்டில் வெப்பநிலை வேறுபட்டதாக, பொதுவாக தாழ்நிலங்களிலும் குறைவாக—இருப்பினும் உலர்வலய மலைநாட்டின் குறைவான மழைவீழ்ச்சி இப்பகுதியை வறண்டதாக்கியுளது.

## இயற்கைத்தாவரம்

மலைநாட்டின் மேற்குப்பாகம் ஈரலிப்பான மலைப்பிரதேசக்காடுகளையும், கிழக்குப்பாகம் பத்தனைப் புல்வெளிகளையும் இயற்கைத் தாவரமாகக் கொண்டிருக்கின்றன.

மலைப்பிரதேசக் காட்டு மரங்கள் உயரம் குறைந்தனவாயும், கிளைகள் அதிகம் உள்ளனவாயும் இருக்கின்றன. சிவனொளிபாதமலையிலும் பேதுருதாலகாலைத் தொடரிலும் தொடக்கத்துக்காடுகளைக் காணக் கூடியதாக இருக்கின்றது. ஏனைய பகுதிகளிலுள்ள காடுகள் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைக்காக வெட்டி அழிக்கப்பட்டுள்ளன.

### பத்தனை

பத்தனைப் புல்வெளிகள் ஏறக்குறைய 250 சதுர மைல் பிரதேசத்தில் காணப்படுகின்றன. பத்தனைப் புல்வெளிகளை ஈரலிப்பான பத்தனைப் புல்வெளிகள் என்றும், வரண்ட பத்தனைப் புல்வெளிகள் என்றும் இரு பிரிவுகளாகப் பிரிப்பர். ஈரலிப்பான பத்தனைப் புல்வெளிகளைப் பேதுரு-தோட்டப்பாலைத் தொடரின் மேற்குச் சரிவுகளிலும், அதனுயர்ந்த பாகங்களிலும் காணலாம். வரண்ட பத்தனைப் புல்வெளிகள் ஊவா வடிநிலத்தில் காணப்படுகின்றன.

உலர்மலைநாட்டிலேயே இப் புல்வெளிகள் காணப்படுகின்றன. பத்தனைப் புல்வெளிகள் இங்கு காணப்படுவதற்குச் சில புவியியற் காரணிகள் உள்ளன. அவை:

(1) மலைநாட்டின் காற்றொதுக்கிலேயே பத்தனைப் புல்வெளிகளுள்ளன. அதனால். பெரிய மரங்கள் வளர்வதற்குப் போதிய மழைவீழ்ச்சி கிடைப்பதில்லை.

(2) இங்கு வீசுகின்ற வரண்ட காற்று வேகமானதாக உள்ளது. அதனால், மரங்கள் நிலைத்து நிற்க முடியாதுள்ளன.

(3) இப்பகுதியின் மண் மூன்று நான்கு அடிமட்டுமே தடிப்பானது, அதன்கீழ் அடித்தளப்பாறைகள் உள்ளன. அதனால், பெரி மரங்கள் வேரூன்றி வளர முடியாதுள்ளது; இவை காரணமாகப் புற்களே இங்கு வளர்ந்து நிலைத்து நிற்கின்றன.

## பயிர்ச்செய்கை

மலைநாட்டின் பயிர்ச்செய்கையில் தேயிலை, றப்பர், கொக்கோ, நெல் என்பன முக்கிய பயிர்களாகவுள்ளன.

### தேயிலை

மலைநாட்டின் மிக முக்கியமான பயிர் தேயிலையாகும். தேயிலைத் தோட்டங்கள் மலைநாட்டின் மத்திய பாகத்திலும், தென் கீழ்ப்பாகத்திலும் அதிக அளவில் காணப்படுகின்றன: மாத்தளை, கண்டி, தலவாக்கொல்லை, நாவலப்பிட்டி, கற்றன், மஸ்கெலியா, நுவரெலியா, வதுளை, பண்டாரவளை, வெலிமடை, அப்புத்தளை, பலாங்கொடை முதலிய பகுதிகளில் தேயிலை அதிகளவில் செய்கை பண்ணப்படுகின்றது. இலங்கையில் தேயிலை ஏராளமாகப் பயிரிடப்படும் பிரதேசம் கற்றன் மேட்டுநிலமாகும்.

மலைநாட்டில் தேயிலைச் செய்கை பெரு விருத்தியடைந்துள்ளமைக்குச் சில புவியியற் காரணிகள் சாதகமாகவுள்ளன. அவை:

(1) தரைத்தோற்றமும் காலநிலையும் தேயிலைச் செய்கைக்குச் சாதகமாகவுள்ளன. சராசரி 2000 அடிகளுக்கு மேற்பட்ட மலைப்பிரதேசங்கள் தேயிலைச் செய்கைக்கு உகந்தன. தேயிலைச் செடிக்கு நீர் தேங்கி நிற்கா மலைச்சரிவுகள் பெரிதும் உகந்தன. ஆனல், அதிக மழைவீழ்ச்சி இன்றியமையாதது. 80—120 அங்குலம் வரையிலான மழை வீழ்ச்சியை மலைநாடு பெறுகின்றது. இவை காரணமாக மலைநாட்டில் தேயிலைச் செய்கை விருத்தியுற்றுள்ளது.

(2) இலங்கையில் தேயிலைச் செய்கை ஆரம்பித்த காலத்தில், மலைநாட்டு நிலங்களை மிக மலிவாகப் பெறமுடிந்தது. தாழ் நிலங்களிலேயே இலங்கை மக்களின் பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் நடைபெற்று வந்தன. மலைநாடு காடடர்ந்து கிடந்தது; அதனல் நிலங்களை மலிவாகப் பெறமுடிந்தது;

(3) தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்வதற்கான தொழிலாளர்களை மிகமலிவாக இந்தியாவிலிருந்து வருவிக்க முடிந்தது. அத்துடன் சர்வதேச சந்தையில் இலங்கைத் தேயிலைக்கு மிகுந்த கேள்வி இருந்தது. இவை காரணமாகவே மலைநாட்டில் தேயிலைச் செய்கை பெருவிருத்தியுற்றது.

தேயிலைச் செய்கையை குறித்து ஏற்கனவே அத்தியாயம்-7இல் விரிவாக ஆராய்ந்துள்ளோம். அவற்றை மீளவும் படித்துக் கொண்டு தொடர்க.

மத்திய மாகாணத்தில் 3,22,000 ஏக்கர்ப் பரப்பிலும், ஊவாமாகாணத்தில் 94,000 ஏக்கர்ப் பரப்பிலும், சப்பிரகமுவா மாகாணத்தில் 93,000 ஏக்கர்ப் பரப்பிலும் தேயிலைச் செய்கை நடைபெறுகின்றது. ஏறத்தாழ 49 கோடி இருத்தலுக்கும் அதிகமான தேயிலை ஆண்டிற்கு உற்பத்தியாகின்றது. இதில் 40 கோடி இருத்தல் வரையில் ஏற்றுமதியாகின்றது.




படம்: 46 மலைநாட்டில் தேயிலை, றப்பர் விளையும் பகுதிகள்.

## றப்பர்

றப்பர்ப் பெருந்தோட்டங்கள் கேகாலை, களுத்துறை, இரத்தினபுரி மாவட்டங்களிலேயே அதிகளவில் காணப்படுகின்றன. மத்திய மலைநாட்டின் கிழக்குப்பாகத்தில் பெரிதும் 2000 அடிகளுக்கு உட்பட்ட மலைச்சாய்வுகளில் றப்பர்த் தோட்டங்கள் அமைந்துள்ளன. மாத்தளை, கண்டி, கம்பளை, தொலஸ்பாகேமேனிலம் என்னும் பகுதிகளில் றப்பர்த்தோட்டங்கள் காணப்படுகின்றன. ஊவாவடிநிலத்திலும் றப்பர்த்தோட்டங்கள் அமைந்திருக்கின்றன.

## கொக்கோ

தேயிலை, றப்பர் என்னும் பயிர்களுக்குத் தேவையான புவியியல் நிலைமைகளே கொக்கோச் செய்கைக்கும் தேவைப்படுகின்றது. ஆத

லால் மலைநாட்டில் கொக்கோவும் பிரதான பயிராக விளங்குகின்றது. வருடம் முழுவதும் ஒழுங்கான மழை, நீர்தேங்கா மலைச்சரிவு என்பன கொக்கோ பயிருக்கும் தேவை. அத்துடன், நேரடியாகக் காற்றின் கடும் தாக்கம் இல்லாத காற்றொதுக்குகள், பள்ளத்தாக்குகள் என்பன கொக்கோப் பயிர்கள் நன்குவளர அத்தியாவசியமானவை.

மலைநாட்டில் கண்டி மாவட்டத்திலும், மாத்தளை மாவட்டத்திலும் கொக்கோத் தோட்டங்கள் காணப்படுகின்றன. குருநாகல் மாவட்டத்தின் சில பகுதிகளிலும் தும்பறைப் பள்ளத்தாக்கிலும் கொக்கோத் தோட்டங்கள் நன்கு விருத்தியடைந்துள்ளன.

கொக்கோமரம் ஆறு ஆண்டுகளின்பின் பூரணபலனைத் தரத் தொடங்கும். கொக்கோப்பழங்களிலிருந்து விதைகள் எடுக்கப்படும். இவ்விதைகளே கொக்கோவைத் தருகின்றன. கொக்கோ 'சொக்கிளேற்' பானவகை முதலியன தயாரிக்க உதவுகின்றது. யப்பான், சோவியத் சமவுடைமைக்குடியரசு முதலிய நாடுகள் இலங்கையிலிருந்து கொக்கோவை அதிகளவில் வாங்குகின்றன.

## நெல்

நெற்செய்கை சமதரைக்கே உரிய பயிர்ச்செய்கை எனினும், மலைநாட்டின் மென்சாய்வுகளிலும் பள்ளத்தாக்குகளிலும் செய்கைபண்ணப்பட்டு வருகின்றது. மலைச்சாய்வுகள் படிபடியாக வெட்டப்பட்டு, படிகளின் விளிம்புகளில், வரம்புகள் கட்டப்படும். இப்படிகளின் அகலம் இரண்டு அடிகளிலிருந்து 50 அடிவரை வேறுபடும். இவ்வாறு வகுக்கப்பட்ட படிகள் பண்படுத்தப்பட்டு நெல் விளைவிக்கப்படுகின்றன. இத்தகைய படிக்கட்டுகளில் பயிரிடப்படும் நெல் மலைநெல் எனப்படும். இதற்கு ஈரநெல்லைப்போன்று நீரதிகம் தேவையில்லை.

மலைநாட்டில் 3000 அடி உயரத்திற்குக் குறைவான சரிவுகளில் படிமுறைப் பயிர்ச்செய்கைமூலம் நெல் விளைவிக்கப்படுகின்றது. மத்திய மாகாணத்தில் 1,13,000 ஏக்கரில் இவ்வாறு நெற்செய்கை நடைபெறுகின்றது. கண்டி, கடுகண்ணாவை, கம்பளை, மாத்தளை, நாவலப்பிட்டி முதலிய பகுதிகளில் இத்தகைய நெற்செய்கையை அதிகம் காணலாம்.

## ஏனைய பயிர்கள்

கண்டி மேட்டு நிலத்தில் தென்னை, மிளகு, புகையிலை, கோப்பி முதலிய பயிர்களும் செய்கைபண்ணப்படுகின்றன. கண்டி, மாத்தளை, கம்பளை, தும்பறை முதலிய பகுதிகளில் மிளகு அதிகம் பயிரிடப்படுகின்

றது. நுவரெலியா, தெல்தோட்டை—ஹேவகெற்றைப் பகுதிகளில் ஏலம், சிங்கோனு முதலிய பயிர்கள் பயிரிடப்படுகின்றன. ஊவா வடி நிலத்தில் சோளம், தக்காளி, அவரை முதலியன பயிராகின்றன.

## கனிப் பொருட்கள்

வைரக் கற்கள் பலாங்கொடை, பெல்மதுளை ஆகியவிடங்களில் கிடைக்கின்றன. இரும்புத்தாதுப் படிவுகள் கண்டியிலும், மாத்தளை யிலும் சிலவிடங்களிற் காணப்படுகின்றன. மைக்கா வதுளைக்கு அண் மையிலும், டிக்வெலகமவிலும், பஸ்சறைக்கு அண்மையிலுள்ள கிரி காலப்பொத்தையிலும் கிடைக்கின்றது.

## கைத்தொழில்கள்

மலை நாட்டில் கைத்தொழில்கள் குறிப்பிடத்தக்களவு இல்லை என லாம். கண்டியில் பித்தளைப் பொருட்களும், கித்துள் பனங்கட்டியும் செய்யப்படுகின்றன. தும்பறையில் பலவகையான புற்களைக் கொண்டு பாய்கள், தொப்பிகள் முதலியன இழைக்கப்படுகின்றன. மாத்தளை யிலும், வெலிமடையிலும் 'சொக்கிலேட்'டுகள் செய்யப்படுகின்றன. நுவரெலியாவில் 'பியர்' என்ற குடிவகை வடிக்கப்படுகின்றது.


## குடிப்பரம்பல்

கண்டியையும் அதனைச் சூழ்ந்துள்ள இடங்களிலும் குடியடர்த்தி சதுரமைல் ஒன்றிற்கு 1000-க்கு அதிகமானதாக இருக்கின்றது. குடித் தொகை அளவுப்படி கண்டி இலங்கையில் ஐந்தாவது பட்டினமாகும்.

கற்றன் மேட்டு நிலத்திலும், கண்டி மேட்டு நிலத்தின் கண்டி தவிர்ந்த எஞ்சிய பாகத்திலும் குடியடர்த்தி சதுரமைலிற்கு 500 தொடக்கம் 1000 வரை இருக்கிறது. ஊவா வடி நிலத்தில் வடபா கம் நீங்கலான பகுதியிலும், கற்றன் மேட்டு நிலத்தின் தென்மேல் பாகத்திலும், மாத்தளையிலும் குடியடர்த்தி சதுரமைலிற்கு 250 தொடக்கம் 500 வரை காணப்படுகின்றது. ஏனைய பகுதிகளில் குடி யடர்த்தி சதுரமைலிற்கு 250-க்குக் குறைவாக இருக்கிறது.

சதுரமைலுக்கு 500-க்கு மேல் குடியடர்த்தியுடைய பிரதேசம் மலைநாட்டின் மேற்குப் பகுதியை அடக்கியுள்ளது. இப்பிரதேசம் ஈரவலய மலைநாட்டினைக் கொண்டதாகவுள்ளது. பலவகைகளிலும் மலைநாட்டிலேயே மிக்க செழிப்பான பிரதேசம் இதுவேயாகும். தென் மேல் பருவக்காற்றின் காற்றுப் பக்கத்தில் இப்பிரதேசம் அமைந் திருப்பதனுல், வருட மழைவீழ்ச்சி 100" அதிகமாகும்; சில பகுதி கள் 150 அங்குலங்களுக்கு மேலும் மழையைப் பெறுகின்றன. தரைத்

தோற்றமும் சாதகமாக அமைந்திருப்பதனால், இப்பிரதேசம் தேயிலைத் தோட்டங்களையும், றப்பர்த் தோட்டங்களையும் சிறப்பாகக் கொண்டுள்ளது. இப்பிரதேசத்தின் மேற்குப் புறத் தாழ்சாய்வுகளில் றப்பர் தோட்டங்களும், மத்தியபகுதியில் தேயிலைத் தோட்டங்களும் அமைந்துள்ளன. இத்தோட்டங்களில் வேலை செய்வதற்காக ஏராளமான தொழிலாளர்கள் இப்பிரதேசத்தில் குடியேறியுள்ளனர். கண்டியை அடுத்துக் கணிசமானவளவு கைத்தொழில்களும் விருத்தியுற்றுள்ளன. மலைநாட்டின் பிரதான நிர்வாகமையமாகவும், போக்குவரத்து மையமாகவும் இப்பிரதேசமே விளங்குகின்றது. இலங்கையின் தலைநகரோடு தக்க மோட்டார் வீதிகள், இருப்புப்பாதைகள் என்பனவற்றால் இப்பிரதேசம் இணைக்கப்பட்டுள்ளது. பௌத்த மதத்தின் புனித தந்ததாதுக் கோயில், பல்கலைக்கழகம் என்பன இப்பிரதேசத்திலேயே உள. இவையாவும் இப்பிரதேசத்தில் மக்களை விரும்பிக் குடியேற வைத்துள்ளன. கண்டி நகரத்தின் மொத்தக் குடித்தொகை மட்டுமே 58,000 ஆகும்.




படம்: 47 மலைநாட்டின் குடிப்பரம்பல்

சதுரமைலுக்கு 250 தொடக்கம் 500 வரை குடியடர்த்தியைக் கொண்டுள்ள பிரதேசம் ஈரலிப்பான மலைநாட்டின் ஒரு சிறு பகுதியையும், வறண்ட மலைநாட்டின் பெரும்பகுதியையும் கொண்டுள்ளது. இப்பிரதேசம் முதல் விபரித்த பிரதேசத்தினைப் போன்று வாய்ப்பான ஏதுக்களைக் கொண்டிருக்காது விடினும், மக்கள் விரும்பிக் குடியேறக்கூடிய நிலைமைகளைக் கொண்டுள்ளது. றப்பர்த் தோட்டங்கள் மாத்தளைக்கு வடபாகத்திலும், வதுளையைச் சூழ்ந்தும் காணப்படுகின்றன. நுவரெலியாவினைச் சூழ்ந்து தேயிலைத் தோட்டங்கள் நன்குள. ஆகவே, இத் தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர் இங்கு குடியேறியுள்ளனர். நுவரெலியா சுகாதாரத்திற்குகந்த ஒரு நகர். ஆதலால், இங்கு மக்கள் விரும்பிக் குடியேறியுள்ளனர். ஆனால், மிக்க உயரமும் போக்குவரத்துக் கஷ்டங்களும் மலைநாட்டின் மேற்குப் பகுதி போன்று மக்கள் குடியேறத்தடையாக உள. வதுளையைச் சூழ்ந்த பகுதி ஒப்பளவில் வறண்டது. போக்குவரத்துக்களும் இப்பகுதியில் நன்கு அமையவில்லை. ஆதலால், மலைநாட்டின் மேற்குப் பகுதிபோன்று குடியடர்த்தி இங்கில்லை. எனினும் பெருந்தோட்டங்களும், சிறு தொழில்களும் இப்பிரதேசங்களில் ஒரு சதுரமைலுக்கு 250 தொட்டு 500 வரை மக்களை வாழ வைத்துள்ளன.

மலைநாட்டின் கிழக்குப் பகுதியும், தெற்குப் பகுதியும் ஒரு சதுரமைலுக்கு 250-க்கு கீழேயே குடியடர்த்தியைக் கொண்டுள்ளன. இப்பகுதிகள் பெரிதும் பயன்படாப் பகுதிகளாகும். மழைவீழ்ச்சி இக்கிழக்குப் பகுதியில் 75 அங்குலங்களுக்குக் குறைவாகும். வடகீழ்ப் பருவக் காற்றே இம்மழையை அளிக்கின்றது. தென்மேல் பருவக் காற்றின் காற்றெதுக்கில் இருப்பதால் உலர்மலைநாடாக விளங்குகின்றது. பத்தனை போன்ற புல்வெளிகளும், வெறும் கரம்பை நிலங்களுமே இப்பிரதேசத்திலுள, பயன்படும் சிறிதளவு விளைநிலமும் சேனைப் பயிர்ச் செய்கைக்குட்பட்டுள்ளது; நெல் வயல்கள் மிகக் குறைவு; மலேரியாநோய் இயல்பாகவுண்டு; போக்குவரத்துப் பாதைகள் நன்கு அமையவில்லை; இவை யாவும் இப்பிரதேசத்தில் ஒரு சதுரமைலுக்கு 250-க்கும் குறைவாகவே மக்களை வாழவைத்துள்ளது.

# அத்தியாயம்: 16

## உலர்பிரதேசத் தாழ்நிலங்கள்

### தரைத்தோற்றம்

இலங்கையின் வடதாழ்நிலத்தையும், தென்கீழ் தாழ்நிலத்தையும் உலர்பிரதேசத் தாழ்நிலங்கள் என்று வகுக்கலாம். தென்மேல் பருவக் காற்றுக்கால 20 அங்குல சமமழைவீழ்ச்சிக்கோடு உலர்பிரதேசத்தையும் ஈரலிப்பான பிரதேசத்தையும் பிரிக்கின்ற எல்லையாக அமைகின்றது. எனினும் உலர்பிரதேசத் தாழ்நிலங்கள் என்று கூறும்போது உலர்வலய மலைநாடு தவிர்ந்த பகுதிகளையே கருதும்.

உலர்பிரதேசத் தாழ்நிலங்கள் இலங்கையின் மொத்தப் பரப்பில் ⅔ பங்கினைக் கொண்டிருக்கின்றன. உலர்பிரதேசத் தாழ்நிலங்களில் அடங்கும் வடதாழ்நிலமே இலங்கையின் மிகப்பெரிய தாழ்நிலமாகும். இதன் பெரும்பாகம் 500 அடி உயரத்திற்கும் குறைவானதாக இருக்கின்றது. இதன் உயரமான பகுதிகள் மாத்தளை மலைகளைச் சூழ்ந்தமைந்துள்ளன. மீ ஓயா, காலஓயா, அம்பன்கங்கை, அருவியாறு, யான்ஓயா என்பன மாத்தளை மலைகளில் உற்பத்தியாகின்றன. வடதாழ்நிலத்தில் மாத்தளை மலைகளிலிருந்து விசிறிபோலப் பாறைத் தொடர்கள் வடமேற்கு நோக்கியும் வடகிழக்கு நோக்கியும் அமைந்துள்ளன. இப்பாறைத் தொடர்களின் சில பகுதிகள் மண்ணுள் புதையுண்டு கிடக்க, வெளித்தெரியும் பகுதிகள் தாழ்பாறைத்தொடர்களாகக் காட்சி தருகின்றன.

தென்கீழ்த் தாழ்நிலத்தின் உயர்ந்த பகுதி மலைநாட்டை அடுத்துள்ளது. இத்தென்கீழ்த் தாழ்நிலத்தில் பலகுன்றுகள் காணப்படுகின்றன. கதிர்காமக்குன்று, நுவரகல்கந்தை, பிறேயஸ்கூட், வெஸ்மினிஸ்ரர் அபே என்பன இத் தாழ்நிலத்தில் காணப்படும் குன்றுகளாகும். இத் தாழ்நிலத்தில் மகாவலிகங்கை, மதுருஓயா, கல்லோயா, மாணிக்ககங்கை, கிரிண்டிஓயா முதலிய நதிகள் பாய்கின்றன.




படம்: 48 உலர்பிரதேசத் தாழ்நிலங்களும், நீர்ப்பாசன வசதி பெற்ற பகுதிகளும்;

## காலநிலை

உலர்பிரதேசத் தாழ்நிலங்களில் வருடமழை வீழ்ச்சி 75 அங்குலங்களுக்குக் குறைவானதாக இருப்பதால், அவை இலங்கையின் உலர் பிரதேசங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இப்பிரதேசங்கள் வடகீழ் பருவக்காற்றினுலும், சூருவளிகளினுலும் மேற்காவுகையினுலும் மழையைப் பெறுகின்றன. இத் தாழ்நிலங்களின் மழைவீழ்ச்சிக் காலம் செப்டம்பர் தொட்டு யனவரி மாதம் வரையிலாகும். வடகீழ் பருவக்காற்று கண்டக் காற்ருக இருப்பதனுல், அதிக ஈரலிப்பானதன்று. அதனுல், தென்மேல் பருவக் காற்றைப் போன்று அதிக மழையை இக்காற்று தருவது கிடையாது. ஒக்டோபர், நவம்பர் மாதங்களில் உலர்பிரதேசத் தாழ்நிலங்கள் சூருவளிகளினுல் மழையைப் பெறுகின்றன.

தென்மேல் பருவக்காற்று உலர்பிரதேசத் தாழ்நிலங்களில் மலைநாட்டைக் கடந்து வீசுவதனுல் வரண்டகாற்ருகவே வீசுகின்றது. தென்கீழ் தாழ்நிலத்தில் வரண்ட கச்சான் காற்ருகவும், வடதாழ்நிலத்தில் வரண்ட சோழகக் காற்ருகவும் இது வீசுகின்றது.

உலர்பிரதேசத் தாழ்நிலங்களின் மேற்குப் பாகமும் (மன்ஞர்ப் பகுதி), தென்கீழ்ப் பாகமும் (அம்பாந்தோட்டைப் பகுதி) 50 அங்குலங்களுக்குக் குறைவாகவே மழையைப் பெறுகின்றன. (இதற்கான காரணங்களை 'இலங்கையின் காலநிலை' எனும் அத்தியாயத்தில் விளக்கியுள்ளோம்) அதனுலிவை அதிவரண்ட பிரதேசங்களாக (வறள் வலயம்) காணப்படுகின்றன.

உலர்பிரதேசத் தாழ்நிலங்களின் வருடச்சராசரி வெப்பநிலை 81°ப. தொடக்கம் 82°ப. வரையும் வேறுபடுகின்றது.

### இயற்கைத் தாவரம்

இத்தாழ் நிலங்களில் இருவகையான காடுகள் காணப்படுகின்றன. அவையாவன: (1) வரண்ட பிரதேசக் காடுகள் (உலர் பருவக் காற்றுக் காடுகள்) (2) முட்காடுகளும், புதர் நிலங்களும் என்பனவாம்.


உலர் பிரதேசக் காடுகள் மழையில்லாத பருவத்தில் இலைகளையுதிர்த்து ஓய்வு பெறுகின்றன. மரங்களின் சராசரி உயரம் 60 அடியாகும். ஈரலிப்பான பிரதேசக் காட்டு மரங்களைப் போல மிகவும் உயரமாக வளர்வதில்லை. இக்காடுகளில் முதிரை, கருங்காலி, பாலை, யாவரணை, கட்மிலை என்னும் வைர மரங்களே காணப்படுகின்றன. இக்காடுகள் என்றும் பசுமையான, வரண்ட கலப்புக் காடுகள் என்றும் அழைக்கப்படுவதுண்டு.

முட்காடுகளும், புதர் நிலங்களும் வடமேற்கு தென்கிழக்குப் பாகங்களில் காணப்படுகின்றன. கள்ளி, நாகதாளி ஆனைமுள்ளி போன்ற தாவரங்கள் இங்கு வளர்கின்றன. இவை நீரைச் சேகரித்து வைக்கக் கூடியன. இத்தாவரங்கள் வறள்நில வளரிகள் எனப்படும்.

## பயிர்ச்செய்கை

### நெல்

உலர் பிரதேசத் தாழ்நிலங்களில் நெற்செய்கை முக்கிய பயிர்ச் செய்கை நடவடிக்கையாகும். இத் தாழ்நிலங்கள் மிகப் பண்டைக் காலத்தில், இலங்கையின் மிக முக்கியமான நெல் விளை நிலங்களாக விளங்கியுள்ளன. இத் தாழ்நிலங்களில் பாழடைந்து கிடக்கும் ஆயிரக்கணக்கான குளங்கள் ஒருகாலத்தில் இப்பிரதேசங்கள் நெற் செய்கையில் அடைந்திருந்த விருத்தியை நிரூபிப்பனவாகவுள்ளன. சமதரை, ஒரு பருவமழை, ஒரு பருவ வறட்சி என்பன நெற் செய்கைக்குப் பெரிதும் உகந்த நிலைமைகளாகும். எனினும், உலர்பிரதேசத் தாழ்நிலங்களில் பருவமழை பொய்ப்பதால் நீர்ப்பாசன வசதியின்றி நெற்செய்கையை மேற்கொள்ளமுடியாமல் இருக்கின்றது. நீர்ப்பாசன வசதியில்லாத இடங்களில் வருடம் ஒரு முறையே நெற்செய்கையை மேற்கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.




படம்: 49 நெல்




படம்: 50 தென்னை

உலர்பிரதேசத் தாழ்நிலங்களில் மட்டக்களப்பு, அனுராதபுரம், குருநாகல், பொலநறுவை, அம்பாறை, அம்பாந்தோட்டை முதலிய மாவட்டங்களில் நெல் அதிகம் விளைவிக்கப்படுகின்றது. இப்பகுதிகளில் ஓகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் விதைத்து பெப்ரவரி மாதத்தில் அறுவடை செய்யப்படும்; இப்பயிர்ச் செய்கை பருவ மழையைப் பெரிதும் நம்பியதாகும். நீர்ப்பாசன வசதியுடைய வயல்களில் மார்ச், ஏப்பிரல் மாதங்களில் விதைத்து ஓகஸ்ட் மாதமளவில் அறுவடை செய்வர்.

## சேனைப்பயிர்ச்செய்கை

சேனைப் பயிர்ச்செய்கை உலர் பிரதேசத் தாழ்நிலங்களில் நீர்ப் பாசன வசதி இல்லாத இடங்களில் நடைபெறுகின்றது.

இலங்கையின் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் மிகவும் பிற் போக்கான பயிர்ச்செய்கை சேனைப் பயிர்ச்செய்கையாகும். ஓரிடத் திலுள்ள காட்டினைக் கொளுத்தி, அவ்விடத்தில் சிறுதானியங்களை மழையை நம்பி விளைவிப்பர். அவை தாமாகவே வளர்ந்து பயனைத் தருவதுமுண்டு; தராது போவதுமுண்டு. அவ்விடத்தின் இயற்கைப் பசளை குறைந்ததும் பிறிதோரிடத்திற்குச் சென்று அங்குள்ள காட் டைக் கொளுத்திப் பழையபடி பயிரிடுவர். இவ்விதமாக நடைபெறும் சேனைப்பயிர்ச் செய்கையில் பல குறைபாடுகளுள.

சேனைப் பயிர்ச்செய்கை நிரந்தரமான ஒரு பயிர்ச்செய்கையன்று. அது ஒரு பெயர்ச்சிப் பயிர்ச்செய்கையாகும்; இடம் மாறிமாறிச் செய்கைபண்ணப்படும், சேனைப் பயிர்ச்செய்கையில் பயிர்கள் மாறு வது கிடையாது; நிலங்களே மாறுகின்றன. இதனால், காடுகள் அழி வுற்றுப் போவதுடன், மண்ணரிப்பும் நிகழ ஏதுவாகின்றது. நிலங் கள் வீணே பயனற்றுப் பாழாகப் போகின்றன. சேனைப் பயிர்ச் செய்கை ஓர் ஒழுங்குமுறையான பயிர்ச் செய்கையாகவில்லை; விரும் பியவாறு, தேவையைப் பொறுத்துச் செய்கின்றனர். பயிர்களிலோ அல்லது நிலத்திலோ கூடிய கவனம் செலுத்தப்படுவது கிடையாது. மண்ணின் பசளைத்தன்மை இச் செய்கையில் பேணப்படுவதும் இல்லை; காட்டைக் கொளுத்தியதால் கிடைத்த சாம்பல் எனும் இயற்கை வளம் அற்றுப் போனதும் புதிதாகப் பசளையிட்டுப் பேணுதல் கிடை யாது. ஆழநிலம் உழப்படுவதோ, மட்டப்படுத்தப்படுவதோ இச் சேனைச் செய்கையிலில்லை.

இவற்றைவிட வேறும் பல குறைபாடுகள் இச் செய்கையிலுள்ளன. மழையை நம்பியே சேனைச் செய்கை நடைபெறுகின்றது. நீர்ப்பாய்ச் சல் இச் செய்கையில் பயன்படுத்தப்படுவதில்லை. அதனால், இச்செய் கையிலிருந்து கிடைக்கும் வருமானம் மிகக் குறைவானதாகவேயுளது. சேனைப் பயிர்ச் செய்கை மிக்க இடர்மிகுந்தது; விலங்குகள் இப் பயிரை அழித்துவிடும் நிலைமைகளுள்ளன; வானிலை நிலைமைகள் எதிர் பார்த்தபடி நிகழாது பொய்த்துவிடக்கூடும். சேனைச்செய்கை நடை பெறும் பகுதிகள் சந்தை நகரங்களில் இருந்து விலகி அமைந்துள்ளன. போக்குவரத்து வசதிகளும் நன்கு அமையப் பெறவில்லை. இத்தகைய பல குறைபாடுகள் சேனைப் பயிர்ச் செய்கையில் காணப்படுகின்றன. இச் செய்கை எவ்விதத்திலும் இலங்கையின் பொருளாதார விருத்

திக்கு உதவக்கூடியதன்று. சோம்பேறித்தனமான பிற்போக்கான பயிர்ச்செய்கை நடவடிக்கையே இதுவாகும்.

### பருத்தி

பருத்திக்கு உலர் பிரதேசமே மிகவும் ஏற்றது. 20—40 அங்குல மழைவீழ்ச்சி பருத்திக்குப் போதுமானது. 40 அங்குலத்திற்கு மேற்பட்ட இடங்களிலும் இது செய்கைபண்ணப்படுகின்றது. 70°ப. வெப்பநிலையும் தேவை. கருமண் பிரதேசம் இதன் விருத்திக்குச் சிறந்தது. இத்தகைய நிலைமைகள் வறண்ட பிரதேசத்தில் உள்ளன. மன்னர், அம்பாந்தோட்டைப் பகுதிகளைச்சுற்றி இத்தகைய சாதகநிலைமைகள் இருப்பதால் பருத்தியை ஏராளமாக இங்கு உற்பத்தி செய்யமுடியும். இன்று அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 3000 ஏக்கர் பிரதேசத்தில் பருத்தி பயிரிடப்படுகின்றது. எனினும், இது தரும் பலன் போதாதுள்ளது. தக்க ஆராய்வுகள் மூலம் நமது நாட்டிற்கு ஏற்ற பருத்தியை நாம் விருத்தியாக்க வேண்டும்.

### கரும்பு

கருப்பஞ் செய்கை, கல்லோயாவிலும், கந்தளாயிலும் இயங்கும் இரு சீனி ஆலைகளுக்காக இப்பகுதிகளில் இன்று மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. எனினும், கருப்பஞ் செய்கையை நன்கு விருத்தியாக்கவில்லை என்றே கூறவேண்டும். விவசாயிகள் நெற்செய்கையையே நாடுகின்றனர்; கருப்பஞ் செய்கையில் கூடிய கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை. அரசாங்கம் விவசாயிகளுக்கு ஊக்கமும், பணவுதவியும் அளித்து விவசாயிகளை கருப்பஞ் செய்கையிலீடுபடுத்த வேண்டும். வறண்ட பிரதேசத்தின் பல பகுதிகள் இச்செய்கைக்கு ஏற்றனவாகவே இருக்கின்றன. அங்கெல்லாம், இச்செய்கையை விருத்தியாக்கில், கரும்பு இல்லாமல், சிலகாலங்களில் இயங்காது இருக்கும், கல்லோயா, கந்தளாய் சீனித் தொழிற்சாலைகள் தொடர்ந்து இயங்கமுடியும்.

### ஏனைய பயிர்கள்

வறண்ட பிரதேசத்தில் நிலக்கடலைச் செய்கையை விருத்தியாக்கலாம். நிலக்கடலைக்கு உலர்ந்த வளமற்ற மண் போதுமானதாக இருக்கின்றது. வவுனியா மாவட்டம் நிலக்கடலைச் செய்கைக்கு மிக ஏற்றதாகவுள்ளது. மிளகாய்ச் செய்கை இலங்கையில் போதியளவு முன்னேறவில்லை என்றே கூறவேண்டும். ஒவ்வோர் ஆண்டும் செத்தல் மிளகாயை 2½ கோடி ரூபாவிற்கு இறக்குமதி செய்து வருகின்றோம்.

வறண்ட பிரதேசம் எங்கனும் பரவலாக இதனைச் செய்கை பண்ணமுடியும். சிகரெட் புகையிலை உற்பத்தியில் வறண்ட பிரதேசம் இன்று சிறிதளவு கவனம் செலுத்தியுள்ளது. இன்னும் கூடுதலாக இதன் செய்கையிலீடுபடல் வேண்டும். அவரை வகை, பல்வகைத் தானியங்கள் என்பனவற்றையும் வறண்ட பிரதேசத்தில் விருத்தி செய்யமுடியும். புகையிலைச் செய்கை ஏருவூர், முல்லைத்தீவு, தமன்கடுவை போன்ற இடங்களில் நடைபெறுகின்றது. தோடை பிபிலை, மொனராகலை போன்ற இடங்களில் பயிரிடப்படுகின்றது.

தென்னை உலர் பிரதேசத் தாழ்நிலங்களில் பரவலாக வளர்க்கப்பட்டு வருகின்றது. புத்தளம், முல்லைத்தீவு, மன்னர், மட்டக்களப்பு, அம்பாந்தோட்டை ஆகிய இடங்களில் அதிகளவில் செய்கை பண்ணப்படுகின்றது. மழைவீழ்ச்சி குறைவாக இருப்பதால் பல இடங்களில் தென்னந் தோட்டங்களில் இருந்து போதிய வருமானம் கிடைப்பதில்லை.

## விலங் நகள் வளர்ப்பு

பாற் பொருட்கள், இறைச்சி, தோல் என்பனவற்றிற்காகப் பெருமளவில் நாம் பிறநாடுகளையே நம்பியுள்ளோம். நாமே நமது தேவையைப் பூர்த்தி செய்துகொள்ள விலங்கு வேளாண்மையை விருத்தி செய்து கொள்ளல் அவசியம். வறண்ட பிரதேசத்தின் பகுதிகள் இதன் விருத்திக்குச் சாதகமானவையாகவுள்ளன. வடமத்திய மாகாணத்தில் தமன்கடுவைப் பகுதி மாடுகளின் வளர்ப்பிற்கு ஏற்றதாகவுளது. இங்கு நல்ல புற்கள் இயற்கையாகவே செழித்து வளர்கின்றன. வளவை, கிரிண்டி எனும் பகுதிகளும் மாடுகளின் வளர்ப்பிற்கு ஏற்றதாக உள்ளன. இப்பகுதிகளில் புற்களை பயிர்ச்செய்கை மூலம் வளர்க்க முடியும்.


தமன்கடுவையில் மாட்டுப்பண்ணை ஒன்று இருக்கின்றது. 8000 மேற்பட்ட மாடுகள் இன்று பண்ணையிலுள்ளன. அம்பாந்தோட்டை மாவட்டத்தில் இரிதியக்கம எனுமிடத்தில் மாட்டுப்பண்ணை ஒன்று நிறுவப்பட்டிருக்கின்றது. தமன்கடுவை மாட்டுப்பண்ணையை ஆதாரமாகக் கொண்டே பொலநறுவையில் கட்டிப்பால் தொழிற்சாலை ஒன்று இயங்கி வருகின்றது.

வறண்ட பிரதேசம் ஆடுகள் வளர்ப்பதற்கு ஏற்றனவாக விளங்குகின்றது. ஆடுகள் பல்வகைத் தாவரங்களையும்—புல், இலை, குழை என்பன—உண்ணும் இயல்பின ஆதலால், வறண்ட பிரதேசம் எங்கினும் பயிர்ச்செய்கைக்கு ஏற்றதல்லாத பகுதிகள் எங்கினும், ஆடுகளை வளர்க்க முடியும்; சாதாரணமாக ஒவ்வொரு வீடுகளிலும் இதனை அதிகளவில் வளர்க்கத் தூண்டலாம். வறண்ட பிரதேசத்தில் கோழி வளர்ப்பிற்கும் விருத்திக்கும் சாத்தியம் அதிகளவிலுளது.

## மீன்பிடித்தல்

மன்னார், மட்டக்களப்பு, புத்தளம், திருகோணமலை, முல்லைத்தீவு, அம்பாந்தோட்டை, ஆனையிறவு ஆகிய விடங்கள் உலர் பிரதேச தாழ்நிலங்களின் மீன்பிடித் தளங்களாக விளங்குகின்றன. உலர் பிரதேசத்தில் முக்கியமாக வடமேல் கரையோரம் சிறந்த மீன்பிடிப் பகுதியாகும்.

இலங்கையில் இன்று ஒவ்வோராண்டும் பிடிக்கப்படும் மீனில், ஏறக்குறைய 60% வரை வடமேற்குக் கரையோரமாகவே பிடிக்கப் பட்டு வருகின்றது. வடமேற்குக் கரையோர மீனவர்களே இலங்கையின் மீன்பிடித் தொழிலில் முதலிடத்தைப் பெற்றுள்ளனர். வடமேற்குக் கரையோரம் என்று கூறும்போது மன்னாரிலிருந்து முல்லைத்தீவு வரையுள்ள பகுதி யாவும் அடங்குகின்றது. இந்த வடமேற்குக் கரையோரமாக மீன்பிடிக் கைத்தொழில் மிகுதியாக நடைபெறுவதற்குப் பலகாரணிகள் தூண்டுதலாகவுள்ளன. அவற்றைச் சுருக்கமாக நோக்குவோம்.



படம்; 51 மீன்பிடித்தல்

இலங்கையின் கண்டமேடை தெற்கே ஒடுங்கியதாகவும், வடக்கே அகன்றதாகவும் அமைந்திருப்பது, வடமேற்குப் பகுதியின் மீன்பிடித் தொழில் விருத்திக்கு முதல் காரணியாகவுள்ளது. வடக்கேயுள்ள இக் கண்டமேடையில், மீன்கள் வாழ்வதற்கேற்ற 'பிளாங்ரன்' போன்ற உணவுகளும், இனப்பெருக்கத்திற்கேற்ற வெப்பமும், மறைந்து வாழ்வதற்கேற்ற ஒதுக்கிடங்களும் உள்ளன.

கடலடித்தள மேடைகள் சிறந்த மீன்பிடித் தளங்களாக விளங்கி வருவது கண்கூடு. இக்கடலடித்தள மேடைகள் மீன்கள் வாழ்வதற்கேற்ற தன்மைகளை அளிப்பனவாக விளங்குகின்றன. இலங்கையின் இரு பிரதான கடலடித்தள மேடைகளான பீற்று கடலடித்தள மேடை, வோர்ஜ் கடலடித்தளமேடை என்பன வடமேற்கு மீன்பிடித் தளங்களாகவே விளங்குகின்றன.

காற்றினதும் அலையினதும் தாக்கத்தினின்றும் பாதுகாப்பாக மீன்பிடிக் கலங்கள் தங்க ஏற்ற குடாக்கள் பல வடமேற்குக் கரையோரங்களிலுள்ளன. மன்னார், யாழ்ப்பாணக் கடனீரேரி என்பன குறிப்பிடத்தக்கன. வடமேற்குக் கரையோரத்தில் திறமையும் ஊக்கமு

முடைய மீனவர்கள் வாழ்கின்றனர். மன்னூர்ப் பிரதேசம் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளுக்கு ஏற்றதாக இல்லாமையினுல், அங்குள்ள மக்களின் கவனம் பூரணமாக மீன்பிடியில் செலுத்தப்பட்டுள்ளது. இத்தகைய பல்வேறு காரணிகளும் வடமேற்குக் கரையோரமாக மீன்பிடித் தொழிலே மிகுதியாக நடைபெறச் செய்துள்ளன.

வடமேற்குக் கரையோரமாகக் கையாளப்படும் மீன்பிடித் தொழிலில் பழைய முறைகளும் தற்காலப் புதிய முறைகளும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. சிறு படகுகள், தோணிகள், கட்டுமரங்கள், குறுலோன்வலே, தூண்டில் என்பன தொட்டு யந்திர வள்ளங்கள், நைலோன்வலே என்பன வரை பயன்படுத்தப்பட்டு வருகின்றன. வடமேற்குக் கரையோர மீனவர்களின், குறிப்பாக மன்னூர், கொழும்புத்துறை, மயிலிட்டி, பருத்தித்துறை மீனவர்களின் வள்ளங்கள் கணிசமானவளவு யந்திரமயமானவை; இவை நைலோன் வலேகளேயே உபயோகிக்கின்றன. இந்த யந்திர வள்ளங்கள் ஆழ்கடல் மீன்பிடிக்குப் பயன்படுகின்றன.

கரையோர மீன்பிடித்தல் இங்கு பரவலாக மேற்கொள்ளப்படுகின்றது. கரையோர மீன்பிடித்தலிற்குப் பல்வகை வலேகள் பயன்படுத்தப்படுகின்றன. பல மைல்கள் நீளமான வலேயைக் கரையோரத்தில் ஒருமுனே இருக்க மறுமுனே பல மைல்கள் கடலினுள் வளேத்துக் கொண்டு வரப்பட்டு, ஈற்றில் இருமுனேகளேயும் கரையினின்றும் கோலியிழுத்து மீன்பிடிக்கும் கரைவலேகளும் பயன்படுத்தப்படுகின்றன. கரையோரத்திலோ, குடாக்களிலோ கம்பங்களே நட்டு அவற்றில் வேலிபோன்று வலேயைக் கட்டி மறித்தும் மீன் பிடிக்கின்றனர். இது கலவலே அல்லது இறகுவலே மீன்பிடித்தல் எனப்படும். தூண்டிலிடுதல், பொறிகட்டுதல் போன்ற முறைகளும் வழக்கிலுள.


பருத்தித்துறை தொட்டு மட்டக்களப்பு வரை நல்ல சில மீன்பிடி மையங்களேக் கொண்ட கிழக்குக் கரையோரமும் தக்க கண்டமேடையில் அமைந்துள்ள போதிலும், வடமேல் கரையோர மீன்பிடித் தளம் போன்று பரந்த கண்டமேடையினேக் கொண்டனவாகவில்லே. எனினும், கிழக்குக் கரையோரம் பல குடாக்களேயும், கடனீரேரிகளேயும், துறைகளேயும் கொண்டதாக விளங்குவதால் காற்றினதும் அலேயினதும் தாக்கத்தினின்றும் பாதுகாப்பாக மீன்பிடிக் கலங்கள் தங்க வசதியாகவுள்ளது.

தென்மேல் பருவக்காற்று வீசுங் காலத்தில் தென்மேல் கரையோரத்தில் மீன் பிடித்தல் இடர் தருவதாக இருக்கின்றது. அதனுல் அங்குள்ள மீனவர்கள் வடகரைக்கும், கிழக்குக் கரைக்கும் வந்து மீன் பிடிப்பர்.

## கனிப்பொருட்கள்

இரணைமடுவிலும், முல்லைத்தீவுக்கு அண்மையிலும் வெண்களி காணப்படுகின்றது. வவுனியா, கொறவுப்பொத்தானை, தம்புளை, நிக்கவரெட்டியா, ஆகிய பட்டினங்களை இணைக்கும் நாற்கோணப் பிரதேசத்தில் காரீயப் படிவுகள் உள்ளன; கற்பிட்டியிலும் அம்பனிலும் படிகமணல் காணப்படுகின்றது. திருகோணமலைக்கு வடக்கேயுள்ள புல்மோட்டையிலும், மட்டக்களப்பிற்குத் தெற்கேயுள்ள திருக்கோயிலிலும் இல்மனையிற் படிவுகள் இருக்கின்றன.

புத்தளம், அம்பாந்தோட்டை, நிலாவெளி, ஆனையிறவு ஆகிய இடங்களில் அரசினரின் உப்பளங்கள் இருக்கின்றன.




படம்: 52 உப்பு

## கைத்தொழில்கள்

உலர்பிரதேசத் தாழ்நிலங்களின் பிரதான நகரங்களை அடுத்து பல்வகைக் கைத்தொழில்கள் விருத்தியுற்றுள்ளன. அவை வருமாறு:

(1) காங்கேசன்துறை — சீமேந்துத் தொழிற்சாலை

(2) யாழ்ப்பாணம் — அலுமினியத் தொழிற்சாலை, வாளி, பெனியன், பாய், கைத்தறிகள், துவாய், சவர்க்கார ஆலைகள்.

(3) பரந்தன் — இரசாயனத் தொழிற்சாலை

(4) முல்லைத்தீவு — ஓட்டுத்தொழிற்சாலை, கைத்தறி

(5) வவுனியா — கைத்தறி

(6) அனுராதபுரம் — ஓட்டுத்தொழிற்சாலை, தச்சுவேலைகள்

(7) புல்மோட்டை — இல்மனையிட் துப்பரவாக்கும் ஆலை

(8) பொலநறுவை — கட்டிப்பால் தொழிற்சாலை, மட்பாண்ட — வேலைகள்

(9) புத்தளம் — சீமேந்துத் தொழிற்சாலை

(10) கந்தளாய் — சீனித்தொழிற்சாலை

(11) வாழைச்சேனை — காகிதத்தொழிற்சாலை, கயிறுதிரித்தல்.

(12) மட்டக்களப்பு — நெசவு, பாய்

(13) அம்பாறை — சீனிஆலை, ஓட்டுத்தொழிற்சாலை, குடிவகை ஆலை, அரிவு ஆலைகள், தச்சுவேலைகள், அரிசி ஆலைகள், பிரம்புக்கூடைகள்.

## குடிப்பரம்பல்

உலர் பிரதேச தாழ் நிலங்களில் குடியடர்த்தி பொதுவாகக் குறைவாகவுள்ளது. மட்டக்களப்பு, அம்பாந்தோட்டை போன்ற விடங்களில் குடியடர்த்தி சதுர மைல் ஒன்றிற்கு 250-க்கு அதிகமானதாக இருக்கின்றது. பயிர்ச் செய்கைப் பிரதேசங்களில் குடியடர்த்தி சதுர மைல் ஒன்றிற்கு 50-க்கும் 250-க்கும் இடையேயுள்ளது. ஏனைய பகுதிகளில் 50-க்கும் குறைவாகக் காணப்படுகிறது.

## வனபரிபாலனம்

காட்டுவளங்களை அழிந்துபோகாமல் காப்பதனையே வனபரிபாலனம் என்பர். பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைக்காகவும், சுயதேவைப் பயிர்ச்செய்கைக்காகவும் இலங்கையின் வளமான காடுகள் அழிக்கப்பட்டுள்ளன. இன்று உலர் பிரதேசத்தில் குடியேற்றத் திட்டங்கள் அமைக்கப்பட்டு வருவதால், காடுகள் அழிக்கப்பட்டு வருகின்றன. சேனைப் பயிர்ச்செய்கைக்காகவும், விறகுத் தேவைக்காகவும் காடுகள் ஒழுங்குமுறையின்றி அழிக்கப்பட்டு வருவதால், இலங்கையின் காட்டுவளங்கள் ஒரு காலத்தில் முற்றாக அழிவுற்றுப் போகலாம். அதனால், வனபரிபாலனம் அவசியமாகவுள்ளது. காடுகள் அழிவுறுவதால் ஏற்படும் தீமைகள் வருமாறு:-

1. தக்க காட்டு மரங்கள் அழிவுற்றுப் போகின்றன.

2. காடுகள் அழிவுறுவதால், மழைவீழ்ச்சி குன்றுவதோடு, மண்ணரிப்பும் ஏற்படுகின்றது.

3. இலங்கையின் காட்டு விலங்குகள் வாழ இடமின்றி வீணே அழிவுற்றுப் போகின்றன.

இவை காரணமாகவே வனபரிபாலனப் பகுதியினர் பல வழிமுறைகளைக் கைக்கொண்டிருக்கின்றனர். அவை வருமாறு:

1. இலங்கையின் பல பகுதிகளில் காடுகளை ஒதுக்கிப் பாதுகாத்தல். அவற்றில் விலங்குகளை மனிதர் வேட்டையாட விடாது தடுத்தல். வில்பத்து, றூகுனு என்பன மிருகங்களைப் பாதுகாக்கும் தேசியப் பூங்காக்களாகும்.

2. அழிவுற்ற காடுகளில் தேக்கு முதலிய விலைமதிப்பான மரங்களை நட்டு மீள வளமாக்கி வருகின்றனர்.

3. விறகிற்காக காடழிப்போருக்குச் சிலகுறித்த காடுகளை ஒதுக்கிக் கொடுத்து, காடழித்து முடிந்ததும் தேக்கு மரங்களை நட்டுத்தரும்படி ஒப்பந்தம் செய்து கொள்கின்றனர்.

அத்தியாயம்: 17

# இலங்கையின் குடியிருப்புகளும் அபிவிருத்தித் திட்டங்களும்

சூழலின் கட்டுப்பாட்டிலிருந்து விடுபட்டு, சூழலின் செல்வாக்கை மனிதன் அனுபவிக்கத் தொடங்கும்போதுதான் குடியிருப்புகள் உருவாகின்றன. இலங்கையின் மிகப்பழைய குடியிருப்புகளைப் பாகுபாடு செய்து விளக்குவது கடினமாகும். நாகர், இயக்கர் போன்றோர் இலங்கையில் வாழ்ந்ததாக வரலாறு கூறுகின்றவிடத்தும், ஆரியரின் வருகைக்குப்பின்பே நிலையான குடியிருப்புகள் தோன்றியிருக்கின்றன.

முதன்முதலில் இலங்கையிற் குடியேறியவர்கள் தரைத்தோற்றம், காலநிலை எனும் பௌதிகக் காரணிகளைப் பொறுத்தே குடியேறினர். சமதரைகள் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்கும் இலகுவான வாழ்க்கைக்கும் ஏற்றனவாக இருந்ததால், சமவெளிகளில் அவர்கள் முதலிற் குடியேறினர். பயிற்செய்கை நடவடிக்கைகளுக்கு நீர் இன்றியமையாதது. ஆதலால் முதன் முதல் நதிகளின் ஓரங்களிற் குடியேறினர். அநுராதகம, உபதிசகம என்பன அவ்வாறு உருவானவையே.

பயிர்ச்செய்கைக்கு நீர் பற்றுக்குறையும், வெள்ளப்பெருக்கும் தடைகளாக அமைந்ததால், குளங்களைக்கட்டி நீரைத்தேக்கி, ஆண்டு முழுவதும் பயிர்ச்செய்கையிலீடுபட்டனர். அதனுல் குளங்களையும், கால்வாய்களையும் சூழ்ந்து குடியிருப்புகள் அமைந்தன.

நீரைத்தேக்கி ஆண்டுமுழுவதும் பயிர் செய்ததால் மேலதிகமாக உற்பத்தி பெருகியது: அதனுல் இருகுடியிருப்புகளிடையே பண்டமாற்றுகள் ஏற்பட்டன. இரு குடியிருப்புகளையும் இணைத்து வண்டில் பாதைகள், ஒற்றையடிப் பாதைகள் என்பன அமைந்ததோடு, போக்குவரத்துத்தொடர்பால் இவை பிரதான சந்தி நிலையங்களாகவும் அமைந்தன; மேலும் பண்டமாற்றிற்கு ஓரிடம் சந்தையாக அமைந்ததால் அவ்விடத்தில் சந்தைக் குடியிருப்பு இயல்பாகவே உருவாகியது. பண்டமாற்றுக் குடியிருப்புகளை 'நியான்கம' என்பர்.

இத்தகைய குடியிருப்புகளின் மையங்களாகத் தலைநகர்கள் அமைந்தன. அநுராதபுரம் (கி. பி. 400), பொலநறுவை (கி. மு. 500),

சிகிரியா, தம்புளை, யாப்பகூவை என்பன இத்தகையனவே. இத் தலைநகர்கள் கூடிய போக்குவரத்து இணைப்புக்களையும், வர்த்தக நடவடிக்கைகளையும், நிர்வாக நடவடிக்கைகளையும், தொழிற்பிரிவினரையும் உடையதாக விளங்கின.

மாந்தை வெளிநாட்டு வர்த்தகத்தில் குறிப்பிடத்தக்களவு ஈடு பட்டுள்ளது; இ. பி. 700 அளவில் அராபியர் களுத்துறையில் வர்த்தக நிலையங்களை அமைத்துக்கொண்டனர். சுங்கச் சாவடிகள், சேமிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டன. அதனால், இயல்பாகவே இங்கு மக்கள் குடியேறித் துறைமுகக் குடியிருப்புகளை அமைத்துக்கொண்டனர்.

கடற்கரையோரங்களில் மீன்பிடி கருதி மக்கள் குடியேறினர். இதனால் மீன்பிடிக் குடியிருப்புகள் உருவாகின. தொழிற்றிறனுடையோர் (குயவர், கொல்லர் முதலியோர்) தனித்து வாழ்ந்து, தொழிற் குடியிருப்புகளை உருவாக்கினர்.

இத்தகைய குடியிருப்புகள் உலர் பிரதேசத்தின் பெரும் பரப்பில் தாம் அமைந்திருந்தன. இலங்கையின் தென்கீழ்ப்பாகங்களில் ஆற்றுப்பக்கக் குடியிருப்புகள் அதிகமாக அமைந்திருந்தன. 1400-ஆம் ஆண்டிற்குப்பின் உலர்பிரதேசத்தில் வாழ்ந்த மக்கள் தென்மேற்குப் புறமாகக் குடி பெயர்ந்தனர். தென்னிந்தியப் படையெடுப்புகள் குளங்களைப் பாழடைய வைத்து வெள்ளப்பெருக்கையும் மலேரியா நோயையும் தோற்றுவித்ததால், மக்கள் தாம் வாழ்ந்த இடம் விட்டுக் குடி பெயர்ந்தனர். தென்மேற்கே களனிகங்கைப் பள்ளத்தாக்கை அடுத்து அதிகமாகக் குடியிருப்புகள் உருவாகின. இத் தென்மேற் பிரதேச பொருளாதார அமைப்பு வேறுபட்டமையினுல் குடியிருப்பு வகைகளும் வேறுபட்டன. கறுவா, ஏலம், கராம்பு, மிளகு, இரத்தினக் கற்கள், யானைத்தந்தம் என்பன வர்த்தக முக்கியத்துவம் பெற்றதால், இவற்றிலேயே மக்களது கவனம் சென்றது. 1505-ஆம் ஆண்டிற்குப் பின் அந்நியரின் ஆதிக்கத்தின் கீழ் இலங்கை கொண்டுவரப்பட்டதால் குடியிருப்புகள் வேறுபட்டன. வர்த்தக அடிப்படையிற் குடியிருப்புகள் உருவாகின. துறைமுகங்கள் முக்கியத்துவம் பெறத் தொடங்கின. கல்பிட்டி, மட்டக்களப்பு, காலி என்பன துறைமுகக் குடியிருப்புகளாக உருவாகின.

பெருந்தோட்டங்களின் விருத்தியால் போக்குவரத்து விருத்தியும் ஏற்பட்டது; இருப்புப்பாதைகள் நிர்வாகத் தேவைகளுக்காகவும் வர்த்தகத் தேவைகளுக்குமாக அமைக்கப்பட்டன. வீதிகள் பல, பல நூறு மைல்களுக்கு அமைக்கப்பட்டன. பிரித்தானியர் காலத்தில் இத்தகைய விருத்திகள் அதிகம். மலைநாடு தேயிலை, றப்பர், கோப்பிப் பெருந்தோட்டங்களாக மாறின. தென்னிந்தியர் இத் தோட்டங்களில் தொழிலாளர்களாகக் குடியேறினர். பெருந்தோட்டக் குடியிருப்புகள் உருவாகின.

ஏதாவது ஒரு முக்கிய சாதக காரணியை ஆதாரமாகக் கொண்டு நதிக் கரைகளிலோ, குளங்களையடுத்தோ, கால்வாய்களை அடுத்தோ மக்கள் வாழும்போது அக்குடியிருப்புகள் ஆற்றுப்பக்கக் குடியிருப்புகள், குளக்குடியிருப்புகள், கால்வாய்க் குடியிருப்புகள் என வழங்கப் படுகின்றன. தோட்டங்களை அடிப்படையாகக் கொண்டு மக்கள் குடியேறும்போது அவை தோட்டக் குடியிருப்புகள் ஆகின்றன. சந்திகளை ஆதாரமாகக்கொண்டு மக்கள் குடியேறும்போது அவை சந்திக் குடியிருப்புகள் ஆகின்றன. எனவே குடியிருப்புகள் ஒவ்வொன்றும் தாம் ஆற்றுகின்ற செயலைப் பொறுத்தே பெயர் பெறுகின்றன.

இக்குடியிருப்புகள் ஒவ்வொன்றிலும் மக்களது வாழ்க்கைக்கு இன்றியமையாத தேவைகளெனக் கருதப்படும் வசதிகள் யாவும் அமைந்திருக்க வேண்டும். போக்குவரத்து வசதிகள், பாடசாலைகள், தபால்கந்தோர், கோவில்கள், ஆசுப்பத்திரிகள், பொலீஸ் நிலையம், சந்தை முதலியன யாவும் அமைந்திருக்கவேண்டும். இவ்வசதிகளைப் பொறுத்தமட்டில் ஏற்றத் தாழ்வுகள் இருக்கலாம். ஆனால் முற்றாக இல்லாது இருக்கமுடியாது.

இலங்கையின் குடியிருப்புகளிற் பெரும்பாலானவை கிராமக் குடியிருப்புகளாகும்; கைத்தொழிலாக்கங்களில் முன்னேறாத எந்தவொரு நாட்டிலும் கிராமக் குடியிருப்புகளே அதிகமாகவுள்ளன. பயிர்ச் செய்கையில் தங்கி வாழ்கின்ற மக்கள் கிராமமக்களாக விளங்குகின்றனர். கிராமக் குடியிருப்புகள் மேல்வரும் வகையினதாக அமைந்துள்ளன.

1. குளக்குடியிருப்பு
2. மீன்பிடிக் குடியிருப்பு
3. சந்திக் குடியிருப்பு
4. தோட்டக் குடியிருப்பு
5. சந்தைக் குடியிருப்பு
6. துறைக் குடியிருப்பு
7. கடவைக் குடியிருப்பு
8. வரலாற்றுக் குடியிருப்பு
9. புதுக்குடியிருப்பு

குளக்குடியிருப்பு குளங்களை ஆதாரமாகக்கொண்டு நடைபெறும் பயிர்ச்செய்கைக் குடியிருப்பாகும். மின்னேரியா, பராக்கிரம சமுத்திரம், சேனநாயக்கா சமுத்திரம் முதலியனவற்றைச் சூழ்ந்தமைந்தவை இத்தகையனவாம். கடற்கரையோரங்களை அடுத்து மீன்பிடித்தலிற்காக மக்கள் குடியேறி வாழும்போது அவை மீன்பிடிக் குடியிருப்புகளாகின்றன. நாவாந்துறை, தங்காலை, பேசாலை, குச்சைவெளி என்பன இத்தன்மையனவாம். பிரதான வீதிகள் இணைகின்ற சந்திகளையடுத்து மக்கள் குடியேறி வாழும்போது அவை சந்திக் குடியிருப்புகளாக விளங்குகின்றன. கொடிகாமம், கெக்கிராவை, மாகோ, பிபிலை என்பன சில சந்திக் குடியிருப்புகளாகும். கிராமத் தோட்டங்களையோ,

பெருந்தோட்டங்களையோ ஆதாரமாகக் கொண்டு அமையுங் குடியிருப்புகள் தோட்டக் குடியிருப்புகள் அல்லது பெருந்தோட்டக் குடியிருப்புகளாகவுள்ளன. நீர்வேலி தக்கதோர் தோட்டக் குடியிருப்பாகும்; கற்றன், வதுளை, தலவாக்கொல்லை என்பன பெருந்தோட்டக் குடியிருப்புகளாம். கிராமப்புறங்களிலே விளைவிக்கப்படுகிற பொருள்களை விற்கவும், தேவையான பொருட்களை வாங்கவும் சந்தைகள் தேவைப்படுகின்றன; இச்சந்தைகளை அண்மி மக்கள் வாழத் தலைப்படும்போது சுன்னுகம், சாவகச்சேரி போன்ற சந்தைக் குடியிருப்புகள் உருவாகின்றன. ஊர்காவற்றுறை, வல்வெட்டித்துறை, கல்பிட்டி, முல்லைத்தீவு போன்ற சிறு துறைகளை அடுத்து மக்கள் மீன்பிடி நோக்கமாகவோ, வர்த்தக நோக்கமாகவோ வாழும்போது துறைக் குடியிருப்புகள் அமைகின்றன. நதிக்கரைகளின் ஒரு புறத்தினின்று மறுபுறத்திற்கு நதி வற்றும் வேளைகளில் நடந்து கடக்கக்கூடிய இடங்களிலோ சிறு வள்ளங்களின் துணைகொண்டு கடக்கக்கூடிய இடங்களிலோ கடவைக் குடியிருப்புகள் அமைகின்றன. இலங்கை எங்கினும் பரவலாக இவற்றைக் காணலாம். குருநாகல், அநுராதபுரம், கண்டி என்பன வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தன வெனினும் நகரக் குடியிருப்புகளாக விளங்குகின்றன. எனவே, இலங்கையில் பொல்லநறுவை, தம்புளை, சிகிரியா என்பன வரலாற்றுக் குடியிருப்புகளாக விளங்குகின்றன. இவற்றைவிட இன்று குடியேற்றத் திட்டங்கள் மூலம் மக்கள் பல பகுதிகளிலும் குடியேற்றப் படுகின்றனர். இக்குடியேற்றங்கள் மூலம் கிளிநொச்சி, உன்னிச்சை, வவுனிக்குளம் முதலிய பகுதிகளில் அமைந்த குடியிருப்புகளே புதுக்குடியிருப்புகளாம்.

இலங்கையில் நகரக்குடியிருப்புகள் குறைவாகும்; மேலைத்தேய நகரப் பண்புகளைக் காணுவிடினும் கொழும்பு, யாழ்ப்பாணம், கண்டி, குருநாகல், காலி, களுத்துறை, நுவரெலியா, திருகோணமலை, மட்டக்களப்பு என்பனவற்றை நகரக் குடியிருப்புகள் எனக் கூறலாம். கொழும்பு, திருகோணமலை, காலி, காங்கேசன்துறை என்பன சிறந்த துறைமுகக் குடியிருப்புகளாகவும் விளங்குகின்றன.

## பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள்

இலங்கை பொருளாதாரம் குன்றிய நாடுகளுள் ஒன்றுகும். இந்நிலைமைக்குக் காரணம் அதிகரித்துவிட்ட மக்கள் தொகையும், வருடா வருடம் அதிகரித்து வரும் மக்கள் தொகையுமாகும். 1953-ம் ஆண்டு இலங்கையின் மக்கள் தொகை 80 இலட்சமாக விருந்தது; ஆனுல், 1963-ம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி 1 கோடி மக்கள் இலங்கையில் உள்ளனர். 10 ஆண்டுகளில் 20 இலட்சம் மக்கள் அதிகரித்து

இருக்கின்றனர். இவ்வாறு அதிகரிக்கும் மக்களுக்குப் போதிய (1) உணவு அளிக்க வேண்டியதும், (2) வேலைகள் அளிக்க வேண்டியதும் இலங்கை அரசாங்கத்தின் கடமையாகின்றது.

உணவும் தொழில்களும் மக்களுக்குக் கொடுப்பதனுல், ஒன்று பயிர்ச்செய்கை விருத்தி செய்யவேண்டும். மற்றது கைத்தொழில்களை ஆரம்பிக்க வேண்டும். இவ்விரண்டின் விருத்திதான் இலங்கையின் பொருளாதாரத்தைச் சீர்படுத்தக் கூடியனவாகவுள்ளன.

பயிர்ச் செய்கையை விருத்தி செய்வதானுல் இரண்டே இரண்டு வழிகள் தாமுள்ளன. ஒன்று விளை நிலங்களின் பரப்பைக் கூட்டுதல்; மற்றது ஏக்கருக்குரிய விளைவைக் கூட்டுதல் என்பனவாம். இலங்கை அரசாங்கம் இன்று பயிர்ச் செய்கை நிலங்களை அதிகரிப்பதிலும், ஏக்கருக்குரிய விளைவை அதிகரிக்கச் செய்வதிலும் கூடிய கவனமும் ஊக்கமும் எடுத்து வருகின்றது.

விளை நிலங்களை அதிகரிப்பதானுல், உலர் வலயத் தாழ் நிலங்களிலேயே அதிகரிக்க முடியும். ஏனெனில் அப்பகுதியிலேயே பயன்படுத்தப்படாத பிரதேசங்கள் ஏறத்தாழ $1\frac{1}{4}$ கோடி ஏக்கர் வரை காணப்படுகின்றன. ஈரலிப்பான பிரதேசத்து நிலங்கள் யாவும் பயிர்ச் செய்கைக்கு நன்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

உலர் வலயத் தாழ் நிலங்களைப் பயன்படுத்தி அதிக நிலப்பரப்பைப் பயிர்ச் செய்கையின் கீழ் கொண்டுவரவும், உணவு உற்பத்தியை அதிகரிக்கவும், தென்மேல் பிரதேசத்தில் காணப்படும் அதிக மக்களடர்த்தியைக் குறைக்கவும், அரசாங்கம் பல குடியேற்றத் திட்டங்களை வகுத்திருக்கின்றது.

இலங்கைக்கு ஓரளவு போதிய மழைவீழ்ச்சி கிடைக்கின்றது. ஆனுல், சில காலங்களில் பருவந்தப்பி மழை பெய்வதுண்டு. அதிக மழைநீர் வீணே கடலுடன் கலக்கின்றது. அதனுல், அம்மழைநீரைச் சேகரித்து விவசாயிகளுக்குத் தேவையான நேரத்தில் நீரை வழங்க வேண்டியது அவசியம். எனவே, மழை நன்ருகப் பெய்யும் காலங்களில் நீரைத் தேக்கி மழை பெய்யாத காலத்தில் வயல்களுக்குப் பயன்படுத்தக் கொடுப்பதும் அநேக ஏக்கர் காட்டு நிலத்தை விளைநிலமாக்குவதும் அரசாங்கத்தின் கடமையாகும்.

உலர் வலயத் தாழ் நிலங்களில் குடியேற்றத் திட்டங்களைச் செயல் படுத்துவதற்கு மக்கள் அங்கு வாழ்வதற்கு ஏற்ற வாழ்க்கை வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டியது அவசியமாகும். இத்தாழ்

நிலங்களில் இன்று, பாழடைந்து கிடக்கின்ற ஆயிரக்கணக்கான குளங்கள் வரலாற்றுக் காலத்தில், இங்கு மக்கள் பெருந் தொகையாக வாழ்ந்திருக்கின்றூர்கள் என்பதற்குச் சான்றுகளாக உள்ளன. எனவே, முன்பு மக்கள் வாழ்ந்த இத்தாழ் நிலங்களில் இன்று மக்கள் வாழ வாழ்க்கை வசதிகளைச் செய்துகொடுக்க முடியும்.

காடுகளை அழித்து, விளை நிலமாக்கி, நீர்ப்பாய்ச்சல் வசதிகளைச் செய்து கொடுப்பதே குடியேற்றத் திட்டத்தின் முதல் முக்கிய செயலாகும். பழைய குளங்களைத் திருத்தியும் புதிதாக அமைத்தும் கால்வாய்கள் மூலம் நதிகளையும் குளங்களையும் இணைத்தும் விளை நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றது. நல்ல போக்குவரத்து வசதிகளைச் செய்து கொடுப்பது இரண்டாவது வேலையாகும். இவற்றைவிட வைத்திய வசதிகள், பிள்ளைகள் கல்வி கற்கப் பாடசாலை வசதிகள், விளைபொருட்களை விற்கச் சந்தை வசதிகள் என்பன குடியேற்றங்களில் அமைய வேண்டிய வாழ்க்கை வசதிகளாம்.

உலர் வலயத் தாழ் நிலங்களின் சுகாதாரக் கேட்டிற்குக் காரணமான மலேரியா நோய்க்குப் பயந்து மக்கள் இப்பகுதிகளில் குடியேற விரும்பவில்லை. ஆனல், இன்று மலேரியா பெருமளவு ஒழிக்கப்பட்டுள்ளது.

இன்று இலங்கையில் 57 குடியேற்றத் திட்டங்களுள்ளன. 1,95,570 ஏக்கர் நிலம் பயிர்ச் செய்கையின் கீழ்க் கொண்டுவரப்பட்டுள்ளது. இப்பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களில் பராக்கிரம சமுத்திரத் திட்டம், மின்னேரியாத் திட்டம், மினிப்பே திட்டம், காலவீவாத் திட்டம், எலகராத் திட்டம், கல்லோயாத் திட்டம், மல்வத்து ஓயாத் திட்டம், மகாவலி கங்கையைத் திருப்புந் திட்டம், வளவ கங்கைத் திட்டம், உன்னிச்சைத் திட்டம், நாலந்தா திட்டம், தெதுறு ஓயாத் திட்டம், கிரிண்டி ஓயாத் திட்டம், மினிப்பே எலத் திட்டம், களனிகங்கைத் திட்டம் என்பன குறிப்பிடத்தக்கன. (படம்: 48-ஐப் பார்க்க)

உருவாக்கப்பட்ட இத்திட்டங்களில் பராக்கிரம சமுத்திரத் திட்டம், மின்னேரியாத் திட்டம், மினிப்பேத் திட்டம், காலவீவாத் திட்டம், எலகராத் திட்டம், கல்லோயாத் திட்டம், நாலந்தா திட்டம், என்பன பூரணமாக நிறைவேற்றப்பட்டுள்ளன. வளவைகங்கைத் திட்டம் இப்போது நிறைவேற்றப்பட்டு வருகின்றது.

இரணைமடு விஸ்தரிப்புத் திட்டம், பதவியாத் திட்டம், அருவியாறுத் திட்டம், கந்தளாய்த் திட்டம், தெதுறுஓயாத் திட்டம், கெடஓயாத் திட்டம், மகாவலிகங்கையைத் திருப்புந்திட்டம் என்பன விருத்தி செய்யப்பட இருக்குந் திட்டங்களாகும்.

இக்குடியேற்றத் திட்டங்களில் 1955-ம் ஆண்டிற்கு முன், ஒவ்வொரு குடியேற்ற வாசிக்கும் ஐந்து ஏக்கர் தாழ் நிலமும் மூன்று ஏக்கர் உயர் நிலமும் வழங்கப்பட்டன. 1955-ம் ஆண்டிற்குப்பின் மூன்று ஏக்கர் தாழ் நிலமும் இரண்டு ஏக்கர் உயர் நிலமும் வழங்கப்பட்டன. தாழ்நில விளை நிலங்கள் நீர்ப்பாய்ச்சல் வசதியுடையனவாயும், உயர் நிலங்கள் நீர்ப்பாய்ச்சல் வசதியற்றனவாகவு முள்ளன. அதனால் இக் குடியேற்றத் திட்டங்களின் பயிர்ச் செய்கையில் இரு பெரும் வேறுபாட்டினை அவதானிக்கலாம்.

குடியேற்றங்களின் தாழ் நிலங்களில் நெற் செய்கை முக்கிய விடத்தைப் பெற்றுள்ளது. நெற்செய்கை பெரிதும் நீர்ப்பாய்ச்சல் வசதியில் தங்கியுள்ள விடத்தில், வடகீழ்ப் பருவக்காற்று மழையினால் மேலதிக நீரையும் பெறுகின்றது. இரு பருவங்களினாலும் நீர் பெறக் கூடிய குடியேற்றங்களில் பெரும் போகத்திலும் (மகா), சிறு போகத்திலும் (யால) நெற்செய்கை நடைபெறுகின்றது.


உயர் நிலப்பயிர்ச் செய்கையில் தென்னை, பலா, தோடை, முருங்கை, மா, இலவம் எனும் நிரந்தரமான மரப் பயிர்களும், வாழையும், வெங்காயம், மிளகாய் முதலிய காய்கறிப் பயிர்களும், குரக்கன், எள், சோளம், கடலை முதலிய தானியப் பயிர்களும் பயிரிடப்பட்டு வருகின்றன.

இத்தகைய பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் சில குறித்து விரிவாக ஆராய்வோம்.

## கல்லோயாத் திட்டம்

கல்லோயா அபிவிருத்தித் திட்டம் ஒரு பல பயன்தரு திட்டமாகும். இதுவரை இலங்கையில் நிறைவேற்றப்பட்ட திட்டங்களுள் இது பெரியது; நல்ல பயனையுந் தந்தது. இத்திட்டம், அபிவிருத்தி அடையாத பகுதிகளை விருத்தி செய்தல், நீர்ப்பாசன வசதிகளை அமைத்தல், வெள்ளப் பாதுகாப்பும் நீர்வடிய வசதியுமமைத்தல், நீர்மின் வலுவை உற்பத்தி செய்தல், விலையுயர்ந்த மரங்களைக் காடுகளாக வளர்த்தல், மண்ணரிப்பைத் தடுத்தல், குடியேற்றங்களை நிறுவுதல் முதலிய பல பயன்தரு திட்டங்களுக்காக உருவாக்கப் பட்டதாகும்.

கல்லோயா, 4300 அடி உயரத்தில் இருக்கும் மதுள் சீமாக் குன்றிலிருந்து உற்பத்தியாகி, கிழக்கு முகமாக 68 மைல்கள் வரை பாய்ந்து, கடலிலிருந்து 25 மைலளவில் வெள்ளச் சமவெளியாகிறது. எனவே, இவ் வெள்ளத்தைத் தடுப்பது அவசியமாயிற்று. மேலும்,




படம்: 53 கல்லோயாத்திட்டம்

கல்லோயா நதி நீர் பெறும் தளம் சுமார் 385 சதுரமைல் பரப்பை அடக்கியது. இப்பெரிய பரப்பில் பெய்யும் மழையானது அதிக நீரை இந் நதிக்கு அளிக்கிறது. வடகீழ்ப் பருவக் காற்ருலும் இப்பகுதி வருடச் சராசரியாக 83 அங்குலங்களுக்கு மேல் மழை வீழ்ச்சியைப் பெறுகிறது. இவ்வளவு நீரும் வீணே கடலுடன், கலப்பதுடன், கழிமுகத்தை அண்மியிருந்த வயல்களையும் வெள்ளத்துள் ஆழ்த்தி வந்தன. அத்தோடு இப் பகுதியின் தரையில் மூடப்பட்டுள்ள மண் அதிகம் தடிப்பும், இறுக்கமுமானது. அதனுல், பருவமழை நீர் இத் தடிப்பான மண்ணை ஊடறுத்துப் பொசிந்து, தரைகீழ் வடிகாலாகத் தேங்கி நிற்கக்கூடிய தன்மையற்றிருக்கின்றது; எனவே, நிரந்தரமான பயிர்ச்செய்கை குளங்களில் தான் தங்கி இருந்தது. இத்தகைய காரணங்களுக்காக இப்பல பயன்தரு திட்டம் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டுமுள்ளது.

கல்லோயா அபிவிருத்தித் திட்டம் 1948-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டத்தை செயல்படுத்த ஒரு சபையும் நியமிக்கப்பட்டது.

கல்லோயாத் திட்டத்தின் முதல் வேலையாக இங்கினியக்கலை எனு மிடத்தில் 3600 அடி நீளமுள்ள ஓர் அணையைக் கட்டினர். மிக வுயர்ந்த இடத்தில் உயரம் 154 அடியாகும். இங்கு 30 சதுரமைல் பரப்பில் நீர்த்தேக்கமுள்ளது. இந்நீர்த்தேக்கம் கடலிலிருந்து 28 மைல்கள் தூரத்தில் இருக்கிறது. இந்நீர்த் தேக்கத்தினுல் உரு வானதே சேனநாயக்க சமுத்திர ஏரியாகும். இந்த ஏரி 7,70,000 ஏக்கர் அடி நீரைக் கொண்டுள்ளது. இலங்கையில் உள்ள மற்றைய எல்லாக் குளங்களிலும் தேங்கும் நீரினளவு இங்கே தேங்கி நிற்கி றது. இந்த ஏரியிலிருந்து கால்வாய்கள் மூலம் நீர்ப்பாய்ச்சல் நடை பெறுகின்றது. தப்புளம், தும்பங்கேணி, சாடியந்தலாவை, நீர்த் தாய், இலுக்குச்சேனை முதலிய பகுதிகள் நீர்ப்பாய்ச்சப்படுகின்றன.

இத்திட்டம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் இப்பிரதேசத்தில் 33,000 ஏக்கர் நிலமே பயிர்ச் செய்கைக்குட்பட்டிருந்தது. பின்னர், இந்நிலப் பரப்பு 26,000 ஏக்கராகக் குறைந்தது. ஆனுல், கல்லோயா அபிவிருத்தித் திட்டத்தால் 60,000 ஏக்கரை வருடத்திற்கு இருமுறை சாகுபடி செய்வதால், 1,20,000 ஏக்கரில் பயிர்ச்செய்கை நடைபெறு கிறது. முன்னர் வருடமொன்றுக்கு 26,000 ஏக்கரில் பயிர்ச்செய்கை நடைபெற்ற இடத்தில், இப்போது 2,10,000 ஏக்கரில் பயிர்ச்செய்கை நடைபெறுவது பெரும் அபிவிருத்தியேயாகும்.

கல்லோயாப் பகுதிகளைப் பொறுத்த மட்டில் நெல், மழை அதிகம் பெய்யும் பெரும் போகத்தில் செய்கை பண்ணப்படுகின்றது. சிறு போகத்தில் துணையுணவுகள் விளைவிக்கப்படுகின்றன. இங்கு சராசரி நெல் விளைச்சல் ஏக்கருக்கு 40 புசல் ஆகும். மேட்டுநிலப் பயிர்க ளாகப் பருத்தி, நிலக்கடலை, புகையிலை என்பன பயிராகின்றன. இன்று புகையிலைச் செய்கை முக்கியமாகவுள்ளது. கோழிப்பண்ணை கள் மூலம் வருடம் ஒன்றிற்கு 55 இலட்சம் முட்டைகள் பெறப்படு கின்றன. கரும்பு 1200 ஏக்கரில் பயிரிடப்படுகின்றது. நன்னீர்த் தேக் கங்களிலும், சேனநாயக்கா சமுத்திர ஏரியிலும் மீன் பிடிக்கப்படு கின்றது.

கல்லோயாப் பகுதியில் கைத்தொழில் விருத்தியுற்றுள்ளது. சீனி ஆலை, குடிவகைகள் தயாரிக்கும் தொழிற்சாலை, ஓட்டுத் தொழிற் சாலைகள், சவர்க்காரத் தொழிற்சாலை என்பன உருவாகி இயங்கி வருகின்றன. கல்லோயாப் பகுதியில் 75 இலட்சம் கிலோவார்ட் நீர் மின்சத்தி பெறப்படுகின்றது.

கல்லோயாப் பகுதியில் மேற்குப் பகுதியும் கிழக்குப் பகுதியும், வடகிழக்குப் பகுதியும் தாம் விருத்தி செய்யப்பட்டிருக்கும் பகுதிக ளாம். மேற்குப் பகுதியில் தோடை கிராமத் தோட்டங்களில் பயி

ராகிறது. கிராம மக்கள் சேனைப் பயிர்ச் செய்கை முறைப்படி காடுகளைக் கொளுத்தி சோளம், குரக்கன் என்பனவற்றைப் பயிரிடுகின்றனர். கல்லோயாவின் விருத்தியுற்ற கிழக்குப் பகுதி கடற்கரையை அடுத்துள்ளது. தென்னை நடப்பட்டுள்ளது; நதி வண்டல் 30,000 ஏக்கருக்குப் பரந்திருப்பதால் இப் பகுதியில் நெல் விளைவிக்கப்படுகிறது.

மேற்குப் பகுதிக்கும், கிழக்குப் பகுதிக்கும் இடையிலுள்ள பகுதி விருத்தியுறாத பகுதியாகும். 5,60,000 ஏக்கர் வரை இங்குண்டு. இப் பகுதியின் மத்தியில் தான் சேனநாயக்கா சமுத்திரம் அமைந்துள்ளது. இப்பகுதியில் காடுகளும் வளர்ந்துள்ளன இப்பகுதியை விருத்திசெய்ய முயற்சிகள் நடைபெறுகின்றன.

கல்லோயா அபிவிருத்திச் சபையினர் செய்யவேண்டிய சில செயல்களுள்ளன. சீனியைப் பொறுத்தமட்டில் இலங்கை பிற நாட்டையே நம்பியுள்ளது. இந்நிலையை மாற்றக் கல்லோயாப் பகுதிகளில் கரும்பின் உற்பத்தியைப் பெருக்குவது அவசியம். நீர்த் தேக்கங்களிலும், குளங்களிலும் மீன்களை வளர்க்கலாம். கோழிப் பண்ணைகளை அதிகமாக்குவதன் மூலம் இலங்கையின் முட்டைத் தட்டுப்பாட்டை நீக்கலாம். சேனைப் பயிர்ச்செய்கை மூலம் இங்கு சோளம் விளைவிக்கப்படுவதால், பன்றி வளர்ப்பை ஆரம்பிக்கலாம். குடியேற்றத் திட்டங்களுக்காக அமைக்கப்பட்ட வீடுகள் மின்சார வசதியற்றனவாகும். எனவே, மின்சாரவசதி அளிக்கவேண்டும். சுகாதாரத்தைப் பேணுவதற்குப் பிரச்சாரங்கள் செய்யவேண்டும். இவற்றை எல்லாம் கல்லோயா அபிவிருத்திச் சபையினர் செயலாக்க முயலவேண்டும்.

## மகாவலி கங்கையைத் திருப்புந் திட்டம்

இலங்கையின் மிகப் பெரிய பொருளாதாரத் திட்டமென்று, மகாவலி கங்கையை வடக்கு நோக்கித் திருப்புந் திட்டத்தைக் கூறலாம்.

மகாவலி கங்கை ஹோட்டன் சமவெளியில் உற்பத்தியாகின்றது. கொத்மலி ஓயாவை மகாவலியின் தோற்றக்கிளை எனலாம். கொத்மலி ஓயா ஹோட்டன் சமவெளியில் உற்பத்தியாகி, தென் மேற்கிலிருந்து வடகிழக்காகக் கிளேண்டியான் எனுமிடம் வரை பாய்கின்றது. இதற்கு அப்பால் வடக்குத் திசையில் திரும்பி 3 மைல்கள் ஓடி கலிடோனிய எனுமிடத்தில் தமகஸ்தலாவை ஓயாவைச் சந்திக்கிறது. அதேபோல தலவாக்கொல்லையில் நுவரெலியாவிலிருந்து வரும் நனுஓயாவைச் சந்தித்துத் தன்னுடன் சேர்த்துக் கொள்கிறது. இவ்வாறு பாயும் கொத்மலி ஓயா, நாவலப்பிட்டிக்குச் சில மைல்களுக்கு வடக்கே மகாவலி கங்கையுடன் இணைகின்றது. கொத்மலி ஓயாவிலேயே சென் கிளியர், எல்ஜின் நீர்வீழ்ச்சிகள் காணப்படுகின்றன.

கற்றன் மேட்டு நிலத்தை விட்டு விலகிய மகாவலிகங்கை, கண்டி மேட்டு நிலத்திற்குள் பிரவேசிக்கின்றது. இங்கு ஏறக்குறைய சமவுயரமான பள்ளத்தாக்காக இருப்பதால், நதியின் வேகம் குறைவானதாக இருக்கின்றது. இந்நதி பேராதனை வழியாகச் சென்று, கண்டி நகரை ஒரு வளைந்த பள்ளத்தாக்கு வழியாக வலம்வந்து, தும்பறைப் பள்ளத்தாக்கை அடைகின்றது. கண்டி நகருக்கு வடக்கே மகாவலி கங்கையில் ஏற்படும் முழங்கை வளைவு கட்டுகாஸ்த்தோட்டை எனுமிடத்தில் நிகழ்கின்றது. மகாவலி கங்கை தும்பறைப் பள்ளத்தாக்கை அடைந்ததும், நதியின் போக்கு நக்கிள்ஸ் மலைகளினால் நிர்ணயிக்கப் படுகின்றது.

கற்றன் மேட்டு நிலத்தை விட்டு விலகிய மகாவலிகங்கை, கண்டி மேட்டு நிலத்தில் பிரவேசித்துத் தும்பறைப் பள்ளத்தாக்கினூடாகப் பாயும்போது, இப்பள்ளத்தாக்கின் தென்கிழக்குப் பாகத்தில் ஊவா வடிநிலத்தில் உற்பத்தியாகி வரும், உமா ஓயா, பதுளை ஓயா, லொக்கல் ஓயா, ஆகிய கிளை நதிகளைத் தன்னோடு இணைத்துக் கொள்கிறது. உமா ஓயா, பதுளை ஓயா, லொக்கல் ஓயா என்பன ஊவாவடிநிலத்தின் வழியாகப் பாய்வதால் நவம்பர், டிசம்பர், ஜனவரி மாதங்களில் அதிக நீரைப் பெறுகின்றன.

இதற்கு அப்பால் நதி வரண்ட பிரதேசத் தாழ்நிலம் வழியாகப் பாய்கின்றது. இந்நிலையை நதி அலுத்நுவர வரையில் அடைந்துவிடுகின்றது. நக்கிள்ஸ் மலைத்தொடருக்குச் சமீபமாக உற்பத்தியாகின்ற அம்பன் கங்கை எலகரவிற்குச் சமீபமாக மகாவலி கங்கையின் இடது பாகத்தில் இணைகின்றது.

உலர் பிரதேசத் தாழ்நிலத்திற் பாயும் நதி இரு கிளைகளாகப் பிரிந்து கடலையடைகின்றது. கிண்ணியா என்ற கிளை கொட்டியாரக் குடாவில் சங்கமமாகின்றது. வெருகல் என்ற கிளை இதற்குத் தெற்கே கடலைச் சங்கமிக்கிறது.

மகாவலி கங்கை மிகப் பெரிய வடிநிலத்தைக் கொண்டுள்ள போதிலும் ஏனைய வடிநிலங்களிலும் விருத்தி குன்றியதாகவே காணப்படுகின்றது. 4000 சதுரமைல் பரப்பினை வடிநிலமாகக் கொண்டிருக்கிறது. ஆனால், இதில் 3000 சதுர மைல் காடடர்ந்த பிரதேசமாகும். மகாவலி கங்கையின் கீழ்ப்பாகத்திலேயே அதன் நீர் நீர்ப்பாய்ச்சலிற்குப் பயன்படுத்தப்படுகின்றது.

மகாவலி கங்கை 40,00,000 ஏக்கர் அடி நீரை ஆண்டிற்கு ஆண்டு கடலுடன் கலக்கின்றது. நீரைப் பயன்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட பல பயன்தரு திட்டமே மகாவலி கங்கையை வடமாகாணம் நோக்கித் திருப்பும் திட்டமாகும். இத்திட்டம் நிறைவேறில் 3,25,000 ஏக்கர் பரப்பிற்கு நீர்ப்பாய்ச்ச முடியும். தென்மேல் பருவக்காற்றுக்

காலத்தில் ஆற்றின் வடிநிலத்தில் ஏற்படும் வெள்ளப்பெருக்கைத் தடைசெய்ய முடியும். குளங்களில் மீன் வளர்க்கலாம். வடமத்திய மாகாணம் முழுவதும் நீர்ப்பாசன வசதியையும், நீர்மின் வலுவையும் பெறும். உலர் பிரதேசத்திற்கு ஊடாக மகாவலி கங்கையை கொத்மலியிலிருந்து வவுனியா வரை திருப்பி ஓட விடுவதால், உலர் பிரதேசம் செழிப்பு வாய்ந்த பகுதியாக மாறிவிடும்.

மகாவலிகங்கை, உற்பத்தியாகின்ற ஈரவலயத்தில் 200 அங்குலங்களுக்கு மேற்பட்ட மழை வீழ்ச்சியைப் பெறுகின்றது. மேலும், இது ஊடறுக்கும் பகுதிகளில் அணைகள், கால்வாய்கள் என்பன கட்டுவதற்குத் தரைத் தோற்றம் சாதகமாகவுள்ளது. நீரும் உவர்த் தன்மையற்றுள்ளது.

கண்டியிலிருந்து ஆற்றினை வடமத்திய மாகாணத்திற்குத் திருப்புவதற்குக் கண்டியிலிருந்து 3 மைல்கள் தூரத்திலுள்ள பிறிம்றோஸ் குன்றில் பிறிம்றோஸ் அணை (பொல்கொல்ல) கட்டப்படும். இந்த அணை 20 அடி உயரமும், 500 அடி நீளமுமானது. இந்த அணையிலிருந்து வடக்குப் புறமாகக் குடையப்படும் மூன்று சுரங்கங்களுக்கு ஊடாக 1 வினாடிக்கு 2500 கன அடி நீர் வடமத்திய மாகாணத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உக்குவெல, டிக்கல, லெண்டோர் எனும் இடங்களிலேயே சுரங்கங்கள் அமைந்திருக்கும். பிறிம்றோஸிலிருந்து வடமத்திய மாகாணமூடாக அக்குறணை, வத்தேகம, மாத்தளை, தம்புளை, சிகிரியா, கபறணை, கெப்பற்றிக்கொல, வழியாக வவுனியா வரை அமைக்கப்படும் கால்வாய் 124 மைல்கள் நீளமானதாக இருக்கும்.

உக்குவெல, டிக்கல (நாலந்தை), லெண்டோர் எனும் சுரங்கங்களின் முடிவில் மூன்று நீர்மின் நிலையங்கள் அமைக்கப்படும். இந் நீர்மின் நிலையங்கள் 2,60,000 கிலோவாட் மின்வலுவை உற்பத்தி செய்யும். இம்மூன்று நீர் மின்வலு நிலையங்களும் பிறிம்றோஸ் அணையிலிருந்து 43 மைல்களுக்குள் உள்ளன. கால்வாயின் மிகுதி 81 மைல் நீளத்தில் எவ்வித நீர் மின்வலு நிலையங்களும் இரா.

மகாவலி கங்கையைத் திருப்புந் திட்டத்தை நிறைவேற்ற 120 கோடிரூபா தேவையென மதிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையின் பொருளாதார நிலையில் 120 கோடி ரூபா பெருந்தொகையாகவுள்ளது. அதனால்தான் இத் திட்டத்தை நிறைவேற்ற அரசாங்கம் தயங்குகிறது. இத் திட்டம் வகுக்கப்பட்டபோது ஐக்கிய அமெரிக்கா உதவுவதாக இருந்தது. பின் ஐக்கிய அமெரிக்கா உதவ மறுத்துவிட்டது. 120 கோடி ரூபா செலவானாலும் இத்திட்டம் நிறைவேறில் வருட வருமானமாக 18 கோடி ரூபாவை பெறமுடியும் எனக் கணக்கிட்டுள்ளனர்.

இப்பெருந்திட்டத்தின் வேலைகள் இன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## அத்தியாயம்: 18

# யாழ்ப்பாணக் குடாநாடு

யாழ்ப்பாணக் குடாநாடு, இலங்கையின் ஏனைய பகுதிகளில் இருந்து, யாழ்ப்பாணக் கடல் நீரேரியால் பிரிக்கப்பட்டு, தனிப் பிரதேசமாக விளங்குகின்றது. பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் முதலான பண்பாட்டியல்புகள் யாழ்ப்பாணக் குடாநாட்டில் சற்று வேறுபாடானவை.

### தரைத்தோற்றம்

யாழ்ப்பாணக் குடாநாடு ஒரு சமதரையாகும்; இக்குடாநாட்டின் எப்பகுதியாவது கடல் மட்டத்தில் இருந்து 30 அடி உயரத்திற்கு மேலில்லை. இக்குடாநாடு முழுவதும் இலங்கையின் வடபாகத்திலுள்ள மயோசீன்காலச் சுண்ணும்புக்கற் பிரதேசத்தைச் சார்ந்ததாகவுள்ளது. குடாநாட்டின் வடபாகத்திலும், வடமேல் பாகத்திலும் சுண்ணும்புக்கல் வெளியரும்புகளைக் காணலாம். ஏனைய பகுதிகளில் சுண்ணும்புக்கல், மேல் மண்ணிற்குக் கீழ் காணப்படுகின்றது.


### காலநிலை

யாழ்ப்பாணக் குடாநாட்டின் காலநிலை உலர்பிரதேச வகையினதாகும். ஆனல் கிழக்குக் கரையோரத்திலும் பார்க்க இங்கு மழைவீழ்ச்சி குறைவானதாகவும், வெப்பநிலை கிழக்குக் கரையோரத்திலும் பார்க்க அதிகமானதாகவும் உள்ளன. யாழ்ப்பாணக் குடாநாட்டின் வருடமழை வீழ்ச்சி 75 அங்குலத்துக்குக் குறைவாக இருக்கின்றது. உலர் பிரதேசத்தைப்போல, மழைக்காலம் செப்டம்பர் மாதம் தொடக்கம் டிசம்பர் மாதம்வரை நீடிக்கின்றது. நவம்பர் மாதத்தில் மழைவீழ்ச்சி அதிகமானதாக இருக்கின்றது. இதற்குச் சூருவளியே காரணமாகும். இக் குடாநாட்டின் மேற்குப்பாகத்திலும் தீவுப் பகுதியிலும் வருடச் சராசரி மழைவீழ்ச்சி 50 அங்குலங்களுக்குக் குறைவாகவுள்ளது. யாழ்ப்பாணக் குடாநாட்டின் வருடச் சராசரி வெப்பநிலை 81·6°ப: ஆகும்.

### மண்வகை

யாழ்ப்பாணக் குடாநாட்டின் வளங் குறைந்த மண்ணிலிருந்து வளங்கூடிய மண் வரையில் பல்வேறு மண் வகைகள் உள்ளன, எனினும், ஐந்து மண் வகைகளைப் பிரதானமாகக் குறிப்பிடலாம்; சுண்

ணும்புக்கல், உவர்மண், வெண்மணல், செம்மண், நரைமண் என்பனவே அவையாம். யாழ்ப்பாணக் குடாநாட்டின் வடகரையோரங்களிலும் வடமேற்குக் கரையோரங்களிலும் **சுண்ணும்புக்கல்** பிரதேசம் காணப்படுகிறது. குடாநாட்டின் உட்புறத்தில் இருக்கும் உப்பாறு, தொண்டமானுறு ஆகிய கடல்நீர் ஏரிகளைச் சூழ்ந்து **உவர்மண்** பிரதேசம் காணப்படுகிறது. குடாநாட்டின் வடகீழ்ப் பகுதியிலும், தென்மேல் கரையோரங்களிலும் **வெண்மணல்** படிந்துள்ளது. குடாநாட்டின் மத்தியில் சுன்னுகத்தை மையமாகக்கொண்ட ஒரு பிரதேசத்தில் **செம்மண்** காணப்படுகின்றது. மேற் குறிப்பிட்ட பகுதிகள் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் **நரைமண்** காணப்படுகின்றது. இது மணலும் களி மண்ணும் கலவனாக உள்ள மண்ணாகும்.




படம்: 53 யாழ்ப்பாணக் குடாநாட்டின் மண்வகை

## பயிர்ச்செய்கை

யாழ்ப்பாணக் குடாநாட்டில் செறிவான பயிர்ச்செய்கையும், சுழல்முறைப் பயிர்ச்செய்கையும் கைக்கொள்ளப்படுகின்றன. இக் குடாநாட்டில் பயிர்ச்செய்கைக்குப் பயன்படக்கூடிய விளைநிலங்கள் எல்லாம் முழுமையாகப் பயன்படுத்தப் பட்டிருக்கின்றன. இங்கு தோட்டச் செய்கையே பிரதானமானதாக இருக்கின்றது. இயற்கையாக வளம் குறைந்த மண்ணை ஆடுமாடுகளைப் பட்டியடைத்தல், இலைகுழைகளைப் புதைத்தல், வளமாக்கிகளை உபயோகித்தல் போன்ற முறைகள் மூலம் வளமாக்குகின்றனர்.

மண்வகைகளுக்கு இணங்கவே யாழ்ப்பாணக் குடாநாட்டின் பயிர்ச் செய்கையும் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது. நரைமண் பிர

தேசங்களில் நெற்செய்கையும், செம்மண் பிரதேசங்களில் புகையிலை, உருளைக்கிழங்குச் செய்கையும், வெண்மணல் பகுதிகளில் தென்னைச் செய்கையும் நடைபெறுகின்றன.

## நெல்

யாழ்ப்பாணக் குடாநாட்டின் நெல்வயல்கள் ஈரக்களிமண் செறிந்து இருக்கும் நரைமண் பிரதேசங்களில் காணப்படுகின்றன. நெல்வயல்கள் 'வானம் பார்த்த பூமிகளா'கும். அதாவது பருவ மழையை மட்டும் நம்பியே நெற்செய்கை நடைபெறுகின்றது. நெற்செய்கைக்கு இக்குடாநாட்டில் நீர்ப்பாசன வசதிகளில்லை.

இக்குடாநாட்டில் வருடம் ஒருமுறையே நெற் செய்கை நடைபெறுகின்றது. ஓகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் நெல்வயல்கள் விதைக்கப்படுகின்றன. யனவரி, பெப்ரவரி மாதங்களில் அறுவடை செய்யப்படுகின்றன. வடகீழ் பருவக்காற்றுடன் வரும் மழையினால் நெற்பயிர் செழித்து வளர்கின்றது. யாழ்ப்பாணக் குடாநாட்டின் நெற்செய்கையில் பசளையிடுதல், யந்திர உபயோகம் என்பன இன்று அதிகமாகும்.

## புகையிலை

இக்குடாநாட்டின் செம்மண் பிரதேசங்களிலேயே தோட்டங்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. இச் செம்மண் தோட்டங்களில் புகையிலை முக்கிய விளைபயிராகவும் வர்த்தகப்பயிராகவுமுள்ளது. ஏறக்குறைய 5000 ஏக்கர் பிரதேசத்தில் புகையிலை பயிரிடப்படுகின்றது. வடமராட்சி, தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி ஆகிய இடங்களில் உள்ள நரைமண் பிரதேசங்களிலும் புகையிலை பயிரிடப்பட்டு வருகின்றது. தட்டையன், நரம்பன் முதலிய புகையிலை வகைகள் யாழ்ப்பாணக் குடாநாட்டில் பயிரிடப்பட்டு வருகின்றன.

புகையிலைச் செடி நன்கு வளர்ந்து பயன் தருவதற்கு அதிகளவில் பசளை தேவைப்படுகின்றது; அதனால், யூலை, ஓகஸ்ட் மாதங்களில் எரு, குப்பை, பச்சைக்குழை என்பன தோட்டங்களில் புதைக்கப்படுகின்றன; ஓகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் தோட்டம் கொத்தப்படும். (உழப்படும்) நவம்பர் மாதத்தில் தோட்டம் மீண்டும் கொத்தப்பட்டு, டிசம்பர் மாதத்தில் புகையிலைக்கன்றுகள் நடப்படுகின்றன. ஒவ்வொரு நாளும் தண்ணீர் வார்க்கப்படும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் பயிர்ச்செய்கை தரைகீழ் நீரின் உதவியுடன் நடைபெறுகின்றது. கிணறுகளில் இருந்து துலாக்கள் மூலமும், பம்புகள் மூலமும் நீர் இத் தோட்டங்களுக்குப் பாய்ச்சப்

படுகின்றது. ஆண்டு முழுவதும் இத்தோட்டங்களில் ஏதாவது பயிர் செய்கை பண்ணப்பட்டு வருவதற்குக் கிணற்று நீரே காரணமாகும். ஒரே நேரத்தில் இரண்டு மூன்று பயிர்களைப் பயிரிடும் செறிவான பயிர்ச்செய்கைக்கும், காலத்திற்குக் காலம் பயிர்களை மாற்றிப் பயிரிடும் சுழல் முறைப் பயிர்ச் செய்கைக்கும் கிணறுகளே ஆதாரமாக அமைகின்றன. புகையிலைக் கன்றுகள் 3 தொட்டு 4 அடிவரை வளர்கின்றன. புகையிலைகள் அகலமாவதற்காகச் செடியின் நுனியிலுள்ள கொழுந்துகளைக் கொய்து விடுவர். பூச்சி, புழுக்கள் புகையிலைச் செடியைப் பாதியாமல் இருக்க மருந்து தெளிப்பர்.

புகையிலைத் தோட்டங்களுக்குக் கிணறுகளில் இருந்து ஒவ்வொரு நாளும் நீர் இறைக்கப்படுகின்றது. மார்ச், ஏப்பிரல் மாதங்களில் புகையிலை அறுவடை செய்யப்படும்.

## உருளைக்கிழங்கு

புகையிலைத் தோட்டங்களில் உருளைக்கிழங்கைச் செய்கை பண்ணும் வழக்கம், அண்மைக்காலத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் காணப்படுகின்றது. உருளைக்கிழங்கின் இறக்குமதித் தடையும், உருளைக்கிழங்கிற்கு இருந்த உடனடித்தேவையும், உத்தரவாத விலையும் யாழ்ப்பாணக் கமக்காரனை இச் செய்கையில் ஈடுபடத் தூண்டியுள்ளன. புகையிலைச் செய்கைபோன்று உருளைக்கிழங்குச் செய்கைக்குக் கூடிய பிரயாசை தேவையில்லை. புகையிலை பயிரிடும் அதே காலவேளையிலேயே உருளைக்கிழங்கும் பயிரிடப்பட்டு வருகின்றது.

## காய்கறிச்செய்கை

கிணறுகளையுடைய நெல்வயல்களில், நெல் அறுவடைக்குப்பின், கிணற்று நீரைப் பயன்படுத்திக் காய்கறிகள் விளைவிக்கப்பட்டு வருகின்றன. மிளகாய், கத்தரி, வெண்டி முதலிய பல்வகைக் காய்கறிகளும் விளைவிக்கப்படுகின்றன. வரண்ட மே, யூன் மாதங்களில் காய்கறிச் செய்கை அதிகம் நடைபெற்று வருகின்றது. மிளகாய்ச் செய்கையும் அண்மைக் காலத்தில் என்றுமில்லாத அளவு முக்கியத்துவத்தை யாழ்ப்பாணக் குடாநாட்டில் பெற்றிருக்கின்றது.

புகையிலை அறுவடையின் பின், புகையிலைத் தோட்டங்கள் வீணே கிடப்பதில்லை. அவை மிளகாய், வெங்காயம் முதலான காய்கறிச் செய்கைக்கும், குரக்கன், வரகு செய்கைக்கும் பயன்படுத்தப்படுகின்றன. ஏப்பிரல் தொட்டு மே மாதம் வரை தினை, வரகு என்பன செய்கை பண்ணப்படுகின்றன. காய்கறித் தோட்டங்கள் கதிகால்கள் நட்டு பனையோலையால் அல்லது தென்னங்கீற்று வேலியால்

சுற்றி அடைக்கப்பட்டிருக்கும். வேலி யோரத்தில் கருணைக்கிழங்கு, இராசவள்ளி முதலிய கொடிகள் வளர்ந்திருக்கும்.

### வாழை


வாழைச் செய்கை நரைமண் பிரதேசத்திலும் செம்மண் பிரதேசத்திலும் நடைபெற்று வருகின்றது. வாழை வருடப் பயிராகும். ஒரு தடவை நட்டால், தொடர்ந்து மூன்றாண்டுகளுக்குப் பயன்பெற முடியும். நீர்ப்பாய்ச்சி நன்கு வாழை செய்கைபண்ணப்படும் பகுதி, இலங்கையில் யாழ்ப்பாணக் குடாநாடாகும். புகையிலை அறுவடையின்பின் சில கமக்காரர் தமது தோட்டங்களில் வாழையைப் பயிரிடுகின்றனர்; அத்தோட்டங்களில் இப்பயிர் இரண்டுமூன்று ஆண்டுகளுக்குத் தொடர்ந்து பயன்தரும்.

### வெற்றிலை

யாழ்ப்பாணக் குடாநாட்டின் பயிர்களில் வெற்றிலையும் குறிப்பிடத்தக்கது. தெல்லிப்பழை, மாவிட்டபுரம், பன்னாலை, இளவாலை, வடலியடைப்பு முதலியவிடங்களில் வெற்றிலை முக்கியமாகப் பயிரிடப்படுகின்றது.

### பழவகை

யாழ்ப்பாணக் குடாநாடு பழவகை சிலவற்றிற்குப் பேர் பெற்றது. மத்தியதரைக் கடற்கால நிலையை ஒத்த யாழ்ப்பாணக்குடாநாடு (மாரிமழை; கோடை வறட்சி) பழச்செய்கைக்குப் புகழ்பெற்றதில் வியப்பில்லையல்லவா? எனினும், பழச்செய்கை வீட்டுத் தோட்டங்




படம்: 55 பயிர்ச்செய்கை

களிலேயே அதிகம் நடைபெற்று வருகின்றது. வாழை, பலா, மா, மாதுளை, தோடை முதலியன யாழ்ப்பாணக் குடாநாடு எங்ஙனும் பரவலாகச் செய்கை பண்ணப்பட்டு வருகின்றன. அண்மைக் காலத்தில் திராட்சைச் செய்கை யாழ்ப்பாணக் குடாநாட்டில் விருத்தியுற்று வருவது குறிப்பிடத்தக்கது. பனம்பழமும் வருங்காலத்தில் வர்த்தக முக்கியத்துவம் பெறும் என நம்பலாம்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் பரப்பில் ஏறக்குறைய 30 வீதம் மாத்திரமே பயிர்ச் செய்கைக்கு ஏற்றதாக உள்ளது. போதிய விளை நிலங்களில்லை. ஒரு குடும்பத்திற்கு ¼ ஏக்கர் தான் உண்டு. விளை நிலங்களை அதிகரிக்கும் நோக்கத்துடன் யாழ்ப்பாணக் கடலேரித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின்படி, யாழ்ப்பாணக் குடாநாட்டின் உட்புறத்திலிருக்கும் கடல்நீர் ஏரிகளை நன்னீர் ஏரிகளாக மாற்றி, அயலிலேயுள்ள உவர் நிலங்களை விளைநிலங்களாக்குவதாகும். இத் திட்டம் நிறைவேறியதும், சுமார் 50,000 ஏக்கர் உவர் நிலம் நெற் செய்கைக்கு ஏற்ற நிலமாக மாறிவிடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## கைத்தொழில்கள்

இலங்கையின் மிகப்பெரிய தொழிற்சாலையான சீமேந்துத் தொழிற்சாலை, யாழ்ப்பாணக் குடாநாட்டில் காங்கேசன்துறையில் இருக்கின்றது. சீமேந்து செய்வதற்கான மூலப் பொருட்களாகிய சுண்ணும்புக்கல் ஏராளமாக அயலிலும், களிமண் முருங்கனிலும் கிடைக்கின்றன. இப்சம் என்ற இரசாயன உப்பு இறக்குமதி செய்யப்படுகிறது. வருடம் ஒன்றிற்கு 80,000 தொன் சீமேந்து மட்டுமே உற்பத்தி செய்யப்படுகின்றது.

ஏனைய தொழில்கள் பெரும்பாலும் குடிசைக் கைத்தொழில்களாகவும், தனிப்பட்டவர்களின் முயற்சிகளாலான நிறுவனங்களாகவும் உள்ளன. குடிசைக் கைத்தொழிலில் நெசவு, மட்பாண்டம் வனைதல், பாய் பெட்டிகள் இழைத்தல் என்பனவடங்கும். தனிப்பட்ட நிறுவனங்களாக யாழ்ப்பாணத்தில் இரண்டு பெனியன் தொழிற்சாலைகளும் (கொட்டடி, வண்ணார்பண்ணை), இரண்டு சவர்க்காரத் தொழிற்சாலைகளும் (வண்ணார்பண்ணை, நல்லூர்), இரு இனிப்புத் தொழிற்சாலைகளும் (நல்லூர், மானிப்பாய்), ஒரு அலுமினியத் தொழிற்சாலையும் (மாவிட்டபுரம்) காணப்படுகின்றன. யாழ்ப்பாணக் குடாநாட்டின் பழைமை வாய்ந்த சுருட்டுக் கைத்தொழிலையும் இன்று சிறியளவுக் கைத்தொழில் எனலாம். 200க்கு மேற்பட்ட சுருட்டுக் கொட்டில்களில் 3500க்கு மேற்பட்ட தொழிலாளர் இத்தொழிலிலீடுபட்டுள்ளனர்.

## மீன் பிடித்தல்

தாழையடி, செம்பியன்பற்று, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, தொண்டமானாறு, மயிலிட்டி, ஊர்காவற்றுறை, அராலி, பாசையூர் ஆகிய இடங்களில் மீன்பிடித் தொழிலாளர் அதிகமாக வாழ்கின்றனர். அதிகமாக பச்சிலைப்பள்ளி வடமராட்சிக் கரைகளில் நெருங்கி வாழ்கின்றனர். இப்பகுதிகளே யாழ்ப்பாணக் குடாநாட்டின் மீன்பிடித் தளங்களாம். தென்மேல் பருவக் காற்றுக் காலங்களில் ஏராளமாக மீன் பிடிக்கப்படுகின்றது. பருத்தித்துறைக்கு வடக்கேயுள்ள பீற்று கடலடித்தள மேடை இலங்கையின் பிரதான மீன் பிடித் தளமாகும்.

## குடிப்பரம்பல்

குடாநாட்டின் பல பாகங்கள் மணற் பாங்கான பிரதேசங்களாகவும், பயனற்ற பிரதேசங்களாகவும் இருந்தும், குடாநாட்டில் குடியடர்த்தி சதுரமைல் ஒன்றிற்குச் சராசரி 1000 மக்களுக்கு மேலுண்டு. இக் குடாநாட்டில் ஏறக்குறைய 4,25,000 மக்கள் வசிக்கின்றனர். இத்தொகையில் ஏறக்குறைய 80,000 மக்கள் யாழ்ப்பாண நகரில் வசிக்கின்றனர். குடித்தொகை அளவுப்படி யாழ்ப்பாணம் இலங்கையின் மூன்றாவது பெரிய பட்டினமாகும். குடாநாட்டின் குடித்தொகை குறைவாகவுள்ள பகுதிகள் வடமராட்சி கிழக்கிலும், பச்சிலைப்பள்ளியிலும் காணப்படுகின்றன. இப்பகுதிகளில் குடியடர்த்தி சதுரமைலுக்கு 100க்குக் குறைவாகவுள்ளது.

# பயிற்சிகள்

1. இலங்கையின் நிலைய முக்கியத்துவத்தைச் சுருக்கமாக விபரிக்க.

2. இலங்கையின் தரைத்தோற்றப் பிரிவுகளை ஒரு புறவுருவப்படத்தில் குறிக்க. தாழ்நிலங்களில் ஒன்றினை மேல்வரும் தலைப்புகளின் கீழ் விவரிக்க.

   (அ) எல்லைகள் (ஆ) தரைத்தோற்றம் (இ) வடிகால்

3. மத்திய மலைநாட்டின் பிரதான தரைத்தோற்ற உறுப்புகளைச் சுருக்கமாக விபரிக்க.

4. இலங்கையின் மழைவீழ்ச்சிக்குரிய காரணங்களை விபரிக்க.

5. இலங்கையின் தென்மேல் பிரதேசம் ஈரலிப்பானதாய் இருப்பதற்கும், வடமேற்குப் பிரதேசம் அதிவரண்டதாய் இருப்பதற்கும் உரிய காரணிகளை விபரிக்க.

6. (i) கொழும்பு, திருகோணமலை என்னும் இரண்டு இடங்களிலும் ஒருவருடத்தில் அவதானிக்கப்படும் காலநிலை வேறுபாடுகள் யாவை?

   (ii) இவ் வேறுபாடுகளுக்குப் பொறுப்பாயுள்ள காரணிகளை விபரிக்க.

7. இலங்கையின் வெப்பநிலைப் பரம்பலை ஆராய்க.

8. (i) ஒரு வெளியுருவப்படத்தின் துணையுடன், இலங்கையின் பிரதான காலநிலைப் பிரதேசங்களை வகுத்துக் காட்டுக.

   (ii) இந்தப் பிரதேசங்களின் மழைவீழ்ச்சி வித்தியாசத்துக்குக் காரணங் கூறுக.

9. பின்வரும் பிரதேசங்களின் (அ) காலநிலை (ஆ) தாவர இயல்புகள் என்பனவற்றை விபரிக்க.

   (i) கற்றன் மேட்டுநிலம்

   (ii) மன்னூர்—புத்தளக் கரையோரம்

10. (i) பின்வரும் தாவர இனங்கள் ஒவ்வொன்றும் காணப்படுகின்ற ஒருபிரதான பகுதியின் பெயரை எழுதுக. (அ) முட்புதர் (ஆ) பத்தனைகள் (இ) உலர்பருவக் காற்றுக் காடுகள்.

   (ii) மேற்கூறிய ஒவ்வொரு தாவர இனத்துக்குக் காரணமாகவுள்ள புவியியற் காரணிகள் யாவை?

11. (i) இலங்கையில் நெல் வேளாண்மைக்கு உதவியாகவுள்ள புவியியற் காரணிகளை விபரிக்க.

   (ii) இலங்கையில் நெல் உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதற்கு இக்காரணிகளுள் எவற்றை மேலும் பயன்படுத்தலாம்? விளக்கி ஆராய்க.

12. இலங்கையின் வர்த்தகப் பயிர்களுள் ஒன்றினைக் குறித்து விபரிக்க.

13. (i) அயல் நாட்டுச் செலவாணியை ஈட்டித்தரும் மூன்று கமத் தொழில் விளைபொருட்களைக் கூறுக.

(ii) அவற்றில் ஒன்றைத் தெரிவு செய்து அதனோடு சம்பந்தப் பட்ட செயன் முறைகளை விபரிக்க.

14. மேல்வரும் கனிப்பொருட்கள் காணப்படும் ஒவ்வோர் இடத்தைக் கூறுக.

(அ) காரீயம் (ஆ) இல்மனையிட் (இ) இரும்புத்தாது (ஈ) வெண் களி: அவை எவ்வளவு தூரம் பயன்படுத்தப் பட்டுள்ளன என்பதை ஆராய்க.

15. சிறு குறிப்புகள் தருக.

(அ) சீமேந்துத் தொழிற்சாலை (ஆ) இரசாயனத் தொழிற்சாலை

(இ) காகிதத் தொழிற்சாலை (ஈ) இரும்புருக்குத் தொழிற்சாலை

16. இலங்கையின் வடமேற்குக் கரையோரமாக மீன்பிடித் தொழில் மிகுதியாக நடைபெறுவதற்கான காரணங்களைக் கூறுக. அப் பகுதியிற் கையாளப்படும் மீன்பிடி முறைகளை விபரிக்க.

17. இலங்கையின் தென்மேல் பகுதியின் மீன்பிடி முக்கியத்துவத்தை விபரிக்க.

18. கீழே கூறப்பட்டுள்ள மூன்று பிரதேசங்களில் ஒவ்வொன்றிலும் துரிதமாகக் குடிசனம் பெருகுவதற்கு நீர் எப்புவியியற் காரணங்களைக் கூறுவீர்?

(அ) கொழும்பு மாவட்டம் (ஆ) கண்டி மாவட்டம் (இ) அம்பாறை மாவட்டம்

19. யாழ்ப்பாணம், மன்னார் மாவட்டங்கள் குடிசனப் பரம்பலில் கணிசமான வேறுபாடுகளைக் காட்டுகின்றன. இவ்வேறுபாடுகளுக்கான காரணங்களைக் கூறுக.

20. இலங்கையின் தென்மேல் பகுதியில் குடிச்செறிவு அதிகமாக இருப்பதற்குரிய புவியியற் காரணிகளை விளக்குக.

21. (i) பின்வரும் குடியேற்ற வகைகளில் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வோர் உதாரணந் தருக. (அ) ஆற்றுத்துறைநகர் (ஆ) கோட்டைநகர் (இ) பாதைநகர் (ஈ) இடைவெளிநகர்

(ii) அவை அமைந்துள்ள இடங்களை விளக்குவதற்கு விளக்கப் படங்கள் வரைக.

(iii) நீர் விளக்கிய குடியேற்ற நகர்களில் எவையேனும் இரண்டினுடைய முக்கியத்துவத்தை விபரிக்க.

22. இலங்கையின் வர்த்தகத்தில் (ஏற்றுமதி, இறக்குமதி) அண்மைக் காலங்களில் ஏற்பட்ட மாற்றங்களை விளக்குக.

23. இலங்கையுடன் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள தேசங்களின் பெயர்களைக் குறிப்பிட்டு, அத்தேசங்களிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஐந்து பண்டங்களினதும், அத்தேசங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட ஐந்து பொருட்களினதும் விபரத்தை விபரிக்க.

24. இலங்கையின் ஈரவலய விவசாயி மே, யூன், யூலை ஆகிய மாதங்களில் சமாளிக்க வேண்டியுள்ள புவியியற் பிரச்சனைகள் யாவை?

25. (i) தென்மேல் பிரதேசத்திலுள்ள மூன்று பிரதான வகை மண்களின் பெயர்களை எழுதுக.

(ii) பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்கு அவை எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன என்பதை விபரிக்க.

26. (i) இலங்கையின் தென்மேல் பிரதேசம் ஏனைய பகுதிகளினின்றும் தரைத்தோற்றத்திலும் பொருளாதாரத்திலும் எவ்வாறு வேறுபடுகின்றது?

(ii) பொருளாதார வேறுபாடுகளுக்கான காரணங்களைத் தருக.

27. (i) தென்மேல் பிரதேசத்தில் காணப்படும் 5 கனிப்பொருட்களின் பெயர்களை எழுதுக.

(ii) இவ்வுலோகங்கள் காணப்படும் பிரதேசங்களை ஒரு புறவுருவப் படத்தில் குறிக்க.

(iii) இவை எந்த அளவிற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன?

28. காலநிலைப்படி மலைநாடு இரு பிரதான பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றது. இந்த இரு பிரிவுகளையும் ஒரு புறவுருவப்படத்தில் குறித்து அவற்றின் பெயர்களை எழுதுக? காலநிலை வேறுபாடுகளுக்கான காரணங்களைத் தந்து, இநத இரண்டு பிரதேசங்களிலும் செய்யப்படும் பயிர்ச்செய்கைக்கு அவை எங்ஙனம் பயன்படுகின்றன என்பதைக் கூறுக.

29. கற்றன் மேட்டுநிலம், வெலிமடை மேட்டுநிலம் ஆகிய இரண்டின் ஒற்றுமை வேற்றுமைகளைப் பின்வரும் தலைப்புகளில் வைத்து விளக்குக.

(அ) தரைத்தோற்ற உறுப்புகள் (ஆ) காலநிலை

(இ) பொருளாதார முயற்சிகள்

30. மத்திய உயர்நிலங்களைக் காட்டும் ஒரு வெளியுருவப்படத்தில், வெவ்வேறு பகுதிகளில் விளைவிக்கப்படும் பிரதான பயிர்களைக் காட்டி, அவற்றுள் இரு பயிர்களுக்குப் புவியியற் காரணிகள் எவ்வாறு சாதகமாயுள்ளன வென்பதை விபரிக்க.

31. உலர்பிரதேசத்தின் விவசாயச் சாத்தியக் கூறுகளைப்பற்றிப் பின்வரும் தலையங்கங்களின் கீழ் விபரிக்க. (அ) புதிய பயிர்கள் (ஆ) விலங்கு வளர்ப்பு.

32. ஒருவகைப் பயிர்ச்செய்கை முயற்சி என்ற முறையில் சேனைப் பயிர்ச்செய்கையினுடைய குறைகளை உதாரணங்களோடு விவரிக்க.

33. (i) வறண்ட பிரதேசத்திலுள்ள ஐந்துவகைக் குடியிருப்புகளின் பெயர்களை எழுதுக.

(ii) ஒவ்வொரு வகைக்கும் ஒவ்வோர் உதாரணந் தந்து, அவற்றைச் சுருக்கமாக விபரிக்க.

34. (i) நெல் விளைவிப்பதற்காக வறண்ட பிரதேசத்தில் அபிவிருத்தி செய்யப்பட்ட பகுதிகளை ஒரு புறவுருவப்படத்தில் காட்டுக.

(ii) பெருமளவில் நெற்செய்கைக்கென அமைக்கப்பட்ட பெருங் குடியேற்றத் திட்டங்களில் ஒன்றை விபரிக்க.

35. பின்வரும் பிரதேசங்களிலுள்ள தாவரங்களில் என்ன வேறுபாடுகளை நீர் அவதானிக்கிறீர்?

(அ) ஈரமண்டலத் தாழ்நிலங்கள் (ஆ) ஈரமண்டல உயர்நிலங்கள்.

36. உலர்பிரதேசத்தின் காலநிலை குறித்து விபரிக்க.

37. நவம்பர் முதல் யனவரி வரையுமுள்ள காலத்தில் இலங்கையின் ஒரு பகுதியிலே அதிக மழைவீழ்ச்சியுண்டாவதற்குரிய காரணத்தை விளக்குக.

38. 'யாழ்ப்பாணக் குடாநாடு ஒரு தனிப் புவியியற் பிரதேசமாகும்' இக்கூற்றினைப் பின்வருந் தலையங்கங்களில் விரித்துரைக்க: (அ) காலநிலை (ஆ) மண் (இ) மக்களின் தொழில்கள்.

39. யாழ்ப்பாணக்குடாநாட்டின் தோட்ட நிலங்கள் குறித்து ஒரு புவியியற் கட்டுரை எழுதுக.

40. யாழ்ப்பாணக்குடாநாட்டில் கையாளப்படும் மிகச்செறிவான பயிர்ச்செய்கை முறைக்குப் பயன்படுத்தப்படும் புவியியற் காரணிகளை விபரிக்க.

41. பின்வரும் பட்டினங்கள் தற்போதுள்ள இடங்களில் அமைந்துள்ளமை பற்றிச் சிறு குறிப்புகள் எழுதுக. கண்டி, காலி, குருநாகல், இரத்தினபுரி, நுவரெலியா, அநுராதபுரம்.

42. சிறு குறிப்புகள் தருக.

(அ) வடமேல் கரைக்கப்பால் மீன்பிடித்தல், (ஆ) காரீயக் கைத்தொழில், (இ) கீழ்மாகாணத்தில் சீனிக் கைத்தொழில், (ஈ) கொழும்புத் துறைமுகம், (உ) காலித் துறைமுகம், (ஊ) புடவை உற்பத்தி, (எ) பாற்பண்ணைத் தொழில், (ஏ) வனபரிபாலனம், (ஐ) ஓட்டுத் தொழில், (ஒ) உல்லாசப் பிரயாணக் கைத்தொழில், (ஓ) கரும்புப் பயிர்ச் செய்கை, (ஔ) திருகோணமலைத் துறைமுகம்.